Sangathamil
சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
குரல் – 124 | சர்வதேச மின் செய்தித்தாள் | யூலை 01 2026

KARUMPULIKAL NAAL

"கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள்
எமது போராட்டப் பாதையின் தடைநீக்கிகள்
எதிரியின் படை பலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

NISHANTHAN LAW OFFICE

SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney

NOTARY SERVICES

Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
NEW LOCATION
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING

Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 · 647-989-6298
647-748-6444 · www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399

AC	$119.99 +
OIL CHANGE	$59.99 +
USED TIRE	$74.99 +
BRAKES JOB	$299.99 +

7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல்
மற்றும் இலவச ஆலோசனைகளும்
வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
282 Consumer Road, Unit 10
North York, ON M2J 1P8
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிட
என்னை அழையுங்கள்!
Kaja Sivalingam
Sales Representative
647-338-5252
skajaruban@gmail.com
Higher Standard Agents... Higher Results!
HOMELIFE/GTA REALTY INC.
5215 Finch Ave E, Suite 203, Scarborough ON M1S 0C2 OFFICE: 416-321-6969

Muhunthan Sivathasan (Danny)
Graphic Designer & Printer
Silver Print House
Digital Printing, Graphics & Publication
D'impression numérique, les graphiques et la publication
437 423 5460
Silverprinthouse@gmail.com
Please call & book an appointment before visiting...
I will provide the adress after booking......

Jaavis TECHNOLOGY
WEBSITE DEVELOPMENT SERVICES
OUR SERVICES
- WEBSITE DESIGNING
- MOBILE APP DEVELOPMENT
- TROUBLESHOOTING & MAINTENANCE
- DIGITAL MARKETING
- WEB ANALYZING AND REPORTING

Build Your Future with Us
CONTACT US
+1 (516) 693-4346

RIGHT AT HOME REALTY INC. RealtorGroup
JEY RASATHURAI
MBA, BBA (Hons)
REALTOR & MORTGAGE BROKER
MORTGAGE ALLIANCE
- Mortgage, Line of Credit, Refinance, Renewal
- Private 1st,2nd & 3rd Mortgages - No Income Verification
- Solutions for Power of Sale Issues
- Buying & Selling & Lease Commercial & Residential Properties

301-305 Milner Ave, Toronto ON M1B 3V4
Cell : 416-624-4843
Bus : 416-816-9011
" NO PROMISES BUT SOLUTIONS"

Kurinchi
Beauty & Makeup
647.918.9742

ACCIDENT HAPPENS!
But your injuries don't have to last a lifetime.
TRUST ARAM LEGAL SERVICES!
ONE CALL - WE WILL HANDLE IT ALL!
Motor Vehicle Accident? Questions? Get Answers
ARAM Legal Services
Selva Thiyagarajah
416-618-1447
www.aramlegal.ca

விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203

**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**
தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

ஒரு புதிய பிறப்பு அறிவித்தல் தளம்

இறந்தவரின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு துயர அறிவிப்புக்கு எமது https://Thuyarpakirvu.com இணையம் செயல்படுகிறது. நீங்கள் "துயர் பகிர்வு" இணையத்தில் ஒரு இரங்கல் செய்தியை வெளியிடும் போது, அந்த விபரங்களை ஒரு சில நிமிடங்களில் உலகத்தின் அனைத்து பாகங்களுக்கும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இதன் மூலம் நாமும் உங்களுடன் பயணிக்கிறோம்.

மேலும்... சாவு அறிவித்தல், கண்ணீர் வணக்க பகிர்வு, நினைவு நாள் வணக்க பகிர்வு, ஆண்டு நினைவு நாள் வணக்க பகிர்வு, நன்றி நவில்...!

தொடர்புகளுக்கு
437 345 4203
thuyarariviththal@gmail.com

Thuyarpakirvu.com

தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

எமது விடுதலை வீரர்கள் இரத்தம் சிந்தும்போது, எமது இதயம் வருந்துகிறது, எனினும் நாங்கள் உறுதி தளரமாட்டோம் ஏனெனில் நாம் இரத்தம் சிந்தாமல் சுதந்திரம் பெறமுடியாது.

சங்கத்தமிழ்

தொடர்புகளுக்கு

தொலைபேசி

437 345 4203

மின்னஞ்சல் (Email)

sangathamilcanada@gmail.com

இணையத்தளம் (Website)

www.sangathamil.com

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.

கரும்புலிகள் மரபும் தமிழீழ எழுச்சியும்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கரும்புலிகள் எனும் படைப்பிரிவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இலட்சியத் திற்காக உயிர்விடத் துணிந்த இப்படைப்பிரிவின் மனோபலத் தினை உலக நாடுகள் பலவும் ஆச்சரியத்தோடு பார்த்தன. 1987ஆம் ஆண்டு யூலை மாதம் 5ஆம் நாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கப்டன் மில்லர் என்பவர் முதல் கரும் புலியாய் வெடித்து நெல்லியடி பகுதியில் முகாமிட்டிருந்த சிறீலங்கா சிங்கள இராணுவத்தின் மீது தாக்குதல் நடத்தினர். அந்த யூலை 5ஆம் தேதி கரும்புலிகள் நாளாக தமிழீழத்தில் நினைவுகூரப்பட்டது.

விடுதலைப் புலிகளின் மிகப்பெரிய பலமாக கரும்புலிகள் இருந் தனர். அப்படிப்பட்ட கரும்புலிகள் உருவாக்கத்தின் பின்னணி குறித்து உயிராயுதம் நூலில் வெளிவந்த கட்டுரை ஒன்றினை தகவலுக்காக இங்கே பதிகின்றோம். இந்த நூல் கனடாவி லிருந்து செயல்பட்ட உலகத் தமிழர் இயக்கத்தினால் வெளியிடப் பட்டது.

கரும்புலிகள் உருவாக்கத்தின் பின்னணி

கரும்புலிகள் என்ற வார்த்தைப் பிரயோகம் உலகளாவிய ரீதியில் ஒவ்வொருவராலும் பேசப்படும் சக்தி மிக்கதொரு சொற் பதமாகிவிட்டது.

கரும்புலித் தாக்குதலை நடத்தும் விடுதலைப்புலி உறுப்பினர் களின் பிரமிப்பூட்டும் தியாகங்கள், உலக சமுதாயத்தை அதிர்ச் சியிலும் வியப்பிலும் ஆழ்த்தி வருகின்றன. மனிதன் பிறந்ததே வாழ்வதற்காகத்தான். அப்படியானால் இறப்பதற்காகவே களம் புகும் இக் கரும்புலிகள் யார்? இவர்களது உருவாக்கத்தின் வரலாற்றுப் பின்னணி என்ன ?

ஈடு இணையற்ற இவர்களது ஈகமும் மன ஓர்மமும் சமுதாயத் தில் எற்படுத்தும் தாக்கம் எத்தகையது, என்பன போன்ற கேள்வி களுக்கான விடைகளானது மானிட ஆய்வாளர்கள் மத்தியில் ஆராய்ச்சிக்குரியனவாகிவிட்டன. இன்று உலகெங்குமுள்ள அடக்குமுறையாளர்கள் தங்களுக்குள் கைகோர்த்தபடி, சுதந் திரக் காற்றை சுவாசிக்க விழையும் மக்களை மிருகத்தனமாக அடக்கி ஒடுக்க முனைகின்றனர். இவர்களிடம் ஆள், ஆயுத பலம் உண்டு. ஆட்சி அதிகாரம் உண்டு. தொழில் நுட்பவலு வுண்டு. இவற்றை தேவைப்படும் இடங்களுக்கு, தேவைப்படும் நேரங்களில் கொடுத்து மாறி, போராட்ட சக்திகளை பலம் இழக்க செய்து, தமது அடக்குமுறைகளை வலுப்படுத்துகின்றனர். இந்த நவீன அடக்கு முறையாளர்களுக்கு ஈடு கொடுக்கக்கூடிய அள

விற்கு ஆள் - ஆயுத தொழில் நுட்பத் திறன்களைப் போராட்ட சக்திகள் கொண்டிருப்பதில்லை.

மிகக் குறைந்த அளவில் இவர்களுக்கு இருக்கும் போராட்ட திறன்களில் இருந்து மிக உச்ச பயன்களைப் பெற்றாலொழிய போரட்ட சக்கரத்தை ஒர் எல்லைக்கப்பால் நகர்த்த முடியாது. எனவே ஒடுக்கு முறையாளர்களின் நாடியை ஒடுங்கச் செய்யும் அளவுக்கு, பல்வேறு திசைகளில் இருந்தும் வேவ்வேறு வடி வங்களில் போர்ச்சக்கரம் நகர்த்தப்பட வேண்டும்.

இந்தப் போர் வடிவங்களுக்குள்ளே உயர்ந்ததும், உன்னத மானதுமான விடுததைப் புலிகளின் போர் வடிவம்தான் கரும்புலித் தாக்குதலாகும்.

தன்னை இழந்து எதிரிகள் பலரை அல்லது எதிரியின் பலமிக்க தொரு இலக்கை அழிக்க கூடிய படையணி ஒன்றை அமைக் கும் யோசனையை, தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் ஆரம்பத்தில் இருந்தே கொண்டிருந்தார்.

அந்த எண்ணக் கருவை செயற்படுத்தக் கூடிய ஆற்றலை விடுதலைப் புலி வீரர்கள் மத்தியில் சிறுகச் சிறுக எற்படுத்திக் கொண்டுவாந்தார். பின்னர் "ஒப்றேசன் லிபறேசன்" என்ற பெய ருடைய இரணுவ நடவடிக்கை மூலம் வடமராட்சி பகுதியை ஆக்கிரமித்த சிங்களப் படைகள் வெற்றிக் களிப்பில் ஆழ்ந்தன. இதன் மூலம் சிங்கள இராணுவத்திற்கு உளவியல் ரீதியான போரிடும் ஆற்றல் திடிரெனக் கூடியது. சிறீலங்கா அரசும் விடு தலைப் புலிகளை அழித்துவிடலாம் எனத் திமிருடன் சிந்திக்க தொடங்கியது.

இதே சமயம், அந்த இராணுவ நடவடிக்கை காரணமாக பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து, மற்றைய பகுதிகளுக்கு சென்றதுடன், அந்த திடீர் நடவடிக்கையால் மக்கள் குழம்பியும், போராட்ட வெற்றியில் நம்பிக்கை இழக்கக் கூடிய, சூழலும் தோன்றியது. இந்த சூழ்நிலைகளில்தான் ஒரு கரும்புலித் தாக்குதலை நடத்த தமிழ் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் முடிவெடுத்து அதற்கான ஆயத்தங்களைச் செய்தார்.

1987 ஆம் ஆணடு யூலை மாதம் 5ஆம் திகதி, நெல்லியடிச் மத்திய மகாவித்தியாலத்தில் அமைக்கப்பட்டிருந்த சிங்கள இராணுவ முகாமிற்குள் முதலாவது கரும்புலி வீரன் புகுந்து அம் முகாமை சின்னாபின்னமாக்கினான்.

சிங்கள அரசையும், அதன் இராணுவ இயந்திரத்தையும் கிலி கொள்ளச் செய்த அந்த முதலாவது கரும்புலித் தாக்குதல், கப்டன் மில்லர் செய்து முடித்தார். அன்றிலிருந்து இன்றுவரை பல கரும்புலித் தாக்குதல்கள் நிகழ்தப் பட்டுவிட்டன. அதில் பல கரும்புலிகள் விரச்சாவு அடைந்து உள்ளனர்.

ஒவ்வொரு விடுதலைப் புலி வீரனும், வீராங்கனையும் சாவைச் சந்திக்க தயாரான நிலையில்தான் இருக்கிறார்கள். ஆனால், தங்களுடைய சாவு எப்போது வரும் என்பது அவர்களுக்கு தெரியாது.

போர்க்களத்திற்குச் செல்லும் போகும்போது கூட திரும்பி வருவேன் என்ற நம்பிக்கையுடன்தான் ஒரு விடுதலைப் புலி வீரன் செல்கிறான். சில வேளை அவன் அங்கே சாவை சந்திக்கலாம் அல்லது திரும்பி வரலாம்.

ஆனால், கரும்புலிகள் நிலை வேறுபட்டது. களம் புகுவதற்கு பல நாட்கள் முன்னமே தங்களுடைய சாவை தெரிந்து கொண்டு விடுகிறார்கள். அடுத்த நிமிடத்தில் சாகப்போகிறேன் என்ற உண்மையை பூரணமாக தெரிந்து கொண்டுதான் கரும்புலிகள் வெடிமருந்தை தங்களுடன் கொண்டு செல்கிறார்கள்.

இராணுவ முகாங்களில் இருக்கும் பலநூறு எதிரிகளின் கரங்களில் இருந்து முழங்கிக் கொண்டிருக்கும் துப்பாக்கிகளை கருத்தில் எடுக்காது, உடைந்து நொருங்கி போய்க் கிடக்கும் பாதை வழியே சீராக நிதானமாக வெடிமருந்து வண்டியை ஓட்டிச் சென்று, எதிரி முகாமின் இதயத்திற்குள்ளே புகுந்து, தன்னையும் சேர்த்து வெடிக்கச் செய்வதென்பது சாதாரண விடயமல்ல.

இயல்பாகவே அச்சமூட்டும் அலைகளைக் கொண்ட அகண்ட சமுத்திரத்துக்குள், நடு இரவில், எதிரியின் நவீன காவற் கருவிகளையும் புத்தி சாதுரியமாக மீறி, வெடிமருந்து படகுடன் உட்புகுந்து எதிரியின் கப்பலை நெருங்கி முன்னரே தீர்மானிக்கப்பட்ட இலக்கை இனங்காண்பதற்காக ஒரு முறை கப்பலை சுற்றி வந்து, குறித்த இலக்கின் மீது மோதி, வெடிமருந்து படகுடன் சேர்ந்து வெடித்து சிதற ஒரு மனித மனம் உடன்படாது.

இவைகள் ஒரு சாதரண வீரனால் செய்யப்பட முடியாதவை. இதை செய்வதற்கென்றொரு ஆத்மீக பலம் தேவை. தன்னை தற்கொடை செய்து கொள்ளத் தயாரான மனோதிடம் வேண்டும். தனது இறுதி நேரத்திலும் கூட பதற்றம் இன்றி, உறுதியுடன் குறி பிசகாது எதிரியை தேடி ஓடும் வீரம் தேவை. விரக்தி காரணமாகவோ, முட்டாள்தனமாகவோ தன்னை அழித்து கொள்ள தற்கொலை முயற்சியை போலல்ல இது. அல்லது எதிரியின் கண்ணோட்டத்தின்படி கொடூரம் மிக்கதும் மானிட இனமாக இல்லாததுமான ஒரு பூதம் அல்ல. இது அடிமைப் பட்டுக் கிடக்கும் ஒரு தேசிய இயக்க சக்திக்கு உந்து விசையாக விளங்கும் உயரிய போர் வடிவம்தான் எங்களது கரும்புலிகள்.

உலகின் எந்த ஆயுதங்களாலும் வெற்றி கொள்ளப்பட முடியாததும், உலகின் எந்த தொழில் நுட்பத்தாலும் தடுக்க முடியாததும், உலகின் எந்த அரச இயந்திரத்தாலும் அடக்க முடியாததும்தான் எங்களது கரும்புலிகளின் மனோபலம்.

இந்த மனோபலம் வீர உணர்வை வெளிப்படுத்தும் ஒரு குறியீடு மட்டுமல்ல. எமது சமுதாய எண்ணவோட்டத்தில் பிரளயத்தை எற்படுத்த போகும் சக்தி கொண்ட ஒரு அரசியல் வடிவமுமாகும்.

ஒவ்வொரு கரும்புலியும் தனது உயிரை போக்கி கொள்ளும் போது நிகழும் பூகம்பம், தமிழீழ விடுதலை போரட்ட சக்கரத்தை முன்னோக்கி தள்ளிவிடுவதுடன் வீரம்மீக்க, யாருக்கும் அடிபணியாத, அடக்க நினைப்பவரை நடுங்க வைக்கும் ஆற்றல் கொண்ட தமிழ் சமுகத்திற்குத் தேவையான உணர்வையும் ஊட்டி விடுகின்றது.

சொல்லுக்கு முன்னே எப்போதும் செயல் இருக்கவேண்டும். செயலால்தான் நாங்கள் செல்வாக்குப்பெற்றோம்; செயல்தான் நமது நடவடிக்கைகளுக்கு அரசியல் வடிவம் தருகிறது.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

தேச பக்தியையும் வீர உணர்வையும் அடித்தளமாகக் கொண்ட இத்தகைய மனோபலம் எமது மக்களிடம் இருக்குமாக இருந்தால், உலகில் எவரும் எம்மை எதுவும் செய்ய முடியாததுடன், சுதந்திரத்துடனும் கௌரவத்துடனும் வாழும் பலத்தை நாம் பெற்று கொள்ள முடியும்.

இன்று பல நூற்றுக்கணக்கான விடுதலைப்புலி விரர்கள் தங்களைக் "கரும்புலி" அணியில் இணைத்து கொண்டு இருக்கின்றனர்.

ஒவ்வொரு முறையும் கரும்புலித்தாக்குதலுக்கான திட்டம் தீட்டப்படும்போது, தன்னைத்தானே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஒவ்வொரு வீரனும், வீராங்கனையும் முண்டியடிக்கின்றார்கள்.

அலையலையாக கரும்புலித் தாக்குதலுக்கு தயாராகும் இந்த தியாகச் செயலை உலகில் எங்குமே காணமுடியாது. இது உலக அதிசயங்களில் புதியதொன்றாகும்.

களம்புகும் கரும்புலிகளின் பிரமிப்பூட்டும் வீரச் சாதனைகள், சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு கிலியை உண்டு பண்ணுகின்ற அதே சமயம், அந்த உன்னதமான அர்ப்பண உணர்வு எற்படுத்தும் சமுகத் தாக்கம், தமிழீழக் குடிமக்களின் மனதில் இருக்கும் சுதந்திர ஒளியை இன்னும் வளர்த்துச் செல்லும் என்பது உறுதி.

முதலாவது கரும்புலி தாக்குதல் 05.07.1987 எவ்வாறு நடத்தப்பட்டது

கரும்புலிகள் (Black Tigers) என்பது தற்கொடைப்பிரிவைச் சேர்ந்தவர்களை குறிப்பதாக விடுதலைப்புலிகள் இயக்கத்தில் கொள்ளப்படுகிறது. இயக்கத்தில் சேர்ந்து விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் எல்லோருமே தம்முடைய அரிய உயிரை இலட்சியத்திற்காக துறப்பதற்கு எப்போதும் தயாராக இருக்கின்றனர். இயக்க உறுப்பினர்கள் அனைவருமே சைனைட் குப்பிகளை கழுத்தில் அணிந்து கொண்டு இருப்பார்கள். மிக இக்கட்டான சூழ்நிலையில் எதிரிகளிடம் பிடிபடாமலும் இயக்கத்தை பாதிப்படையவிடாமலும் செய்ய உயிர் துறந்தவர்கள் எத்தனையோ பேர்.

ஆனாலும் கரும்புலிப்பிரிவைச் சேர்ந்தவர்கள் நேரடியாகவே தமது உயிரைப் பணயம் வைத்து, அதைவிட தமது உயிரைக் கொடுத்து சில நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். அரிதாக, மிக அரிதாக அவர்கள் தப்பி திரும்பி வரும் சந்தர்ப்பங்களும் உண்டு. எப்படியிருந்தபோதிலும் அவர்கள் நடவடிக்கையில் இறங்கும்போது தம்முடைய உயிரை அந்த நடவடிக்கைக்காக தியாகம் செய்யத் தயாராகவே இருப்பர். இப்படியாக விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தற்கொடைத் தாக்குதலில் முதல் வீரச் சாவடைந்த கப்டன் மில்லரால் நடத்தி முடிக்கப்பட்ட தாக்குதல் எவ்வாறு நடத்தப்பட்டது என்பதை பற்றி சற்றுப் பார்ப்போம்.

கப்டன் மில்லர் மில்லர் வடமராட்சியின் துன்னாலைப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவருடைய தந்தை இலங்கை வங்கி ஒன்றில் உயர் அதிகாரியாக பணியாற்றி வந்தார். தன்னுடைய தாயகத்தை மீட்க அவர் எப்போதும் சித்தமாக இருந்தார். மில்லர் எமது இயக்கத்தில் சேர்ந்து பல தடவைகள் இராணுவத்துடன் மோதியிருக்கிறார். ஒவ்வொரு மோதலிலும் மில்லர் தன்னுடைய பணியை தனக்கே உரித்தான அபாரத் துணிச்சலுடன் செய்து பலருடைய மதிப்பை பெற்றவர்.

வடமராட்சிப் பகுதியை சிறீலங்கா இராணுவத்தினர் முற்றுகையிட்ட போது பிரபாவின் அணியினரோடு சேர்ந்து பதில் தாக்குதலில் ஈடுபட்டார். வடமராட்சி யுத்தம் பல நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. பலத்த சேதத்திற்குப் பின் வடமராட்சியை இராணுவத்தினர் ஆக்கிரமித்துக் கொண்டனர். வடமராட்சி பகுதியை திரும்ப மீட்க வேண்டுமென்பதில் மில்லர் துடியாய் துடித்தார்.

பிரபாவும், (பிரபா முன்னர் மன்னார் பிராந்தியத்தில் விக்டருடன் பணியாற்றியவர்) மில்லரும் சேர்ந்து நெல்லியடி இராணுவ முகாமுக்குள் வெடிமருந்து வாகனங்களை விடுவதற்கு தலைவரிடம் அனுமதி கேட்டு, வெடி மருந்தையும் பெற்றுக் கொண்டனர். ஒன்றன்பின் ஒன்றாக இரு வண்டிகளை விடுவதற்கு திட்டமிட்டனர். முதலாவது வண்டியை மில்லரும், அதன் பின் இரண்டாவது வண்டியை ராசிக்கும் ஓட்டிச் செல்ல முன் வந்தனர்.

திட்டம் உருவானது. இரவு இரவாக நெல்லியடி இராணுவ முகாமிக்குள் வண்டிகளை விடுவது என்றும், ஏனென்றால் இராணுவத்தினர் இரவு பத்து மணிக்குப் பின்னர் முகாம்களை விட்டு வெளியே வந்து சுற்றாடலில் இருந்த மக்கள் வெளியேறிய வீடுகளில் தங்கிவிடுவார்கள் என்பதால் அதற்கு முன்னர் வெடி மருந்து நிரப்பப்பட்ட வாகனங்கள் உள்ளே விடப்பட வேண்டும்.

வாகனங்கள் முகாமை நெருங்கிச் செல்லும் பாதைகளில் பல தடைகள் போடப்பட்டு இருந்தன. எனவே வாகனங்கள் புறப்பட்டு முகாமை அடைவதற்கு அத்தடைகள் அகற்றப்படுதல் முக்கியமானதாகும். அந்த வேலையை கமல் பொறுபெடுத்துக் கொண்டார். பகல் வேளையே வாகனங்கள் தயார் செய்யப்பட்டு முகாமுக்கு அருகில் கொண்டு வரப்பட்டு இருக்கும். சரியான நேரம் நெருங்கியதும் முகாமை தம்முடைய துப்பாக்கிகளாலும், ரொக்கட்டுகளாலும் தாக்கத் தொடங்குவார்கள்.

அந்த சந்தர்பத்தில் கமலும் அவருடைய சகாக்களும் தெருவில் உள்ள தடைகளை அகற்றுவார்கள். கமல் தடைகளை முற்றாக அகற்றிய பின் பிரபாவுக்கு அறிவிக்க வெடிமருந்து நிரப்பிய





வாகனங்கள் முகாமை சென்றடையும்.

இதுதான் திட்டம்.

கமல் வல்வெட்டித்துறையை பிறப்பிடமாக கொண்டவர். இவரது தந்தை துரைரத்தினம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர். தந்தையது பாதை தாயகத்தை மீட்டு எடுக்க சரியான தீர்வாகது என்பதை உணர்ந்த கமல், இயக்கத்திலே தன்னை இணைத்து கொண்டு போரடத் தொடங்கினார். பயிற்சியை முடித்து விட்டு மட்டக்களப்புக்குச் சென்று சுமார் இரண்டு வருடங்களுக்கு மேல் பணியாற்றிந்தார். கிழக்கில் இயக்க வளர்ச்சியில் கமலின் பங்கு மிகவும் குறிப்பிடக்கூடியது.

மட்டக்களப்பில் மிகவும் சிக்கலான சூழ்நிலைகளிலும் தன் தனித்திறமையினால் எத்தனையோ அரும்பெரும் காரியங்களை ஆற்றியிருக்கின்றார். இவன் அங்கு பணியாற்றிய காலத்தில் ஒரு பெண்ணைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்பெண்ணுடைய வீட்டுக்கு கமல் செல்வது வழக்கம். ஆரம்ப காலங்களில் நாட்டின் விடுதலைக்காக தன் உயிரைப் பணயம் வைத்து கமல் பணியாற்றியது கமலின் பால் அந்தப் பெண்ணின் கவனத்தை ஈர்த்தது. கமல் வீட்டுக்கு போகும் சமயங்

களில் எல்லாம் அன்பாக உபசரித்து கமலுக்கு ஆதரவளித்து, அன்பு செலுத்தினாள். நாட்கள் நகர நகர இருவரும் அன்பால் இறுகப் பிணைக்கப்பட்டனர். ஒருவரை ஒருவர் மனார நேசித்தனர். உலக வழக்கப்படி கூறினால் ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டிருந்தனர். அப்பெண் கமலின் உயிர் வாழ்வுக்காக எப்போதும் கடவுளைப் பிரார்த்தித்து வந்தாள். ஆனால் ஒருபோதும் கமலின் தீவிரமான போராட்டத்துக்கு தடையாக இருந்ததில்லை.

மட்டக்களப்பில் இருந்து கமல் யாழ்ப்பாணம் வந்திருந்த வேளையிலே நெல்லியடி முகாம் மீதான் தாக்குதலில் பங்குபற்ற முன்வந்தான்.

முதல் நாள் கமலும், திலீபனும் ஒன்றாக இருந்த வேளையிலே திலீபனிடம் ஓர் வேண்டுதல் விடுத்தான் கமல். “நான் சில வேளை இத்தாக்குதலில் சாவடைந்தால் என்னை நேசிப்பவளுக்கு அதை உடனடியாக தெரிவித்து விடு” என்பதாகும். என்ன சத்தியமான வார்த்தைகள். ஏதொ தன் இறப்பைத் தானே அறிந்து வைத்திருந்தது போல் கூறியிருக்கின்றான்.

தாக்குதல் நடவடிக்கைகள் மிக விரைவாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. மில்லர் மிகவும் கடுமையாக உழைத்தார். இராணுவத்தினர் ஆக்கிரமிப்புகுள் இருந்த நெல்லியடிப் பகுதிக்கு வெடிமருந்துகளையும், வாகனங்களையும் மிகுந்த சிரமப்பட்டு இரவோடு இரவாக கொண்டுவந்து சேர்த்தார். அவ்வேளைகளில் கூட தான் அடுத்த நாள் இறக்க போகிறேன் என்ற விடயம் தெரிந்த மனிதனைப் போல் நடந்து கொள்ளவில்லை.

கவலையோ, திகைப்போ, பயமோ அல்லது தயக்கமோ அவரிடம் காண முடியவில்லை. வெடிமருந்துகளை ட்ரக் வாகனங்களில் ஏற்றி அவற்றுக்கு இணைப்புகளை கொடுத்து தன்னுடைய சவப்பெட்டிகளை தானே தயாரித்து கொண்டு இருந்தார்.

அன்று பகல் முழுவதும் வெடிமருந்துகளுடன் இரு வாகனங்கள் தயார் செய்யப்பட்டன. குழுக்கள் யாவும் உசார் நிலைக்கு கொண்டு வரப்பட்டன. நேரம் இரவாகிய போது குழுக்கள் யாவும் முகாமை நோக்கி நகரத் தொடங்கின. மில்லர் தன்னுடைய வாகனத்தில் ஏறி அமர்ந்து கொண்டார்.

கமலுடைய குழு, வாகனம் முகாமை நோக்கி செல்ல வேண்டிய பாதையில் போடப்பட்டு இருந்த தடைகள் உள்ள பகுதியை சென்றடைந்தனர். எனைய குழுக்களும் முகாமை நெருங்கி தத்தமது இடங்களில் தயார் நிலையில் நின்றனர்.

www.sangathamil.com





பொறுப்பாளரிட மிருந்துதாக்குதல் ஆரம்பிக்கும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டது. எல்லோரும் முகாமை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தார்கள். மில்லர் ஏறி அமர்ந்து இருந்து ட்ரக் வண்டியை ஸ்டார்ட் செய்து எஞ்சினை உறுமி விட்டு அமைதிப் படுத்தினார். பின் தன் வண்டி செல்வதற்கான உத்தரவுக்காக காத்திருந்தார். அப்போது கூட பக்கத்தில் இருந்த பிரபுவோடு ஏதோ ஜோக் அடித்துக் கொண்டு சிரித்து கொண்டிருந்தார்.

முகாமை நோக்கி எமது தோழர்கள் துப்பாக்கி பிரயோகம் செய்து கொண்டிருக்கையிலேயே கமல் குறுக்கே பாய்ந்து தடைகளை அகற்ற முயன்றார். பெரிய மரக்கட்டைகள் புதைக் கப்பட்டு இருந்தன. தான் கொண்டுவந்த வெடிமருந்துப் பெட் டியை கட்டைகளின் பின் வைத்து விட்டு விலகி மறைவில் படுத்து கொண்டார். வெடி மருந்து வெடித்தது. அத்தோடு கட் டைகள் தூக்கி எறியப்பட்டு பாதை சீராகியது. அதே நேரம் பாதைக்கு நேரே அமைக்கப்பட்டிருந்த காவல் அரணில் இருந்து இராணுவத்தினரின் மெசின்கன்கள் வெடிக்க தொடங்கியது.

கமல் தன்னுடைய வாக்கிடோக்கியில் அறிவித்தார். “தடைகள் அகற்றப்டட்டு விட்டது. ஆனால் புதிய சிக்கல் பாதைக்கு நேரே யுள்ள காப்பரணில் இருந்து துப்பாக்கிச் சூடு வருகிறது. சற்றுப் பொறு.”
மில்லருக்குப் பக்கத்தில் நின்ற பிரபாவின் வாக்கியிலும் அறி விப்பு தெளிவாகக் கேட்டது.

அதைக் கேட்ட மில்லர், “பிரபா பரவாயில்லை, வாகனத்தின் முற்பகுதியில் குண்டுகள் துளைக்காத படி தகடுகள் கட்டப்பட் டிருக்கின்றன. அதனால் நான் கொண்டு போய் சேர்த்து விடுவேன்.” என்றார்.

“மில்லர் சற்று பொறுத்துக் கொள் அந்தப் ‘பங்கர்’ உடைக்கப் பட்டதும் நீ போகலாம். மிக விரைவாக வண்டியை செலுத்தி விட்டு, நீ இறங்கி ஓடி வந்து விடு” என்றார் பிரபா.

மில்லர் ஒருமுறை சற்று சிரித்துக் கொண்டார். ஏனென்று புரியவில்லை. அருகில் இருந்த பிரபாவிற்கு கேட்க மனம் துணியவில்லை.

“பிரபா முன்பு ஒருமுறை யாழ்ப்பாணத்தில் விடப்பட்ட வாகனம் சரியாக செல்லவில்லை. எனவே இம்முறை நான் நிதான மாகவே வாகனத்தைச் செலுத்துவேன். எப்படியும் கட்டிடத்துக்கு மிக அண்மையில் வாகனத்தை கொண்டு செல்வேன்” என்று மில்லர் கூறினார்.

கமல் தன்னுடைய வோக்கியில் றொக்கட் லோஞ்சர் (R.P.G) வைத்திருப்பவரை அந்த காப்பரணை உடைக்குமாறு கூற, றொக்கட் லோஞ்சரில் இருந்து மிகச் சரியாக ஏவப்பட்ட றொக்கட் பங்கரை தாக்கியது. மணல் முட்டைகள் சிந்தின. பங்கர் இருந்த இடத்தில் ஒரே புழுதியும் புகையும். கமல் தகவலை தெரிவித் தார். பொறுபாளரிடமிருந்து மில்லரை புறப்படுமாறு பிரபா விற்க்கு உத்தரவு வந்தது.

மில்லர் வண்டியை ‘ஸ்ராட்’ செய்து மெதுவாக செலுத்தினார். பிரபா வண்டியின் பின்னால் ஏறிக்கொண்டான்.

வண்டி நெல்லியடிச் சந்தியை வந்தடைந்தது. மில்லர் வண் டியை நிறுத்தி பிரபாவை அழைத்தார். பிரபா மில்லருக்கு கையை அசைத்துவிட்டு வெடி மருந்து வெடிப்பதற்கான கரு வியை இயக்கினார். கருவி இயங்கத் தொடங்கி விட்டது.

மில்லர் வண்டியை மெதுவாக ஓடவிட்டார். பிரபா வண்டியில் இருந்து குதித்து வண்டியோடு சேர்ந்து ஓடி மில்லரின் பக்கத்தில் வந்து ”மில்லர் எப்படியும் திரும்பி வந்து விடு”, மில்லர் அதை புரிந்து கொண்டது போல் வண்டி வேகம் பிடித்தது. பிரபா அப் படியே தெருவில் நின்று வேகமாகச் செல்லும் வண்டியைப் பார்த்துக் கொண்டிருக்க மில்லரையும் வெடிகுண்டையும் சுமந்து கொண்டு வண்டி சென்று கொண்டிருந்தது..

வண்டி முகாமை நோக்கி வருவதை அறிந்து தோழர்கள்

முகாமைவிட்டு 100 யார்ட் பின்னுக்கு வந்தனர். கமல் நின்ற இடத்தை தாண்டி வண்டி சென்றதும் கமல் மில்லரை நோக்கி கையசைத்து பின்னுக்கு செல்ல, சில நிமிடத்தில் நிலத்தை அதிரவைத்துக் கொண்டு பெரிய ஓசை எழுந்தது.

தோழர்கள் மீண்டும் முகாமைம் நோக்கி முன்னேறினார்கள்.

இராணுத்தினர் தங்கியிருந்த சற்று முன்னர் கூட இராணுத் தினர் நின்று துப்பாக்கி பிரயோகம் செய்த மிகப் பெரிய மாடிக்கட் டிடம் தரைமட்டமாகிக் கிடந்தது. அதில் இருந்த இராணுவத் தினர் கட்டிடத்தின் உள்ளேயே இறந்து போனார்கள்.

மில்லரின் தாக்குதலைத் தொடர்ந்து நடந்த அத்தாக்குதலில் கமலும் வீரச்சாவடைந்தார். நெஞ்சிலே காயமடைந்த கமலின் உடல் எடுத்து வரப்பட்டது. ஆனால் மில்லர் திரும்பவே இல்லை. மில்லர் வெடிமருந்தின் அதிர்வலைகனோடு சங்கமாகி அதிர் வலையோடு சேர்ந்து தன் பணியை செவ்வனே முடித்தார்.

கட்டுரை: உயிராயுதம் நூல்

தமிழீழச் செய்திகள்

யாழ். செம்மணியில் தொடர்ந்து குழந்தை, சிறுவரின் எலும்புக்கூட்டுத் தொகுதி மீட்பு

15.06.2026

யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து ஒரு குழந்தையின் எலும்புக்கூடும், நான்கு சிறுவர்களுடைய எலும்புக் கூடுகள் உட்பட 07 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப் பட்டுள்ள நிலையில் மேலும் இரண்டு எலும்புக் கூடுகள் அடை யாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணி யின் 24ஆம் நாள் அகழ்வு பணிகள் நேற்று (14) ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

அதன் போது ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட எலும்புக் கூடுகளில் குழந்தை ஒன்று , நான்கு சிறுவர்களுடைய எலும்புக் கூடுகள் உட்பட 07 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில், புதிதாக மேலும் இரண்டு எலும்புக்கூடுகள் அடை

யாளம் காணப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் இது வரையிலான அகழ்வு பணிகளின் போது, 355 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 341 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப் பட்டுள்ளன.

அதேவேளை அகழ்வு பணிகளில் ருகுணு பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபட்டு வரும் நிலையில் இன்றைய தினம் முதல் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அகழ்வின்போது தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோமதேவா தலைமையிலான குழுவினர், சட்ட மருத்துவ அதிகாரி செல் லையா பிரணவன், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதி காரிகள், சட்டத்தரணிகள், துறை சார் நிபுணர்கள் பங் கேற்றனர்.

“மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு – மாதவனை மேய்ச்சல் தரை: நில அடையாளம், இன அரசியல், வாழ்வாதாரம்” நூல் அறிமுகம்

15.06.2026

மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்களின் அறவழிப் போராட்டத்தின் 1000 நாள் நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட நிகழ்வின் ஒரு அங்கமாக எழுநாவின் வெளியீடாகிய வை. ஜெயமுருகனின் “மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரை: நில அடையாளம், இன அரசியல், வாழ்வாதாரம்” நூல் அறிமுக நிகழ்வு நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வானது சித்தாண்டி, போராட்டப் பந்தலடி கூடாரத்தில் இன்று (15) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடை பெற்றது.

இந்நிகழ்வில், நூலிற்கான அறிமுகவுரையினை சார்ள்ஸ் அன்ரனிதாஸ் அவர்கள் வழங்கியதுடன், நூல் ஆய்வுரையை க. குருநாதன் வழங்கி வைத்தார்.

நிகழ்வில் சமயத்தலைவர்கள்,சிவில் சமூகப் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், பண்ணையாளர்கள், பொது மக்கள் என பலதரப்பட்டோரும் கலந்து கொண்டனர்.

“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

www.sangathamil.com

நெருப்பு மனிதர்கள்

தமிழீழ விடுதலைப்போரில் காவியமான கரும்புலிகளின் விபரங்கள் 05.07.1987 தொடக்கம் 09.03.2009 வரை

கரும்புலி கப்டன் மில்லர்
வல்லிபுரம் வசந்தன்
துன்னாலை தெற்கு,
கரவெட்டி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 05.07.1987
★★★

கரும்புலி லெப்.கேணல்
போர்க்
மாப்பாணப்பிள்ளை
அரசரத்தினம்
ஆறுமுகத்தான்புதுக்குளம்,
ஓமந்தை, வவுனியா.
வீரச்சாவு: 23.11.1990
★★★

கடற்கரும்புலி மேஜர்
நிலவன்
(வரதன்) கந்தசாமி
இராமசந்திரன்
கள்ளிச்சை, வடமுனை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 26.08.1993
★★★

கடற்கரும்புலி மேஜர்
கணேஸ்
நாகநாதி ஜீவநேசன்
புத்தூர் மேற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.11.1993
★★★

கரும்புலி கப்டன் சீராளன்
ஞானப்பிரகாசம் ரஞ்சன்
உயிர்த்தராசன்குளம்,
முருங்கன், மன்னார்.
வீரச்சாவு: 11.11.1993
★★★

கடற்கரும்புலி மேஜர்
காந்தரூபன்
யோகராசா
கோணேஸ்வரன்
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 10.07.1990
★★★

கரும்புலி மேஜர் டாம்போ
காசிப்பிள்ளை தயாபரன்
நாச்சிக்குடா சந்தி,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 19.03.1991
★★★

கடற்கரும்புலி கப்டன் மதன்
சீனிவாசகம் சிவகுமார்
எல்லைவீதி, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 26.08.1993
★★★

கரும்புலி மேஜர்
தொண்டமான்
கண்ணப்பர் நல்லதம்பி
ஊர்காமம், ஊற்றுச்சேனை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 11.11.1993
★★★

கரும்புலி கப்டன்
செந்தமிழ்நம்பி
செல்லத்துரை ஜெகன்
கோப்பாய், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.11.1993
★★★

கடற்கரும்புலி கப்டன்
கொலின்ஸ்
பர்ணாந்து சில்வெஸ்டர்
நறுவிலிக்குளம், மன்னார்.
வீரச்சாவு: 10.07.1990
★★★

கடற்கரும்புலி கப்டன்
ஜெயந்தன்
சம்புக்குட்டி பத்மநாதன்
சோதிபுரம், மட்டக்களப்பு.
வீரச்சாவு: 04.05.1991
★★★

கடற்கரும்புலி மேஜர்
புகழரசன்
(புவீந்திரன்) சுப்பிரமணியம்
நாதகீதன்
அரியாலை, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 29.08.1993
★★★

கரும்புலி மேஜர்
கலையழகன்
பொன்னையா பேரின்பராசா
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 11.11.1993
★★★

கரும்புலி கப்டன் ஐயனார்
செல்வநாயகம் இராசசேகரம்
அராலி கிழக்கு,
வட்டுக்கோட்டை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.11.1993
★★★

கடற்கரும்புலி கப்டன்
வினோத்
வேலுப்பிள்ளை திலகராசா
காட்டுவளவு,
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 10.07.1990
★★★

கடற்கரும்புலி கப்டன்
சிதம்பரம்
பெரியதம்பி சந்திரன்
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 04.05.1991
★★★

கடற்கரும்புலி கப்டன்
மணியரசன்
வேதநாயகம் ராஜரூபன்
மணற்காடு, குடத்தனை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 29.08.1993
★★★

கரும்புலி கப்டன் கரிகாலன்
இரத்தினசிங்கம் பிரபாகரன்
திருகோணமலை.
வீரச்சாவு: 11.11.1993
★★★

கரும்புலி கப்டன்
சிவலோகன்
சின்னத்தம்பி அருளானந்தம்
7ம் வட்டாரம், முனைக்காடு,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 11.11.1993
★★★

யாழ் – வலிகாமம் வடக்கிலிருந்து மக்கள் சிறீலங்கா அரச படைகளால் வெளியேற்றப்பட்டு இன்றுடன் 36 ஆண்டுகள் நிறைவு: யாழில் மக்கள் போராட்டம்

16.06.2026

யாழ்ப்பாணம் வலி.வடக்கு பகுதியிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு, இன்றுடன் (15) 36 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில், தம்மை மீள்குடியேற்றுமாறு கோரி இன்றைய நாள் யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாகவும் பலாலி சந்திக்கு அருகிலும் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

உள்நாட்டு யுத்தம் காரணமாக கடந்த 1990ஆம் ஆண்டு யூன் மாதம் 15ஆம் திகதி யாழ்-வலி.வடக்கு பிரதேச மக்கள் அப்பகுதிகளிலிருந்து சிறீலங்கா அரச படையினரால் வெளியேற்றப்பட்டனர்.

இந்நிலையில் இன்றைய நாள் அப்பகுதி மக்கள் வெளியேற்றப்பட்டு 36 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

யுத்தம் நிறைவடைந்து 17 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையிலும் அப்பகுதி மக்கள் இன்னமும் மீள்குடியேற அனுமதிக்காது, அப்பகுதி மக்களின் காணிகளில் சிறீலங்கா இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

இந்நிலையில் தமது காணிகளில் இருந்து சிறீலங்கா இராணுவத்தினரை வெளியேற்றி, தம்மை தமது சொந்த இடங்களில் மீள்குடியேற அனுமதிக்க வேண்டும் என யாழ். மாவட்ட செயலகம் முன்பாகவும் பலாலி சந்திக்கு அருகிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

குறித்த போராட்டத்தில் காணி உரிமையாளர்கள், அரசியல் வாதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டிருந்தனர்.

www.sangathamil.com

கரும்புலி கப்டன்
மதிநிலவன்
கணபதிப்பிள்ளை தவராசா
திருகோணமலை.
வீரச்சாவு: 11.11.1993
★★★

கரும்புலி லெப்டினன்ட்
கண்ணன்
நவரட்ணம்
நேசகுலேந்திரன்
உடுத்துறை வடக்கு,
தாளையடி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.11.1993
★★★

கரும்புலி லெப்டினன்ட்
ஜீவரஞ்சன்
கிருஸ்ணபிள்ளை
முருகுப்பிள்ளை
தும்பங்கேணி,
திக்கோடை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 11.11.1993
★★★

கரும்புலி லெப்டினன்ட்
நல்லதம்பி
தங்கராசா கோகுலநாதன்
கொக்கட்டிச்சோலை,
முதலைக்குடா,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 11.11.1993
★★★

கரும்புலி லெப்டினன்ட்
வீரமணி
தெய்வேந்திரம் சுதாகர்
வட்டுக்கோட்டை கிழக்கு,
வட்டுக்கோட்டை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.11.1993
★★★

கரும்புலி லெப்டினன்ட்
செங்கண்ணன்தனுஸ்கோடி
செந்தூர்
சாத்தூர், சிவகாசி, இந்தியா.
வீரச்சாவு: 11.11.1993
★★★

கடற்கரும்புலி மேஜர்
குமணன்
(கோபி) சுப்பிரமணியம்
செல்வலிங்கம்
ஜெயபுரம்,
பல்லவராயன்கட்டு,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 12.11.1993
★★★

கரும்புலி மேஜர் ஜெயம்
குணநாயகம் தேவராசா
பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர்,
மூதூர், திருமலை.
வீரச்சாவு: 02.08.1994
★★★

கரும்புலி கப்டன்
நவரட்ணம்
கிருஸ்தோகுலெம்பேட்
அண்ணதாஸ்
மடு, மன்னார்.
வீரச்சாவு: 02.08.1994
★★★

கரும்புலி லெப்டினன்ட்
ரங்கன்
குணமாலை ரதிக்குமார்
நயினாதீவு, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 02.08.1994
★★★

கரும்புலி கப்டன் திரு
கோணமலை முகுந்தன்
இறக்காம வீதி, அம்பாறை.
வீரச்சாவு: 02.08.1994
★★★

கரும்புலி மேஜர் திலகன்
சுப்பையா ராஜ்
மாங்கேணி,
வாழைச்சேனை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 02.08.1994
★★★

கடற்கரும்புலி கப்டன்
அங்கையக்கண்ணி
துரைசிங்கம்
புஸ்பகலா
கொக்குவில் மேற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 16.08.1994
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
நளாயினி ஆறுமுகசாமி
பத்மாவதி
ஊறணி, வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.09.1994
★★★

கடற்கரும்புலி மேஜர்
மங்கை
கணபதிப்பிள்ளை
புவனேஸ்வரி
முள்ளியான், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.09.1994
★★★

கடற்கரும்புலி கப்டன்
லக்ஸ்மன்
(இசைவாணன்) குகதாசன்
பிரணவன்
நல்லூர், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.09.1994
★★★

கடற்கரும்புலி கப்டன்
வாமன்
(தூயமணி) கந்தசாமி
ரவிநாயகம்
கோயில்போரதீவு,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 19.09.1994
★★★

கடற்கரும்புலி மேஜர் வித்தி
(வேதமணி) சந்தனம்
யோகேஸ்வரன்
மாத்தறை, சிறீலங்கா.
வீரச்சாவு: 08.11.1994
★★★

கடற்கரும்புலி மேஜர்
தணிகைமாறன்
யாக்கோப்
அன்ரன் பெனடிற்
கட்டைக்காடு, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.04.1995
★★★

கடற்கரும்புலி மேஜர்
கதிரவன்
கோவிந்தன் சிவராசா
குமராபுரம், பரந்தன்,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 19.04.1995
★★★

கடற்கரும்புலி மேஜர் மதுசா
முருகேசு இராசலட்சுமி
திருகோணமலை.
வீரச்சாவு: 19.04.1995
★★★

கடற்கரும்புலி கப்டன் சாந்தா
சிவசுப்பிரமணியம்
விஜயதேவி
புங்குடுதீவு, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.04.1995
★★★

யாழ். பலாலி இடப்பெயர்வின் 36ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி கவனயீர்ப்பு போராட்டம்

15.06.2026

யாழ். பலாலி இடப்பெயர்வின் (15.06.1990) 36ஆம் ஆண்டு (15.06.2026) நிறைவை ஒட்டி பாலாலிச் சந்தி அருகில் கவனயீர்ப்பு போராட்டம் மன்னெடுப்பு.

இதுவரை மக்களின் காணி விடுவிக்கப்படவில்லை. தொடரும் அவலம்.

யாழ். செம்மணியில் 6 எலும்புக்கூடுகள் அடையாளம் ஏற்கனவே கண்டறியப்பட்ட 6 எலும்புக்கூடு அகழ்ந்து எடுப்பு

16.06.2026

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 06 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப் பட்டுள்ள நிலையில், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூடுகளில் 06 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட் டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணி யின் 26ஆம் நாள் அகழ்வு பணிகள் செவ்வாய்க்கிழமை (16)

நடைபெற்றது.

இன்றைய அகழ்வு பணியின் போது, 2 சிறுவர் உட்பட 06 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ள நிலையில் மேலும் 06 எலும் புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதேவேளை இரண்டு நாணயங்களை ஒட்டியவாறு எலும்புக் கூடொன்றின் இடுப்பு பகுதியில் இருந்து சான்று பொருட்களாக மீட்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் இது வரையிலான அகழ்வு பணிகளின் போது, 366 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 357 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப் பட்டுள்ளன.

கரும்புலி வீரர்கள் பற்றி இன்று முழு உலகமும் பேசுகிறது. அவர்களது மகத்தான தியாகத்தைக் கண்டு மலைத்துப் போய் நிற்கிறது. பூகம்ப அதிர்வாகக் குமுறும் எமது போராட்டத்தின் உக்கிரத்தை உலக சமுதாயத்திற்கு உணர்த்தியவர்கள் கரும்புலிகளோ.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

கடற்கரும்புலி மேஜர்
தங்கன்
வீரய்யா மயில்வாகனம்
பிட்டமாறுவ, பதுளை,
சிறிலங்கா.
வீரச்சாவு: 16.07.1995
★★★

கடற்கரும்புலி மேஜர்
செந்தாளன்
(நியூட்டன்) பிரான்சில்
டக்ளஸ்
பசையூர், குருநகர்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 16.07.1995
★★★

கடற்கரும்புலி கப்டன்
தமிழினி
சிவப்பிரகாசம் கனிமொழி
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 16.07.1995
★★★

கடற்கரும்புலி மேஜர்
நகுலன்
(தோமஸ்) கந்தையா
கிருஸ்ணதாஸ்
காரைநகர், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 03.09.1995
★★★

கடற்கரும்புலி மேஜர்
கண்ணாளன்
விநாயகம் இளையதம்பி
புதுக்குடியிருப்பு,
வாழைச்சேனை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 03.09.1995
★★★

கடற்கரும்புலி கப்டன்
அருள்ஜோதி
முத்துலிங்கம் சியாமளா
காரைநகர், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 10.09.1995
★★★

கடற்கரும்புலி கப்டன்
செவ்வானம்
கிருஸ்ணபிள்ளை சுமதி
மூளாய் தெற்கு, சுழிபுரம்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 20.09.1995
★★★

கடற்கரும்புலி கப்டன் சிவன்
(சிவா) கிருஸ்ணபிள்ளை
மோகனதாஸ்
1ம்வட்டாரம், மண்டைதீவு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 20.09.1995
★★★

கடற்கரும்புலி மேஜர் கீர்த்தி
வல்லிபுரம் நகுலேஸ்வரன்
பேரலை, பளை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 20.09.1995
★★★

கடற்கரும்புலி மேஜர் அன்பு
(அந்தமான்) இராமசாமி
இராஜ்பவான்
அல்வாய் மேற்கு,
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 20.09.1995
★★★

கடற்கரும்புலி மேஜர்
அருமை
செல்லத்துரை
விஜயானந்தன்
புத்துவெட்டுவான்,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 02.10.1995
★★★

கடற்கரும்புலி கப்டன்
தணிகை
கணபதிப்பிள்ளை வதனா
ரக்கா வீதி, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 02.10.1995
★★★

கடற்கரும்புலி மேஜர்
சிவசுந்தர்
சித்திரவேல் இராமச்சந்திரன்
உப்புவெளி,
திருகோணமலை.
வீரச்சாவு: 17.10.1995
★★★

கடற்கரும்புலி கப்டன் ரூபன்
சுப்பிரமணியம் சுதர்சன்
கொடுவாமடு, செங்கலடி,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 17.10.1995
★★★

கடற்கரும்புலி கப்டன்
சிவகாமி
சண்முகலிங்கம்
இராஜகுமாரி
மயிலிட்டி, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 17.10.1995
★★★

கரும்புலி கப்டன்
சிறைவாசன்
(திலீப்) நாராயணப்பிள்ளை
விக்கினேஸ்வரன்
கொக்குவில், மட்டக்களப்பு.
வீரச்சாவு: 29.10.1995
★★★

கரும்புலி கப்டன் அகத்தி
இராமநாதன் நடராசா
கல்முனை, அம்பாறை.
வீரச்சாவு: 29.10.1995
★★★

கரும்புலி கப்டன் ஜீவன்
(தினகரன்)
கணபதிப்பிள்ளை
இராமணேஸ்வரன்
திராய்மடுக்கொலனி,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 29.10.1995
★★★

கரும்புலி கப்டன் ஈழவன்
திருச்செல்வம் றொபேட்சன்
நவாலி தெற்கு, மானிப்பாய்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 29.10.1995
★★★

கரும்புலி லெப்டினன்ட்
வேணுதாஸ் கந்தப்பொடி
தர்மன்
கொக்கட்டிச்சோலை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 29.10.1995
★★★

கரும்புலி லெப்டினன்ட்
நளினன்
(கோவிந்தன்) திசநாயகம்
உதயதாசன்
1ம் குறிச்சி, தம்புலுவில்,
அம்பாறை. வீரச்சாவு:
29.10.1995
★★★

கரும்புலி லெப்டினன்ட்
கலைச்செல்வன் ஆறுமுகம்
சந்திரகுமார்
அவிசாவளை, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 29.10.1995
★★★

மற்றவர்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காக தன்னை இல்லா தொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம் அந்தத் தெய்வீகப் பிறவிகள் தான் கரும்புலிகள். – தேசியத் தலைவர்

நெல்லுக்கான நிர்ணய விலையை அறிவிக்க வலியுறுத்திக் கிளிநொச்சி விவசாயிகளால் கவனயீர்ப்பு போராட்டம்!

16.06.2026

நெல்லுக்கான நியாயமான நிர்ணய விலையை அரசாங்கம் அறிவித்து வழங்க வேண்டும் என வலியுறுத்தி கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் இன்றைய தினம் கவனயீர்ப்பு பேரணி யொன்றை முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி நகரிலுள்ள சித்தி விநாயகர் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமான பேரணி, கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை முன்னெடுக்கப்பட்டது.

பேரணியில் கலந்து கொண்ட விவசாயிகள் தங்களது கோரிக் கைகளை வலியுறுத்தும் பதாகைகள் மற்றும் வாசகங்களை ஏந்தியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இலங்கையின் மிகப்பெரிய மனிதப் புதைகுழியாக யாழ். செம்மணி: 380 மனித எச்சங்கள்...!

17.06.2026

இலங்கையில் அதிகளவான மனித எலும்புக் கூடுகள் மீட்கப் பட்ட மனிதப் புதைகுழியாக யாழ். செம்மணி மனிதப் புதைகுழி பதிவாகியுள்ளது.

இது வரை காலமும் மன்னர் சதொச புதைகுழியில் இருந்து 376 மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டமையே , இலங்கை யில் அதிகளவான மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்ட புதை குழியாக காணப்பட்டது.

இந்நிலையில் யாழ். செம்மணியில் புதன் கிழமையுடன் 380 மனித எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன..

அடையாளம் காணப்பட்ட எலும்புக் கூடுகளில் 362 என்பு கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு நீதிமன்ற கட்டுக்காவலில் வைக் கப்பட்டுள்ளன.

அந்த வகையில், இலங்கையில் அதிகளவான மனித எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியாக யாழ். செம்மணி மனிதப் புதைகுழி பதிவாகியுள்ளது.

அதேவேளை குறித்த செம்மணி மனித புதைகுழியை வெள் ளிக்கிழமை (19) நீதி அமைச்சர் தலைமையிலான விசேட குழு வினரும், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் ஆணை யாளர்கள் உள்ளடங்கிய விசேட குழுவினரும் நேரில் பார்வை யிட நீதிமன்றில் அனுமதி கோரி இருந்த நிலையில் அவர்க

ளுக்கான அனுமதியை நீதிமன்று வழங்கியுள்ளமை குறிப் பிடத்தக்கது.

யாழ். செம்மணியில் இன்றும் குழந்தை, சிறுவரின் எலும்புக் கூட்டுத் தொகுதி மீட்பு

17.06.2026

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து இன்றைய தினமும் 14 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட எலும்புக் கூடுகளில் குழந்தை ஒன்றும் சிறுவர் ஒருவருடையுமாக 05 எலும்புக் கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணி யின் 27ஆம் நாள் அகழ்வு பணிகள் இன்றைய தினம் புதன் கிழமை நடைபெற்றது.

இன்றைய அகழ்வு பணிகளின் போது, எலும்புக்கூடொன்றின் இடுப்பு பகுதியில் ஒரு இரும்பு வலயம் ஒன்று சான்று பொருள் மீட்கப்பட்டுள்ள நிலையில், சிறுமி ஒருவருடைய பிளாஸ்ரிக்

காப்பை ஒத்த பொருள் ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அதனை சுத்தப்படுத்தும் பணிகள் முன்னெடுக் கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இது வரையிலான அகழ்வு பணிகளின் போது, 380 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 362 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப் பட்டுள்ளன.

www.thuyarpakirvu.com

கரும்புலி லெப்டினனட்
தொண்டன்
இராசரத்தினம்
கிருஸ்ணராஜ்
கச்சாய் வீதி, சாவகச்சேரி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 29.10.1995
★★★

கரும்புலி லெப்டினனட்
தங்கத்துரை (ராகுலன்)
சீவரட்ணம் காந்தரூபன்
வசாவிளான், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 29.10.1995
★★★

கரும்புலி லெப்டினனட்
சசிக்குமாரன் செல்வராசா
ரொபின்சன்
ஆனந்தபுரம், கிளிநொச்சி.
வீரச்சாவு: 29.10.1995
★★★

கரும்புலி 2ம் லெப்டினனட்
இசைச்செல்வன் நாகராசா
சண்முகசீலன்
பண்டத்தரிப்பு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 29.10.1995
★★★

கரும்புலி மேஜர் ரங்கன்
(தினேஸ்குமார்) ஜெஸ்டின்
யூட்நெவின்
மாங்கேணி,
வாழைச்சேனை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 05.12.1995
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
மதன்
(சோலைநம்பி)
யோகச்சந்திரன்
ரதீஸ்குமார்
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 13.02.1996
★★★

கடற்கரும்புலி மேஜர்
வேங்கை
சூசைப்பிள்ளை
செல்வக்குமார்
பொலிகண்டி,
வல்வெட்டித்தறை,
யாழ்ப்பாணம். வீரச்சாவு:
13.02.1996
★★★

கடற்கரும்புலி மேஜர்
ஜெகநாதன்
சங்கரப்பிள்ளை தவராசா
பத்தினிப்பாய், பூநகரி,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 30.03.1996
★★★

கடற்கரும்புலி கப்டன்
இளையவள்
இராசலிங்கம் இராஜமலர்
உவர்மலை,
திருகோணமலை.
வீரச்சாவு: 30.03.1996
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
நதீஸ்
(பிரதாபன்) அருமைசந்திரன்
செந்தில்குமார்
கந்தர்மடம் வேம்படி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 12.04.1996
★★★

கடற்கரும்புலி மேஜர்
பொய்யாமொழி விசுவாசம்
டானியல்
திருகோணமலை.
வீரச்சாவு: 12.04.1996
★★★

கடற்கரும்புலி மேஜர்
ஜெனாத்தனன்
(வீணைக்கொடியோன்)
சிற்றம்பலம் கிருஸ்ணதாஸ்
காங்கேசன்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 12.04.1996
★★★

கடற்கரும்புலி மேஜர்
தென்னமுதன் (பரன்)
நாகேந்திரன் தங்கராசா
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 12.04.1996
★★★

கடற்கரும்புலி மேஜர் ரவாஸ்
(வளநாடன்) திருச்செல்வன்
கிளைமென்ற்
சாக்கோட்டை, அல்வாய்
மேற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 12.04.1996
★★★

கடற்கரும்புலி மேஜர் ரதன்
வேலுப்பிள்ளை
சுரேஸ்ராஜன்
செல்வநாயகபுரம்,
திருகோணமலை.
வீரச்சாவு: 12.04.1996
★★★

கடற்கரும்புலி கப்டன் சுபாஸ்
மாரிமுத்து வசந்தகுமார்
தம்பலகமம்,
திருகோணமலை.
வீரச்சாவு: 12.04.1996
★★★

கடற்கரும்புலி கப்டன் மதனி
கணபதிப்பிள்ளை
தெய்வநந்தினி
வெற்றிலைக்கேணி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 12.04.1996
★★★

கடற்கரும்புலி கப்டன் விக்கி
இராசரத்தினம் சுமதி
மருதங்கேணி வடக்கு,
தாளையடி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 12.04.1996
★★★

கடற்கரும்புலி மேஜர்
ஜீவறஞ்சன்
(இளங்கோ) பொன்னையா
தமிழ்ச்செல்வன்
பறநாட்டாங்கல், ஓமந்தை,
வவுனியா.
வீரச்சாவு: 10.06.1996
★★★

கடற்கரும்புலி மேஜர்
செல்லப்பிள்ளை
இராமலிங்கம்
செல்வராசா
நறுவிலிக்குளம்,
வங்காலை,
மன்னார்.
வீரச்சாவு: 19.07.1996
★★★

கடற்கரும்புலி மேஜர்
பார்த்தீபன்
(வேதமணி) உலகநாதன்
ரமேஸ்
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.07.1996
★★★

கடற்கரும்புலி மேஜர்
கண்ணபிரான் (அப்துல்லா)
சாமித்தம்பி புலேந்திரன்
மறுங்கடிபூவல், அம்பாறை.
வீரச்சாவு: 19.07.1996
★★★

கரும்புலி வீரர்கள் பற்றி இன்று முழு உலகமும் பேசுகிறது. அவர்களது மகத்தான தியாகத்தைக் கண்டு மலைத்துப்போய் நிற்கிறது. பூகம்ப அதிர்வாகக் குமுறும் எமது போராட்டத்தின் உக்கிரத்தை உலக சமுதாயத்திற்கு உணர்த்தியவர்கள் கரும்புலிகளே. - தேசியத் தலைவர்

செம்மணி மனிதப் புதைகுழியில் குழந்தையின் எச்சம் உட்பட மேலும் 5 எலும்புக்கூடுகள் அகழ்வு

18.06.2026

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து 18ஆம் திகதி வியாழக்கிழமை ஒரு குழந்தையின் எலும்புக்கூடு உட்பட 5 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில், புதிதாக 07 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணியின் 28ஆம் நாள் அகழ்வு பணிகள் வியாழக்கிழமை (18) நடைபெற்றது.

சான்று பொருட்களாக சிறு பாசிமணி துண்டு, கை வளையல், ஆணிகள் பிளாஸ்ரிக் என்பவை மீட்கப்பட்டுள்ளது.

அதவேளை பாரிய உலோக துண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அதற்குள் எலும்புக்கூடுகள் காணப் படுவதனால், அதனை பக்குவமாக சுத்தப்படுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அதனடிப்படையில் இது வரையிலான அகழ்வு பணிகளின் போது, 387 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 367 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப் பட்டுள்ளன.

யாழ். செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச மேற்பார்வை வேண்டிப் போராட்டம்

19.06.2026

யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழி பகுதிக்கு வருகை தந்த சிறீலங்கா நீதி அமைச்சர் தலைமையிலான விசேட குழு வினர் மற்றும் காணமால் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகத் தின் ஆணையாளர்கள் உள்ளிட்ட விசேட குழுவினரின் கவனத்தை ஈர்க்கும் முகமாக கவனயீர்ப்பு போராட்டம் முன் னெடுக்கப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வாய்வு பணிகளை இன்றைய நாள் வெள்ளிக்கிழமை சிறீலங்கா நீதி அமைச்சர் தலைமையிலான விசேட குழுவினர் மற்றும் காணமால் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகத்தின் ஆணையாளர்கள் பார்வையிட நீதிமன்று அனுமதித்து இருந்து.

அந்நிலையில் மனிதப் புதைகுழியை பார்வையிட வரும் அவர்களின் கவனத்தை ஈர்க்கும் முகமாக காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்கள் அப்பகுதியில் கவனயீர்ப்பு போராட் டத்தினை முன்னெடுத்தனர்.

அதன் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி வேண்டும், புதைகுழி தொடர்பில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் வேண்டாம் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து போராட்டத் தில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணம் சிந்தும் பாத்தி செம்பில் பெரும் எண்ணிக்கையிலான மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ள நிலையில் இலங்கையின் மிகப்பெரிய மனிதப்புதைகுழியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

www.sangathamil.com

கடற்கரும்புலி மேஜர்
பதுமன்
ஆனந்தமயில் பாலமுரளி
நாகர்கோயில் வடக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.07.1996
★★★

கடற்கரும்புலி மேஜர்
சுடரொளி
செபமாலை இரத்தினமலர்
மாதகல், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.07.1996
★★★

கடற்கரும்புலி மேஜர்
மிதுபாலன்
வேதாரணியம்
ஜெயக்காந்தன்
சங்கத்தானை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 21.07.1996
★★★

கடற்கரும்புலி கப்டன்
சயந்தன்
தம்பிப்பிள்ளை
துரைரத்தினம்
அக்கரைப்பற்று, அம்பாறை.
வீரச்சாவு: 21.07.1996
★★★

கடற்கரும்புலி மேஜர்
தில்லையன்
(நளினன்) தெய்வேந்திரன்
யோகேஸ்வரன்
மூதூர், திருகோணமலை.
வீரச்சாவு: 25.10.1996
★★★

கடற்கரும்புலி கப்டன்
ஜெயராஜ்
(பெரியதம்பி) கந்தசாமி
கோபாலகிருஸ்ணன்
காரைநகர், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 25.10.1996
★★★

கடற்கரும்புலி மேஜர் பாரதி
கமலராணி வீரகத்தி
நாகர்கோவில்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.11.1996
★★★

கடற்கரும்புலி கப்டன்
இன்னிசை
புஸ்பலதா இராசதுரை
வெற்றலைக்கேணி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.11.1996
★★★

கடற்கரும்புலி கப்டன்
மாலிகா
செல்வராணி ஆறுமுகம்
அல்வாய் வடக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 08.12.1996
★★★

கரும்புலி மேஜர் சிற்றம்பலம்
(குமார்) இராஜேந்திரம்
சத்தியகுமார்
சுதுமலை, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 06.03.1997
★★★

கரும்புலி கப்டன்
விஜயரூபன்
கந்தசாமி சிவகுணம்
விசங்கேணி, கிரான்,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 06.03.1997
★★★

கரும்புலி கப்டன் நிவேதன்
சுப்பிரமணியம்
சுதேஸ்வரன்
மஞ்சந்தொடுவாய்,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 06.03.1997
★★★

கடற்கரும்புலி மேஜர்
நாவலன்
(மதீஸ்) கந்தையா
முருகையா
2ம் வாய்க்கால்,
திருவையாறு,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 24.03.1997
★★★

கடற்கரும்புலி மேஜர்
தமிழ்மாறன்
இராசையா மதியழகன்
ஊர்காவற்றுறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 24.03.1997
★★★

கடற்கரும்புலி கப்டன்
வானதி
இராமையா கலைவாணி
10ம் யூனிற், தர்மபுரம்,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 24.03.1997
★★★

கடற்கரும்புலி கப்டன்
கலைவள்ளி
ஆறுமுகம் கசீந்திரா
அராலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 24.03.1997
★★★

கடற்கரும்புலி மேஜர் அன்பு
முத்துவேல் ரவிச்சந்திரன்
முருங்கன், மன்னார்.
வீரச்சாவு: 27.05.1997
★★★



கடற்கரும்புலி மேஜர்
இளமகன்
தர்மலிங்கம் திருகணேசன்
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 27.05.1997
★★★

கடற்கரும்புலி மேஜர்
வலம்புரி
கைலாசப்பிள்ளை புஸ்பவதி
அனுராதபுரம், சிறீலங்கா.
வீரச்சாவு: 27.05.1997
★★★

கடற்கரும்புலி மேஜர்
வினோதா
தேவசிகாமணி விஜயகுமாரி
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 27.05.1997
★★★

கடற்கரும்புலி மேஜர் சந்திரா
தம்புசெபஸ்ரியான்
மறியகொறற்றி
குருநகர், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 27.05.1997
★★★

கடற்கரும்புலி கப்டன்
சுதாகரன்
கனகசபை அருள்
மொறக்கொட்டாஞ்சேனை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 27.05.1997
★★★

கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள் – எமது போராட்டப் பாதையின் தடைநீக்கிகள் – எதிரியின் படை பலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள் - தேசியத் தலைவர்

யாழில் தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி காணி உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டம்

19.06.2026

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது சொந்தக் காணிகளை உடனடியாக விடுவிக்குமாறு கோரி, காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் “கொமாண்டோ” பங்களாவுக்கு முன்பாக இன்று வெள்ளிக்கிழமையும் (19) தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வலி. வடக்கில் 249, 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் 1990ஆம் ஆண்டு யூன் மாத கால பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது.

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும், அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.

முல்லைத்தீவு வட்டுவாகல் விகாரைக்குக் கீழே செம்மணியை விடப் பெரிய மனிதப் புதைகுழி உள்ளது

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

19.06.2026

முல்லைத்தீவு - வட்டுவாகால் விகாரைக்குக் கீழே அகழ்வுகளை மேற்கொண்டால், இந்தச் செம்மணியை விடவும் பல மடங்கு பெரியதொரு மனிதப் புதைகுழி அடையாளம் காணப்படும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குறிப்பிட்டுள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழியில் பிஞ்சுக் குழந்தைகள், சிறுவர்கள், பெரியவர்கள் எனத் தமிழ் மக்கள் குடும்பம் குடும்பமாகக் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டுள்ளனர்.

இது தற்சமயம் இலங்கையின் மிகப்பெரிய மனிதப் பேரவலத்தின் சாட்சியாக உருவெடுத்திருக்கும் நிலையில், இதற்குச் சர்வதேச நாடுகளும் இலங்கை அரசும் என்ன பதிலைக் கூறப் போகின்றன? என்றும் கேள்வியெழுப்பினார்.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் மற்றும் வடக்கு, கிழக்கில் உள்ள ஏனைய புதைகுழிகள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

“எங்களுடைய தமிழ் இனத்தின் மீதான திட்டமிட்ட அழிவுகளை இலங்கை அரசினுடைய ஒவ்வொரு ஆட்சியாளர்களும் தொடர்ச்சியாகச் செய்துகொண்டே வந்திருக்கின்றார்கள்.

ஏற்கனவே ஆட்சியில் இருந்தவர்கள் எமது இனத்தை வன்முறையாக அழித்தமைக்கான அசைக்க முடியாத சாட்சிகள், இயற்கையின் நீதியால் தற்போது ஒவ்வொன்றாக வெளியே வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

செம்மணியில் தற்போதைய அகழ்வுகளின் மூலம் வெளிவரும் உண்மைகள் உலகத்தையே உலுக்கியுள்ளன. தமிழர் தாயகப் பகுதிகளில் இன்னும் எத்தனையோ இடங்களில் இவ்வாறான மனிதப் புதைகுழிகள் இரகசியமாக மூடிமறைக்கப்பட்டுள்ளன.

அவற்றை முறையாகத் தோண்டத் தொடங்கினால், இன்னும் பேரதிர்ச்சியைத் தரும் வகையிலான மனித எலும்புக் குவியல்கள் தொடர்ச்சியாகக் கிடைத்துக்கொண்டே இருக்கும்.

குறிப்பாக, முல்லைத்தீவு வட்டுவாகால் பகுதியில் அமைந்துள்ள விகாரைக்குக் கீழே அகழ்வுகளை மேற்கொண்டால், செம்மணியை விட மிகப்பெரியதொரு மனிதப் புதைகுழி வெளிச்சத்துக்கு வரும். இதற்காக அந்த விகாரையை உடைத்துத்தான் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்பதில்லை.

தற்கால நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி, ‘ஸ்கேன்’ செய்வதன் மூலமே அங்கு நிலத்தடியில் எத்தனை ஆயிரக்கணக்கான என்புத் தொகுதிகள் புதைக்கப்பட்டுள்ளன என்பதைத் துல்லியமாக ஆராய்ந்து அறிய முடியும்.

இதேபோல், கேப்பாப்பிலவு போன்ற இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த மற்றும் இருக்கின்ற பல இடங்களில் பாரிய மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என அப்பகுதி மக்கள் இன்றும் பலத்த அச்சத்துடன் இருக்கின்றார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பெரும்பாலான இடங்களில் அப்பாவிப் பொதுமக்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டு, கூட்டங்கூட்டமாகப் புதைக்கப்பட்டிருக்கிறார்கள்.

சந்தேகத்துக்குரிய அந்த மனிதப் புதைகுழிகள் அனைத்தும் சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் முழுமையாகத் தோண்டப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

இந்த விவகாரத்தில் சர்வதேச சமூகம் நேரடியாகத் தலையிட்டு, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குப் பாரபட்சமற்ற நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என்பதே எங்களின் பிரதான எதிர்பார்ப்பாகும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர் தேசம் போரை விரும்பவில்லை. வன்முறையை விரும்பவில்லை. அகிம்சை வழியில் அமைதி வழியில் நீதி வேண்டி நின்றஎம் மக்களிடம் சிங்கள தேசம் தான் போரைத் திணித்திருக்கிறது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.com

கடற்கரும்புலி கப்டன்
அருளரசன்
தங்கராசா தியாகராசா
களுதாவளை, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 27.05.1997
★★★

கடற்கரும்புலி கப்டன் சித்தா
பாலசிங்கம் சிற்றூபன்
சுழிபுரம், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 27.05.1997
★★★



கரும்புலி மேஜர் நிதன்
(பர்வதன்)
மாணிக்கம் அருள்ராசா
மொறக்கொட்டாஞ்சேனை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 10.06.1997
★★★

கரும்புலி மேஜர் யாழினி
சிவசுப்ரமணியம் ராகினி
உரும்பிராய் தெற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 10.06.1997
★★★

கரும்புலி கப்டன் சாதுரியன்
நடராசா அரசரட்ணம்
கிரான், மட்டக்களப்பு.
வீரச்சாவு: 10.06.1997
★★★

கடற்கரும்புலி மேஜர் பாலன்
சோமசுந்தரம் திலீபன்
கிருஸ்ணன்கோவில் வீதி,
அம்பாறை.
வீரச்சாவு: 28.06.1997
★★★

கடற்கரும்புலி மேஜர் சிறி
(திருமாறன்)
கணேசபிள்ளை
ரவிச்சந்திரன்
சிவன் கோவிலடி,
காரைநகர்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.10.1997
★★★

கடற்கரும்புலி கப்டன்
சின்னவன்
நந்தகோபாலன் சுரேஸ்
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 19.10.1997
★★★

கரும்புலி லெப்.கேணல்
சுபேசன்
(கிள்ளிவளவன்) மருசலீன்
அல்வீன்
காலிமோட்டை, முருங்கன்,
மன்னார்.
வீரச்சாவு: 01.02.1998
★★★

கரும்புலி மேஜர் குமுதன்
மயில்வாகனம் இன்பராஜ்
மானிப்பாய், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 01.02.1998
★★★

கரும்புலி மேஜர் ஜெயராணி
நடராசா சாந்தி
சிறுதோப்பு, பேசாலை,
மன்னார்.
வீரச்சாவு: 01.02.1998
★★★

கரும்புலி மேஜர் ஆசா
வேலுப்பிள்ளை சிவஜமுனா
கொடிகாமம், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 01.02.1998
★★★

கரும்புலி மேஜர் மங்கை
இரத்தினசிங்கம் நேசமலர்
5ம் யூனிட், இராமநாதபுரம்,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.
வீரச்சாவு: 01.02.1998
★★★

கரும்புலி கப்டன் குமரேஸ்
(குமணன்) ஜெகநாதன்
ரவிச்சந்திரன்
பல்லவராயன்கட்டு,
ஜெயபுரம்,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 01.02.1998
★★★

கரும்புலி கப்டன் இந்து
கந்தையா புனிதா
அக்கரைப்பற்று, அம்பாறை.
வீரச்சாவு: 01.02.1998
★★★

கரும்புலி கப்டன் நளாயினி
பழனி கோகிலா
நெடுங்கேணி,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 01.02.1998
★★★

கரும்புலி கப்டன் தனா
பெருமாள் கலைநிதி
கொல்லன்கல்லட்டி,
தெல்லிப்பளை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 01.02.1998
★★★

கரும்புலி கப்டன்
உமையாள்
செல்லத்துரை புஸ்பராணி
நெடுங்கேணி,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 01.02.1998
★★★

கரும்புலி கப்டன் செங்கதிர்
ஜெயரட்ணம் ஜெயந்தா
வசாவிளான், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 01.02.1998
★★★

கரும்புலி கப்டன்
நெடியோன்
குலேந்திரம் ஞானசங்கர்
வண்ணாமலை,
தெல்லிப்பளை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 01.02.1998
★★★

கரும்புலி கப்டன் அருண்
அம்பிகாவதி அருட்சோதி
நாரந்தனை, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 01.02.1998
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
கரன்
பாலசுந்தரம்
கோபாலகிருஸ்னன்
மன்னம்பிட்டி, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 22.02.1998
★★★

கடற்கரும்புலி மேஜர்
வள்ளுவன்
செல்வராசா தவராசா
அராலி மேற்கு,
கொட்டைகாடு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.02.1998
★★★

கடற்கரும்புலி மேஜர்
குமரேஸ்
துரைராசா செல்வகுமார்
பூந்தோட்டம், வவுனியா.
வீரச்சாவு: 22.02.1998
★★★

மன்னார் படகுத்துறையில் கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கடலுணவு கொள்வனவு வாடியை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு ரவிகரன் எம்.பியிடம் கோரிக்கை

20.06.2026

மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலாளர்பிரிவில், இலுப்பைக்கடவை, படகுத்துறைப் பகுதியில் கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கடலுணவுகளைக் கொள்வனவு செய்யும் வாடிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு, குறித்த வாடிகளின் உரிமையாளர்களால் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

படகுத்துறைப் பகுதியில் கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கடலுணவுக் கொள்வனவனவு வாடிகளின் உரிமையாளர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக குறித்த பகுதிக்கு நேரில் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், நிலைமைகளைப் பார்வையிட்டதுடன், கடலுணவுக் கொள்வனவாளர்கள் மற்றும் மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டார். இதன்போதே கடலுணவுக் கொள்வனவாளர்களால் மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக படகுத்துறைப்பகுதியில் கடந்த 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடலுணவுகளைக் கொள்வனவு செய்வதற்கென வாடிகள் அமைக்கப்பட்டு, கடலுணவுக் கொள்வனவுச்

செயற்பாடுகள் மிகச்சிறப்பாக இடம்பெற்றுவந்துள்ளன.

இத்தகையசூழலில் கடந்த யுத்த சூழல் காரணமாக அந்தப்பகுதிகளிலிருந்த மக்கள் இடப்பெயர்வைச் சந்திக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதி மீள்குடியேற்றம் செய்யப்பட்டபோது, குறித்த இரு கடலுணவுக் கொள்வனவாளர்களுக்குரிய வாடி அமைந்திருந்த பகுதி கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த கடலுணவுக் கொள்வனவு வாடிகளையும் கடற்படையினர் பயன்படுத்திவந்துள்ளனர்.

இந்நிலையில் குறித் கடலுணவு கொள்வனவு வாடிகளை விடுவிக்குமாறு, குறித்த வாடிகளின் உரிமையாளர்களால் தொடர்ச்சியாக உரியதரப்பினரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்தபோதும், அந்தவாடிகளை விடுவிப்பதற்கு இதுவரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

அதேவேளை தற்போது படகுத்துறைப்பகுதியில் 150இற்கும் மேற்பட்ட மீனவர்கள் கடற்தொழிலுக்குச் சென்று வருவதாக கடலுணவு கொள்வனவாளர்களால் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிலையில் இவ்வாறு கடற்படையினால் கடலுணவுக் கொள்வனவு வாடிகள் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதால் கடற்தொழிலாளர்களிடமிருந்து கடலுணவுகளைக் கொள்வனவு செய்வதில் தாம் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துவருவதாகவும் இதன்போது கடலுணவுக் கொள்வனவாளர்களால் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் முறையீடு செய்யப்பட்டது.

எனவே கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது கட

லுணவுக் கொள்வனவு வாடிகளை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடலுணவுக் கொள்வனவாளர்கள் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கையினையும் முன்வைத்தனர்.

இந்நிலையில் கடலுணவுக் கொள்வனவாளர்கள் மற்றும் மீனவர்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், குறித்த கடலுணவுக் கொள்வனவு வாடிகளை விடுவிப்பதுதொடர்பில் தம்மால் கவனஞ் செலுத்தப்படுமெனத் தெரிவித்தார்.

மேலும் இந்த களவிஜயத்தில் மன்னார் நகரசபை உறுப்பினர் சோமநாதன் பிரசாத் அவர்களும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வட்டுக்கோட்டைப் பிரகடனம் நிறைவேற்றப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு "வட்டுக்கோட்டை 50 எழுச்சி மாநாடு"

20.06.2026

வட்டுக்கோட்டை - 50 எழுச்சி மாநாடு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் இன்றைய நாள் சனிக்கிழமை நடைபெற்றது.

மாநாட்டின் முன்னதாக, தந்தை செல்வா சதுக்கத்தில் தந்தை செல்வாவிற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

அங்கிருந்து தந்தை செல்வா கலையரங்குக்கு ஊர்வலமாக சென்று, கலையரங்கில் மூன்று மாவீரர்களின் சகோதரன் ஈகை சுடரேற்றியதை தொடர்ந்து, தந்தை செல்வாவின் உருவ படத்திற்கு தென்கயிலை ஆதீனக் குருமுதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்.

அதனை தொடர்ந்து ஏனையவரக்ள் மலர்தூவி வணக்கம் செலுத்தினர்.

மாநாட்டில் பொத்துவில் பொலிகண்டி ஒருங்கிணைப்பாளர்

தவத்திரு வேலன் சுவாமிகள், யாழ் குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன், ப.அரியநேந்திரன் முன்னாள் வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் முன்னாள் யாழ் மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் புத்திஜீவிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்

கடற்கரும்புலி மேஜர்
தமிழினியன்
நடராசா கிருபாகரன்
காங்கேசன்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.02.1998
★★★

கடற்கரும்புலி மேஜர்
சுலோஜன்
(மாமா) குமாரசிங்கம்
விஜஜேந்திரன்
தம்பலகாமம்,
திருகோணமலை.
வீரச்சாவு: 22.02.1998
★★★

கடற்கரும்புலி மேஜர்
தமிழ்மங்கை
(நைற்றிங்கேல்) துரைராசா
சத்தியவாணி
வெட்டுக்காடு, பூநகரி,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 22.02.1998
★★★

கடற்கரும்புலி கப்டன்
மொறிஸ்
(தமிழின்பன்)
தர்மபாலசிங்கம்
தயாபரன்
காரைநகர், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.02.1998
★★★

கடற்கரும்புலி கப்டன்
வனிதா
கந்தையா புஸ்பராணி
மாறாஇலுப்பை,
நெடுங்கேணி,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 22.02.1998
★★★

கடற்கரும்புலி கப்டன்
நங்கை
பட்டுராசா கௌசலா
கொட்டடி, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.02.1998
★★★

கடற்கரும்புலி கப்டன்
ஜனார்த்தினி
கைலாயநாதன் சுகந்தி
3ம் வட்டாரம்,
முள்ளியவளை,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 22.02.1998
★★★

கடற்கரும்புலி கப்டன்
மேகலா
தங்கராசா தமயந்தி
வேம்படி, வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.02.1998
★★★

கடற்கரும்புலி கப்டன்
ஆர்வலன்
(கோபி) செபஸ்ரியான்
அகஸ்ரின்
நுவரெலியா. சிறீலங்கா.
வீரச்சாவு: 11.03.1998
★★★

கடற்கரும்புலி கப்டன்
இசையாளன்
சுந்தரராஜன் ரவிராஜா
இரத்தினபுரம், கிளிநொச்சி.
வீரச்சாவு: 11.03.1998
★★★

கடற்கரும்புலி கப்டன்
ஈழவேந்தன்
(ஈழவன்) ஆறுமுகம்
வீரசிங்கம்
சந்திக்காடு முகாம், சுழிபுரம்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 18.04.1998
★★★

கடற்கரும்புலி கப்டன்
பூங்குழலி
சாமிநாதர் சின்னமலர்
நெடுந்தீவு கிழக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 18.04.1998
★★★

கரும்புலி மேஜர் நிலவன்
சூரியகுமார் திலீபன்
கோப்பாய் வடக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 14.10.1998
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
வள்ளுவன் (பாண்டியன்)
கௌரிசாமி திலகமோகன்
கோண்டாவில் மேற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 09.11.1998
★★★

கடற்கரும்புலி மேஜர்
நவநீதன்
(இசையாளன்) மரியநாயகம்
ஜெயசீலன்
எழுதுமட்டுவாள், கிளாலி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 10.03.1999
★★★

கடற்கரும்புலி கப்டன்
தோழன்
(திருச்செல்வன்)
சுப்பிரமணியம்
ராஜ்குமார்
கள்ளப்பாடு, முல்லைத்தீவு.
வீரச்சாவு: 10.03.1999
★★★

கரும்புலி மேஜர் அரசப்பன்
மயில்வாகனம்
அருட்செல்வன்
சந்திவெளி, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 29.05.1999
★★★

கரும்புலி மேஜர்
ரட்ணாதரன்
(ரட்ணவேல்) குமாரசாமி
ஆனந்தன்
கோடைமடு, எருவில்,
களுவாஞ்சிக்குடி,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 09.08.1999
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
நீதியப்பன் வீரபாகு
சிவனேஸ்வரன்
மூதூர், திருகோணமலை.
வீரச்சாவு: 15.08.1999
★★★

கடற்கரும்புலி மேஜர்
அந்தமான்
(எழில்வேந்தன்) வடிவேல்
செந்தில்குமார்
ஆரையம்பதி, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 15.08.1999
★★★

கடற்கரும்புலி மேஜர் ரவி
(விடுதலை) கந்தையா
செல்வராஜா
நவாந்துறை, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 26.09.1999
★★★

கடற்கரும்புலி மேஜர்
உமேசன்
(செழியன்) தங்கவேல்
ஆனந்தகுமார்
நெழுக்குளம், வவுனியா.
வீரச்சாவு: 26.09.1999
★★★

கிருசாந்தி படுகொலையின் குற்றவாளியை யாழ்ப்பாணம் அழைத்து வந்து விசாரிக்க வேண்டும்

முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன்

20.06.2026

கிரிசாந்தி படுகொலை வழக்கின் மரண தண்டனை கைதியை செம்மணி புதைகுழி பகுதிக்கு அழைத்து வந்து விரிவான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், செம்மணியை அண்டிய பகுதிகளில் காணப்படுவதாக சந்தேகிக் கப்படும் மேலதிக புதைகுழிகள் தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என நாடாளுமன்ற முன்னைநாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழில். இன்றைய நாள் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

கிரிசாந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டு தற் போது மரண தண்டனை கைதியாக சிறையில் உள்ள சோம வன்ச ராஜபக்ஷ பல ஆண்டுகளாக செம்மணி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான உடல்கள் புதைக்கப்பட்டுள்ளதாக கூறி வருகிறார்.

செம்மணி மாத்திரம் அன்றி அதன் அயலூர்களான, கொழும் புத்துறை, அரியாலை உள்ளிட்ட பகுதிகளிலும் புதைகுழிகள் இருப்பதாக கூறியுள்ளார்.

எனவே, புதைகுழிகள் தொடர்பான வழங்கக்கூடிய சோமவன்ச ராஜபக்ஷவை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்து இடங்களை அடையாளம் காண்பதற்கான விசாரணைகளை மேற் கொண்டு விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

அதேவேளை, மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்ட 200க்கும் மேற் பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பான விசாரணைகளின் நிலைமை இதுவரை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்படாது மூடு மந்திரமாக காணப்படுகிறது.

தற்போது செம்மணி பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள எலும்புக் கூடுகளின் எண்ணிக்கை 400-ஐ நெருங்கியுள்ளது.

செம்மணியில் மீட்கப்படும் என்பு கூடுகளை அப்படியே வைத் திருக்காது அது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ள வேண் டும். அதனை துல்லியமாகக் கண்டறிவதற்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகள் இலங்கையில் போதுமான அளவில் இல்லை. எனவே மீட்கப்படும் எலும்புக் கூடுகளை ஆய்வு செய் வதற்கு சர்வதேச நிபுணர்களின் பங்களிப்புடன் கூடிய சுயாதீன சர்வதேச விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும்,

இந்த விசாரணையின் நோக்கம் குற்றவாளிகளுக்கு தண் டனை வழங்குவது மட்டுமல்லாது, காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு உண்மையை வெளிப்படுத்தவும், எதிர்காலத்

தில் இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்கும் வழிமுறைகளை உருவாக்குவதுமாக இருக்க வேண்டும்

இதற்காக மனித உரிமை அமைப்புகள், சர்வதேச மனித உரிமை ஆணையகம் மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப் பினர்கள் இந்த விவகாரம் தொடர்பாக உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் வலுவான குரல் எழுப்ப வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

அம்பாறை – கல்முனைப் படுகொலையின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல்

21.06.2026

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை நகரில் 1990 யூன் மாதம் 20ஆம் திகதி தமிழர்கள் மீதான படுகொலைகள் இடம்பெற்றன.

இதனை முன்னிட்டு 36 வருடங்களுக்கு பின்னர் அம்பாறை மாவட்டம் கல்முனை அம்மன் கோவில் வீதி சந்தியில் சனிக் கிழமை (20) மாலை நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வ மாக நடைபெற்றது.

இதன் போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கல்முனைத் தொகுதி தலைவர் சட்டத்தரணி நிதான்சன் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றதுடன் கல்முனை வாழ் மக்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பு கல்முனை முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள் இளைஞர்கள் என பலரும் கலந்து கொண் டிருந்தனர்.

குறித்த நிகழ்வில் முதலில் விளக்கேற்றல் நடைபெற்றதுடன் தொடர்ந்து அகவணக்கமும் இறந்தவர்களுக்காக மேற் கொள் ளப்பட்டது.

அத்துடன் நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் சம்பவ நாட்களில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் எதிர்கால சந்ததிகள் நலன் கருதி தத்தமது உரைகளில் குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள் மீதான தாக்குதல் 1990 யூன் மாதம் 20 திகதியில் ஆரம்பமானது. இதன் போது கல்முனை வாடி வீட்டு சந்தியில் நிலைகொண்டு சிறீலங்கா இராணுவம், சிறீலங்கா துணை இராணுவ குழுக்கள் இணைந்து தமிழ்ப் பொதுமக்களைக் கடத்தினர் என்றும் பின்னர் அவர்கள் அனைவரையும் அங் குள்ள கடைகளுக்குப் பின்னால் வைத்து எரியூட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 250 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர் என யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் களின் மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது. அத் துடன் 1990 யூன் மாதம் 27 இல் 75 பொதுமக்கள் சிறீலங்கா இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்டு எரியூட்டப்பட்டனர்.

மேலும் 27 பேரின் தலையற்ற உடல்கள் கல்முனைக் கடற் கரையில் கரையொதுங்கியதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக

ஆசிரியர்களின் மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்தது. மேலும் மொத்தமாக 7,000 பேர் வரை 1990 யூன் மாதத்தில் கொல்லப்பட்டனர் என அவ்வமைப்பு தெரிவித்தமை குறிப்பிடத் தக்கது.

கடற்கரும்புலி மேஜர்
நாதவேணிநாகேந்திரம்
அனுசா
மயிலிட்டி, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 26.09.1999
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
பழனியப்பன் (புவேந்திரன்)
ரெங்கையா யோகேந்திரன்
1ம் யூனிற், பாவற்குளம்,
வவுனியா.
வீரச்சாவு: 14.10.1999
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
அருந்தவம்
கிருஸ்ணபிள்ளை
உதயகுமார்
பெண்டுகள்சேனை, கிரான்,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 14.10.1999
★★★

கடற்கரும்புலி மேஜர் கோபி
(பரணி)
சூரியயோகானந்தன்
அமர்நாத்
மயிலிட்டி, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 14.10.1999
★★★

கடற்கரும்புலி மேஜர்
சூரியப்பிரபா

அல்போன்ராஜா
ஜான்சிராணி
போயிட்டி, இளவாலை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 14.10.1999
★★★

கடற்கரும்புலி மேஜர்
கலைமகள்
அரியகுட்டி கலைமதி
அச்சுவேலி தெற்கு,
நாவலம்பதி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 14.10.1999
★★★

கடற்கரும்புலி கப்டன்
சுதாகரன்
(சுதா) இராசநாயகம்
பிரசன்னா
நல்லூர், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 14.10.1999
★★★

கரும்புலி மேஜர்
செங்கதிர்வாணன்
நடராசா நடேஸ்வரன்
சிவபுரி, திருகோணமலை.
வீரச்சாவு: 29.10.1999
★★★

கடற்கரும்புலி மேஜர்
முத்துமணி
குமாரசாமி சிவகாவேரி
காரைநகர், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 04.11.1999
★★★

கரும்புலி மேஜர் அருளன்
நந்தகோபாலன் துஸ்யந்தன்
ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 05.11.1999
★★★

கரும்புலி மேஜர் சசி
இராசரத்தினம் சுகந்தினி
சித்தங்கேணி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 05.11.1999
★★★

கடற்கரும்புலி மேஜர்
றங்கன்
(யாழ்வேந்தன்) கதிரவேல்
ஜெயராம்
சடையாளி, காரைநகர்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 08.12.1999
★★★

கடற்கரும்புலி மேஜர்
இசைக்கோன்
சிவசாமி சுகந்தன்
இன்பருட்டி, பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 08.12.1999
★★★

கடற்கரும்புலி கப்டன்
கானவன்
சிவஞானம் சிவகுமார்

முள்ளிவாய்க்கால் மேற்கு,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 08.12.1999
★★★



கடற்கரும்புலி லெப்.கேணல்
சிவரூபன் (கார்வண்ணன்)
சிவநேசன்
சிவபாக்கியநாதன்
கெற்பலி, மிருசுவில்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 08.12.1999
★★★

கரும்புலி மேஜர் செழியன்
மகேந்திரராஜா பாலமுரளி
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.12.1999
★★★

கரும்புலி மேஜர் மீனா
நடராசா
மேனகா
இடைக்குறிச்சி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 25.12.1999
★★★

கடற்கரும்புலி மேஜர் நந்தன்
தர்மராசா தயாளன்
குமரபுரம், பரந்தன்,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 25.12.1999
★★★

கரும்புலி கப்டன் நாகராணி
அருமைநாயகம் றோகினி
தாவடி தெற்கு, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 25.12.1999
★★★

கரும்புலி மேஜர் ஆதித்தன்
பழனியாண்டி சுதாகரன்
தெரணிகல, பதுளை,
சிறீலங்கா.
வீரச்சாவு: 25.12.1999
★★★

கடற்கரும்புலி கப்டன்
அறிவரசன்
(அறிவு) முத்துலிங்கம்
ஜெகன்
வேலணை மேற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 30.12.1999
★★★

கடற்கரும்புலி மேஜர் ரூபன்
சீனிவாசன் சிவானந்தன்
கிரான், மட்டக்களப்பு.
வீரச்சாவு: 01.02.2000
★★★

கடற்கரும்புலி மேஜர் மதன்
சிதம்பரநாதம் சிவாஜிநாதன்
மாவடிச்சேனை, மூதூர்,
திருகோணமலை.
வீரச்சாவு: 12.03.2000
★★★

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் எலும்புக் கூட்டுத் தொகுதிகள் 400ஐ கடந்தது!

21.06.2026

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் எலும்புக்கூடுத் தொகுதிகள் 400ஐ கடந்துள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து இன்று (21) ஞாயிற்றுக்கிழமை 07 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில், புதிதாக 11 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணியின் 30ஆம் நாள் அகழ்வு பணிகள் இன்றைய நாள் நடைபெற்றது.

அதனடிப்படையில், இது வரையிலான அகழ்வு பணிகளின் போது 405 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 377 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம்: உண்மையும் நீதியும் நிலைநாட்டப்பட வேண்டும்

காரைதீவு பிரதேச சபை தவிசாளர் சு. பாஸ்கரன்

22.06.2026

யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது 400-க்கும் அதிகமான மனித எலும்புக்கூடுகள், எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்கள் இலங்கையின் மனச்சாட்சியையே உலுக்கும் அதிர்ச்சிகரமான செய்தியாகும்.

இந்தக் கண்டுபிடிப்பு, எமது நாட்டின் கடந்தகால வன்முறை மற்றும் காணாமற்போனோர் தொடர்பான தீர்க்கப்படாத கேள்விகளை மீண்டும் உலகின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

பல தசாப்தங்களாக தமது அன்புக்குரியவர்களின் நிலை குறித்து பதில் தேடி அலைந்து வரும் குடும்பங்களின் வலியையும் வேதனையையும் இந்தச் சம்பவம் மீண்டும் நினைவூட்டுகிறது என காரைதீவு பிரதேச சபை தவிசாளர் சு. பாஸ்கரன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும்,

மனித உயிர்களின் மதிப்பை இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு மதிக்க வேண்டியது ஒவ்வொரு நாகரிக சமூகத்தினதும் கடமையாகும். எனவே செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பாக சுயாதீனமான, வெளிப்படையான, நியாயமான மற்றும் நீதியான விசாரணைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றேன்.

காலம் தாழ்த்தப்படும் ஒவ்வொரு நாளும், உண்மையை எதிர் நோக்கி காத்திருக்கும் குடும்பங்களின் வேதனையை மேலும் அதிகரிக்கின்றது.

ஆகவே சம்பந்தப்பட்ட அனைத்து அரச நிறுவனங்களும், நீதித்துறை அதிகாரிகளும், தடயவியல் நிபுணர்களும், மனித உரிமை அமைப்புகளும் ஒருங்கிணைந்து அறிவியல் ரீதியான விசாரணைகளை விரைவாக முன்னெடுக்க வேண்டும்.

இந்த மனித எச்சங்கள் யாருடையவை? அவர்கள் எவ்வாறு உயிரிழந்தார்கள்? அவர்களது குடும்பங்களுக்கு என்ன நடந் தது? என்ற கேள்விகளுக்கு உரிய பதில்கள் கிடைக்க வேண்டும்.

உண்மையை மறைப்பதும், காலம் தாழ்த்துவதும் அல்லது விசாரணையை பலவீனப்படுத்துவதும் எந்தவொரு சமூகத் திற்கும் நீதியை வழங்காது.

போராலும் வன்முறைகளாலும் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நீதி கிடைப்பது நிலையான சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் அடிப்படையாகும். உண்மையை அறியும் உரிமையும், நீதியைப் பெறும் உரிமையும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் அடிப்படை மனித உரிமைகளாகும்.

எனவே செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகள் சர்வதேச தரநிலைகளுக்கு அமைவாகவும், எந்த வித அரசியல் அல்லது நிர்வாக தலையீடுகளுமின்றியும் முன்னெடுக்கப்பட்டு, காலம் தாழ்த்தாது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என நான் வலியுறுத்துகின்றேன். உண்மையை வெளிக்கொணர்வதே நல்லிணக்கத்தின் முதல் படியாகும் நீதியை நிலைநாட்டுவதே நிலையான சமாதானத்தின் அடித்தளமாகும் என்று தெரிவித்துள்ளார்

www.thuyarpakirvu.com

கடற்கரும்புலி மேஜர் பரதன்
சதாசிவம் சந்திரகுமார்
விநாயகர்புரம்,
திருக்கோவில்,
அம்பாறை.
வீரச்சாவு: 12.03.2000
★★★

கடற்கரும்புலி கப்டன்
தினேஸ்
(சுவேந்திரன்)
வயிரவநாதன்
கஜானன்
கருகம்பனை, கீரிமலை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 12.03.2000
★★★

கரும்புலி மேஜர் சுதாயினி
தெய்வேந்திரபிள்ளை
ஜெயசுகி
இடைக்குறிச்சி, வரணி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 26.03.2000
★★★

கரும்புலி மேஜர் தனுசன்
தங்கராசா இலங்கேஸ்வரன்
இறால்குழி, மூதூர்,
திருகோணமலை.
வீரச்சாவு: 27.03.2000
★★★

கரும்புலி மேஜர் மலர்விழி
பாலகிருஸ்ணன் சங்கீதா
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 31.03.2000
★★★

கரும்புலி மேஜர் ஆந்திரா
(நாயகம்)
விநாயகமூர்த்தி சுதர்சினி
மருதங்கேணி தெற்கு,
தாளையடி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 31.03.2000
★★★

கரும்புலி கப்டன் சத்தியா
(சசி)
கிருஸ்ணமூர்த்தி முகுந்தினி
நெல்லியடி, கரவெட்டி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 31.03.2000
★★★

கரும்புலி மேஜர்
அறிவுக்குமரன்
குமாரவேல் கேதீசன்
முகத்தான்குளம்,
செட்டிகுளம்,
வவுனியா.
வீரச்சாவு: 11.04.2000
★★★

கடற்கரும்புலி கப்டன்
வீரமணி
கணபதிப்பிள்ளை
கதிர்காமநாதன்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 12.04.2000
★★★

கரும்புலி மேஜர்
மறைச்செல்வன்
செல்வராஜா ரஜனிகாந்தன்
சுந்தரபுரம்,
சாஸ்திரிகூழாங்குளம்,
வவுனியா.
வீரச்சாவு: 10.05.2000
★★★

கரும்புலி மேஜர் ரீகஜீவன்
சிவராசா கலைக்குமார்
கரடித்தோட்டம், காரைதீவு,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 20.05.2000
★★★

கரும்புலி மேஜர் குமலவன்
சிவப்பிரகாசம் லுகாகரன்
பழுகாமம், பெரியபோரதீவு,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 22.05.2000
★★★

கரும்புலி மேஜர் சதா
மாணிக்கம்
கனகாம்பிகை
தென்னியங்குளம்,
துணுக்காய்,
மல்லாவி, முல்லைத்தீவு.
வீரச்சாவு: 25.05.2000
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
ஞானேஸ்வரன்
(ஞானக்குமார்)
அழகப்போடி
விநாயகமூர்த்தி
திக்கோடை, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 26.06.2000
★★★

கடற்கரும்புலி மேஜர் சூரன்
இராசதுரை ரவீந்திரன்
4ம் கட்டை, பூநகரி,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 26.06.2000
★★★

கடற்கரும்புலி மேஜர்
நல்லப்பன்
வேலுப்பிள்ளை ராசன்
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 26.06.2000
★★★

கடற்கரும்புலி மேஜர்
சந்தனா
குணசிங்கம் கவிதா
மயிலிட்டி, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 26.06.2000
★★★

கடற்கரும்புலி கப்டன்
இளமதி
கனகநாயகம்பிள்ளை
ஜெயசித்திரா
வேலணை மேற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 26.06.2000
★★★

கடற்கரும்புலி கப்டன்
பாமினி
பரராசசிங்கம் விஜயலட்சுமி
காரைநகர், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 26.06.2000
★★★

கடற்கரும்புலி கப்டன்
ஜெயாஞ்சலி
இராமையா இந்திராதேவி
தாளையடி, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 03.07.2000
★★★

கடற்கரும்புலி மேஜர்
சிறீவாணி
சின்னத்தம்பி சாந்தி
3ம் குறிச்சி, களுதாவளை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 05.07.2000
★★★

கடற்கரும்புலி மேஜர்
திசையரசி
செல்லச்சாமி செல்வம்
உடுத்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 15.08.2000
★★★

கரும்புலி கப்டன்
தமிழ்க்குமரன்
சின்னக்குட்டி சதீஸ்வரராஜா
4ம் வட்டாரம், ஊறணி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 10.09.2000
★★★

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 412 மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது

22.06.2026

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து இன்றைய தினமும் 13 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில், புதிதாக 07 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணி புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணியின் 31ஆம் நாள் அகழ்வு பணிகள் இன்றைய நாள் திங்கட்கிழமை நடைபெற்றது.

மூன்று எலும்புக்கூடுகள் ஒரே நேர்கோட்டில் அடையாளம் காணப் பட்டுள்ள அதேவேளை, நேர்சீரின்மையாக 09 எலும்புக்கூடுகள் வரையில் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றை சுத்தப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இது வரையிலான அகழ்வு பணிகளின் போது,412 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 390 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, மரபணு பரிசோதனை, அகழ்வாய்வு என்பது இரு வகையான செயற்பாடு, என்புகளை அடையாளம் காண்பது ஒரு கட்டம். அடையாளம் காணப்படுவது இரண்டாம் கட்ட நடவடிக்கை அதன்போதே பால் வயது போன்ற மேலதிக விடயங்கள் தெரியவரும்.

அத்தோடு தொல்லியல் நிபுணர்களால் காலம் கணிக்கப்படும்

அதன்பிறகே உறவினர்கள் தமது உறவினர்கள் தொடர்பில் தேடிவரும் போதே மரபணு சோதனைகளை மேற்கொள்ள முடியும்.

முன்னதாகவே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் மரபணுக்களை சேகரித்து வைக்க முடியாத நிலைமை காணப்படுகிறது என சட்டத்தரணி ஞா.ரனித்தா தெரிவித்தார்.

யாழ். செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி இடைநிறுத்தம்!

23.06.2026

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் இன்று செவ்வாய் கிழமை மேலும் 7 மனித எலும்புக்கூடுகள் சுத்தம் செய்யப்பட்டு வெளியே எடுக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி அகழாய்வின் மூன்று கட்டங்களிலும் இதுவரை 412 மனித எலும்புக்கூடுகள் இலக்கமிடப்பட்டு அடையாளம் காணப்பட்டுள்ளன.

அவற்றில் 409 எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இன்று மேலதிக மனித எலும்புக்கூடுகள் எதுவும் அடையாளம் காணப்படவில்லை. அகழாய்வுக் குழுவினருக்கான ஓய்வுகாலத்தை முன்னிட்டு செம்மணி மனிதப் புதைகுழி அகழாய்வுப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. பணிகள் மீண்டும் எதிர்வரும் யூலை 15ஆம் திகதி தொடங்கவுள்ளன.

இன்றுவரை நடைபெற்ற மூன்று கட்டங்களின் அகழாய்வுகளிலும் மொத்தமாக 412 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 409 எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது..

கடற்கரும்புலி லெப்.கேணல்
றெஜி
(இளங்கோ) மாணிக்கம்
றமேஸ்
அக்கரைப்பற்று, அம்பாறை.
வீரச்சாவு: 23.10.2000
★★★

கடற்கரும்புலி மேஜர்
றோஸ்மன்
(கணேஸ்) தேவராசா
ரவீந்திரராசா
கோபாலபுரம், நிலாவெளி,
திருகோணமலை.
வீரச்சாவு: 23.10.2000
★★★

கடற்கரும்புலி மேஜர்
நிதர்சன்
தியாகராஜா தியாகேந்திரன்
கள்ளப்பாடு, முல்லைத்தீவு.
வீரச்சாவு: 23.10.2000
★★★

கடற்கரும்புலி மேஜர் நித்தி
(சோழவேங்கை)
இராசையா
ஜெகன்
பூந்தோட்டம், வவுனியா.
வீரச்சாவு: 23.10.2000
★★★



கடற்கரும்புலி மேஜர்

மயூரன்
கநதசாமி பிரகாஸ்
மயிலனை வடக்கு,
சுண்ணாகம்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 23.10.2000
★★★

கடற்கரும்புலி மேஜர்
திருமாறன்
(திருவாளவன்) ஜெயம்
நிசாதரன்
ஆவரங்கால்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 23.10.2000

★★★
கரும்புலி மேஜர் சோபிதன்
துரைச்சாமி ஜீவகணபதி
தச்சன்குளம், மூன்றுமுறிப்பு,
வவுனியா.
வீரச்சாவு: 24.10.2000

★★★
கரும்புலி மேஜர் வர்மன்
(மேனவன்)
வடிவேல் தங்கத்துரை
தேற்றாத்தீவு,
களுவாஞ்சிக்குடி,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 24.10.2000

★★★
கரும்புலி கப்டன் சந்திரபாபு
குமரப்போடி லிங்கராசா
படையாண்டவெளி,
கொக்கட்டிச்சோலை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 24.10.2000
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
கதிர்காமரூபன் (பெத்தா)
கனகானந்தம்
ஆனந்தகிருஸ்ணன்
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 02.11.2000
★★★

கடற்கரும்புலி மேஜர்
இலக்கியன்
சிவகாமி கரிதரன்
3ம் வட்டாரம்,
முள்ளியவளை,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 02.11.2000
★★★

கடற்கரும்புலி கப்டன்
குமாரவேல்
- சுப்பிரமணியம் சுதர்சன்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 02.11.2000
★★★

கடற்கரும்புலி கப்டன்
வல்லவன்
நவநீதன் பத்மலதன்
தட்சன்தோப்பு, கைதடி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 02.11.2000
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
சல்மான் (இரும்பொறை)
சிவஞானம் சிவஜங்கரன்
நல்லூர், பூநகரி,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 02.11.2000
★★★

கடற்கரும்புலி மேஜர்
சதாசிவம்
(சதா) பிள்ளையான்
திருச்செல்வன்
சந்திவெளி, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 02.11.2000
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
நரேஸ் முருகேசு
பிறேம்குமார்
தும்பளை தெற்கு,
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 03.11.2000
★★★

கடற்கரும்புலி மேஜர்
சுடர்மணி
(செங்கதிர்) சிவராசா
சிறீதரன்
வண்ணாங்கேணி வடக்கு,
பளை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 03.11.2000
★★★

கடற்கரும்புலி கப்டன்
கஸ்தூரி
(பூங்கதிர்) நல்லநாதன்
பவானி
பெரியமடு, வவுனியா.
வீரச்சாவு: 21.02.2001
★★★

கடற்கரும்புலி மேஜர்
விடுதலை
கந்தையா இந்திராணி.
ஆழியவளை, தாளையடி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 21.02.2001
★★★

கடற்கரும்புலி மேஜர்
காந்தன்
மகாதேவன் சுதாகரன்
15ம் கட்டை, மணலாறு,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 29.03.2001
★★★

கடற்கரும்புலி கப்டன்
வாகைசூடி
மரியநாயம் பிலிப்ஸ்.ரீபன்
பெரியவிளான், இளவாலை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 29.03.2001
★★★

கடற்கரும்புலி கப்டன்
ராகுலன்
ஏரத்பண்டா கிருஸ்ணகுமார்
கோரக்கன்கட்டு, பரந்தன்,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 04.08.2001
★★★

இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தி செம்மணி உண்மைகளை வெளிப்படுத்தவும்

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

23.06.2026

யாழ்ப்பாணம் – செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பாக இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவை பன்னாட்டு விசாரணைக்கு உட்படுத்தி, உண்மைகளை வெளிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் இன்றைய நாள் செவ்வாய்க்கிழமை உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் – செம்மணி மனிதப்புதைகுழியானது தற்போது நாட்டிலே பாரிய மனிதப்புதைகுழியாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து இதுவரையில் 412 எலும்புக்கூடுகள் அடையாளங்காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் 390எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக சிறார்கள், பெண்கள், ஆண்கள், முதியோரென பல தரப்பட்டவர்களுடைய எலும்புக்கூடுகளும் தொடர்ச்சியாக மீட்கப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் கடந்தவாரம் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார செம்மணி மனிதப் புதைகுழியை நேரில் சென்று பார்வையிட்டுள்ளதுடன், இந்த புதைகுழி விவகாரம் தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படுமெனவும் உறுதியுரைத்துள்ளார்.

அந்தவகையில் செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்திற்கு நீதிகிடைக்க வேண்டுமென்ற பெருத்த எதிர்பார்புடன் இருக்கும் பாதிக்கப்பட்ட எமது தமிழ்மக்களுக்கு நீதி அமைச்சரின் இந்தக் கருத்து நம்பிக்கைதருவதாக அமைந்துள்ளது.

லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச பன்னாட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும்.

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி குமாரசுவாமி படுகொலைசெய்யப்பட்ட விவகாரத்தில் பிரதான குற்றவாளியான இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவிற்கு நீதிமன்றினால் தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட பிற்பாடு, குறித்த இராணுவ லான்ஸ்கோப்ரல் செம்மணியில் படையினரால் 300 - 400 வரையான பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருப்பதாக தகவல்களை வெளிப்படுத்தியிருந்தார்.

அவருடைய தகவல்களின் அடிப்படையில் அக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் 15 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அதனையடுத்து சந்திரிக்கா குமாரதுங்க அரசு இந்த புதைகுழி விசாரணையை கிடப்பில் போட்டிருந்தது.

தற்போது செம்மணி மனிதப்புதைகுழி அடையாளங்காணப்பட்டு, மீண்டும் அகழ்வாய்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பாக பன்னாட்டு விசாரணையாளர்கள் முன்னிலையில் சாட்சியமளிப்பதற்கு தயாராக இருப்பதாக கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் தனது மனைவி மூலம் ஜனாதிபதிக்கு சோமரத்ன ராஜபக்ச கடிதமொன்றினை எழுதியிருந்தார்.

மேலும் அக்கடிதத்தில் செம்மணியைத் தவிர, அரியாலை, கொழும்புத்துறை பகுதிகளிலும் இராணுவத்தினரால் சடலங்கள் புதைக்கப்பட்ட தகவல்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆகவே செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் சோமரத்தின ராஜபக்சவிடம் பன்னாட்டு விசாரணைகளை மேற்கொண்டு உண்மைகள் வெளிக்கொணரப்படவேண்டும். அதுகுறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டுமெனத் தெரிவித்தார்

யாழ். வலிகாமம் வடக்கில் மக்களின் காணிக்குள் சிறீலங்கா இராணுவத்தினரின் பாரிய விவசாயப் பண்ணை

23.06.2026

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயமாக பிர கடனப்படுத்தப்பட்டுள்ள தனியார் காணிக்குள் காணப்படும் சிறீலங்கா இராணுவத்தின் விவசாய பண்ணைக்கு புதிய பெயர் பலகை நாட்டும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

வலி. வடக்கில் இருந்து சுமார் 36 வருடங்களுக்கு மேலாக தனியார் காணிகளில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள நிலையில், தமது காணிகளை விடுவிக்குமாறு மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

இந்நிலையில், குரும்பசிட்டி பகுதியில் உள்ள தனியார் காணிகளில் இராணுவத்தினர் நீண்ட காலமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பகுதியை இராணுவத்தினரின் விவசாய பண்ணை பகுதியாக அறிவித்து பெயர் பலகை நாட்டும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டு உள்ளமை, அப்பகுதி மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

“மக்களின் காணி மக்களுக்கே … ” என அரசாங்கம் கூறிவரும் நிலையில், வலி.வடக்கில் காணி விடுவிப்பு தொடர்பில் ஆராய்வதற்கு பாதுகாப்பு பிரதி அமைச்சர் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் வருகை தந்து ஆராய்ந்து சென்றுள்ள நிலையில் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ள பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்ட கலந்துரையிடலில் காணி விடுவிப்பு தொடர்பில் முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டு, காணி உரிமையாளர்களுக்கு சாதகமான பதில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இராணுவத்தினர் தமது விவசாய பண்ணைக்கு பெயர் பலகை நாட்டும் செயலில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை, வசாவிளான் இராணுவ வைத்தியசாலை கட்டுமானம் மற்றும் பருத்தித்துறை - கீரிமலை வீதியில் புதிதாக கட்டப்படும் இராணுவத்தினரின் சிற்றுண்டி சாலை கட்டுமானம் ஆகியவற்றை உடனடியாக நிறுத்துமாறு வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் யாழ்.மாவட்ட இராணுவ தளபதிக்கு எழுத்துமூல அறிவித்தல் அனுப்பியுள்ள நிலையிலும் குறித்த கட்டுமான பணிகள் தடையின்றி முழு உத்வேகத்துடன் நடைபெறுவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

கடற்கரும்புலி கப்டன்
கரிகாலன் பூலோகசிங்கம்
புஸ்பகாந்தன்
முள்ளிவாய்க்கால் கிழக்கு,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 04.08.2001
★★★

கடற்கரும்புலி மேஜர்
குமரவேல்
(மதி) கிருஸ்ணபிள்ளை
சிவகுமார்
காங்கேசன்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 01.09.2001
★★★

கடற்கரும்புலி கப்டன்
தமிழினியன்
(பொறையரசு)செல்வரத்தினம்
யோகேஸ்வரன்
நெளுக்குளம், வவுனியா.
வீரச்சாவு: 15.09.2001
★★★

கடற்கரும்புலி மேஜர்
ஓசையினியவன்
இரத்தினம்
ராஜ்குமார்
அரியாலை, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 15.09.2001
★★★

கடற்கரும்புலி மேஜர்
அருணா

(சுதா) குலசிங்கம்
தவச்செல்வி
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 16.09.2001
★★★

கடற்கரும்புலி மேஜர்
நித்தியா
செல்வராசா தயாளினி
புலொலி மேற்கு, தம்பசிட்டி,
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 16.09.2001
★★★

கடற்கரும்புலி மேஜர் காந்தி
(வேங்கை) செபமேயு
ஜெறின்
விடத்தல்தீவு, மன்னார்.
வீரச்சாவு: 16.09.2001
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
அனோசன் (மாதவன்)
சிதம்பரப்பிள்ளை சிவகுமார்
ஒதியமலை, நெடுங்கேணி,
வவுனியா.
வீரச்சாவு: 16.09.2001
★★★

கடற்கரும்புலி கப்டன்
புலிமகள்
முத்துலிங்கம் யசோதா
உடையார்கட்டு தெற்கு,
குரவயல்,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 23.09.2001
★★★

கடற்கரும்புலி மேஜர்
சிவாகரன்
(நல்லமுத்து) கார்த்திகேசு
செந்தில்குமார்
9ம் யூனிற், பாவற்குளம்,
வவுனியா.
வீரச்சாவு: 23.09.2001
★★★

கரும்புலி கப்டன்
வாஞ்சிநாதன்
பாலசுந்தரம் தயாபரன்
பண்டாரவெளி,
கொக்கட்டிச்சோலை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 09.10.2001
★★★

கடற்கரும்புலி கப்டன்
அன்புக்கினியன்
நவசிவாயம்
சிவரூபன்
புலோலி தெற்கு, மந்திகை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 15.10.2001
★★★

கரும்புலி மேஜர் உதயகீதன்
ஆனந்தன் விஜயஜெயந்தன்
கண்ணகிபுரம்,
அக்கரைப்பற்று,
அம்பாறை.
வீரச்சாவு: 15.10.2001
★★★

கடற்கரும்புலி கப்டன்
இளங்குயிலன்
றோயல்இம்மனுவேல்
பற்றிக் எட்மன்.
முருங்கன், மன்னார்.
வீரச்சாவு: 21.10.2001
★★★

கடற்கரும்புலி மேஜர் றோசா
கணேசன் கற்புக்கரசி
வாரிவளவு, காரைநகர்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 21.10.2001
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
அமுதசுரபி சின்னப்பு
நந்தினி
செம்பியன்பற்று தெற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 26.10.2001
★★★

கடற்கரும்புலி மேஜர்
கடலரசன்
(சமுத்திரன்) தம்பிப்பிள்ளை
நமசிவாயம்
8ம் வட்டாரம், சித்தாண்டி,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 30.10.2001
★★★

கடற்கரும்புலி மேஜர்
கஸ்தூரி
தங்கராசா சுதாசினி
பொன்னாலை மேற்கு,
சுழிபுரம்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 30.10.2001
★★★

கரும்புலிகள் வித்தியாசமானவர்கள் அபூர்வமான பிறவிகள், இரும்புபோன்ற உறுதியும், பஞ்சுபோன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள் - தேசியத் தலைவர்

கடற்கரும்புலி கப்டன்
கனியின்பன்
மயில்வாகனம் சிறிகாந்
வத்திராயன், உடுத்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 30.10.2001
★★★

கடற்கரும்புலி கப்டன்
அன்புமலர்
(கேசவி) பொன்ராசா
அன்பழகி
வசாவிளான் யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 30.10.2001
★★★

கடற்கரும்புலி மேஜர்
வளவன்
முருகேசு உதயகுமார்
மானிப்பாய் மேற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 09.11.2001
★★★

கடற்கரும்புலி மேஜர்
அறிவுச்செல்வன் (வசந்தன்)
வைரமுத்து விநோதரன்
நாகொட்டியான்,
ஆனையிறவு,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 01.05.2002
★★★

நெல் கொள்வனவு மற்றும் விலையை அதிகரிக்குமாறு கோரி விவசாயிகள் மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டப் பேரணி!

23.06.2026

நெல் கொள்வனவு மற்றும் விலையை அதிகரிக்குமாறு கோரி விவசாயிகள் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியில் இன்று (23) காலை ஈடுபட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ள விவசாயிகள் நெல்லுக்கான நியாயமான விலை கிடைக்க வேண்டும், நெல் சந்தைப் படுத்தல் சபை ஊடாக நெல் கொள்வனவு செய்யப்படவேண்டும், விவசாய இரசாயனங்கள் நியாயமான விலையில் கிடைக் கவேண்டும், அரிசி இறக்குமதியை உடனடியாக நிறுத்த வேண்டும் முதலான பல்வேறு கோரிக்கைகளை முன்வைத் துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது மரபணுக்களைச் சேகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை

செம்மணி மனிதப் புதைகுழி வழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பாக முன்னிலையாகும் சட்டத்தரணி ஞா. ரனித்தா

23.06.2026

மரபணு தொடர்பான விடயத்தில், இதுவரை காலமும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகமோ அல்லது ஏனைய அரச நிறுவனங்களோ காணாமல் ஆக்கப்பட்டவர் களுடைய உறவினர்களின் மரபணு மாதிரிகளைச் சேகரித்து, அதனைப் பாதுகாக்கும் செயற்பாடுகள் எதனையும் முன்னெடுக் கவில்லை என்று செம்மணி புதைகுழி வழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பாக முன்னிலையாகும் சட்டத்தரணி ஞா. ரனித்தா தெரிவித்தார்.

செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்ந்து எடுக்கப்படும் மனித எலும்புத் தொகுதிகள் மீதான மரபணுப் பரிசோதனைகள் மற் றும் அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஊடகவிய லாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அடையாளம் காணப்படும் எலும்புத் தொகுதிகளை நிலத்தி லிருந்து அகழ்ந்து எடுப்பது என்பது முதற்கட்டத் தனித்துவமான ஒரு செயற்பாடாகும். முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியிலும் முதற்கட்டமாக எலும்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டன. அதன் பிற் பாடு, அந்த எலும்பு மாதிரிகளை அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்வது என்பது இரண்டாவது நடவடிக்கையாகக் காணப் படுகின்றது.

இந்த இரண்டாவது நடவடிக்கையின் போதே அகழ்ந்து எடுக் கப்பட்ட எலும்புத் தொகுதிகள் முழுமையாக ஆராயப்பட்டு, அந்த மனிதர்களின் வயது, பாலினம் மற்றும் அவர்களின் இறப்புக் கான துல்லியமான காரணங்கள் கண்டுபிடிக்கப்படும். அத் துடன், அகழ்ந்து எடுக்கப்படும் எலும்புத் தொகுதிகளினுடைய கால எல்லை பற்றி தொல்லியல் திணைக்களத்தால் அறிவியல் அறிக்கை ஒன்றும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இவை இரண்டும் சமர்ப்பிக்கப்பட்டதன் பிற்பாடு, மூன்றாவது கட் டமாகவே காணாமல்போன உறவுகள் தொடர்பானத் தேடுதல் விவகாரங்கள் ஆரம்பிக்கப்படும். யாராவது தங்களுடைய உற வினர்கள் குறிப்பிட்ட காலத்தில் காணாமல்போனதாகவோ அல் லது கைது செய்யப்பட்டதன் பிற்பாடு இருப்பிடம் தெரியவில்லை என்றோ முறைப்பாடுகளை வழங்கியிருந்தால், தொல்லியல் திணைக்களம் கணித்துள்ள காலப்பகுதியோடு அந்தத் தர வுகளை ஒப்பிட்டு, பாதிக்கப்பட்ட உறவினர்களின் மரபணு மாதி ரிகளை ஆய்வு செய்ய வேண்டிய சட்டத் தேவைப்பாடு உள்ளது.

ஏற்கனவே கொக்குத்தொடுவாயிலும் அந்த விடயங்கள் தொடர் பான சட்ட நடவடிக்கைகள் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டு, தற்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அது தொடர்பாக நீதிமன்றத்திடம் அறிக்கையிடுமாறு கூறப்பட் டுள்ளது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி வழக்கை ஒரு சிறந்த முன் உதாரணமாகக் கொண்டுதான், நாட்டில் பதிவாகி வரும் ஏனைய புதைகுழி வழக்குகளின் சட்டப் பிரச்சினைகளும் கை யாளப்படும். இதுவே சர்வதேச நியதிகளிலும் பின்பற்றப்படு கின்ற வழக்கமான நடைமுறையாகும்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக மரபணு தொடர்பான விடயத்தில், இதுவரை காலமும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலு வலகமோ அல்லது ஏனைய அரசாங்க நிறுவனங்களோ காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்களின் மர பணுக்களைச் சேகரித்து, அதனைப் பாதுகாக்கும் காப்பகம் எதனையும் இதுவரை உருவாக்கவில்லை.

இனிவரும் காலங்களிலாவது காணாமல் ஆக்கப்பட்டவர் களுடைய உறவினர்களின் மரபணுவைச் சேகரித்துப் பாது காக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமாக இருந்தால், அதனைப் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் ஒப்புதலோடு மிக இலகுவாக முன் னெடுக்க முடியும். எனினும், இதற்கு அரசினுடைய முழுமை யான இராஜதந்திர ஒத்துழைப்பும், தடயவியல் நிபுணர்க ளுடைய சர்வதேச அளவிலான உதவியும் அவசியமாகக் காணப்படுகின்றது.

மனிதப் புதைகுழி விவகாரத்தில் அடுத்தகட்டமாகச் சட்டப்பூர்வ மாக எவற்றினைச் செய்ய வேண்டும் என்பதை நீதிமன்றமும், அகழ்வுப் பணிகளில் களத்தில் முன்னிலையாகும் நிபுணர் களுமே தங்களின் அறிவியல் கருத்துக்கள் மூலம் நீதிமன்றத் துக்குத் தெளிவுபடுத்துவார்கள். அதனடிப்படையிலேயே நீதிமன்றம் இறுதித் தீர்மானத்தை எடுக்கும்.” - என்றார்.

43 ஆம் ஆண்டு ‘கறுப்பு யூலை’ படுகொலை நினைவு மாதம்

பொதுவாக ‘கறுப்பு யூலை’ படுகொலை என நினைவுகூரப்படுவது, இலங்கையில் 1983 ஆம் ஆண்டு யூலை 23 முதல் யூலை 30 வரை, சிறீலங்கா அரசின் ஆதரவுடன் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொடூரமான தமிழினப் படுகொலையாகும்.

செயல்பாட்டாளர்கள் மற்றும் சுயேச்சையான கண்காணிப்பாளர்களால், வெறும் 10 நாட்களில் 3, 000 முதல் 5,638 வரையிலான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் தமிழர்களின் வரலாற்றுத் தடையங்கள் பல பகுதிகள் அழிக்கப்பட்டன. 150,000 - க்கும் மேற்பட்ட தமிழர்கள் தங்களின் வீடுகளை விட்டு வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

மேலும், வன்முறைக் கும்பல்களால் தமிழர்களுக்குச் சொந்தமான 18,000 - க்கும் மேற்பட்ட வீடுகளும், 5,000 கடைகளும் எரித்து சாம்பலாக்கப்பட்டன. குறைந்தபட்சம் 500 தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டதுடன், பல குடும்பங்கள் உயிரோடு எரிக்கப்பட்டன. இவை அனைத்தும் சிங்கள பௌத்த அரசாங்கத்தின் ஆதரவு பெற்ற சிங்களக் கும்பல்களால் அரங்கேற்றப்பட்டன.

இந்நிகழ்வு, தமிழர்களின் வரலாற்றில் மிக முக்கிய முதலாவது பெரிய வெளியேற்றத்தைத் தூண்டியது; இதன் விளைவாக 500,000-க்கும் அதிகமான மக்கள் இலங்கைத் தீவை விட்டு வெளியேறினர்.

கடற்கரும்புலி மேஜர் சூரி
(சூரியன்)
நாகேந்திரன் கமலேந்திரன்
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 01.05.2002
★★★

கடற்கரும்புலி மேஜர்
அச்சுதன்
(வாகீசன்) கணேசன்
விஜயகுமார்
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 01.05.2002
★★★

கடற்கரும்புலி மேஜர்
பாண்டியன்
முத்துக்குமார்
கணபதிப்பிள்ளை
கரடியனாறு, செங்கலடி,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 01.05.2002
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
ஆற்றலோன் (சுதன்)
கிருஸ்ணசாமி சதீஸ்வரன்
சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 07.02.2003
★★★

கடற்கரும்புலி மேஜர்
பொதிகைச்செல்வன்

சிவஞானசுந்தரமூர்த்தி
தயாபரன்
புலோலி தெற்கு,
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 07.02.2003
★★★

கடற்கரும்புலி மேஜர்
அன்பன்
(ஊர்வண்ணன்) இராசையா
குகதாஸ்
அரியாலை, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 07.02.2003
★★★

கடற்கரும்புலி மேஜர்
சாருமதி
செல்வநாயகம் உமாபதி
தனங்கிளப்பு, சாவகச்சேரி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 10.03.2003
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
சிலம்பரசன் (ரஞ்சன்)
வேலாயுதப்பிள்ளை
ஜெயரஞ்சன்
ஆழியவளை, வடகிழக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 10.03.2003
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
கதிர்
செல்வரட்ணம் சசிந்திரன்
மீசாலை தெற்கு,
சாவகச்சேரி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 14.06.2003
★★★

கடற்கரும்புலி மேஜர்
வள்ளுவன்
துரை கைலேஸ்வரன்
மயிலங்காடு, ஏழாலை
தெற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 14.06.2003
★★★

கடற்கரும்புலி மேஜர் நிமால்
(நிமல்) தங்கராசா
செல்வக்குமார்
பரந்தன், கிளிநொச்சி.
வீரச்சாவு: 14.06.2003
★★★

கடற்கரும்புலி மேஜர்
மணியரசன்
முத்துலிங்கம் லவக்குமார்
நெடுங்கேணி, வவுனியா.
வீரச்சாவு: 14.06.2003

★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
அமுதம் (ஈழப்பிரியா)
பாலசுப்பிரமணியம்
சுகந்தினி
பற்றாலை, தெல்லிப்பளை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 06.07.2003
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்

யாழினி நவரத்தினம்
நிரஞ்சினி
தோப்புக்காடு, காரைநகர்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 06.07.2003
★★★

கடற்கரும்புலி மேஜர்
கதிரோவியன்
(கார்த்தீபன்) செல்வன்
வரதன்
புன்னாலைக்கட்டுவன்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 06.07.2003
★★★

கடற்கரும்புலி கப்டன்
ஈகைவண்ணன்
(ஈகைவாணன்)
சுவேந்திரன் பாவு
கொக்குவில், யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 06.07.2003
★★★

கடற்கரும்புலி மேஜர்
தனிச்சுடர்
(பூவிழி) இராசலிங்கம்
மலர்விழி
தேராவில், பூநகரி,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 30.07.2003
★★★

கடற்கரும்புலி மேஜர்
புகழினி
விஜயராணி வடிவேல்
இலங்கைத்துறைமுகத்துவா
ரம்,
மூதூர், திருகோணமலை.
வீரச்சாவு: 30.07.2003
★★★

பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம்வாய்ந்த ஆயுதமாகவே, கரும்புலிகளை நான் உருவாக்கியுள்ளேன். – தேசியத் தலைவர்

கடற்கரும்புலி மேஜர்
இசைநிலவன்
(மதிவண்ணன்) கந்தசாமி
தனேந்திரன்
தோப்புக்காடு, காரைநகர்,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 30.07.2003
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
முருகேசன் (கில்லரி)
கணேசன்
சிவகுருநாதன்
னைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 30.07.2003
★★★

கடற்கரும்புலி மேஜர்
எழிலரசன்
(எழில்) நாகேந்திரம்
அமுதன்
ஈச்சிலம்பற்றை,
விநாயகபுரம்,
மூதூர், திருகோணமலை.
வீரச்சாவு: 26.12.2004
★★★

கடற்கரும்புலி மேஜர்
தர்மேந்திரன்
கனகசபை
சின்னப்பொடியன்
முனைக்காடு, 7ம் வட்டாரம்,
கொக்கட்டிச்சோலை,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 26.12.2004
★★★

முல்லைத்தீவு கோப்பாபுலவு பூர்வீக காணிகளை விடுவிக்கக் கோரி கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்த கோபாப்புலவு மக்கள்

24.06.2026

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபுலவு பகுதியில் தங்கள் பூர்வீக காணிகளை விடுவிக்க கோரி மக்கள் சிறீலங்கா இராணுவ படைத்தலைமையகத்தின் முன்பாக இன்று (24) புதன் கிழமை காலை 11.30 மணியளவில் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

மாற்றுக்காணிகளை தாம் ஏற்றுக் கொண்டதாக ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் தெரிவித்த கருத்து முற்றிலும் தவறானது எனவும் தாம் அப்படி எந்த மாற்றுக் காணிகளையும் ஏற்கப் போவதில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

வட மாகாண ஆளுநர் நேரில் வருகை தந்து மக்களின் உண்மை நிலையை வெளிக்கொண்டு வருவதோடு, வாழ்விடப் பிரச்சினைக்கு உடனடியான சாதகமான தீர்வை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் கேப்பாபுலவு பூர்வீக மக்கள் வேதனையுடன் கோரிக்கை விடுத்துள்ளனர்.

171 ஏக்கர் காணிகளை தொடர்ந்தும் இராணுவத்தின் 59 ஆவது காலால் படைப்பிரிவினர் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். எனவே எமது காணிகளை விடுவிக்க கோரி இன்றிலிருந்து தொடர் போராட்டமாக இந்தப் போராட்டத்தினை தாம் முன்னெடுக்க போவதாக மக்கள் தெரிவித்ததுடன் கேப்பாப்பிலவு இராணுவ முகாமிற்கு முன்பாக அடையாள உண்ணாவிரதத்தில தொடர்ந்து இன்று முதல் ஈடுபட இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

கடல், கரை மற்றும் விவசாய நிலங்களை வாழ்வாதாரமாக நம்பியிருந்த கேப்பாபுலவு மக்கள், பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளால் தங்களது வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தொழில் துறைகள் முடக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டுகின்றனர்.

“போர் முடிவடைந்து 17 ஆண்டுகள் ஆகிவிட்டன. இருப்பினும் பாதுகாப்பு செயலகம் என்ற பெயரில் மக்களின் காணிகள் தொடர்ந்தும் அபகரிக்கப்பட்டு வருகின்றன. கடந்த 17 ஆண்டுகளாக தமது சொந்த நிலத்தில் குடியேற முடியாமல் தவித்து வருகிறோம். எமது பூர்வீக நிலத்தில் இராணுவம் எமது வளங்களை பயன்படுத்துகிறது. ஆனால் நாம் வீதியில் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது எந்த வகையிலும் நியாயமல்ல” என மக்கள் வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.

குறித்த போராட்டத்தின் போது வெளியேறு வெளியேறு இராணுவமே வெளியேறு, எம் மண்ணில் நாம் உழைக்க வேண்டும் எம் உரிமையை நீ தர வேண்டும் இராணுவமே வெளியேறு, முகாம்களை மூடு நிலங்களை விடு, நில ஆக்கிரமிப்பை நிறுத்து, ஜனாநாயக அல்லது இராணுவ ஆட்சியா? எமது வாழ்விடம் எமக்கு வேண்டும் போன்ற பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

நீண்டகாலமாக தீர்வு காணப்படாத காணி பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதே கேப்பாபுலவு மக்களின் பிரதான கோரிக்கையாகும்.

கோப்பாபுலவு மக்களின் போராட்டத்தை படம் எடுத்து அச்சுறுத்திய சிறீலங்காப் படைகள்

25.06.2026

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை இராணுவ தலைமையகத்திலுள்ள சிறீலங்கா இராணுவத்தினர் கமரா மற்றும் தொலை பேசியை பயன்படுத்தி படம் எடுத்து அச்சுறுத்தியதாக போராட்டத்தில் ஈடுபட்ட கேப்பாபுலவு மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபுலவு பகுதி-171 ஏக்கர் காணி-களை தொடர்ந்தும் இராணுவத்தின் 59 ஆவது காலால் படைப்பிரிவினர் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். “போர் முடிவடைந்து 17 ஆண்டுகள் ஆகிவிட்டன. எமது சொந்த நிலத் தில் குடியேற முடியாமல் நாம் தவித்து வருகிறோம்.

எமது பூர்வீக நிலத்தில் இராணுவம் எமது வளங்களை பயன் படுத்துகிறது. ஆனால் நாம் வீதியில் நின்று போராடி கொண் டிருக்கிறோம். எமது போராட்டத்தை எமது காணியில் நின்று எம்மையே படம் பிடித்து அச்சுறுத்துவது எவ் வகையில் நியாயம் என கேள்வி எழுப்பியுள்ளனர்.

எனவே எமது காணிகளை விடுவிக்க கோரி இன்றிலிருந்து கேப்பாப்புலவு இராணுவ முகாமிற்கு முன்பாக நிரந்தர தீர்வு கிடைக்கும் வரை அடையாள உண்ணாவிரத போராட்டத்தினை முன்னெடுக்க போவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

www.thuyarpakirvu.com

கடற்கரும்புலி லெப்.கேணல்
நளா
(அகரெழில்)கவிதா நடராசா
4ம், வட்டாரம், புங்குடுதீவு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 07.01.2006
★★★

கடற்கரும்புலி மேஜர் வஞ்சி
(வஞ்சியின்பன்)
பஞ்சாட்சரம்
குணசீலன்
அனிஞ்சியன்குளம்,
மல்லாவி,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 20.05.2006
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
புரட்சிநிலவன் வைரமுத்து
வசீகரன்
ஆழியவளை, தாளையடி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.02.2006
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
அன்பு
அமுதசுமணா
நாகேஸ்வரன்
ஆழியவளை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.05.2006
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
கவியழகி பேதுறுப்பிள்ளை
சாந்தினி டெலறோஸ்
மணற்காடு, குடத்தனை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.05.2006
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
சஞ்சனா (புவிச்செல்வி)
ஜெனித்தா புஸ்பராசா
வியாபாரிமூலை,
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.05.2006
★★★

கடற்கரும்புலி மேஜர்
மலர்நிலவன்
யேசுராசா சாந்தன்
நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 11.05.2006
★★★

கடற்கரும்புலி மேஜர்
கடல்வீரன்
தாவீது விமலதாஸ்
முள்ளியான்,
வெற்றிலைக்கேணி,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 20.05.2006
★★★

கரும்புலி லெப்.கேணல்
பூட்டோ (சங்கர்)
கனகரட்ணம்
ஸ்ரான்லியூயின்
பாலைக்குழி, அடம்பன்,
மன்னார்.
வீரச்சாவு: 11.08.2006
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
அந்தணன் (தமிழ்மாறன்)
நடராசா தயாபரன் (தயா)
செங்கலடி வீத,
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 17.09.2006
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
கலைச்செல்வன் (சபீன்)
கோபாலசாமி நாகரூன்
மல்லாகம், யாழ்ப்பாணம்
வீரச்சாவு: 17.09.2006
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
விதுசன் (வெள்ளை)
நடராசா விக்கினேஸ்வரன்
கிண்ணியடி,
வாழைச்சேனை,
மட்டக்களப்பு
வீரச்சாவு: 17.09.2006
★★★

கடற்கரும்புலி கப்டன்
சமர்மறவன்
அருமைலிங்கம்,
அருளானந்தம்
ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்
வீரச்சாவு: 17.09.2006
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
வளவன் சுப்பிரமணியம்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 15.10.2006
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
அரவிந்தா சீனிவாசகம்
ஜெயந்தினி
பழையமுறிகண்டி,
புத்துவெட்டுவான்,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 18.10.2006
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
தனு
(தில்லைச்செல்வி)
மதியாபரணம்
நாகேஸ்வரி
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 18.10.2006
★★★

கடற்கரும்புலி லெப்.கேணல்
மான்பாலன் ஆடிவேல்
ஜெயசீலன்
திருகோணமலை.
வீரச்சாவு: 27.11.2006
★★★

கடற்கரும்புலி லெப்.
கேணல்
கார்குழலி கனகலிங்கம்
சுகந்தினி
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 21.01.2007
★★★

கடற்கரும்புலி மேஜர்
சுகந்தன்
கந்தசாமி நகுலேஸ்வரன்
இல 49, கோணாவில்,

கிளிநொச்சி.
வீரச்சாவு: 27.01.2007
★★★

கடற்கரும்புலி மேஜர்
தீக்கதிர்
மருசலின் தமிழின்தாசன்
முள்ளியான்கட்டைக்காடு,
வரமராட்சி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 27.01.2007
★★★

கடற்கரும்புலி கப்டன்
முறையமுதன்
அந்தோனியப்பன்
மரியனேசன்
வெள்ளாங்குளம், 03ம்
பிட்டி,
மன்னார்.
வீரச்சாவு: 27.01.2007
★★★

கடற்கரும்புலி லெப்.
எழுகடல்
கதிர்வேல் மகேந்திரன்
02ம் சந்தி பாடசாலை
அருகாமை,
கனகராயன்குளம்,
வவுனியா.
வீரச்சாவு: 27.01.2007
★★★

கடற்கரும்புலி லெப்.
மணிக்கொடி
நடராசா ராம்குமார்
அம்பலவன் பொக்கனை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 27.01.2007
★★★

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க ஜேர்மன் துணைத் தூதுவரிடம் மட்டக்களப்பு ஊடகவியலாளர் கோரிக்கை!

24.06.2026

இலங்கையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கும், அரசாங்கத்தால் கொண்டுவரப்பட உள்ள ஊடக சாசனத்தை நிறுத்துவதற்கான அழுத்தங்களை வழங்குமாறும் இலங்கைக்கான ஜேர்மன் துணை தூதுவர் சார கசல்பார்த் அவர்களிடம் மட்டு ஊடக அமையத்தில் வைத்து ஊடகவியலாளரினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை மட்டு ஊடக அமையத்திற்கு விஜயம் செய்த ஜேர்மன் துணை தூதுவருக்கும் மட்டு ஊடக நிர்வாகத்தினருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இச் சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக கேட்டறிந்ததோடு, அரசாங்கத்தின் தற்கால செயற்பாடுகள், தமிழ், முஸ்லீம், சிங்கள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஜெர்மன் துணை தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

இதன் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஊடகவியலாளர் தொடர்ந்தும் பல்வேறு பட்ட விசாரணைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும், ஊடகவியலாளர் மீது பிரயோகிக்கப்படும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கும், ஊடாக சுதந்திரம் பாதுகாக்கவும், தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாக்கவும், அரசியல் தீர்வை வழங்குவதற்கும் ஜெர்மன் அரசாங்கம் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் ஊடகவியலாளர் கோரிக்கை முன் வைத்தனர்.

இச் சந்திப்பில், மட்டு ஊடக அமையத்தின் தலைவர் வ. கிருஷ்ணகுமார், பொருளாளர் கிருஷ்டிராஜ், மற்றும் முத்த ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சசிகரன், செ. நிலாந்தன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களை தெரிவித்தனர்.

10ஆவது வாரமாகத் தொடரும் யாழ். மயிலிட்டி மக்களின் காணி விடுவிப்புப் போராட்டம்!

26.06.2026

யாழ். வலிகாமம் வடக்கு பகுதிகளில் சிறீலங்கா படைகளின் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்கக்கோரி, காணி உரிமையாளர்கள் சிறீலங்கா இராணுவத்தினரின் "கொமாண்டோ" பங்களா முன்பாக இன்றைய நாள் (26.06.2026) பத்தாவது வெள்ளிக்கிழமை போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

வலி. வடக்கில் 249, 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு யூன் மாத கால பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது.

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும் , அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.

இந்நிலையில் தமது 651 ஏக்கர் வரையிலான காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள்

போராடி வரும் நிலையில் காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் காணிகளை விடுவிக்குமாறு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்த நிலையில், இன்றைய தினமும் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

சாவகச்சேரி நகரசபை உபதவிசாளர் கிசோரின் பதவி பறிப்பை கண்டித்து கதவடைப்பு போராட்டம்!

26.06.2026

சாவகச்சேரி நகரசபை உபதவிசாளர் கிஷோரின் பதவி ஆளுநரால் பறிக்கப்பட்டமையைக் கண்டித்து சாவகச்சேரி நகரில் முழுக் கதவடைப்பும் கவனயீர்ப்புப் போராட்டமும் இன்று 26.06.2026 வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையை சபையில் விமர்சித்து, அதனை தூக்கி வீசிய குற்றத்தில், நகர சபை உபதவிசாளர் ஞா. கிசோரை வடமாகாண ஆளுநர் , உப தவிசாளரின் பதவியை நீக்கியும், நகர சபை உறுப்புரிமையை வறிதாக்கியும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டுள்ளார்.

குறித்த சம்பவத்தை கண்டித்தும் நீதி கோரியும், சாவகச்சேரி வர்த்தகர்கள் இன்றைய நாள் வெள்ளிக்கிழமை முழு கடையடைப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

சாவகச்சேரி சந்தை, வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளது. அதேநேரம் பாடசாலைகள், வங்கிகள், அரச நிறுவனங்கள், போக்குவரத்து சேவைகள் என்பன வழமை போன்று இயங்கி வருகின்றன.

அதேவேளை, கொடிகாமம் பகுதிகளிலும் பல வர்த்தக நிலையங்கள் மூடப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

www.thuyarpakirvu.com

கடற்கரும்புலி மேஜர்
அருமைச்சேரன்
பருமாள் சுதாகரன்
இரணைப்பாலை,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 27.02.2007
★★★

கடற்கரும்புலி மேஜர்
பாசமலர்
கணேசன் பிரியதர்சினி
155ம் கட்டை,
கிருஸ்ணபுரம்,
கிளிநொச்சி.
வீரச்சாவு: 27.02.2007
★★★

கடற்கரும்புலி லெப்.
கேணல்
வித்தியா சின்ராசா
மேரிஅன்ரனி
கொன்சின்சியா
01ம் யூனிற், மல்லாவி,
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 22.06.2007
★★★

கரும்புலி லெப்.கேணல்
வீமன்
கோபாலபிள்ளை பிரதீபன்
திருகோணமலை.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி லெப். கேணல்
இளங்கோ இராசதுரை
பகீரதன்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி லெப். கேணல்
மதிவதனன்
பாலசுப்பிரமணியம்
தயாசீலன்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி மேஜர் சுபன்
கதிரவன்
ஜீவகாந்தன்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி மேஜர் கனிக்கீதன்
இராசன் கந்தசாமி
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி மேஜர் இளம்புலி
துரைரட்ணம் கலைராஜ்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி மேஜர் காவலன்
சண்முகம் சத்தியன்
கிளிநொச்சி.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி மேஜர்
எழிலின்பன்
விமலநாதன் பிரபாகரன்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி கப்டன் தர்மினி
கணேஸ் நிர்மலா
கிளிநொச்சி.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி கப்டன் புரட்சி
செல்வராசா தனுசன்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி கப்டன்
கருவேந்தன்
மயில்வாகனம் சதீஸ்குமார்
கிளிநொச்சி.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி கப்டன் புகழ்மணி
தர்மலிங்கம்
புவனேஸ்வரன்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி கப்டன்
புலிமன்னன
கணபதி நந்தகுமார்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி கப்டன்
அன்புக்கதிர்
வில்சன் திலீப்குமார்
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி கப்டன் சுபேசன்
நாகராசா மகாராஜ்
மன்னார்.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி கப்டன் செந்தூரன்
கணேசநாதன் தினேஸ்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி கப்டன் பஞ்சீலன்
சிவானந்தம் கஜேந்திரன
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி கப்டன் ஈழப்பிரியா
கந்தையா கீதாஞ்சலி
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி கப்டன் அறிவுமலர்
சேவியர் உதயா
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி கப்டன்
ஈழத்தேவன்
தங்கராசா மோசிகரன்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கரும்புலி லெப். அருண்
பத்மநாதன் திவாகரன்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.10.2007
★★★

கடற்கரும்புலி லெப்.
கேணல்
அன்புமாறன் கனகலிங்கம்
சுபாஸ்கரன்
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 21.03.2008
★★★

குற்றச்சாட்டுப் பத்திரம் வழங்கப்படவில்லை என சாவகச்சேரி நகர சபை உப தவிசாளர் கிசோர் குற்றச்சாட்டு!

26.06.2026

தன் மீதான குற்றச்சாட்டுப் பத்திரத்தை வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தன்னிடம் வழங்கவில்லை என சாவகச்சேரி நகர சபை உப தவிசாளர் ஞா, கிசோர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையை சபையில் விமர்சித்து, அதனை தூக்கி வீசிய குற்றத்தில், நகர சபை உப தவிசாளர் ஞா. கிசோரை வடமாகாண ஆளுநர், உப தவிசாளரின் பதவியை நீக்கியும், நகர சபை உறுப்புரிமையை வறிதாக்கியும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தால் சாவகச்சேரியில் 700 க்கும் மேற்பட்ட கடைகளை மூட வேண்டியதாக இருக்கும்.

கடந்த காலங்களில் உள்ளூராட்சி சபைகளினால் கட்டட அனுமதிகள் வழங்குவதில் கால தாமதங்கள் ஏற்பட்டன. அதனை நாம் தற்போது சீர் செய்துள்ளோம்.

புதிய வர்த்தக நிலையங்களை கட்டி, வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களிடம் குடிபுகு சான்றிதழ் கட்டாயம் என்பதனை வலியுறுத்தி, குடிபுகு சான்றிதழ்களை பெற வைத்துள்ளோம்

ஆனால் நகர சபை கட்டடங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் உட்பட சில வர்த்தக நிலைய கட்டடங்கள் 50 ஆண்டுகளுக்கு மேலானது. அவற்றுக்கு குடிபுகு சான்றிதழ் பெறுவதில் பல சிக்கல்கள் உண்டு. உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையை அவ்வாறே பின் பற்றினால் பல வர்த்தக நிலையங்களை மூட வேண்டி வரும். அதனால் அது தொடர்பில் சபையில் பேசினேன்.

அண்மையில் சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தங்குமிடம் கட்டடப்பட்டு திறக்கப்பட்டது. அதற்கு எந்த சபையில் அனுமதி பெற்றனர். இராணுவத்தினர் முகாம்களுக்குள் கட்டட வேலைகளை செய்கின்றார்கள் அவர்களுக்கு யார் அனுமதி கொடுத்தது? அது மட்டுமன்றி சாவகச்சேரியில் பல அரச கட்டடங்களுக்கே உரிய அனுமதிகள் இல்லாத நிலைமைகள் காணப்படுகிறது.

இவ்வாறான நிலையில், வர்த்தக நிலையங்களை முடக்கும் செயற்பாடாக அனுமதி விடயங்களை இறுக்க மாக பின்பற்ற

முயல்கின்றனர்

நான் பதவிக்காக வரவில்லை. என் பதவி பறிபோனதால் அஞ்சி ஒதுங்கவும் இல்லை. எனக்கான நீதியை கோரி நான் நீதிமன்றம் செல்வேன் நீதித்துறை மீது எனக்கு நம்பிக்கை உண்டு. எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக நீதிமன்றம் செல்லவுள்ளேன் என தெரிவித்தார்.

காணிகளை விடுவிக்க வலியுறுத்தி ஐந்தாவது நாளாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள முல்லை. கேப்பாப்புலவு மக்கள்

28.06.2026

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட கேப்பாப்பிலவில் சிறீலங்கா இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி காணிகளுக்குரிய மக்கள் இன்று 28.06.2026 ஞாயிற்றுக்கிழமை ஐந்தாவது நாளாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் கேப்பாப்பிலவு மக்களின் குறித்த ஐந்தாம் நாள் போராட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களும் பங்கேற்றிருந்தார்.

குறிப்பாக கேப்பாப்பிலவில் 55 குடும்பங்களுக்குரிய 59.5 ஏக்கர் பூர்வீக வாழ்விடக்காணிகளும், 4 குடும்பங்களுக்குரிய 100 ஏக்கர் மத்தியவகுப்புக் காணிகளும் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளநிலையில், அந்த பூர்வீகக் காணிகளை விடுவிக்க வலியுறுத்தியே காணிகளுக்குரிய மக்களால் தொடர் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

மேலும் இந்த ஐந்தாம் நாள் ஆர்ப்பாட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், சட்டத்தரணி குமாரசிங்கம் கம்சன், சூழல் மற்றும் சமூகத்தின் அபிவிருத்தியை வலுவூட்டும் நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் திருமதி.மாதுசனா திஷான் ஆகியோரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கேப்பாப்பிலவு மக்களின் பூர்வீகக் காணிகள் விடுவிக்கப்படவேண்டும்; காணி விடுவிப்பிற்காய் போராடும் மக்களோடு எப்போதும் துணைநிற்பேன்

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

28.06.2026

இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு மக்களின் பூர்வீக காணிகள் விடுவிக்கப்படவே வேண்டும் என வலியுறுத்திய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், தமது பூர்வீகக் காணி விடுவிப்பிற்காய் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் கேப்பாப்பிலவு மக்களுக்காக எப்போதும் துணைநிற்பேன் எனவும் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி, கேப்பாப்பிலவு மக்கள் தொடர் போராட்டத்தினை மேற்கொண்டுவருகின்றனர்.

இந்நிலையில் நான்காவது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கேப்பாப்பிலவு மக்களை நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் 27.06.2026 இன்று நேரில் சென்று சந்தித்துக் கலந்துரையாடினார். இவ்வாறு அந்த மக்களுடன் கலந்துரையாடி நிலமைகளைக் கேட்டறிந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கேப்பாப்புலவு மக்கள் ஆரம்பகாலத்தில் பிலக்குடியிருப்புக் காணி விடுவிப்பிற்காக 30 நாட்கள் தொடர்ச்சியாக போராட்டங்களை நடாத்தி அந்த மக்களுடைய பிலக்குடியிருப்புப்பகுதியிலிருந்த பூர்வீகக் காணிகள் விடுவிக்கப்பட்டிருந்தது.

அதன்பின்பு கிட்டத்தட்ட மூன்று வருடங்களாக கேப்பாப்பிலவுப் பகுதியிலுள்ள தமது பூர்வீக வாழ்விடக்காணிகளை விடுவிக்க வலியுறுத்தி மக்களால் போராட்டம் மேற்கொள்ளப்பட்டதையடுத்து, அந்துமக்களுக்குரிய ஒருபகுதிக் காணிகள் விடுவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கேப்பாப்பிலவு பகுதியைச்சேர்ந்த 55 குடம்பங்களுடைய 59.5 ஏக்கர் பூர்வீக வாழ்விடக் காணி களும், 04 குடும்பங்களுடைய 100 ஏக்கர் காணிகளுமாக மொத்தம் 59 பேருக்குரிய 159.5 ஏக்கர் காணிகளும் விடுவிக்கவேண்டியுள்ளன. இவ்வாறு விடுவிக்கப்படாமலுள்ள தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தியே, தற்போது மக்கள் மீண்டும் தொடர் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

அந்த மக்கள் தங்களுடைய பூர்விகக் காணிகள் தங்களுக்கு வேண்டும் என்றுதான் அந்த மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். வேறு இடங்களில் காணிகள் எனு அந்த மக்கள் போராடவில்லை.

எனவே இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கேப்பாப்பிலவு மக்களின் இந்தப் பூர்வீக்காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்.

கேப்பாப்பிலவு மக்களின் காணிவிடுவிப்பு விடயம் தொடர்பில் நான் ஏற்கனவே ஜனாதிபதியுடன் பேசியிருக்கின்றேன். குறிப்பாக பாராளுமன்ற குழு அறையில் இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சினுடைய அமைச்சுசார் ஆலோஙனைக்குழுக் கூட்டங்களில் இந்த கேப்பாப்பிலவு மக்களின் காணிவிடுவிப்பு விடயம் தொடர்பாக பலதடவைகள் வலியுறுத்தியிருக்கின்றேன்.

அந்தவகையில் ஜனதிபதியும் இந்த மக்களின் காணி விடுவிப்பு விடயத்தில் கூடுதல் கவனஞ்செலுத்தவேண்டும். கவனஞ் செலுத்துவார் என்றே நம்புகின்றோம்.

அந்த மக்களின் காணி இந்தமக்களுக்கே விடுவிக்கப்பட வேண்டுமென்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

கேப்பாப்பிலவு மக்களின் காணி விடுவிப்பிற்காக, எப்போதும் அந்த மக்களுடன் துணைநிற்பேன் - என்றார்

கடற்கரும்புலி மேஜர்
கனிநிலா
குணராசா குணரூபா
கிளிநொச்சி.
வீரச்சாவு: 22.03.2008
★★★

கடற்கரும்புலி மேஜர்
நிறஞ்சினி
நன்னித்தம்பி அன்பரசி
கிளிநொச்சி.
வீரச்சாவு: 22.03.2008
★★★

கடற்கரும்புலி லெப். கேணல் செம்பிளவளவன்
கிளிநொச்சி.
வீரச்சாவு: 10.05.2008
★★★

கடற்கரும்புலி மேஜர் அமுது
முத்தையா பாக்கியராஜ
மட்டக்களப்பு.
வீரச்சாவு: 22.07.2008
★★★

கடற்கரும்புலி மேஜர்
மாதங்கி
சந்திரகாந்தன் சரிதா
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 22.07.2008
★★★

கடற்கரும்புலி மேஜர் அன்பு
(அன்பழகன்) பத்தினியன்
குணசீலன்
திருமலை.
வீரச்சாவு: 31.07.2008
★★★

கரும்புலி மேஜர் நிலாகரன்
முனியாண்டி ஜீவராசா
கிளிநொச்சி.
வீரச்சாவு: 09.09.2008
★★★

கரும்புலி கப்டன் நிமலன்
தவராசா தவக்குமார்
அக்கரைப்பற்று, அம்பாறை.
வீரச்சாவு: 09.09.2008
★★★

கரும்புலி லெப். கேணல்
மதியழகி
இரத்தினசாமி
லோகேஸ்வரி
பண்டியன்குளம், மல்லாவி.
வீரச்சாவு: 09.09.2008
★★★

கரும்புலி லெப். கேணல்
வினோதன்
இராசரத்தினம் பிரதாப்
வேலணை மேற்கு,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 09.09.2008
★★★

கரும்புலி கப்டன் கனிமதி
திருநாவுக்கரசு தட்சாயினி
நேரடம்பன், பூநகரி.
வீரச்சாவு: 09.09.2008
★★★

கரும்புலி கப்டன்
அறிவுத்தமிழ்
வையாபுரி சசிகலா
சமயபுரம், வவுனியா.
வீரச்சாவு: 09.09.2008
★★★

கரும்புலி கப்டன்
எழிலழகன்
கிருஷ்ணபிள்ளை
பிரபாகரன்
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 09.09.2008
★★★

கரும்புலி மேஜர் ஆனந்தி
சாந்தகுமார் விஜயலட்சுமி
மன்னமபிட்டி, மட்டக்களப்பு.
வீரச்சாவு: 09.09.2008
★★★

கரும்புலி கப்டன் அகிலன்
இராசகுலேந்தரன் கேதாரன்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 09.09.2008
★★★

கரும்புலி கப்டன் முத்துநகை
சிவகுருநாதன் சிவரோகினி
முகாவில், இயக்கச்சி.
வீரச்சாவு: 09.09.2008
★★★

கரும்புலி கப்டன் எழில்
வேந்தன்
முல்லைத்தீவு.
வீரச்சாவு: 03.12.2008
★★★

கடல்கரும்புலி மேஜர்
செஞ்சுடர்
யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 04.02.2009
★★★



வான்கரும்புலி கேணல்
ரூபன்
வீரச்சாவு: 20.02.2009
★★★

கரும்புலி லெப். கேணல்
சிரித்திரன்
முருகப்பிள்ளை சிவரூபன்
இடைக்காடு, யாழ்ப்பாணம்.
வீரச்சாவு: 20.02.2009
★★★

கரும்புலி லெப். கேணல்
மாறன்
வீரச்சாவு: 09.03.2009
★★★

கரும்புலி மேஜர்
தமிழ்மாறன்
வீரச்சாவு: 09.03.2009
★★★

கரும்புலி கப்டன்
கதிர்நிலவன்
வீரச்சாவு: 09.03.2009
★★★

முகம், முகவரி தெரியாத கரும்புலிகளுக்கு எமது வீரவணக்கம்

கரும்புலி வீரர்கள் பலர் இன்று பெயர் குறிப்பிடப்படாத கல்லறைகளில் அநாமதேயமாக உறங்கியபோதும், அவர்களது அற்புதமான சாதனைகள் வரலாற்றுக் காவியங்களாக என்றும் அழியாப்புகழ் பெற்று வாழும். – தேசியத் தலைவர்

**தேசத்தின் விடியலுக்காய் உயிர்க்கொடை தந்தவரே
ஒளி வீசும் உம் பாதங்கள் என்றென்றும் உயிர் தரும்**

**Oh you who sacrificed you precious lives
For our country's dawn of freedom**

சாவுக்கு தேதி குறிக்கும் சரித்திரங்கள்
கந்தகத்தை மேனியிற் கட்டிய சந்தனங்கள்
வீதியுலாவுக்காக வெளியில் வராத விக்கிரகங்கள்
உயிர்மூச்சை ஊதிவிடும் உயிராயுதங்கள்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

யாழ். செம்மணிப் பகுதி அணையா விளக்குத் திடலில் ஏற்றப்பட்ட நீதிக்கான உரிமைச் சுடர்

28.06.2026

மக்கள் செயல் இயக்கத்தின் ஏற்பாட்டில் உரிமைப்பந்தம் என்ற அமைதிவழி மக்கள் எழுச்சி நிகழ்வு இன்றைய நாள் ஞாயிற் றுக்கிழமை நடைபெற்றது.

செம்மணி பகுதியில் உள்ள அணையா விளக்கு திடல் பகுதியில் இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது

அதன் போது, அணையாவிளக்கு தூபிக்கு மலர் மாலை அணி வித்து, ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, மலர் வணக்கம் செலுத்தப் பட்டது.

அதனை தொடர்ந்து, செம்மணி மனித புதைகுழியில் தற்போது முன்னெடுக்கப்பட்டு அகழ்வு பணிகளில் இதுவரையில் 412 என்பு கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 1999 ஆம் ஆண்டு கால பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணி களின் போது, மீட்கப்பட்ட 15 என்பு கூடுகளுமாக 427 என்பு கூடுகளை நினைவுறுத்தி, 427 தீப்பந்தங்கள் கொளுத்தப் பட்டன.

கிழக்குப் பல்கலைக்கழகக் கிராம வீதியை விடுவிக்க வேண்டும்: வந்தாறுமூலை மக்களின் கவனயீர்ப்புப் போராட்டம்

28.06.2026

மட்டக்களப்பு, வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழகம் தமது கிராமத்திற்குச் செல்லும் வீதியை விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி, அப்பகுதி மக்களும் பொது அமைப்புகளும் இணைந்து கிழக்குப் பல்கலைக்கழகத் திற்கு முன்னால் ஞாயிற்றுக்கிழமை (28) கவனயீர்ப்பு ஆர்ப் பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

கடந்த 1990ஆம் ஆண்டு யுத்த காலப்பகுதியில், தமது கிராமத் திற்குச் செல்லும் பிரதான வீதி மூடப்பட்டதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர், கிழக்குப் பல்கலைக்கழகம் சுற்றுமதில் அமைத்ததால் தங்களது கிராமத்திற்கான வீதி முற்றிலும் தடைப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட மக்கள், தமக்கான வீதியை உடனடியாக விடுவிக்க வேண்டும் எனக் கோரி இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்குத் தேசிய மக்கள் சக்தி யின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும், விவசாய மற்றும் காணி அமைச்சின் இணைப்புச் செயலாளருமான ந. திலக நாதன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் என். நாகேந்திரன் ஆகியோர் வருகை தந்து, மக்களின் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடினர்.

இதன்போது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தங்களது நியா

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

திருகோணமலை முத்து நகர் விவசாயிகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

28.06.2026

திருகோணமலை முத்து நகர் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்றும் சீனக்குடா பொலிசாரின் அத்து மீறிய சம்பவம் தொடர்பில் கொழும்பில் உள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் குறித்த விவசாயிகள் சென்று தங்களது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக முறைப்பாட்டு அளித்துள்ளனர்.

இதன்பின் ஊடகங்களுக்கு முத்து நகர் ஒன்றினைந்த விவசாய சங்கத்தின் செயலாளர் சஹீலா சபூர்தீன் கூறுகையில்,

முத்து நகர் விவசாயிகளின் காணிகள் சூரிய மின் சக்தி உற்பத்திக்காக கையகப்படுத்தப்பட்டதை அடுத்து விவசாயிகள் தொடர் போராட்டத்தை நடாத்தி வந்தனர்.

இது தொடர்பில் மாற்றுக்காணி வழங்குவதாக கூறினர் ஆனால் தீர்வு தராமல் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். எனவே பிரதமர் ஊடாக தீர்வு வழங்கப்படவில்லை.

எங்களது விவசாய நிலம் இலங்கை துறை முக அதிகார சபையினால் கையகப்படுத்தி 342 விவசாய குடும்பங்களை வீதிக்கு இறங்கியுள்ளனர். தற்போது தொழில் இன்றி பாரிய பொருளாதார சிக்கலை எதிர்கொண்டுள்ளனர்.

மேலும் இரவு நேரத்தில் சீனக்குடா பொலிசார் தங்கள் விவசாய குடும்பம் ஒன்றின் வீட்டினுள் நுழைந்து அப்பட்டமாக வீட்டை பரிசோதனை செய்துள்ளனர். இது அடிப்படை உரிமை மீறலாகும் இது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு அறிந்துள்ளோம் எனவும் மேலும் தெரிவித்தார்.

போருக்குப் பிறகு திருகோணமலை குச்சவெளியில் மட்டும் 32 புதிய பௌத்த விகாரைகள்

28.06.2026

போருக்குப் பிறகு, திருகோணமலை குச்சவெளியில் மட்டும் 32 புதிய பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 10 விகாரைகளைச் சுற்றியுள்ள சுமார் 2,000 ஏக்கர் நிலம் "பூஜா பூமி" வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்

டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனால் மிக முக்கியமான கேள்வி என்னவென்றால்,

"பூஜா பூமி" வர்த்தமானி என்பது நிலத்தின் உரிமையை வழங்கும் சட்ட ஆவணமா?

உடற்கட்டமைப்பு திட்டமிடல் திணைக்கள அதிகாரிகளின் விளக்கத்தின் படி, இல்லை. அந்த நிலங்கள் இன்னும் அரசுக்குச் சொந்தமானவையே. அந்த வர்த்தமானி நிலத்தின் பயன்பாட்டைத் திட்டமிடுவதற்கான ஒரு திட்டமிடல் கருவி மட்டுமே. அது யாருக்கும் நில உரிமையை வழங்குவதில்லை.

இருப்பினும், நடைமுறையில் சில இடங்களில் இந்த "பூஜா பூமி" வர்த்தமானிகள் நில உரிமைக்கான ஆதாரமாக பயன்படுத்தப்படுவதாகவும், மக்கள் தங்களது பாரம்பரிய காணிகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அரிசிமலையில் மட்டுமல்ல, குச்சவெளி முழுவதும் சுமார் 200 குடும்பங்கள் தங்களது காணிகளைப் பயன்படுத்த முடியாமல் இருப்பதாக பிரதேச செயலகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. 120-க்கும் மேற்பட்ட அரச அனுமதிப்பத்திரங்கள் (Permits) இருந்தும் விவசாயம் செய்ய விடப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

மேலும் கவலைக்குரியது, அரிசிமலையை "பூஜா பூமி"யாக அறிவிக்கும்போது சம்பந்தப்பட்ட பிரதேச செயலகம் எதிர்மறை அறிக்கை வழங்கியிருந்தும் அந்த பரிந்துரை புறக்கணிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2008 ஆம் ஆண்டுக்குப் பிறகு இலங்கையில் வெளியிடப்பட்ட 166 "பூஜா பூமி" வர்த்தமானிகளில் 85% வெளியிடப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. இதே காலகட்டத்தில்தான் போரும் முடிவடைந்தது.

இன்று எழும் அடிப்படை கேள்விகள்:
"பூஜா பூமி" வர்த்தமானி யாருக்கும் நில உரிமை வழங்காத போது, அது ஏன் நில உரிமை ஆவணமாக பயன்படுத்தப்படுகிறது?

அரசின் அனுமதிப்பத்திரங்களுடன் வாழ்ந்து வந்த மக்களின் உரிமைகள் ஏன் பாதுகாக்கப்படவில்லை?

பிரதேச செயலகத்தின் எதிர்மறை அறிக்கையை மீறி எவ்வாறு இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டது?

சட்டத்தின் ஆட்சியா, அரசியல் அதிகாரமா, எது இந்த நிலங்களை நிர்ணயிக்கிறது?

மதத்தை யாரும் எதிர்ப்பதில்லை. ஆனால் மதத்தின் பெயரில் சட்டமும், நில உரிமையும், உள்ளூர் மக்களின் வாழ்வுரிமையும் பாதிக்கப்படுமானால், அதைக் கேள்வி கேட்பது ஒவ்வொரு

குடிமகனின் ஜனநாயக உரிமையாகும்.

பூஜா பூமி என்பது வழிபாட்டிற்கான இடமா? அல்லது நில ஆக்கிரமிப்பிற்கான சட்டப்பூர்வ தோற்றமா?

இந்தக் கேள்விக்கு நாட்டின் பொறுப்புடைய அதிகாரிகள் தெளிவான பதில் அளிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

- ராஜ்குமார் ராஜீவ்காந்த் முகநூல் பதிவு

யாழ். தையிட்டி சட்டவிரோத மறையில் அமைக்கப்பட்டவிகாரைக்கு எதிரான கவனயீர்ப்பு போராட்டம் - 29.06.2026

வவுனியாவில் வடக்கு ஆளுநருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு

29.06.2026

வவுனியா மாநகர சபை மேயரின் உறுப்புரிமை நீக்கப்பட்டமைக்கு கண்டித்து, வடக்கு மாகாண ஆளுநருக்கு எதிராக, வவுனியா பண்டாரவன்னியன் சதுக்கத்துக்கு முன்பாக இன்று (29) ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் வவுனியா பண்டாரவன்னியன் சதுக்கத்துக்கு முன்னிருந்து மன்னார் வீதி வழியாக சென்று, காமினி மகா வித்தியாலயத்துக்கு முன்பாக நின்று பல்வேறு கோரிக்கைகள், குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கோசங்களை எழுப்பியிருந்தனர்.

வடக்கு மாகாண ஆளுநரால் கடந்த 24ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி மூலம் வவுனியா மாநகர சபை மேயர் சு.காண்டீபனின் பதவி பறிக்கப்பட்ட தகவல் அறிவிக்கப்பட்டது. அத்துடன், அவரது மாநகர சபை உறுப்புரிமையும் பறிக்கப்பட்டது.

இதனை கண்டித்து நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, "ஆளுநரே ஜனநாயக படுகொலையை நிறுத்து", "ஜே.வி.பியின் முகவராக ஆளுநரே செயற்படாதே", "பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள காட்சிக்கு மாநகர சபையிடம் காணி உரிமம் உண்டா?", "மக்கள் ஆணைக்கு மதிப்பளி", "தையிட்டியில் பாராமுகம் மாநகர சபையில் பழிவாங்கலா", "ஊழல் அறிக்கையை வெளிப்படுத்து" முதலான பல்வேறு வாசகங்கள் குறிப்பிடப்பட்ட பதாதைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்ததுடன், பல விடயங்களை சுட்டிக்காட்டி கோசம் எழுப்பினர்.

முல்லை. கேப்பாப்புலவில் காணிகளை விடுவிக்காவிடின் வடக்கு ஆளுநர் அலுவலகம் முற்றுகையிடப்படும்!

கேப்பாப்புலவு மக்கள்

29.06.2025

முல்லைத்தீவு கேப்பாப்புலவில் சிறீலங்கா இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி காணிகளுக்குரிய மக்கள் ஆறாவது நாளாக இன்றைய நாள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக கேப்பாப்புலவில் 55 குடும்பங்களுக்குரிய 59.5 ஏக்கர் பூர்வீக வாழ்விடக்காணிகளும், 4 குடும்பங்களுக்குரிய 100 ஏக்கர் மத்தியவகுப்புக் காணிகளும், 3 குடும்பங்களுக்குரிய 11.5 ஏக்கர் தோட்டக்காணிகளுமாக 171 ஏக்கர் காணிகள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது மக்கள் பூர்வீக வாழ்விடமாக கொண்ட 55.5 ஏக்கர் காணியை முதற்கட்டமாக உடனடியாக விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தே மக்கள் தொடர் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

எங்களுடைய, வாழ்க்கையே போராட்டம், போராட்டமே வாழ்க்கை என்ற நிலைக்கு உள்ளாகியிருக்கின்றோம். இனியும் இந்த போராட்டத்தை நீண்ட நாட்களாக வீதியில் இருந்தோ அல்லது மகஜர் வழியாகவோ மேற்கொள்ளாது மிக குறிகிய காலத்திலே எங்களுடைய போராட்டத்தை நிறைவு செய்ய தீர்மானித்துள்ளோம்.

ஆளுநரிடம் நாங்கள் விடுத்த கோரிக்கை, இராணுவத்தினால் எங்களிடம் முன்வைக்கப்பட்ட அநீதியான கோரிக்கைகளுக்கு தீர்ப்பு வழங்கி எங்களுடைய காணிகளை பெற்றுத்தர வேண்டும் என்பதே. அல்லது உடனடியாக சாதகமான பதில் தர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தோம் இதுவரையும் முடிவில்லை.

ஆளுநர் இங்கு வரவில்லை அல்லது சாதகமான முடிவு தரவில்லை என்றால் நாங்கள் ஆளுநர் செயலகம் சென்று செயலகத்திற்கு முன்பாக எழுச்சி பேரணியை மேற்கொள்வதாக தீர்மானித்துள்ளோம். இதற்கிடையில் எங்களுக்கு சாதகமான பதிலை தரவேண்டும் என கேப்பாபுலவு மக்கள் கோரியுள்ளனர்.

"செம்மணிப் புதைகுழி உண்மைகள் முழுமையாக வெளிவரவேண்டும்; அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்"

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன்

29.06.2025

செம்மணியில் 600க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டுள்ளனர் என சிறைக் கைதியாக இருக்கும் சோமரத்ன ராஜபக்ஷ முன்னர் கூறிய விடயம் இப்போது உண்மையாகவும் நம்பகமாகவும் காணக்கூடியதாக உள்ளது. இப்போது, இன்னும் இரண்டு புதைகுழிகள் உள்ளன எனும் கருத்தை கூறுகின்றார். இந்த விடயத்தில் அரசு கவனம் செலுத்தவேண்டும் என இலங்கை தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (28) மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இக்கருத்தினை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

தற்போதைய நிலையில் இரண்டு விடயங்கள் நாட்டில் மக்களின் கவனத்தில் முக்கிய பேசுபொருளாக உள்ளன. ஒன்று, செம்மணி புதைகுழி. மற்றயது, சுரேஸ் சலே விடயங்கள்.

செம்மணியில் 600க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டுள்ளனர் என சோமரத்ன ராஜபக்ஷ முன்னர் கூறிய விடயத்துடன் தற்போதய நிலையை பார்க்கும்போது இன்று 400க்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

செம்மணி மனித புதைகுழி சந்திரிக்கா அம்மையாரின் காலத்தின்போது ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த விடயத்தில் ஒரு முக்கியமான சாட்சியான சிறையில் இருக்கும் சோமரத்ன ராஜபக்ஷ இப்போது வாய் திறக்கத் தொடங்கியிருக்கின்றார்.

அவரது மனைவி, கணவரின் கருத்துக்களை கூறிக் கொண்டிருக்கின்றார். இந்த விடயம் உண்மையான சாட்சியமாக கருதப்படுகின்றது. ஏனென்றால், கடந்த காலத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என மக்கள் சந்தேகம் தெரிவித்த நிலையில், இந்த சந்தேகத்தை வலுச் சேர்க்கும் வகையில் சோமரத்ன ராஜபக்ஷ பல விடயங்களை கூறிக்கொண்டிருக்கிறார். சில நிபந்தனைகளுடன் சுயாதீனமான விசாரணைக்கு உட்படுத்தும்போது சாட்சியாக பல உண்மைகளை கூறுவேன் என அவர் தெரிவித்திருக்கிறார்.

இந்த 30 ஆண்டுகளாக புதைக்கப்பட்ட உண்மைகள் வெளியில் வரக்கூடாது என்பதற்காக பல சாட்சியங்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சில சாட்சியங்களை வாய் திறக்காதவாறு அடைத்து வைத்திருக்கின்றார்கள். எனவே இந்த சோமரத்ன ராஜபக்ஷ என்பவரை நியாயமான விசாரணைக்கு உட்படுத்தும் போது கொலையாளிகள் பற்றியும் இச்சம்பவங்களின் பிரதான சூத்திரதாரி யார் யார் என்பதையும் அறியமுடியும்.

அரசு நல்ல விடயங்களை செய்கின்றபோது குற்றவாளிகளை கைது செய்கின்றபோது, நீதியை தேடுகின்றபோது, உண்மையை தேடுகின்றபோது நாங்கள் அந்த விடயத்துக்கு ஆதரவளிப்போம்.

எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் தாங்கள் செய்த குற்றங்களை கண்டுபிடிக்கும்போது துடிக்கின்றார்கள். பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்காவிட்டால் ஜி.எஸ்.பி. (GSP) சலுகை கிடைக்காமல் போய்விடும் என முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுகின்றார்.

அந்த காலத்தில் எத்தனையோ அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்படும்போது சட்டம் தெரிந்தவர் அதிகாரத்தில் அமைச்சராக இருந்தவர் ஏன் வாய் திறக்கவில்லை? இப்போது வாய் திறக்கிறார் என்றால் வடிகட்டிய இனவாதத்தை வெளிப்படுத்துகிறார்.

அறிவுஜீவிகளான பேராசிரியர் ரவீந்திரநாத், சிவராம், நடேசன், சந்திரநேரு, ஜோசப் பரராஜசிங்கம், சுகிர்தராஜன், தம்பையா... இப்படி பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இப்படி எல்லோரையும் அழித்துள்ளனர்.

தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பது போல் இந்த பயங்கரவாத தடைச் சட்டமானது வினை விதைத்தவர்கள் மீது பாயத் தொடங்கியிருக்கின்றது.

ஆகவே இதனை சரியான முறையில் நீதியாக நியாயமான முறையில் விசாரணை செய்கின்ற போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரி யார், செம்மணி படுகொலை செய்த அரச பயங்கரவாதிகள் யார் என்பதை கண்டறிய முடியும். சோமரத்ன ராஜபக்ஷ, ஆசாத் மௌலானா போன்றோரை பயன்படுத்தி விசாரணை செய்தால் உண்மை வெளிப்படும் என தெரிவித்தார்.

www.sangathamil.com

கனடியச் செய்திகள்

கனடா குடியுரிமை குறித்து அரசாங்கத்தின் அறிவிப்பு!

17.06.2026

கனடாவில் வம்சாவளி அடிப்படையில் குடியுரிமை பெறும் புதிய சட்டத்தின் கீழ் சான்றிதழ்களைப் பெற்ற நூற்றுக்கணக்கானோரின் குடியுரிமை சான்றிதழ்களை மத்திய அரசு திடீரென திரும்பக் கேட்டுள்ள விவகாரம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கனடா நாட்டு வம்சாவளியினர் தங்களது மூதாதையர்களாக இருக்கிறார்கள் என்பதற்காகவே ஒருவர் தானாகவே குடியுரிமை பெற தகுதியானவர் என்று அர்த்தமாகாது என குடிவரவுத் துறை அமைச்சர் லீனா டயப் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு தலைமுறையிலும் உங்களுக்கும் கனடாவுக்குமான தொடர்பை நீங்கள் திட்டவட்டமாக நிரூபிக்க வேண்டும் எனவும் வெறும் மரபியல் இணையதளங்களின் (Genealogy websites) தரவுகள் மட்டுமே இதற்குப் போதாது எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு கொண்டுவரப்பட்ட புதிய சட்டத்தின்படி, டிசம்பர் 15, 2025-க்கு முன் பிறந்தவர்கள், தங்களின் முன்னோர்கள் கனேடியர்கள் என்பதை நிரூபித்தால் குடியுரிமை பெற முடியும் என தெரிவித்துள்ளார்.

ஆனால், கடந்த வார இறுதியில் இந்தச் சட்டத்தின் கீழ் குடியுரிமை சான்றிதழ் பெற்ற "குறிப்பிட்ட எண்ணிக்கையிலான" நபர்களுக்கு கனடா குடிவரவுத் துறை அதிர்ச்சியூட்டும் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அதில், தங்களிடம் உள்ள குடியுரிமை சான்றிதழ்களை உடனடியாக அரசிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அசல் ஆவணங்களையோ அல்லது அவற்றை சமர்ப்பிக்க முடியாததற்கான உரிய விளக்கங்களையோ தராததால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசு தரப்பில் கூறப்படுகிறது.

அரசின் இந்த திடீர் முடிவால் பல குடும்பங்கள் நடுத்தெருவில் நிற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கனடாவில் மின்சார ஸ்கூட்டர்கள் குறித்து எச்சரிக்கை!

மொண்ட்ரியால் குழந்தைகள் மரத்துவமனையின் விபத்து தடுப்புப் பிரிவு இயக்குனர் டெபி :.ப்ரைட்மேன் மற்றும் பிரிட்டிஷ் கொலம்பிய குழந்தைகள் மருத்துவமனையின் மருத்துவர் ஷெலினா பாபுல்

21.06.2026

மின்சார ஸ்கூட்டர்களை (E-scooters) பயன்படுத்துவதால் ஏற்படும் விபத்துகள் மற்றும் உயிருக்கே ஆபத்தாக முடியும் காயங்கள் குறித்து கனடாவின் இரண்டு முன்னணி குழந்தைகள் மருத்துவமனைகள் அவசர பாதுகாப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளன.

மின்சார ஸ்கூட்டர் என்பது ஒரு விளையாட்டுப் பொருள் அல்ல; அதை மக்கள் எச்சரிக்கையுடன் கையாள வேண்டும் என மொண்ட்ரியால் குழந்தைகள் மருத்துவமனையின் விபத்து தடுப்புப் பிரிவு இயக்குனர் டெபி ஃப்ரைட்மேன் தெரிவித்துள்ளார்.

மேலும், "மூளை பாதிப்பு, முகத்தில் கடுமையான காயங்கள், வயிற்றுப் பகுதியில் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் எலும்பு முறிவுகளுடன் பல குழந்தைகள் அவசர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு வரப்படுகிறார்கள்.இவை மிகவும் தீவிரமான காயங்கள் என அவர் எச்சரித்துள்ளார்.

இதேபோன்றதொரு எச்சரிக்கையை பிசி குழந்தைகள் மருத்துவமனையும் விடுத்துள்ளது. அங்கு மின்சார ஸ்கூட்டர் விபத்துகளால் பாதிக்கப்பட்டு வரும் குழந்தைகளில் பெரும்பாலானோர் 13 முதல் 15 வயதுக்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கியூபெக் மாகாணத்தில் 14 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் இ-ஸ்கூட்டர்களைப் பயன்படுத்த அனுமதி உண்டு. ஏனைய பெரும்பாலான மாகாணங்களில் 16 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த வயதை விடக் குறைவான சிறுவர்களே அதிகளவில் விபத்துக்குள்ளாகி அவசர சிகிச்சைப் பிரிவிற்கு வருகின்றனர்.

விபத்துக்குள்ளானவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள்

ஹெல்மெட் அணிவதில்லை; 59 சதவீதத்தினர் அனுமதிக்கப்பட்ட 25 கிலோ மீற்றர் வேக வரம்பை விட அதிவேகமாகச் சென்று விபத்தில் சிக்குகின்றனர் என பிரிட்டிஷ் கொலம்பிய குழந்தைகள் மருத்துவமனையின் மருத்துவர் ஷெலினா பாபுல் தெரிவித்துள்ளார்.

'ஸ்டீல்ஸ் அவென்யூ' வீதி விரிவாக்கத்திற்கு ஒன்ராரியோ அரசு நிதியுதவி வழங்குகிறது

25.06.2026

ஒன்ராரியோ அரசு, மத்திய அரசாங்கத்துடன் இணைந்து, ரொறான்ரோ நகரில் மிகவும் முக்கியமான உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளுக்கு ஆதரவு அளித்து வருகிறது. இதன் மூலம் மேலும் இணைக்கப்பட்ட மற்றும் வளர்ந்து வரும் சமூகங்களை உருவாக்க முடியும். இந்த முதலீட்டின் ஒரு பகுதியாக, ஸ்கார்பரோ-ரூஜ் பார்க் பகுதி குடியிருப்பாளர்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பான, டாப்ஸ்காட் வீதி (Tapscott Road) முதல் நைன்த் லைன் (Ninth Line) வரையிலான ஸ்டீல்ஸ் அவென்யூ ஈஸ்ட் (Steeles Ave E) வீதியை விரிவுபடுத்துவதற்கான செலவில் 90 சதவீதத்தை ஒன்ராரியோ மற்றும் மத்திய அரசாங்கங்கள் ஏற்கும்.

ஸ்கார்பரோ குடியிருப்பாளர்களுக்கு இது குறுகிய பயண நேரம், குறைந்த போக்குவரத்து நெரிசல், பாதுகாப்பான மற்றும் சீரான வீதிகள் ஆகியவற்றைக் குறிப்பதோடு, குடும்பங்கள், தொழிலாளர்கள், மாணவர்கள், முதியவர்கள் மற்றும் உள்ளூர் வணிகர்களுக்கு சிறந்த போக்குவரத்து இணைப்புகளை வழங்கும்.

இந்த ஸ்டீல்ஸ் அவென்யூ ஈஸ்ட் வீதி விரிவாக்கமானது, ஸ்கார்பரோவை அதன் அண்டை சமூகங்களுடன் இணைக்கும் ஒரு பரபரப்பான வழித்தடத்தில் போக்குவரத்து ஓட்டத்தை மேம்படுத்த உதவப்போகிறது. இதன் மூலம் அன்றாடப் பயணம் மிகவும் வசதியானதாக மாறும்.

இது தொடர்பாக அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் கூறுகையில், "டாப்ஸ்காட் வீதி மற்றும் நைன்த் லைன் இடையேயான ஸ்டீல்ஸ் அவென்யூ ஈஸ்ட் வீதியை விரிவுபடுத்துவதற்கான செலவில் 90 சதவீதத்தை மத்திய அரசாங்கத்துடன் இணைந்து எங்கள் அரசு ஏற்பதில் நான் பெருமையடைகிறேன்," என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில், "ஸ்கார்பரோ பகுதி மக்கள் பல ஆண்டுகளாக இதைக் கேட்டு வருகின்றனர், இப்போது நாங்கள் அதைச் செய்து முடிக்கிறோம். இதன் மூலம் பயண நேரம் குறையும், போக்குவரத்து நெரிசல் நீங்கும் மற்றும் நமது சமூகத்தின் வாழ்க்கை முறை மேலும் வசதியாகும்" என்றார்.

ரொறான்ரோ முழுவதும் உள்ள குடும்பங்கள், வணிகங்கள் மற்றும் எதிர்கால வளர்ச்சிக்குத் தேவையான வீதிகள், போக்குவரத்து இணைப்புகள் மற்றும் உள்கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு அனைத்து நிலை அரசாங்கங்களுடனும் இணைந்து செயல்படுவதில் ஒன்ராரியோ அரசு கொண்டுள்ள தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இந்த முதலீடு பிரதிபலிக்கிறது.

"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

ஒன்ராரியோ நெடுஞ்சாலைகளில் வேக வரம்பு 110 கி.மீ. ஆக அதிகரிப்பு

24.06.2026

ஒன்ராரியோவின் நெடுஞ்சாலைகளில் சாரதிகள் இனி சட்டப் பூர்வமாக அதிவேகத்தில் பயணிக்க அனுமதிக்கும் புதிய அறிவிப்பை ஒன்ராரியோ மாகாண அரசு வெளியிட்டுள்ளது.

கிங் சிட்டியில் (King City) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஒன்ராரியோ போக்குவரத்து அமைச்சர் பிரப்மீத் சர்க்காரியா இந்த முக்கிய அறிவிப்பை வெளியிட்டார்.

ஒண்டாரியோ நெடுஞ்சாலைகளில் வேக வரம்பு 110 கி.மீ ஆக அதிகரிப்பு ; Exclusive Ontario Raising Speed Limits

அதன்படி, மாகாணத்தின் 938 கிலோமீட்டர் நீளமுள்ள நெடுஞ் சாலைகளில் வேக வரம்பு மணிக்கு 100 கிலோமீட்டரிலிருந்து 110 கிலோமீட்டராக உயர்த்தப்படவுள்ளது. இந்த மாற்றங்கள் சாரதிகள் தங்களின் இலக்குகளை விரைவாகவும் பாதுகாப் பாகவும் சென்றடைய உதவும் என்று அமைச்சர் சர்க்காரியா தெரிவித்துள்ளார்.

இந்த புதிய வேக வரம்பு மாற்றம் கிழக்கு ஒன்ராரியோவில் உள்ள நெடுஞ்சாலைகள் 401 மற்றும் 416 ஆகியவற்றின் குறிப் பிட்ட பகுதிகளில் இந்த வெள்ளிக்கிழமை முதல் உடனடியாக அமலுக்கு வருகிறது. அதனைத் தொடர்ந்து, செப்டம்பர் மாத இறுதிக்குள் நெடுஞ்சாலை 401 மற்ற பகுதிகள், குயின் எலிசபெத் வே (QEW), 402, 403, 416 மற்றும் 417 ஆகிய நெடுஞ்சாலைகளிலும் இந்த புதிய வேக வரம்பு படிப்படியாக நடைமுறைப் படுத்தப்படும்.

மேலும், தற்போது கட்டுமானப் பணியில் இருக்கும் பிராட்போர்ட் பைபாஸ் மற்றும் நெடுஞ்சாலை 413 ஆகிய நெடுஞ்சாலை களும் மணிக்கு 110 கி.மீ வேக வரம்பை அடிப்படையாகக் கொண்டே கட்டமைக்கப்பட்டு வருகின்றன.

அரசாங்கத்தின் மதிப்பீட்டின்படி, இந்த வேக வரம்பு அதி கரிப்பால் சாரதிகளின் பயண நேரம் கணிசமாகக் குறையும். குறிப்பாக, சார்னியாவிலிருந்து ரொரான்டோவிற்கான பயணத் தில் சுமார் 20 நிமிடங்களும், ரொரான்டோவிலிருந்து ஒட்டா வாவிற்கான பயணத்தில் கிட்டத்தட்ட அரை மணி நேரமும் மிச்சமாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

முன்னதாக, பாதுகாப்பான நெடுஞ்சாலைகளில் வேக வரம் புகளை உயர்த்துவது குறித்து ஆய்வு செய்யப்போவதாக 2024 ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் பிரீமியர் டக் ஃபோர்ட் அறிவித்திருந்தார்.

கடந்த 2022 மற்றும் அதற்கடுத்த கோடைக்காலங்களில் நூற் றுக்கணக்கான கிலோமீட்டர் நெடுஞ்சாலைகளில் வெற்றிகர மாகச் செயல்படுத்தப்பட்ட சோதனை முயற்சிகளின் தொடர்ச்சி யாகவே சாரதிகளுக்கான இந்த புதிய அறிவிப்பு தற்போது அதிகாரபூர்வமாக வெளியாகியுள்ளது.

43 Years, Black July
Genocide Remembrance Month

What is commonly remembered as the 'Black July' massacre is a horrific Thamil genocide carried out against Thamils with the support of the Sri Lankan government from July 23 to July 30, 1983, in Sri Lanka.

Activists and independent monitors estimate that between 3,000 and 5,638 Thamil people were killed in just 10 days. During this period, historical landmarks and traces of Tamils were destroyed across many areas. More than 150,000 Tamils were forcibly displaced from their homes.

Furthermore, more than 18,000 houses and 5,000 shops belonging to Thamils were burned to ashes by violent mobs. At least 500 Thamil women were subjected to sexual assault, and several families were burned alive. All of these actions were orchestrated by Sinhalese mobs backed by the Sinhala-Buddhist government

This event triggered the first major, historic mass exodus of Thamils; as a result, more than 500,000 people fled the island of Sri Lanka

RECOGNISE LIBERATION TIGERS OF THAMIL EELAM AS A LIBERATION ORGANISATION

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.com

தமிழ் நாட்டுச் செய்திகள்

கடலூர் ஹைட்ரோகார்பன் திட்டத்துக்கு தமிழ் நாடு அரசு அனுமதி அளிக்கக்கூடாது

சீமான் – நாம் தமிழர் கட்சி

15.06.2026

'கடலூர் பரங்கிப்பேட்டை கடற்பகுதியில் புதிதாக 4 ஹைட்ரோ கார்பன் கிணறுகள் அமைக்கும் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு அனுமதி அளிக்கக்கூடாது' என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை அருகிலுள்ள கடற்பகுதியில் புதிதாக மேலும் 4 ஹைட்ரோ கார்பன் கிணறுகளை அமைக்க ஹிந்துஸ்தான் எண்ணெய் நிறுவனம் திட்டமிட்டுள்ளது பெரும் அதிர்ச்சி அளிக்கிறது. சுற்றுச்சூழலைச் சீரழிக்கும் ஹைட்ரோ கார்பன் திட்டங்களை எக்காரணம் கொண்டும் தமிழ்நாட்டில் அனுமதிக்கக் கூடாது என்று போராடி வரும் நிலையில் ஹிந்துஸ்தான் நிறுவனம் 4 ஹைட்ரோ கார்பன் திட்டங்களுக்கு விண்ணப்பித்துள்ளது வன்மையான கண்டனத்துக்குரியது.

நிலத்தையும், நீரையும் மாசுபடுத்திச் சுற்றுச்சூழலை சீர் கெடுக்கும் ஹைட்ரோ கார்பன் திட்டங்களை தமிழ்நாட்டின் எந்தவொரு பகுதியிலும் அனுமதிக்கக்கூடாது என்று நாம் தமிழர் கட்சி தொடர்ந்து போராடி வருகின்றது. காவிரிப்படுகையைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, ஹைட்ரோ கார்பன் உள்ளிட்ட சுற்றுச்சூழல் சீர்கேடுகள் திட்டங்களை அனுமதிக்கமாட்டோம் என்று உறுதியளித்தது.

அதனையடுத்து, திமுக ஆட்சிக்காலத்தில் திருவாரூர் மாவட்டம் பெரியகுடி, இராமநாதபுரம் கடற்கரை பகுதி, பரங்கிப்பேட்டை உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியில் தொடங்கவிருந்த ஹைட்ரோ கார்பன் திட்டங்களும் கடும் எதிர்ப்புப் போராட்டங்கள் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டது.

தற்போது மீண்டும் ஹிந்துஸ்தான் எண்ணெய் நிறுவனம் கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டையிலிருந்து சுமார் 18 கி.மீ. தொலைவில் கடலுக்குள் ரூ.425 கோடி மதிப்பீட்டில் 4 புதிய ஹைட்ரோகார்பன் எண்ணெய் கிணறுகள் அமைக்க ஹைட்ரோ கார்பன் கிணறுகள் அமைக்க தமிழ்நாடு கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்திடம் (TNCZMA) சுற்றுச் சூழல் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளது.

கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை கடற்பகுதி பாரம்பரிய மீன் பிடித் தொழில் பகுதி மட்டுமல்லாது சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும். இப்பகுதியில் தொடங்கப்படும் ஹைட்ரோ கார்பன் திட்டமானது கடல் நீரை மாசுபடுத்தி, மீன்கள் உள்ளிட்ட கடல்வாழ் பல்லுயிர் பெருக்கத்தை அழித்து, பாரம்பரிய மீன் பிடித் தொழிலுக்கே பேராபத்தை ஏற்படுத்தும்.

தனியார் பெருநிறுவனங்களின் நலனுக்காக மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பையும், பல்லுயிர் பெருக்கத்தையும், கடல் வளத்தையும் அழித்தொழிக்கும் ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கு தவெக அரசு அனுமதியளிக்க வேண்டாமென வலியுறுத்துகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

மேகதாது அணை விவகாரத்தில் புதிய நடுவர் மன்றம் கோருவது சட்டவிரோதமானது

தமிழ் நாடு காவிரி விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி. ஆர். பாண்டியன்

23.06.2026

மேகதாது விவகாரத்தில் புதிய நடுவர் மன்றம் கோருவது சட்டவிரோதமானது என்று தமிழ் நாடு காவிரி விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.ஆர்.பாண்டியன் தெரிவித்துள்ளர்.

இதுகுறித்து மன்னார்குடியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது,

முந்தைய திமுக தலைமையிலான தமிழ் நாடு அரசு மேகதாது அணைக்கு புதிய நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என தன் விருப்பத்துக்கு மத்திய அரசுக்கு கடிதம் எழுதியது, நாம் பெற்ற காவிரி உரிமையை பறிகொடுப்பதற்கு சமமாகும்.

அனைத்துக்கட்சி கூட்டத்திலோ அல்லது சட்டப்பேரவை கூட்டத்திலோ விவாதிக்காமல் தன் விருப்பத்துக்கு கடிதம் எழுதியது வன்மையாக கண்டிக்கத்தக்கது. இக்கடிதம் சட்டவிரோதமானது என தமிழ் நாடு அரசு சட்டப்பேரவையில் அறிவிக்க முன்வர வேண்டும்.

மேகதாது வரைவு திட்ட அறிக்கையை காவிரி மேலாண்மை ஆணையம் சட்டப்படி விவாதிக்கவும், அனுமதிக்கவும் முடியாது என்று திருப்பி அனுப்பி நிராகரித்ததை தொடர்ந்து, மத்திய நீர்வள ஆணையமும் நிராகரிக்க வேண்டும் என்ற தீர்மானம் மட்டுமே சட்டப்பேரவையில் மீண்டும் நிறைவேற்ற வேண்டும்.

கடந்த திமுக அரசு தான்தோன்றித்தனமாக, சட்டவிரோதமாக எழுதிய கடிதத்தை நியாயப்படுத்துவதற்காக முதல்வர் விஜய் தலைமையிலான அரசை சட்டப்பேரவையில் தவறாக பயன்படுத்த முயற்சித்துள்ளனர். எனவே, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோளை தீர்மானத்தில் இணைத்தது மிகப்பெரிய வரலாற்றுப் பிழையாகும். அதை நிராகரிக்க வேண்டும்.

மேகதாதுவுக்காக நடுவர் மன்றம் வேண்டும் என்று கோருவது

உச்ச நீதிமன்றம், காவிரி நடுவர் மன்றம் அளித்த இறுதி தீர்ப்புக்கும், மத்திய அரசிதழில் வெளியிடப்பட்ட அரசாணைகளுக்கும் முரணானது என உணர்ந்து உடனடியாக முதல்வர் அதை நீக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

பிரான் பொபினி நகரில் காவல்துறையால் பலியான தமிழருக்கு நீதிகோரும் போராட்டம்

15.06.2026

கடந்த 30.05.2026 அன்று, பாரிஸ் மாநகரின் பொபினி பிரதேசத்தில் பிரெஞ்சு காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த அமரர் வைத்தியலிங்கம் புவனேஸ்வரன் (குட்டி) அவர்களின் சாவிற்கு நீதி கோரி, இன்று 14.06.2026 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடாத்தப்பட்ட அற வழி அமைதிக் கவனயீர்ப்பு பேரணி இடம்பெற்றது.

கடும் வெய்யிலான காலநிலைக்கு மத்தியில் பொபினி நகரசபையின் கௌரவ நகரபிதா உட்பட்ட கௌரவ உறுப்பினர்களும் சமூக அமைப்பு உறுப்பினர்களோடு பொதுமக்களும் கலந்து கொண்டனர்..

பிரித்தானியாவில் 16 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்தத் தடை!

16.06.2026

டிக் டொக், ஸ்னாப்சாட் மற்றும் இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட முக்கிய சமூக ஊடகங்களை 16 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்படும் என பிரித்தானிய பிரதமர் கீர் ஸ்டார்மர் அறிவித்துள்ளார்.

இணையவழியில் இளைஞர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், நள்ளிரவு நேரத்தில் அவர்கள் தொடர்ந்து கையடக்க தொலைபேசியை பயன்படுத்துவதைத் தடுப்பதற்கும் இந்த நடவடிக்கை ஒரு முக்கிய திட்டமாக அமையும் என்று பிரித்தானிய அரசு தெரிவித்துள்ளது.

இந்த முடிவு குறித்து பேசிய பிரதமர் ஸ்டார்மர், “முழுமையான தடை விதிப்பதே சரியான தேர்வாகும்” என்று குறிப்பிட்டதோடு, குழந்தைகளின் நல்வாழ்வைப் பாதுகாப்பதற்கு இது மிகவும் அவசியமானது என்றும் கூறினார்.

சமூக ஊடகக் கட்டுப்பாடுகள் தொடர்பாக இந்த ஆண்டின் தொடக்கத்தில் பிரித்தானிய அரசாங்கத்தால் நடத்தப்பட்ட ஆலொசனைக் கூட்டத்தைத் தொடர்ந்தே இந்த புதிய விதிகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த ஆலோசனையின் போது, என்ன மாதிரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்து சிறுவர் மற்றும் பெரியவரிடம் கருத்துக்கள் கேட்கப்பட்டன.

இக்கருத்துக்கணிப்பில் பெரும்பாலான மக்கள் இந்தத் தடை உத்தரவுக்கு தங்களது ஆதரவை வழங்கியுள்ளனர்.

இருப்பினும், இந்தத் திட்டம் இன்னும் பல புதிய சிக்கல்களை உருவாக்கக்கூடும் என சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும்

இணைய பாதுகாப்பு பிரசாரகர்கள் எச்சரித்துள்ளனர்.

அன்டார்டிகாவில் வெப்ப அலை; வேகமாக உருகும் பனிப்பாறைகள்

17.06.2026

உலகின் மிகக் குளிரான பிரதேசங்களில் ஒன்றான அன்டார்டிகாவில் வழக்கத்திற்கு மாறாக கடுமையான வெப்ப அலை நிலவி வருவதால், அங்குள்ள பனிப்பாறைகள் வேகமாக உருகத் தொடங்கியுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

தென் துருவத்தில் அமைந்துள்ள அன்டார்டிகா, உலகின் ஐந்தாவது பெரிய கண்டமாகும். இந்தக் கண்டம் முழுவதும் பனிப் படலங்களால் மூடப்பட்டுள்ளதுடன், கோடைக்காலத்திலும் மைனஸ் 20 டிகிரி செல்ஷியஸ் வரை வெப்பநிலை பதிவாகுவது வழக்கமாகும்.

எனினும், தற்போது அங்கு நிலவும் காலநிலை நிலைமைகள் விஞ்ஞானிகளை கவலையடையச் செய்துள்ளன. அன்டார்டிகாவின் டிரினிட்டி தீபகற்பத்தில் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள சர்வதேச ஆராய்ச்சியாளர்கள், இயல்பான அளவை விட சுமார் 20 டிகிரி செல்ஷியஸ் வரை அதிக வெப்பநிலை பதிவாகி வருவதாக தெரிவித்துள்ளனர்.

கடந்த யூன் 6 ஆம் திகதி அப்பகுதியில் 15.4 டிகிரி செல்ஷியஸ் வெப்பநிலை பதிவானதாகவும், இது மிகவும் அபூர்வமான மற்றும் கவலைக்கிடமான சூழ்நிலை என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

“இந்த அசாதாரண வெப்பநிலை, உலகளாவிய காலநிலை மாற்றத்தின் தீவிர அறிகுறியாக இருக்கலாம்” என ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

மேலும், அன்டார்டிகாவில் உள்ள “காலின்ஸ்“ பனிப்பாறையின் உச்சிப் பகுதிக்கு சென்றபோது, கடுமையான வெப்பத்தால் வெளிப்புற பனிக்கட்டிகள் வேகமாக உருகிக் கொண்டிருப்பதை நேரடியாகக் கண்டதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உலக வெப்பமயமாதல் மற்றும் “எல் நினோ“ போன்ற வானிலை நிகழ்வுகளின் தாக்கம் காரணமாக இந்த நிலைமை உருவாகியிருக்கலாம் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

குறிப்பாக, உலகின் மிகவும் முக்கியமான மற்றும் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பனிப்பாறைகளில் ஒன்றாகக் கருதப்படும்

“த்வைட்ஸ்“ பனிப்பாறையும் இந்த வெப்பநிலை உயர்வால் கடுமையாக பாதிக்கப்படக்கூடும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

அன்டார்டிகாவில் பனிப்பாறைகள் வேகமாக உருகும் நிலை தொடருமானால், எதிர்காலத்தில் கடல் மட்ட உயர்வு மற்றும் உலகளாவிய காலநிலை மாற்ற விளைவுகள் மேலும் தீவிரமடையக்கூடும் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

வெனிசுலாவில் அடுத்தடுத்து இரண்டு சக்திவாய்ந்த நிலநடுக்கம்

25.06.2026

வெனிசுலாவில் அடுத்தடுத்து ஏற்பட்ட இரண்டு சக்திவாய்ந்த நிலநடுக்கம். நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர். பல நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். கட்டிடங்கள் இடிந்து விழுந்துள்ள நிலையில், அந்நாட்டின் தலைநகரான கராகஸில் மீட்புப் பணியாளர்கள் இடிபாடுகளுக்குள் தேடுதல் பணியில் ஈடுபடும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

வெனிசுலாவில் அதிகாலை 5 மணி அளவில் அடுத்தடுத்து இரண்டு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதால் கட்டடங்கள் இடிந்து விழுந்தன. அச்சமடைந்த மக்கள் வீதிகளில் தஞ்சம் அடைந்தனர்.

7.2 மற்றும் 7.5 ரிக்டராக அடுத்தடுத்து பதிவான நிலநடுக்கங்களால் குடியிருப்புகள் மட்டுமின்றி விமான நிலையம், மருத்துவமனை என பல கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. .இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் தொடங்கியுள்ளன. சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் கடலோரப் பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.வெனிசுலாவைத் தொடர்ந்து ஜப்பானிலும் 6.9 ரிக்டராக நிலநடுக்கம் பதிவாகியிருக்கிறது.

www.sangathamil.com

சித்திரவதைகளுக்கு எதிரான பிடகடனத்தை மீறியமைக்காக சிறீலங்காவுக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்!

ஒன்பது சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள்

28.06.2026

சித்திரவதைகள் மற்றும் ஏனைய மிக மோசமான, மனிதத் தன்மையற்ற, பாரதூரமான தண்டனைகளுக்கு எதிரான பிரகடனத்தை ஏற்றுக்கொண்ட உறுப்புநாடுகள், அப்பிரகடனத்தை மீறிச் செயற்பட்ட சிறீலங்காவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டுமென 9 சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

இதுகுறித்து சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஆசியப் பேரவை, சர்வதேச நீதிக்கான அவுஸ்திரேலிய நிலையம், பாதுகாப்பு பொறுப்புக்கான உலகளாவிய நிலையம், மனித உரிமைகள் கண்காணிப்பகம், நியூ லைன்ஸ் கற்கைகள் நிலையம், இலங்கையில் சமத்துவம் மற்றும் விடுதலைக்கான மக்கள் அமைப்பு, சமாதானம் மற்றும் நீதிக்கான இலங்கை பிரசாரம் மற்றும் மூலோபாய தர்க்கித்தல் செயற்திட்டம் ஆகிய 9 சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கை இந்தப் பிரகடனத்தை 1994ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டது. இருப்பினும் அதற்கு முன்பதாக 1979 ஆம் ஆண்டிலிருந்து சிறீலங்கா அரசு தனிநபர்களை பலவந்தமாகக் கைதுசெய்வதற்கும், தடுத்துவைப்பதற்கும், வலிந்து காணாமலாக்குவதற்கும் பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி வருகிறது. இச்சட்டத்தின் ஊடாக தமிழ் மக்கள் பெருமளவுக்கு இலக்குவைக்கப்பட்டுள்ளனர். உள்நாட்டு மோதல் இடம்பெற்ற காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்ட தமிழர்கள் மிக மோசமான சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன் பாலியல் வன்முறைகளுக்கும், வலிந்து காணாமலாக்கப்படல்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு உண்மையில் என்ன நேர்ந்தது என்பதை தொடர்ந்து ஆட்சிபீடமேறிய அரசாங்கங்கள் மறைத்துவருவதன் காரணமாக, அவர்களது குடும்பத்தினர் தமது அன்புக்குரியவர்கள் பற்றிய உண்மைகளை இன்னமும் அறியாமல் இருக்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைகளின் பிரகாரம், இறுதிக்கட்ட யுத்தத்தின்போது தமிழ் மக்களுக்கு அவசியமான உணவு, மருத்துவப் பொருட்கள் மற்றும் ஏனைய மனிதாபிமான உதவிகள் கிடைக்கப்பெறுவுதை சிறீலங்கா அரசாங்கம் வேண்டுமென்றே தடுத்தது என நம்பகரமான ஆதாரங்களின் அடிப்படையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் சித்திரவதைகள் அல்லது ஏனைய மிகமோசமான மீறல்களுக்குச் சமனானவையாகும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 2016 ஆம் ஆண்டு சித்திரவதைகளை முடிவுக்குக்கொண்டுவருவதற்கான ஐக்கிய நாடுகள் உபகுழுவிடம் சமர்ப்பித்த அறிக்கையில், 'நபரொருவர் கைதுசெய்யப்படுவதற்கான காரணமாக சந்தேகிக்கப்படும் குற்றத்தின் தன்மையைப் பொருட்படுத்தாமல், நாட்டின் சகல பாகங்களிலும் சித்திரவதைகள் இடம்பெறுகின்றன' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதேபோன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகமானது கடந்த 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் குறிப்பாக வடக்கில் தமிழர்களுக்கு எதிராகப் பாதுகாப்புத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் மற்றும் ஏனைய மோசமான நடாத்துகைகள் என்பன தொடர்பான குற்றச்சாட்டுக்களைப் பதிவுசெய்துள்ளது.

அதுமாத்திரமன்றி உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையில் இலங்கையில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் சித்திரவதைகள் தொடர்பில் தீவிர கரிசனை வெளியிடப்பட்டிருந்துடன், இவ்வாறான நடவடிக்கைகள் பொலிஸ் காவலின் கீழான உயிரிழப்புக்களுக்கும் காரணமாக அமைந்திருக்கக்கூடும் என சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இவற்றுக்கு மேலாக சிறீலங்காவில் ஆட்சிபீடமேறிய ஒவ்வொரு அரசாங்கத்தின் கீழும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு ஆழமாக வேரூன்றியுள்ளது. உதாரணமாக தற்போதைய அரசாங்கம் கடந்த ஆண்டு மே மாதம், இறுதிக்கட்டப் போரின்போது சகல சந்தர்ப்பங்களிலும் பொதுமக்கள் இராணுவத்தினரால் பாதுகாக்கப்பட்டதாகப் பொய்யான கருத்தொன்றை வெளிப்படுத்தியது. இந்த தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கானது தடுப்புக்காவலின் கீழான சித்திரவதைச் சம்பவங்கள் தீவிரமடைவதற்கு வழிகோலுகிறது.

இக்குற்றங்களைப் பொறுத்தமட்டில் உள்ளக நீதிப்பொறிமுறையில் ஆக்கபூர்வமான முன்னேற்றங்கள் எதுவும் இல்லாத நிலையில், சர்வதேச நீதிப்பொறிமுறை ஒன்றே பாதிக்கப்பட்டவர்களுக்கான ஒரே தெரிவாக இருக்கிறது. சிறீலங்கா ரோம் சாசனத்தில் கையெழுத்திடாத காரணத்தினால், சிறீலங்காவுடன் தொடர்புடைய விவகாரங்களில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பெல்லை வெகுவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் சித்திரவதைகள் மற்றும் ஏனைய மிகமோசமான, மனிதத்தன்மையற்ற, பாரதூரமான தண்டனைகளுக்கு எதிரான பிரகடனத்தை ஏற்றுக்கொண்ட நாடுகள், அப்பிரகடனத்தின் வரைமுறைகளை மீறியமைக்காக சிறீலங்காவுக்கு எதிராக அந்தப் பிரகடனத்தின் 30 ஆவது உறுப்புரையைப் பிரயோகிக்குமாறு வலியுறுத்துகிறோம் என அக்கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

20,000 பாலஸ்தீனக் குழந்தையரைக் கொன்ற இசுரவேலியப் படைகள் – ஐ.நா.!

29.06.2026

காசா மற்றும் மேற்குக் கரையில் உள்ள பாலஸ்தீனக் குழந்தையரை இசுரவேலியப் படைகள் திட்டமிட்டு குறிவைத்து கொன்றுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணை அறிக்கை தெரிவிக்கிறது; இந்தத் தாக்குதல்கள் போர்க்குற்றங்களுக்குச் சமமானவை என்றும், இனப்படுகொலை நோக்கத்தைக் கொண்டிருப்பதாகவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதிகள் மற்றும் இசுரவேல் தொடர்பான ஐ.நா.வின் சுயாதீன சர்வதேச விசாரணை ஆணையத்தின் தலைவரான சீனிவாசன் முரளிதர், செவ்வாய்க்கிழமையன்று(23) தகவல்களை தெரிவித்துள்ளார்.

ஆணையத்தின் தகவலின்படி, அக்டோபர் 2023 மற்றும் அக்டோபர் 2025க்கு இடைப்பட்ட காலத்தில் இசுரவேலியப் படைகள் 20,000-க்கும் மேற்பட்ட பாலஸ்தீனக் குழந்தையரைக் கொன்றன மற்றும் 44,000-க்கும் மேற்பட்டோரைக் காயப்படுத்தின. பிப்ரவரி 2026-க்குள் காசாவில் உயிரிழந்த குழந்தையரின் எண்ணிக்கை 21,289 ஆகவும், காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 44,500 ஆகவும் உயர்ந்ததாக யுனிசெஃப் (UNICEF) அமைப்பின் ஆய்வுகளும் தெரிவிக்கின்றன.

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதிகளில் கொல்லப்பட்டவர்களில் சுமார் 30% பேர் குழந்தையர் என்றும், அவர்கள் மீதான தாக்குதல்கள் "தொடர்ச்சியான நடவடிக்கையாக" இருந்து வருவதாகவும் முரளிதர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறும்போது, கூடாரங்களில் தங்கியிருக்கும்போது, உதவி வழங் கப்படும் இடங்களை அணுகும்போது அல்லது இடம் பெயர்ந்தோருக்கான முகாம்களில் இருக்கும்போது இசுரவேலிய துப்பாக்கிச் சுடும் வீரர்கள் (Snipers) அல்லது ட்ரோன்களால் குழந்தையர் சுடப்பட்ட சம்பவங்களையும் இந்த அறிக்கை பதிவு செய்துள்ளது.

காசாவில் இனப்படுகொலை, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள், அத்துடன் மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெருசலேமில் போர்க் குற்றங்கள் ஆகியவற்றை இசுரவேலிய அதிகாரிகளும் பாதுகாப்புப் படைகளும் தொடர்ந்து செய்து வருவதாக ஆணையம் முடிவு செய்துள்ளது.

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.com

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் – விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபாரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

நான் ஒரு கனவு காண்கிறேன் அது நனவாக வேண்டும்

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –

ன் ஒரு கனவு காண்கிறேன். அந்தக் கனவு நனவாகி, நடைமுறை உண்மையாக வேண்டும் என்பது எனது அவா.

எமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றம் கொள்ள வேண்டும். ஆற்றல்மிகுந்தவர்களாக, அறிவுஜீவிகளாக, தேசப்பற்றாளர்களாக, போர்க்கலையில் வல்லுனர்களாக, நேர்மையும் கண்ணியமும் மிக்கவர்களாக ஒரு புதிய, புரட்சிகரமான பரம்பரை தோன்ற வேண்டும். இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக, நிர்வாகிகளாக, ஆட்சியாளர்களாக உருப்பெற வேண் டும்.

இது ஒரு பெரிய ஆசை; அலாதியான கனவு. எனினும் நான் முயற்சிக்கிறேன். முயற்சி ஆக்கம் தரும் என்பதில் எனக்கு ஆழமான நம்பிக்கை உண்டு.

தமிழீழப் படைத்துறைப்பள்ளி எனது முயற்சிகளில் ஒன்று. இந்தப் படைத்துறைப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகிறது.

தமிழினத்தின் நீண்ட பெருமை மிக்க வரலாற்றில் புதைந்து போன ஒரு வீரமரபு மீண்டும் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இன்றைய காலத்தின் வளர்ச்சிப் போக்கிற்கு அமைய நவீன போர்க்கலை அறிவும், எமது இயக்கத்தின் சொந்தப் போராட்டப்பட்டறிவும், ஏனைய துறைசார் கல்வியும் ஒன்றிணைந்து ஒரு புதிய பாடத்திட்டத்தில் எமது இளம் போராளிகள் இங்கு பயிற்சி பெறுகின்றனர்.

இந்த ஓராண்டில் பிரமிக்கத்தக்க வகையில் படைத்துறைப்பள்ளி வளர்ச்சி கண்டுள் ளதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த அபாரமான முன்னேற்றத் துக்காக அயராது உழைத்த படைத்துறைப் பள்ளி பொறுப்பாளருக்கும், ஆசிரியர்களுக்கும், ஏனையோருக்கும் எனது பாராட்டுக்கள்.

தமிழீழப்படைத்துறைப்பள்ளியின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு வெளியாகும் ஆண்டு மலருக்கு எனது ஆசிகள்.

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.

(19.09.1992 அன்று, தமிழீழப் படைத்துறைப் பள்ளியின் முதலாண்டு நிறைவு நாளை முன்னிட்டு தலைவர் வழங்கிய வாழ்த்து செய்தி)

Lucksme
Gold House
Traditional of Trust & Quality
மின்னும் பொன் நகை மிளிரும் புன்னகை
காலத்தை வெல்லும் கலை நுட்பத்துடன் மின்னும் பொன் நகையால் மேலும் ஒளிரும் உங்கள் புன்னகை
திருமணத்திற்கு தேவையான தாலிக்கொடிகள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்
உங்கள் இரசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் தங்கநகைகள் செய்து தரப்படும்
பழைய தங்க நகைகள் அதி கூடிய விலைக்கு வாங்கப்படும்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6

தியாக தீபம்
லெப். கேணல் திலீபன்
அவர்களின் நினைவாக
நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில்
11 வது ஆண்டு
கோடை கால விளையாட்டு விழா 2026
இம் முறை:
02.08.2026
SPORTS CATEGORIES
FOOTBALL
VOLLEYBALL
SOFTBALL CRICKET
NETBALL
KIDS GAMES
CARROM
TRADITIONAL GAMES
SAVE THE DATE!
Let's compete, unite, and achieve!
07577996966 / 07950499567 / 07578086782 / 07771648257

K
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
பிறந்தநாள்
பரதநாட்டிய அரங்கேற்றம் மற்றும் எல்லாவித வைபவங்களுக்கான தலை, முக அலங்காரங்கள் உங்கள் விருப்பத்திற்கேற்ப சிறந்த முறையில் ...
Bridal
Non- Bridal
Saree Pleating & Draping
Hair Flowers & Bouquet
and more.
Kurinchi
Beauty Creations
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

கரும்புலிகள்

நாளை மழை கழுவிச்செல்லும்
மண்ணிருக்கும் காற்தடத்தையும்.
அவர்களை கந்தகநெடியாக வாங்கிய காற்று
தன் சுயத்துக்குத் திரும்ப
சுவடுமற்றுத் தொலைந்து போவர்.
இறுதியாக தாய்மண்ணை முத்தமிட்டு
எல்லை பிரிந்தேகிய போது
தொட்டுத் தடவிப்போயினர் பூக்களை.
அற்றைநாளே அவை வாடிவிழுந்திருக்கும்.
பயணக் களைப்பை மறக்க
பாடிய பாடல் பரவிய வனம்
மீண்டும் மௌனத்துறையும்.
அவர்களுக்கு கையசைத்துப்போன
பள்ளிச் சிறுவர்
வழமையான வழிப்போக்கரென எண்ணியிருப்பர்.
வழியில் கொஞ்சம் காலாற அமர்ந்திருந்த
மரநிழலுக்குத் தெரியுமா
தான் குடைவிரித்தது அக்கினி நாவுகளுக்கென்று?
இந்த வரம்பிற்தானே நடந்தனர்
இந்தக் கரையிற்தானே படகேறினர்
இதோ இந்தத் தோட்டவெளிக் கிணற்றில்தான்
எரிமலைகள் நீரருந்தின.
இடியுண்டு பூசையற்றுப் போக
எவரும் எட்டிப்பார்க்காதிருந்த கோயில் வெளியிற்தான்
கூட்டாக எல்லோரும் போட்டோ எடுத்தனர்.
உள்ளே கலங்கி
வெளியே விளங்கியபடி நின்றவருக்கு
சென்றவர்கள் பயணம் சொல்லிப் போயினர்.
நடந்தும்
படகேறியும்
புகைவண்டிக்குள் கரந்துறைந்தும்
பணிமுடித்தலுக்கிடையில் எத்தனை வதை
சாவுக்குக்கூட சாகஜம் வேண்டியுள்ளது.
கரும்புலிகள்.
கவிதை தோற்றுப்போவது அவர்களிடம்தான்.
அகமும் புறமும் அளவெடுக்க முடியாமலும்
உள்ளுறையும் அமுக்கத்தை அறியமுடியாமலும்
கவிஞன் தோற்பதும் அவர்களிடம்தான்.
வரலாறு திருப்பிகளாய்
வெடித்து அதிர்ந்துதிரும் வரை
வழியெங்கும் சிரிப்பெறிந்து திரிவர்.
வீசிப்போகும் புன்னகை
இளமையாய் கிடக்கும் நெடுங்காலம்.
நானென்பது நானல்ல
அது நீயென்பதாய் அவர் தோழமை.
எட்டிப்பிடித்து கைவிரல் நீவி
மௌனமாய் அவர் தூறும் மொழிக்கு
அகராதி இல்லை
எத்தனை அர்த்தங்கள் விரிக்கலாம் அதில்.
குளிர்நாளில் கணப்பருகிலிருத்தலான பிணைப்பில்
பிரியும் நாள் நெருங்குவது புரியும்.
வாயால் ஒரு வார்த்தையுரைத்து
போய்வருகிறோமெனில் குறைந்தா போவார்.
பொல்லாத அமசடக்கிக் கள்ளரவர்
பேசவே மாட்டார்கள்.
ஓங்கி முகத்திலறைந்துவிட்டு
அழ நினைக்கும் மனம்.
எப்படி முடியும்?
அது சாவுக்கு வழியனுப்பல் என்றாகிவிடுமே.
அறிந்தவர் இடிந்துதிர
அவர்கள் நடப்பவர் திரும்பியும் பாராமல்.
இப்படி இருந்துபோக
எப்படி முடிகிறது அவர்களால்?
விளக்கில் தொட்டாலே துடிக்கும் மெல்லியருக்குள்
வெடியாய் சிதறுவோர் விளைவது எப்படி?
ஈசலின் இறப்புக்கே
இழவு கொண்டாடும் இனமொன்றில்
அவர்களின் தோற்றுவாய் சூத்திரம் என்ன?
ஓரிரண்டு பேருக்குள்ளே உறங்குகிறது
அவர் உயிர்மையம்.
ஞானவிழிகளுக்கு மட்டுமே
நெருப்பாற்றின் உற்பவமும், கழிமுகமும் தெரியும்.
அஞ்ஞானக் கண்கள் அறியக்கூடியதல்ல
விஸ்வரூபத்தின் அடியும் முடியும்.
போத்தலில் அடைக்கமுடியுமா
பேராற்றின் பிரவாகத்தை?
புசு புசு மயிர் விளைந்த பூனைக்குட்டிகளாய்
மடி விளையாடிவிட்டு
விடைகொள்ளும் ஒவ்வொரு தடவையும்
சாவது அவர்களல்ல நாங்களும்தான்.
“கரும்புலிகள்
பலவீனமான இனமொன்றின் பலம்”
தலைவன் சொன்னதே சரி.
அவர்களை வரையத்தொடங்கியது பிழை.
ஆயினும் தூரிகை தோற்கும் போதெல்லாம்
ஓவியன் வெற்றியடைகிறான்.
கரும்புலிகளுக்கு மட்டுமே இந்தச் சமன்பாடு.
இனியும் தொடரும் அவர்கள் பயணம்
தேசம் ஒளிகொண்டு இலங்கும்வரை.
பிரிவதும் கவல்வதுமாய் போகுமேம் காலம்.
வாழ்வின் விதிமீறும் குழந்தைகளை
வரைவது எங்கணம்?
தோற்றுப்போவதே ஓவியப்பெருமை.

- தமிழீழக் கவிஞர் புதுவை இரத்தினதுரை

கரும்புலி கப்டன் மில்லர்

05-07-1987 அன்று
முதலாவது கரும்புலித்தாக்குதல் எவ்வாறு நடத் தப்பட்டது !

“Black Tigers” என்பது தற்கொடைப்பிரிவைச் சேர்ந்தவர்களை குறிப்பதாக விடுதலைப் புலிகள் இயக்கத்தில் கொள்ளப்படுகிறது. இயக்கத்தில் சேர்ந்து விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் எல்லோருக்குமே தன்னுடைய அரிய உயிரை இலட்சியத்திற்காக துறப்பதற்கு எப்பொழுதுமே தயாராய் இருக்கின்றனர்.

இயக்க உறுப்பினர்கள் அனைவருமே சைனைட் குப்பிகளை கழுத்தில் அணிந்து கொண்டு இருப்பார்கள். மிக இக்கட்டான சூழ்நிலையில் எதிரிகளிடம் பிடிபடாமலும் இயக்கத்தை பாதிப்படையவிடாமலும் செய்ய உயிர் துறந்தவர்கள் எத்தனையோ பேர்.

தெய்வப் பிறவிகள்தான் கரும்புலிகள்

ஆனாலும் கரும்புலிப்பிரிவைச் சேர்ந்தவர்கள் நேரடியாகவே தமது உயிரைப் பணயம் வைத்து, அதைவிட தமது உயிரை கொடுத்து சில நடவடிக்கையில் ஈடுபடுவார்கள். அரிதாக, மிக அரிதாக அவர்கள் தப்பி திரும்பி வரும் சந்தர்பங்களும் உண்டு. எப்படியிருந்தபோதிலும் அவர்கள் நடவடிக்கையில் இறங்கும் போது தம்முடைய உயிரை அந்த நடவடிக்கைக்காக தியாகம் செய்யத்தயாராகவே இருப்பர். இப்படியாக விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தற்கொடைத் தாக்குதலில் முதலில் வீரச் சாவடைந்த கப்டன் மில்லரால் நடாத்தி முடிக்கப்பட்ட தாக்குதல் எவ்வாறு நடத்தப்பட்டது என்பதை பற்றி சற்றுப் பார்போம்.

மில்லர் வடமராட்சியின் துன்னாலைப் பகுதியைப் பிறப்பிடமாக கொண்டவன். அவனுடைய தந்தை இலங்கை வங்கி ஒன்றில் உயர் அதிகாரியாக பணியாற்றி வந்தார். தன்னுடைய தாயகத்தை மீட்க அவன் எப்போதும் சித்தமாக இருந்தான். மில்லர் எமது இயக்கத்தில் சேர்ந்து பல தடவைகள் இராணுவத் துடன் மோதியிருக்கிறான். ஒவ்வொரு மோதலிலும் மில்லர் தன்னுடைய பணியை தனக்கே உரித்தான அபாரத் துணிச்சலுடன் செய்து பலருடைய மதிப்பை பெற்றவன்.

வடமராட்சிப் பகுதியை சிறீலங்கா இராணுவத்தினர் முற்றிகையிட்ட போது பிரபாவின் அணியின்ரோடு சேர்ந்து பதில் தாக்குதலில் ஈடுபட்டான். வடமராட்சி யுத்தம் பல நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. பலத்த சேதத்திற்க்கு பின் வடமராட்சியை இராணுவத்தினர் வடமராட்சி பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டனர். வடமராட்சி பகுதியை திரும்ப மீட்க வேண்டுமென்பதில் மில்லர் துடியாய் துடித்தான்.

பிரபாவும், (பிரபா முன்னர் மன்னார் பிராந்தியத்தில் விக்ரருடன் பணியாற்றியவன்) மில்லரும் சேர்ந்து நெல்லியடி இராணுவ முகாமுக்குள் வெடிமருந்து வாகனங்களை விடுவதற்க்கு தலைவரிடம் அனுமதி கேட்டு, வெடி மருந்தையும் பெற்று கொண்டனர். ஒன்றன் பின் ஒன்றாக இரு வண்டிகள் விடுவதற்கு திட்டமிட்டனர். முதலாவது வண்டியை மில்லரும் அதன் பின் வண்டியை, அதன் பின் இரண்டாவது வண்டியை ராசிக்கும் ஓட்டிச் செல்ல முன்வந்தனர்.

திட்டம் உருவானது. இரவு இரவாக நெல்லியடி இராணுவ முகாமிக்குள் வண்டிகளை விடுவது என்றும் ஏனென்றால் இராணுவத்தினர் இரவு பத்து மணிக்குப் பின்னர் முகாம்களை விட்டு வெளியே வந்து சுற்றாடலில் இருந்த மக்கள் வெளியேறிய வீடுகளில் தங்கிவிடுவார்கள் என்பதால் அதற்கு முன்னர் வெடி மருந்து நிரப்பப்பட்ட வாகனங்கள் உள்ளே விடப்பட வேண்டும்.

வாகனங்கள் முகாமை நெருங்கிச் செல்லும் பாதைகளில் பல தடைகள் போடப்பட்டு இருந்தன. எனவே வாகனங்கள் புறப்பட்டு முகாமை அடைவதற்கு அத்தடைகள் அகற்றப்படுதல் முக்கியமானதாகும். அந்த வேலையை கமல் பொறுபெடுத்துக் கொண்டான். பகல் வேளையே வாகனங்கள் தயார் செய்யப்பட்டு முகாமுக்கு அருகில் கொண்டு வரப்பட்டு இருக்கும்.

சரியான நேரம் நெரிங்கியதும் எம்தோழர்கள் முகாமைத் தம்முடைய துப்பாக்கிகளாலும், ரொக்கட்டுகளாலும் தாக்கத் தொடங்குவார்கள். அந்தச் சந்தர்பத்தில் கமலும் அவனுடைய சகாக்களும் தெருவில் உள்ள தடைகளை அகற்றுவார்கள். கமல் தடைகளை முற்றாக அகற்றிய பின் பிரபாவுக்கு அறிவிக்க வெடிமருந்து நிரப்பிய வாகனங்கள் முகாமை சென்றடையும். இதுதான் திட்டம்.

கமல் வல்வெட்டித்துறையை பிறப்பிடமாக கொண்டவன். இவரது தந்தை துரைரத்தினம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர். தந்தையது பாதை எமது தாயகத்தை மீட்டு எடுக்க சரியான தீர்வாகது என்பதை உணர்ந்த கமல், எமது இயக்கத்திலே தன்னை இணைத்து கொண்டு போரடத் தொடங்கினான்.

பயிற்சியை முடித்து விட்டு மட்டக்களிப்புக்குச் சென்று சுமார் இரண்டு வருடங்களுக்கு மேல் பணியாற்றிந்தான். கிழக்கில் எமது இயக்க வளர்ச்சியில் கமலின் பங்கு மிகவும் குறிப்பிடக்கூடியது.

மட்டக்களிப்பில் மிகவும் சிக்கலான சூழ்நிலைகளிலும் தன் தனித்திறமையினால் எத்தனையோ அரும் பெரும் காரியங்களை ஆற்றியிருக்கின்றான்.

தாக்குதல் நடவடிக்கைகள் தீவிரமாக நடை பெற்றுக் கொண்டிருந்தன. மில்லர் மிகவும் கடுமையாக உழைத்தான். இராணுவத்தினர் ஆக்கிரமிப்புகுள் இருந்த நெல்லியடிப் பகுதிக்கு வெடிமருந்துகளையும், வாகனங்களையும் மிகுந்த சிரமப்பட்டு இரவோடு இரவாக கொண்டுவந்து சேர்த்தான். அவ்வேளைகளில் கூட நான் அடுத்த நாள் இறக்க போகிறேன் என்ற விடயம் தெரிந்த மனிதனைப் போல் நடந்து கொள்ளவில்லை.

கவலையோ, திகைப்போ, பயமோ அல்லது தயக்கமோ அவனிடம் காண முடியவில்லை. வெடிமருந்துகளை ட்றக் வாகனங்களில் ஏற்றி அவற்றுக்கு இணைப்புகளை கொடுத்து தன்னுடைய சவப்பெட்டிகளை தானே தயாரித்து கொண்டு இருந்தான்.

அன்று பகல் முழுவதும் வெடிமருந்துகளுடன் இரு வாகனங்கள் தயார் செய்யப்பட்டன. குழுக்கள் யாவும் உசார் நிலைக்கு கொண்டு வரப்பட்டன. நேரம் இரவாகிய போது குழுக்கள் யாவும் முகாமை நோக்கி நகரத் தொடங்கின. மில்லர் தன்னுடைய வாகனத்தில் ஏறி அமர்ந்து கொண்டான்.

கமலுடைய குழு, வாகனம் முகாமை நோக்கி செல்லத் வேண்டிய பாதையில் போடப்பட்டு இருந்த தடைகள் உள்ள பகுதியை சென்றடைந்தனர். எனைய குழுக்களும் முகாமை நெருங்கி தத்தமது இடங்களில் தயார் நிலையில் நின்றனர்.

பொறுபாளரிடமிருந்து தாக்குதல் ஆரம்பிக்கும்படி கட்டளை பிறப்பிகப்பட்டது. எல்லோரும் முகாமை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தார்கள்.

மில்லர் ஏறி அமர்ந்து இருந்து ட்றக் வண்டியை ஸ்ராட் செய்து எஞ்சினை உறுமி விட்டு அமைதிப் படுத்தினான். பின் தன் வண்டி செல்வதற்கான உத்தரவுக்காக காத்திருந்தான். அப்போது கூட பக்கத்தில் இருந்த பிரபுவோடு ஏதோ யோக் அடித்து கொண்டு சிரித்து கொண்டு இருந்தான்.



முகாமை நோக்கி எமது தோழர்கள் துப்பாக்கி பிரயோகம் செய்து கொண்டிருக்கையிலேயே கமல் குறுக்கே பாய்ந்து தடைகளை அகற்ற முயன்றான். பெரிய மரக்கட்டைகள் புதைக்கப் பட்டு இருந்தன.

தான் கொண்டுவந்த வெடிமருந்துப் பெட்டியை கட்டைகளின் பின் வைத்து விட்டு விலகி மறைவில் படுத்து கொண்டான். வெடி மருந்து வெடித்தது. அத்தோடு கட்டைகள் தூக்கி எறியப் பட்டு பாதை சீராகியது. அதே நேரம் பாதைக்கு நேரே அமைக்கப் பட்டிருந்த காவல் அரணில் இருந்து இராணுவத்தினரின் மெசின்கன்கள் வெடிக்க தொடங்கியது.

கமல் தன்னுடைய வாக்கிடோக்கியில் அறிவித்தான். "தடைகள் அகற்றப்பட்டு விட்டது" ஆனால் புதிய சிக்கல் பாதைக்கு நேரேயுள்ள காப்பரணில் இருந்து துப்பாக்கிச் சூடு வருகிறது. சற்றுப் பொறு. மில்லருக்குப் பக்கத்தில் நின்ற பிரபாவின் வாக்கியிலும் அறிவிப்பு தெளிவாக கேட்டது.

அதைக் கேட்ட மில்லர் "பிரபா பரவாயில்லை, வாகனத்தின் முற்பகுதியில் குண்டுகள் துளைக்காத படி தகடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதனால் நான் கொண்டு போய் சேர்த்து விடுவேன்." என்றான்.

மில்லர் சற்று பொறுத்துக் கொள் அந்தப் பங்கர் உடைக்கப் பட்டதும் நீ போகலாம். மிக விரைவாக வண்டியை செலுத்தி விட்டு விட்டு, நீ இறங்கி ஓடி வந்து விடு. என்றான் பிரபா.

மில்லர் ஒரு முறை சற்று சிரித்து கொண்டான். ஏனேன்று புரியவில்லை. அருகில் இருந்த பிரபாவிற்கு கேட்க மனம் துணிய வில்லை. "பிரபா முன்பு ஒரு முறை யாழ்பாணத்தில் விடப்பட்ட வாகனம் சரியாக செல்லவில்லை. எனவே இம்முறை நான் நிதானமாகவே வாகனத்தைச் செலுத்துவேன். எப்படியும் கட்டிடத்துக்கு மிக அண்மையில் வாகனத்தை கொண்டு செல்வேன்" என்று மில்லர் கூறினான்.

கமல் தன்னுடைய வோக்கியில் றொக்கட் லோஞ்சர் வைத்திருப்பவனை அந்த காப்பரணை உடைக்குமாறு கூற றொக்கட் லோஞ்சரில் இருந்து மிகச் சரியாக ஏவப்பட்ட றொக்கட் பங்கரை தாக்கியது. மணல் முட்டைகள் சிந்தின. பங்கர் இருந்த இடத்தில் ஒரே புழுதியும் புகையும். கமல் தகவலை தெரிவித்தான். பொறுபாளரிடமிருந்து மில்லரை புறப்படுமாறு பிரபாவிற்க்கு உத்தரவு வந்தது.

மில்லர் வண்டியை ஸ்ராட் செய்து மெதுவாக செலுத்தினான். பிரபா வண்டியின் பின்னால் ஏறிக்கொண்டான்.

வண்டி நெல்லியடிச் சந்தியை வந்தடைந்தது. மில்லர் வண்டியை நிறுத்தி பிரபாவை அழைத்தான். பிரபா மில்லருக்கு கையை அசைத்துவிட்டு வெடி மருந்து வெடிப்பதற்கான கருவியை இயக்கினான் கருவி இயங்கத் தொடங்கியது.

மில்லர் வண்டியை மெதுவாக ஓடவிட்டான் பிரபா வண்டியில் இருந்து குதித்து வண்டியோடு சேர்ந்த ஓடி மில்லரின் பக்கத்தில் வந்து "மில்லர் எப்படியும் திரும்பி வந்து விடு" மில்லர் அதை புரிந்து கொண்டது போல் வண்டி வேகம் பிடித்தது. பிரபா அப்படியே தெருவில் நின்று வேகமாகச் செல்லும் வண்டியைப் பார்த்துக் கொண்டிருக்க மில்லரையும் வெடிகுண்டையும் சுமந்து கொண்டு வண்டி சென்று கொண்டிருந்தது..

வண்டி முகாமை நோக்கி வருவதை அறிந்து தோழர்கள் முகாமைவிட்டு 100 யார் பின்னுக்கு வந்தனர். கமல் நின்ற இடத்தை தாண்டி வண்டி சென்றதும் கமல் மில்லரை நோக்கி கையசைத்து பின்னுக்கு செல்ல, சில நிமிடத்தில் நிலத்தை அதிரவைத்துக் கொண்டு பெரிய ஓசை எழுந்தது.

தோழர்கள் மீண்டும் முகாமை் நோக்கி முன்னேறினார்கள்.

இராணுத்தினர் தங்கியிருந்த சற்று முன்னர் கூட இராணுத்தினர் நின்று துப்பாக்கி பிரியோகம் செய்த மிகப் பெரிய மாடிக்

கட்டிடம் தரைமட்டமாகிக் கிடந்தது. அதில் இருந்த இராணுவத்தினர் கட்டிடத்தின் உள்ளேயே இறந்து போனார்கள்.

மில்லரின் தாக்குதலை தொடர்ந்து நடந்த அத்தாக்குதலில் கமலும் வீரச்சாவடைந்தான். நெஞ்சிலே காயமடைந்த கமலின் உடல் எடுத்து வரப்பட்டது. ஆனால் மில்லர் திரும்பவே இல்லை. மில்லர் வெடிமருந்தின் அதிர்வலைகனோடு சங்கமாகி அதிர் வலையோடு சேர்ந்து தன் பணியை செவ்வனே முடித்தான்.

– உயிராயுததிலிருந்து ...

கரும்புலிகள் நினைவாலயம்
கரும்புலி கப்டன் மில்லர்

வீரவேங்கை
கரும்புலி கப்டன்
மில்லர்
வல்லிபுரம் வசந்தன்
1 வீசா. 05.07.1987

எங்களின் நெருப்புக் குழந்தைகளுக்காக ஒரு கணம் தலைகளைக் குனிந்து வணங்குவோம். தரை, கடல், வான், மறைமுகம் என காற்றோடு கலந்தவர்களுக்காக பூச் சூடி விளக்கேற்றி அவர்களை ஒரு கணமாவது நினைவேந்துவோம்.

கிண்ணியடி படுகொலை 12 யூலை 1991

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனைப் பிரதேசசெயலர் பிரிவினுள் வாழைச்சேனையிலிருந்து 4.5கி.மீ. மேற்காகக் கிண்ணியடிக் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்களின் பிரதான தொழில்கள் விறகு வெட்டி விற்றல், மீன் பிடித்தல், விவசாயம் செய்தல் என்பனவாகும்.

12.07.1991 அன்று கும்புறுமுனை, வாழைச்சேனை இராணுவ முகாம்களிலிருந்த இராணுவத்தினர் கிண்ணியடிக் கிராமத்தைச் சுற்றிவளைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். பதின்மூன்று பொதுமக்களைக் கைதுசெய்த இராணுவம் அவர்களைக் கூரிய ஆயுதங்களினால் வெட்டிப் படுகொலை செய்தபின் அருகிலிருந்த ஆற்றில் வீசினார்கள்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

நவாலி தேவாலயப் படுகொலை 09 யூலை 1995

நவாலிக்கிராமம் யாழ். மாவட்டத்தின் தென்மேற்கே சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. நவாலிப் பகுதியில் பழைமை வாய்ந்ததும் சிறப்பு வாய்ந்ததுமாக கத்தோலிக்க மக்களின் புனித வழிபாட்டுத்தலமாக சென்.பீற்றர்ஸ் தேவாலயம் உள்ளது.

09.07.1995 அன்று இராணுவத்தினர் "முன்னேறிப் பாய்தல்" என்ற பெயரில் யாழ். குடாநாட்டின் வலிகாமம் மேற்குப்பதியை இலக்காகக் கொண்டு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட வேளை மக்களைப் பாதுகாப்பாக ஆலயங்களில் இருக்குமாறு அறிவித்தார்கள். இராணுவ நடவடிக்கை காரணமாக சங்கானை, சண்டிலிப்பாய், மாசியப்பிட்டி, தொட்டிலடி, சீரணிச்சந்தி, சுழிபுரம், சித்தன்கேணி, இளவாலை, பண்டத்தரிப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் இடம்பெயர்ந்தனர். இதில் ஒரு பகுதியினரில் ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐநூறு பொதுமக்கள் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும் அத்தேவாலயத்தை அண்டிய பகுதிகளிலும் தஞ்சமடைந்திருந்தனர்.

1995.07.09 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4:30 மணியளவில் விமானப்படையினரின் ஆஜனரரீனா நாட்டுத் தயாரிப்பான "புக்காரா" விமானம் நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீதும் அதன் சுற்றுப் புறத்திலுமாக ஒரே நேரத்தில் எட்டு றொக்கட் குண்டுகளை வீசியது. விமானத்தாக்குதலினால் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த குழந்தைகள், பெண்கள், சிறார்கள், தாய்மார்கள் உட்பட நூற்றிஐம்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உடல்கள் சிதறுண்டு சம்பவ இடத்தில் உயிரிழக்க இருநூற்றைம்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். காயமடைந்தவர்களிற் பலர் வைத்தியசாலையில் உயிரிழந்தார்கள். உயிரிழந்த பொதுமக்களின் உடல்களை அப்புறப்படுத்துவதிலும் காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதிலும் ஊர் மக்கள் ஈடுபட்டனர். அன்று இரவு, மறுநாட் காலையென உயிரிழந்தவர்களின் உடல்கள் உழவு இயந்திரங்களிலும் வாகனங்களிலும் ஏற்றி யாழ். போதனா வைத்தியசாலையிற் சேர்க்கப்பட்டன. மூன்று தினங்கள் கழிந்த நிலையிலும் சடலங்களைத் தேடும் பணி நின்றுவிடவில்லை.

11.07.1995 செய்வாய்க்கிழமை உறவினர்களால் அடையாளம் காணமுடியாத இருபத்துநான்கு சடலங்களை யாழ். வைத்தியசாலை நிர்வாகமும் யாழ். நோயாளர் நலன்புரி நிலையமும் இணைந்து சமய முறைப்படி அரியாலை செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்தன. இத்தாக்குதலின் பின்னர் கத்தோலிக்க மத புனித திருத்தந்தை பெருமதிப்பிற்குரிய "இரண்டாம் அருளப்பர் சின்னப்பர்" அவரது அதிர்ச்சியையும் தெரிவித்ததோடு, ஆலயத்தில் நடந்த அனர்த்தத்திற்கு வருத்தமும் தெரிவித்திருந்தார்.

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான தாக்குதலில் உயிரிழந்த நூற்றிஐம்பத்தைந்திற்கும் மேற்பட்ட மக்களின் நினைவாக, நவாலி மக்கள் ஆலயத்தின் வடக்குப் பக்கமாக நினைவுத்தூபி ஒன்றை அமைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றார்கள்.

மனைவியை இழந்த மானிப்பாய் கிழக்கைச்சேர்ந்த கமலநாதன் தெரிவிக்கையில்,
"மாலை 4:30 மணிபோல் பெரிய குண்டுச் சத்தமும் புகை மண்டலமும் வயலுக்குள் நின்று பார்க்கும்போது நவாலிப் பக்கமாகத் தெரிந்தது. உடனே மகனையும் கூட்டிக்கொண்டு ஓடோடி வந்து பார்த்தால் எனது வீட்டிற்குள் போகமுடியவில்லை. கட்டட இடிபாடுகளும் முறிந்த மரங்களுமாக வீதியெங்கும் இருந்தது. அதையும் தாண்டிவளவிற்குள் வந்து பார்த்தபோது எனது மனைவிக்கு நெஞ்சிற் காயம்பட்டு இரத்தம் பாய்ந்து கொண்டிருந்தது. மகளிற்கு தலையிலும் கையிலும் காயம். இருவரும் சாய்ந்தபடி இருந்தார்கள். அவர்களைத் தாண்டி சற்றுத் தள்ளிப்பார்த்தபோது எனது மைத்துனர் குணரட்ணம் குடும்பத்தில் அவரும் அவரது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளும் முற்றத்திலேயே இறந்து கிடந்தார்கள். மனைவிக்கும் மகளுக்கும் துணியாற் காயத்திற்குக் கட்டுப் போட்டு விட்டு அருகிலிருந்த சகோதரி என்ன ஆகியிருப்பாரெனப் பயந்து போய்ப் பார்த்தபோது எனது மைத்துனர் கணேசலிங்கம் அழுது கொண்டு மனைவி இறந்துவிட்டார். உங்களுடைய குடும்பத்தைப் போய்ப்பாருங்கோ என்று சொல்லியபடி சகோதரியைத் தூக்கிக் கொண்டு வந்தார். அந்தநேரம் வந்த அம்புலன்ஸ் வண்டியில் மனைவியையும் மகளையும் ஏற்றிக்கொண்டு வைத்தியசாலைக்குக் சென்று கொண்டிருந்தோம். போகும் போது மனைவியுடன் கதைத்துக் கொண்டிருந்தேன். அங்கு கொண்டுபோய்ச் சேர்த்தபோது அன்றையதினம் ஞாயிற்றுக் கிழமை என்பதால், பிரதான வைத்தியர்கள் இருக்கவில்லை. இருந்தவர்கள் எல்லோரும் வந்து தொட்டுப் பார்த்துவிட்டுச் சென்றார்கள். அப்போது அவருடைய கை திடீரெனக் கீழே விழுந்தது. அந்தவேளை "அப்பா பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளுங்கோ" என்றதோடு அவரின் உயிரும் பிரிந்து விட்டது."
இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சூசைதாசன் மேரிசசிகலா மாணவி 18
02. இதயசாந்தினி - -
03. இம்மானுவேல் டுசிந்தா - மாணவி - 14
04. இராமு வீரசிங்கம் - கடற்றொழில் - 43
05. இராசகுலசிங்கம் இராஜ்மோகன் - மாணவன் - 16
06. இராசதுரை மகேஸ்வரி - 34
07. இராசதுரை சந்திரகாந்தன் மாணவன் 13
08. இராசதுரை சுதா - மாணவன் - 09
09. இராசரத்தினம் ஆனந்தராசா லிகிதர் - 34
10. ஜீவராஜ் பிரதீபன் - மாணவன் - 13
11. உதயகுமார் - -
12. உதயகுமார் உசாந்தினி - மாணவி - 12
13. உதயகுமார் சதீஸ்குமார் - மாணவன் - 13
14. ந.முருகதாஸ் - -
15. ந.அபிராமி - -

நவாலி தேவாலயப் படுகொலை 09 யூலை 1995

16. ந.வசந்தமலர் - -
17. நாகலிங்கம் சரவணமுத்து - கமம் - 60
18. நாகேஸ் கோபாலகிருஸ்ணன் - கடற்தொழில் - 29
19. நடராசா கணாதீபன் - மாணவன் - 05
20. நடராசா சின்னத்துரை - கமம் - 65
21. நடராசா ரவி - சீவற்தொழில் - 22
22. நடேசு சித்திரபாலு - தச்சுவேலை - 51
23. நடேசன் விஜயகுமார் - மாணவன் - 18
24. நீக்கிலாப்பிள்ளை திருச்செல்வம் - அரசஊழியர் - 54
25. நித்தியானந்தம் அன்னலட்சுமி - 57
26. நவரத்தினம் ஜெயதா - மாணவி - 21
27. நல்லையா நீலாவதி - வீட்டுப்பணி - 50
28. கனகசபாபதி தவலட்சுமி - வியாபாரம் - 42
29. கனகசிங்கம் நாராயணசிங்கம் - சுயதொழில் - 50
30. கனகரத்தினம் உசாநந்தன் - தொழிலாளி - 20
31. கனகரத்தினம் சுதாகரன் - மாணவன் - 22
32. கனகரத்தினம் வசிகரன் - மாணவன் - 18
33. கந்தையா நல்லையா - கடற்தொழில் - 55
67. தர்மகுலசிங்கம் சுஜீபா - மாணவி - 17
68. தாமோதரம்பிள்ளை பரமேஸ்வரி - 63
69. துரைராசா - -
70. தம்பிப்பிள்ளை தியாகராசா - சுருட்டுத்தொழில் - 54
71. தம்பிராசா துவாரகாதேவி - மாணவி - 20
72. தங்கராசா தற்சுதன் - மாணவன் - 10
73. தவம் பாஸ்கரன் - தொழிலாளி - 19
74. மாயராசா ஆனந்தபுவனன் - மாணவன் - 16
75. மாயராசா செல்வநாயகி - வீட்டுப்பணி - 53
76. மாதன் பரராசசிங்கம் - மேசன் - 48
77. மகேஸ்வரன் தயாளன் - தொழிலாளி - 20
78. மகேந்திரன் மதுகரன் - மாணவன் - 17
79. மகேந்திரன் வசந்தகுமாரி - 25
80. முருகன் சரசு - 69
81. முருகேசு பொன்னம்பலம் - தச்சுவேலை - 47
82. முருகேசு செல்வரட்ணம் - வர்ணம் பூசுபவர் - 65
83. அ.தனுஸ்ரலா - மாணவி - 8
84. ஆனந்தராசா யோகேஸ்வரி - 35
85. அந்தோனிப்பிள்ளை குரூஸ் குமுதினி - மாணவி - 18
86. ஆறுமுகம் கனகலிங்கம் - வியாபாரம் - 40
87. ஆறுமுகம் குணரத்தினம் - மெக்கானிக் - 40
88. ஜெயசீலன் கனிஸ்ரன் - மாணவன் - 17
89. ஜெகதீபன் - -
90. ஜெகசோதி விமலாதேவி - வியாபாரம் - 42
91. ஜெகசோதி ரதிமலர் - மாணவி - 17
92. யோகேஸ்வரி - -
93. நேசராஜா தவரஜனி - 28
94. கோபாலகிருஸ்ணன் கபில்ராஜ்- மாணவன் - 7
95. கோபாலகிருஸ்ணன் பிரதீபன் - மாணவன் - 07
96. கோபாலகிருஸ்ணன் மதிவதனன் - 22
131. சித்திரபாலு பிரபாகரன் - மாணவன் - 21
132. சித்திரபாலு தனேஸ்வரி - மாணவி - 17
133. சித்திரபாலு மகேந்திரா - தச்சுவேலை - 25
134. சித்திரபாலு ஜெயபாலினி - மாணவி - 12
135. சித்திரபாலு ஜெயமதி - 27
136. சிவகுமாரன் சுரேக்கா - மாணவி - 12
137. சிவசோதிராஜா பிரசன்னா - மாணவன் - 10
138. சிவலிங்கராசா ரஞ்சினி - மாணவி - 11
139. சிறீஸ்கந்தராசா கோபிகன் - மாணவன் - 13
140. சசிகலா - -
141. சுவாமிநாதர் சிவபாலசுப்பிரமணியன் - ஆசிரியர் - 50
142. சரவணபவான் பராசக்தி - 27
143. சரவணமுத்து சிவமணி - பூசகர் - 63
144. சண்முகநாதன் - -
145. வன்னியசிங்கம் - -
146. வீரசிங்கம் சற்குணராசா - கடற்தொழில் - 30
147. வரதராசா கிருஸ்ணகுமார் - குழந்தை - 15 மாதம்
148. ரவிச்சந்திரன் தனுசியா - மாணவி - 8
149. எஸ்.பிரதீபா - மாணவி - 11
150. எஸ்.கேதீஸ்வரன் - -
151. எஸ்.கேமலதா கிராமசேவையாளர் - 27
152. லூக்காஸ் யூட்மோகனதாஸ் - தச்சுவேலை - 24

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. ந.கயிலைநாதன் - சாரதி - 46
02. நாகேஸ்வரி - வீட்டுப்பணி - 49
03. க.இரத்தினதேவி - வீட்டுப்பணி - 19
04. கு.உதயப்பிரபா - மாணவி - 19
05. க.ரஞ்சினி - மாணவி - 09

34. கந்தன் ஞானசேகரம் - மாணவன் - 17
35. கந்தசாமி அஞ்சலாதேவி - 36
36. கந்தசாமி தேனுகா - மாணவி - 2
37. கந்தசாமி தேவகுலசிங்கம் - தொழிலாளி - 36
38. கார்த்திகேசு தவச்செல்வி - மாணவி - 12
39. காத்தான் கந்தசாமி - சீவற்தொழில் - 42
40. கதிரவேலு துரைராசா - விவசாயம் - 55
41. குமாரசாமி பத்மநாதன் - கமம் - 24
42. கமலநாதன் சாவித்திரி - 45
43. கணேசவேல் தேவகணேசன் - மாணவன் - 15
44. கணேசலிங்கம் கமலாதேவி - கணக்கு உதவியாளர் - 45
45. குமரசாமி மகேஸ்வரி - ஆசிரியர் - 54
46. குணரத்தினம் பிரணவன் - மாணவன் - 05
47. குணரத்தினம் தர்சினி - மாணவி - 14
48. குணரத்தினம் ரோகினி - குடும்பத்தலைவி - 35
49. குணரத்தினம் விதுசன் - மாணவன் - 07
50. ப.இந்திரகுமார் - -
51. ப.சாந்தன் - -
52. புஸ்பராணி - -
53. பாலசிங்கம் உதயராசா - தச்சுவேலை - 23
54. பாலசிங்கம் செல்லம்மா - 33
55. பத்மநாதன் பாலயோகினி - 40
56. பத்மநாதன் மலர்விழி - மாணவி - 13
57. பத்மகுமாரன் கோமதி - வீட்டுப்பணி - 28
58. பிரான்சிஸ் கிங்ஸ்லி - எழுதுவினைஞர் - 27
59. பிலிப்பிள்ளை கபிரியேற்பிள்ளை - கிராமசேவையாளர் - 54
60. பரராசசிங்கம் செல்வரத்தினம் - வியாபாரம் - 48
61. புண்ணியமூர்த்தி சயந்தன் - மாணவன் - 09
62. வைத்தியலிங்கம் ஜெயசிங்கம் - அரசஊழியர் - 56
63. வைரமுத்து சிவராசா - தொழிலாளி - 39
64. த.குலசிங்கம் - -
65. த.புஸ்பராணி - -
66. தனலட்சுமி - -
97. கோபாலகிருஸ்ணன் ரேவதி - 36
98. கோபாலகிருஸ்ணன் சயந்தன் - மாணவன் - 09
99. கோபாலகிருஸ்ணன் விநோபா - குழந்தை - 05
100. கோபிநாத் - -
101. பொன்னர் நாகமுத்து - 75
102. பொன்னார் உதயகுமார் - மீன்வியாபாரம் - 35
103. தொம்மைப்பிள்ளை ஜேசுதாசன் - வியாபாரம் - 21
104. தேவநாயகம் சைலஜா - மாணவி - 13
105. தேவநாயகம் தவபாலசரஸ்வதி - 45
106. தேவநாயகம் மனோதிகா - மாணவி - 08
107. தேவநாயகம் லாவன்யன் - மாணவன் - 11
108. தேவதாஸ் நரேஸ்குமார் மாணவன் 11
109. தேவதாஸ் பிரிந்தினி - மாணவி - 07
110. செ.தவராணி - -
111. செல்லையா இராசதுரை - கடற்தொழில் - 35
112. செல்லையா கிருஸ்ணரூபன் - கடற்தொழில் - 19
113. செல்வராசா பிரதீஸ் - 16
114. செல்வரட்ணம் சிவசுப்பிரமணியம் - 46
115. செல்லத்துரை இராசம்மா - 56
116. வேலு இராமலிங்கம் - தொழிலாளி - 22
117. வேலுப்பிள்ளை நடேஸ்வரன் - மாணவன் - 19
118. வேலாயுதம் லலிதாதேவி - 35
119. ஞானலட்சுமிபாலன் சீவரத்தினம் - தொழிலாளி - 47
120. சக்கரியால் ஜெகதீபன் ஜீவாதாஸ் - மாணவன் - 17
121. சுப்பையா தேவநாயகம் - தொழிலாளி - 47
122. சத்தியநாதன் - -
123. சதீஸ்குமார் - -
124. சி.மகேஸ்வரி - -
125. சின்னத்துரை நாகரத்தினம் - 60
126. சின்னத்தம்பி இன்பமலர் - மாணவி - 10
127. சின்னத்தம்பி இரத்தினசிங்கம் - கடற்தொழில் - 46
128. சின்னையா யோகசுந்தரம் - விவசாயம் -39
129. சின்னையா சரஸ்வதி - 62
130. சித்திரபாலு நாகேஸ்வரி - வியாபாரம் - 44

06. கந்தமூர்த்தி செல்லம்மா - வீட்டுப்பணி - 35
07. கந்தமூர்த்தி ரஜனி - மாணவி - 07
08. கந்தமூர்த்தி ஜமுனா - மாணவி - 12
09. கந்தசாமி அமுதன் - மாணவன் - 16
10. கந்தசாமி சாமினி - வீட்டுப்பணி - 29
11. கா.தவராசா - கடற்தொழில் - 38
12. கார்த்திகேசு பேபிசாளினி - மாணவி - 08
13. கார்த்திகேசு சிவயோகராஜபுஸ்பம் - வீட்டுப்பணி - 44
14. கீ.தர்மஜெயன் - தொழிலாளி - 27
15. கி.பௌளின் - தச்சுவேலை - 51
16. ப.தயாளினி - மாணவி - 09
17. ப.சிவரூபன் - மாணவன் - 16
18. பாலச்சந்திரன் மகேஸ்வரி - வீட்டுப்பணி - 35
19. புலேந்திரன் ஜெயகரன் - மாணவன் - 15
20. துரைராசா நவரத்தினராசா - மாணவன் - 17
21. தி.கென்றிஜெயாகர் - தொழிலாளி - 18
22. தங்கராசா கௌசலா - குழந்தை - 02
23. தவராசா தேவகுமாரி - வீட்டுப்பணி - 45
24. தவராசா சிறிகரன் - 36
25. மு.கிளாடிஸ் நிர்மலா - மாணவி - 26
26. மயில்வாகனம் சசிகரன் - மாணவன் - 17
27. மார்க்கண்டு கந்தசாமி - கடற்தொழில் - 45
28. மார்க்கண்டு பேரின்பகுமார் - மாணவன் - 19
29. ஆ.முருகதாஸ் - தொழிலாளி - 30
30. அ.ஆரோக்கியம் - வீட்டுப்பணி - 59
31. அ.அருள்சீலி - மாணவி - 19
32. அ.ஜெயக்குமார் - அதிபர் - 45
33. அ.ஜெயவீரசிங்கம் - தொழிலாளி - 32
34. அ.லூத்துமேரி - வீட்டுப்பணி - 45
35. அன்ரன் ரஞ்சன் - மாணவன் - 19
36. அரசரட்ணம் குமுதினி - மாணவி - 16
37. அரசரட்ணம் மல்லிகாதேவி - வீட்டுப்பணி - 46
38. நேசராசா ஆர்த்தி - குழந்தை - 5 மாதம்

நவாலி தேவாலயப் படுகொலை 09 யூலை 1995

39. கோ.இராகுலன் - மாணவன் - 12
40. பே.சிவயோகநாதன் - கமம் - 44
41. பெனடிற் ரஞ்சினிதேவி - வீட்டுப்பணி - 20
42. தே.ஜெயராணி 38
43. தே.ரஜிதா - மாணவி - 08
44. மேனகா - மாணவி - 14
45. மோ.சாந்தி - வீட்டுப்பணி - 30
46. செ.முருகானந்தன் - மாணவன் - 15
47. செ.தேவமலர் - வீட்டுப்பணி - 16
48. செ.சுமித்திரா - மாணவி - 13
49. ச.நாகேஸ்வரி - வீட்டுப்பணி - 65
50. சு.தங்கப்பட்டு - வீட்டுப்பணி - 19
51. சு.மகாதேவி - மாணவி - 15
52. ச.அருட்செல்வி - வீட்டுப்பணி - 26
53. ச.வசந்தி - மாணவி - 14
54. சி.பிரதீபா - மாணவி - 26
55. சி.திருச்செல்வி - மாணவி - 12
56. சி.யொனிசங்கர் - மாணவன் - 18
57. சி.சுதாகரன் - மாணவன் - 17
58. சி.சிவமலர் - வீட்டுப்பணி - 33
59. சி.சிவசீலன் - மாணவன் - 14
60. விஜயகுமார் புவனேஸ்வரி - வீட்டுப்பணி – 8

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

நவாலி தேவாலயப் படுகொலை

09 யூலை 1995

பன்னங்கண்டி படுகொலைகள் 05 யூலை 1997

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் அமைந்துள்ள மிகச்சிறிய கிராமம் பன்னங்கண்டியாகும். இச்சிறிய கிராம மக்களின் பிரதான தொழிலாக விவசாயமும் மந்தை வளர்ப்பும் உள்ளது. இக்கிராம மக்கள் வயலும் வயல்சார்ந்த பிரதேசத்தில் தங்கள் குடும்ப உறவினர்களுடன் வாழ்ந்துகொண்டிருந்தனர்.

1996ஆம் ஆண்டு காலத்தில் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து படையினர் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றுவதற்காக "சத்ஜெய" இராணுவ நடவடிக்கை என்னும் பெயரில் எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதல் என்பவற்றை நடத்திய வண்ணம் முன்னேறி வந்தனர். இதனால் இப்பிரதேச மக்கள் அன்று தங்கள் உடமைகள், வீடுகள் என்பவற்றைக் கைவிட்டு செய்வதறியாது இடம்பெயரத் தொடங்கினார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் வட்டக்கச்சியில் உறவினர் வீடுகளிலும், சிறிய குடிசைகள் அமைத்தும், பொது மண்டபங்களிலும் தங்கியிருந்தார்கள்.

இவ்வாறு வட்டக்கச்சியில் துயருடன் இருக்கும் வேளையில், தங்கள் வீடுகளிலுள்ள பொருட்களை எடுப்பதற்காகவும், மந்தைகளைக் கொண்டுவருவதற்காகவும் சென்ற பொது மக்களை பன்னங்கண்டி மூன்றாம் வாய்க்கால் பிள்ளையார் கோயிலடியில் நின்ற படையினர் கைதுசெய்தனர். பின்னர் அவர்களின் கண்களையும், கைகளையும் கட்டி ஆயுதங்களாலும், தடிகளாலும் கடுமையாகத் தாக்கினார்கள். அப்போது அவர்கள் தாங்கள் பொதுமக்கள் என்றும் தங்களைத் திரும்பிப் போக விடும்படியும் இராணுவத்தினரைக் கும்பிட்டும், கெஞ்சியும் கேட்டார்கள். ஆனால் படையினர் அவர்களை அதே இடத்திலுள்ள இராசதுரை என்பவரின் வீட்டுக்கு அழைத்துச் சென்று அங்கே வைத்து அடித்துக் கொலை செய்த பின்னர் அவ்வீட்டின் மலசல கூட குழியினுள் நால்வரினது சடலங்களையும் போட்டு மூடினர்.

2000ஆம் ஆண்டு மக்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளக்குடியமரச் சென்றபோது தங்களது வீடுகளையும் காணிகளையும் துப்பரவு செய்தார்கள். அப்போது இராசதுரை வீட்டு மலசலகூடக் குழியினிலிருந்து நான்கு பேரினது எலும்புக்கூடுகள் கைகள் கட்டப்பட்ட நிலையிலும் ஆடைகள் இரத்தக் கறைபடிந்த நிலையிலும் மீட்கப்பட்டன. பின்னர் ஆடைகளை ஆதாரமாகக கொணடு மூன்று பேர் அடையாளங் காணப்பட்டனர். ஒருவர் இன்று வரை அடையாளங்காணப்பட வில்லை. இது ஒரு சிறுவனுடையதாக இருக்கலாமென மருத்துவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இவர்களைப் போன்றே இராணுவத்தினராற் கைப்பற்றிய பகுதிகளில் தங்களது வீடுகளைப் பார்ப்பதற்காகச் சென்று இன்றுவரை திரும்பிவரவில்லையென காணாமற் போனவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றார்கள். இவர்கள் அனை வரும் காணாமற் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். கணவரையிழந்த பன்னங்கண்டியைச் சேர்ந்த சீதாலட்சுமி தெரிவிக்கையில்,

"ஒருநாள் வீட்டைப் பார்த்து விட்டு நாங்கள் வளர்த்த மாட்டையும் பிடித்துக்கொண்டு வருவோம் என்று சொல்லிவிட்டு சிநேகிதர்களான முத்து, குமார் என்வர்களுடன் மற்றும் ஒரு பதினாறு வயதுப் பையனுடனும் நாலுபேராக வீடு பார்க்கச் சென்றார்கள். பின்பு 200ஆம் ஆண்டு கிளிநொச்சிப் பகுதியில் மலக்குழி ஒன்றிலிருந்து நான்கு பேரின் எலும்புக்கூடுகள் எடுக்கப்பட்டன. அப்போது இது சம்பந்தமாக எனக்கு அறிவிக்கப்பட்டது. அந்த நேரம் நாங்கள் அக்கராயனில் வசித்து வந்தோம். அப்போது எடுத்த எலும்புக்கூடுகளையும் உடுப்புக்களையும் அக்கராணயன் காவல் நிலையத்தில் காட்டினார்கள். அதில் என் கணவர் போட்டிருந்த உள்ளுடுப்புக்களை வைத்து அவரின் உடலை அடையாளம் காட்டினேன். எனக்கு நான்கு பிள்ளைகள். இடம்பெயர்ந்து இனிமேல் இல்லையென்று கஸ்ரத்தின் மத்தியிற் சீவித்து வந்த நேரம் எனது கணவரும் இராணுவத்தாற் கொல்லப்பட்டு விட்டார். மிகப் பெரிய சிரமத்தின் மத்தியில் பிள்ளைகளைப் படிப்பித்து வளர்த்து வருகின்றேன். எங்களுக்கு எவரும் உதவ முன் வரமாட்டார்கள். அப்படியிருந்தும் யாரிடமாவது கடன்பெற்றாலும் எம்மாற் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றோம். அநியாயமாக எனது கணவரை சிறீலங்கா இராணுவம் கொன்றதால் தான் எனக்கு இந்த கஷ்டநிலை" என்றார்.

இச்சபவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

1. சீனிவாசகம் பன்னீர்ச்செல்வம் - தொழிலாளி — 37
2. பெருமாள் சசிக்குமார் - தொழிலாளி — 38

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.

யாழ். உடுவில் படுகொலை 05.07.2006

யாழ். மனிப்பாய் பகுதியிலுள்ள உடுவில்லைச் சேர்ந்த 43 வயதான அம்பலவனார் புனித் தவதி, செவ்வாய்க்கிழமை இரவு 11:00 மணிக்கு அடையாளம் தெரியாத நபர்களால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டார். திருமணமாகாத அப் பெண்ணின் வீட்டிற்குள் வலுக்கட்டாயமாக நுழைந்த குற்றவாளிகள், வீட்டைச் சோதனை யிட வந்திருப்பதாக அங்கிருந்தவர்களிடம் கூறி, வயதான தாயைத் தாக்கிய பின்னர் அப் பெண்ணைப் பாலியல் வன்கொடுமை செய்த தாக உள்ளூர் மக்கள் தெரிவித்தனர். இக் குற்றம் நிகழ்ந்த வீட்டிற்கு அருகில், இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு அமைந் துள்ள முகாம் அமைந்துள்ளது.

உடுவில் பாலியல் வன்கொடுமை மற்றும் கொலை இவ்வீடு யாழ்ப்பாண மாவட்டம், வாலிகாமம், உடுவில் உள்ள பொன்னையா ஒழுங்கையில் அமைந்துள்ளது.

உடுவில் இலங்கை இராணுவ முகாம், இதற்கு முன்னர் பலமுறை மனித உரிமைகளை மீறி யதாகவும், யாழ்ப்பாண மக்களைத் துன்புறுத் தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இருட்டிய பிறகு, முகாமைச் சுற்றியுள்ள வீதி களிலும், கொலை நடந்த இடத்திலும் சிறீலங்கா இராணுவ வீரர்கள் மட்டுமே ரோந் துப் பணியில் ஈடுபடுவதாக உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர். அப்பகுதியில் பொதுமக்கள் யாரும் நடமாடுவதில்லை என்றும் அவர்கள் மேலும் கூறினர்.

தாய், பலத்த தாக்குதல் காயங்களுடன் யாழ்ப் பாண போதனா மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டார்.

மல்லக்கம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி, சரோஜினி இளங்கோவன், குற்ற நடந்த இடத் தைப் பார்வையிட்டு, பிரேதப் பரிசோதனைக் காக உடலை யாழ்ப்பாண போதனா மருத்துவ மனைக்கு மாற்றுமாறு போலீசாருக்கு உத்தர

முல்லை. அலம்பில் பகுதியில் சிறீலங்கா விமானப்படையின் தாக்குதலில் பொதுமக்கள் படுகொலை – 11.07.2026

யூலை 11. 2006, புதன்கிழமை பிற்பகல் சுமார் 3:30 மணியளவில் ஆலம்பில் உள்ள வேலங் கண்ணி தேவாலயத்திற்கு அருகே கடற் கரையில் இருந்த மீனவர்கள் மீது சிறீலங்கா விமானப்படையின் கிஃபீர் போர் விமானம் குண்டுவீசியதில், 15 வயது சிறுவன் மற்றும் 51 வயது மூதாட்டி ஆகியோர் கொல்லப்பட்டனர். மேலும், ஒரு வயது குழந்தை உட்பட 11 பொது மக்கள் காயமடைந்தனர். சிறீலங்கா விமானப் படையின் இந்த குண்டுவீச்சில் 16 வயதுக்குட் பட்ட ஐந்து குழந்தைகள் காயமடைந்தனர். கிஃபீர் குண்டுவீச்சு விமானம் தாழ்வான உய ரத்தில் பறந்து, கடற்கரையில் மீன்களைப் பிரித்துக் கொண்டிருந்த மீனவக் குடும்பங் களைக் குறிவைத்து அவர்கள் மீது இரண்டு குண்டுகளை வீசியது. இந்தத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட 15 வயது சிறுவன் பி. பிரேம் குமார், தனது இரு கால்களையும் இழந்துள் ளார். விடுதலைப் புலிகளின் அரசியல் தலை- வரைச் சந்திப்பதற்காக நார்வே தூதர் கிளி நொச்சிக்கு பயணம் மேற்கொண்டுள்ள வேளையில், பொதுமக்கள் இலக்கு மீதான சிறீலங்கா விமானப் படையின் குண்டுவீச்சு நடைபெற்றுள்ளது.

சம்பவ இடத்திலேயே உயிரிழந்த இரண்டு பொதுமக்கள், 15 வயதான அனந்தம் செல்வா மற்றும் 51 வயதான ஸ்ரீ பாலசுப்பிரமணியம் கந்தமலர் என அடையாளம் காணப்பட்டனர்.

காயமடைந்தவர்கள், 1 வயதான டயஸ் அருள்சன், அவரது சகோதரி 4 வயதான டயஸ் அலையரசி, 12 வயதான எஸ். சரத்குமார், 10 வயதான கி. துஸ்யந்தினி, 15 வயதான பி. பிரேம்குமார், 18 வயதான எஸ். தர்சன், 39 வயதான கே. சிவரசா, 46 வயதான ஜே. வீரத்தன்யாகம், 52 வயதான தி. பூமணி, 67 வயதான டி. தியாகராஜா மற்றும் 67 வயதான என். ஆல்ஃபிரட் என அடையாளம் காணப் பட்டனர்.

காயமடைந்தவர்களில், படுகாயமடைந்த பிரேம்குமார் மற்றும் தர்சன் ஆகிய இருவரும் கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப் பட்டனர்.

இந்தத் தாக்குதலில், சகோதரர்களான நக முத்து சின்னரசா மற்றும் நகமுத்து கிட்டினன் ஆகியோருக்குச் சொந்தமான இரண்டு குடி சைகள் அழிக்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டம் மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் உட்பட, 1200 உள் நாட்டு இடம்பெயர்ந்த மீனவர்கள் வசிக்கும் ஒரு குடிமக்கள் குடியிருப்பு, தாக்குதல் நடந்த இடத்திலிருந்து 300 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.



அரியாலையில் 26 மனிதப் புதைகுழிகள் உள்ளன: கண்கண்ட சாட்சியங்களும் உயிருடன் உள்ளனர்

செம்மணி மனதப் புதைகுழி வழக்கின் முறைப்பாட்டாளர் கிருபாகரன்

28.06.2026

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் சித்திரவதை முகாம்களில் இருந்து உயிருடன் தப்பியவர்கள் இருக்கின்றனர். அவர்கள் தமக்கு இழைக்கப்பட்ட சித்திரைவதைகள் தொடர்பிலும், மற்றையவர்களுக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகளை கண்கனால் கண்ட நேரடி சாட்சியங்களாக இன்றும் வாழ்கின்றார். அவர்கள் உள்நாட்டு பொறிமுறைகளை நம்பி சாட்சி சொல்வதற்கு தயார் இல்லை. சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டால், சாட்சியம் அளிக்க தயாராக உள்ளனர் என செம்மணி மனிதப் புதைகுழி வழக்கின் முறைப்பாட்டாளர் கிருபாகரன் தெரிவித்தார்.

அணையா விளக்கு போராட்டத்தின் ஆறு அம்ச கோரிக்கைகளை மீண்டும் வலியுறுத்தி, நேற்றைய தினம் உரிமைப் பந்தம் எனும் தொனிப்பொருளில் 427 தீப்பந்தங்கள் ஏந்தி கவனயீர்ப்பு போராட்டம் யாழ்ப்பாணம் செம்மணி அணையா விளக்கு திடலில் முன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

தற்போது செம்மணி புதைகுழி காணப்படும், அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானம் என்பது 80 வருடங்களுக்கு மேற்பட்ட சைவ மக்களுடைய பாரம்பரியமாக எரியூட்டுகின்ற சுடலையாகத்தான் இருந்து வந்திருக்கின்றது.

ஆனால் நீதிமன்றத்தினுடைய கட்டளையின் பேரிலும், அல்லது மிகச் சிறியவர்கள் இறக்கின்ற தருணத்தில் மட்டும்தான் எமது யாப்பிலும், பேச்சு வழக்கிலும் கூறிவந்த ஒரே ஒரு விடயம். இப்போது தகனமேடை இருக்கின்ற பகுதிக்கு வடகிழக்காக இருக்கின்ற ஒரு சிறிய பகுதியில் மட்டும்தான் அவ்வாறான தகனங்கள் இடம்பெறும்.

வேறு எங்கும் புதைக்கின்ற செயல்பாடு 80 வருடமாக இடம் பெறவில்லை என்பது அரியாலையில் வாழ்கின்ற, பூர்வீகமாக வாழ்கின்ற எம்மூதாதையருக்கும் எமக்கும் தெரிந்த விடயம்.

ஆனால் 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்குப் பின்னர், இந்த இடத்தை இராணுவம் கைப்பற்றிய காலப்பகுதியிலிருந்து 2011ஆம் ஆண்டு வரை எம்முடைய கையில் இந்த சுடலையை ஒப்படைக்கும் வரை, முற்றுமுழுதாக இராணுவத்தினுடைய காவலரணங்கள் நிறைந்த, இராணுவ சோதனைச் சாவடி நிறைந்த இராணுவ முகாமாகத்தான் இந்த அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானம் இருந்து வந்தது.

இந்த நிலைமையில்தான் 1996ஆம் ஆண்டு காலப்பகுதியிலே கிருசாந்தியினுடைய படுகொலையைத் தொடர்ந்து, இங்கே 1999ஆம் ஆண்டு ஆறு மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு 15 உடல்கள் எடுக்கப்பட்டன.

அது எடுக்கப்பட்ட பகுதிகள் இந்த சித்துப்பாத்தி இந்து மயான சுடலைப் பகுதி அல்ல. யாழ் . வளைவு அமைந்துள்ள பகுதிக்கு அருகில் உள்ள பிள்ளையார் ஆலயத்தினுடைய ஒரு பகுதியிலும், அங்கே மருத மரத்தின் பின்னால் இருக்கின்ற ஒரு கேணியிலிருந்து இரண்டு உடல்களும், அதனைவிட இந்த உப்பளப் பாத்தியினுடைய பகுதியில் சில உடல்களும் மொத்தமாக ஆறு புதைகுழிகளில் இருந்தும் 15 உடல்கள் எடுக்கப்பட்டன.

எனவே, இந்த மனிதப் புதைகுழி என்பது தனியே இந்த சித்துப் பாத்தி இந்து மயானத்தில் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டு விட்டதாக எவரும் நினைத்துவிட வேண்டாம்.

இந்த புதைகுழிகள், என்னைப் பொறுத்தவரையில் 2019ஆம் ஆண்டு நீர்வழங்கல் சபையினால் நாயன்மார்கட்டுப் பகுதியிலே ஒரு தண்ணீர் தாங்கித் தொட்டி அமைக்கின்ற போது, சில மனித எச்சங்களை அடையாளப்படுத்தி அவற்றினை எடுத்து, நீதிவான் நீதிமன்றத்திற்கு அது வழக்காகக் கொண்டு செல்லப்பட்டு, இன்றுவரை அந்த வழக்கு இல்லை. அந்த இடம் கூட இந்த செம்மணி மனிதப் புதைகுழியோடு தொடர்புபட்ட விடயங்கள்.

மிகவும் தெளிவாகச் சொல்கின்றேன், கிருசாந்தி கொலை வழக்கின் மரண தண்டனை கைதி சோமரத்ன ராஜபக்ச இந்த பகுதியில்தான் தான் கடமையாற்றியதாக தனது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் அது உண்மையல்ல.இராணுவத்தினுடைய 7சி எல்ஏ இராணுவப் படையணி என்பது, 15 உறுப்பினர்களை அரியாலையில் கொண்ட ஒரு இரகசிய இராணுவ அணியாகச் செயல்பட்டது.

அவர்கள் கைதடி, மணியந்தோட்டம், கொழும்புத்துறை, அரியாலை, புங்கங்குளம், நாயன்மார்கட்டு ஆகிய இடங்களுக்கு சென்று அனைவரையும் கைது செய்து, அவர்களை விசாரிக்கின்ற, சித்திரவதைப்படுத்துகின்ற செயல்பாட்டில் ஈடுபட்ட ஒரு இராணுவக் குழு.

இது தொடர்பான கண்ணால் கண்ட சாட்சிகளும், அந்த

சித்திரவதைகளில் இருந்து தப்பிய உயிருள்ள சாட்சியங்களும் பலர் இருக்கின்றார்கள்.

அதிலும் குறிப்பாக அரியாலை, இந்த செம்மணிப் பகுதியிலே ஒரு பாரிய மனிதப் புதைகுழி கனரக இயந்திரங்களைக் கொண்டு தோண்டப்பட்டு, அதற்கு முன்னால் ஒரு இளைஞன் அம்மணமாக்கப்பட்டு, படுகொலை செய்யப்படுவதற்குத் தயாராக இருந்த நேரத்தில், கடவுளின் சித்தத்தால் தப்பி பூசாவுக்குள் கொண்டு செல்லப்பட்டு, இன்று விடுதலையாகி இந்த அரியாலை பகுதியில் வசித்து வருகின்றார்.

ஆனால் அவர்கள் இந்த இலங்கை கட்டமைப்பிற்குள் இருக்கின்ற நீதித்துறையை நம்பியோ, அல்லது இந்த விசாரணையை மேற்கொள்ளுகின்ற சி.ஐ.டி.யினரை நம்பியோ தன்னுடைய வாக்குமூலத்தைத் தரத் தயாராக இல்லை.

இங்கே சர்வதேசப் பிரதிநிதிகளுடைய மேற்பார்வையின் கீழ் விசாரணைகள் இடம்பெற வேண்டுமென சில தரப்பினர் கூறுகின்றார்கள்.

மிகவும் தெளிவாக எங்களுடைய கருத்தை நாங்கள் கூற விரும்புகின்றோம். 1999ஆம் ஆண்டு இங்கே நடைபெற்ற அகழ்வு என்பது சர்வதேச பிரதிநிதிகளின் மேற்பார்வையில் தான் இடம்பெற்றது.

ஆனால் இன்று, அந்த வழக்கு இடம்பெற்று 27 ஆண்டுகள் கடந்தும், அந்த செம்மணி மனிதப் புதைகுழியினுடைய வழக்கு கிடப்பில் போடப்பட்ட வழக்காக இருக்கின்றது.

அதிலும் மிகவும் குறிப்பாக, 15 உடல்களில் இரண்டு இளைஞர்கள் அரியாலை பொன்னம்பலம் சந்தியில் இருக்கின்ற இராணுவத்தினுடைய மூவ்மெண்ட் டிபார்ட்மென்ட்டினுடைய அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிற இராணுவ அதிகாரியினால் கைது செய்யப்பட்டு காணாமல் போன ராசையா சதீஷ்குமார், மகேந்திரம் பாபு ஆகிய இரு இளைஞர்களுடைய உடல்கள், யாழ். வளைவுக்கு அருகில் இருக்கின்ற பிள்ளையார் கோயிலுக்கு அருகில் இருந்த சோதனைச் சாவடியில் இருந்துதான் கண்டெடுக்கப்பட்டு அது அடையாளம் காணப்பட்டது.

ஆனால், அந்த இரண்டு வழக்குகள் கூட இன்று கிடப்பில் போடப்பட்ட வழக்காகத்தான் இருக்கின்றது.

எனவேதான் நாங்கள் மிகவும் தெளிவாகக் கூறுகிறோம், இங்கே பல சித்திரவதை முகாம்கள் இருந்தன. அதில் மிகப் பிரதான முகமாக புங்கங்குளத்தில் இருந்த இராணுவத்தினுடைய மூன்று படைப்பிரிவுகளைக் கொண்ட இராணுவத்தினுடைய இரகசிய முகாம்கள் இருந்தன.

அதில் பிரதான முகாம் , தற்போது தேசிய மக்கள் சக்தியினரின் அலுவலகம் அமைந்துள்ள வீடு அந்த கால பகுதியில் சித்திரவதை முகமாக செயல்பட்டிருந்தது.

இதனைவிட கண்டி வீதியில், மாம்பழச் சந்தி, தபால் கட்டை சந்தி ஜெயா பில்டிங் சித்திரவதை முகாம், நெடுங்குளம் சந்தி இராணுவச் சித்திரவதை முகாம், பொன்னம்பலம் சந்தியில் இருந்த இராணுவச் சித்திரவதை முகாம் காணப்பட்டன.

கிருசாந்தி கொலை வழக்கின் மரண தண்டனை கைதியான சோமரத்ன ராஜபக்ச உட்பட மூன்று அதிகாரிகள் 26 இடங்களில், மனிதப் புதைகுழி இருந்ததாக அடையாளப்படுத்தினார்கள். அதில் ஒரு இடம் பொன்னம்பலம் சந்தியில் இருக்கின்ற இடம்.

இதனைவிட, இந்த அரியாலை கொட்டுகிணற்றடி அதுக்கு அருகில், வயலின் நடுவில் இருக்கின்ற நிலப்பகுதி. அங்கே தான் இராணுவத்தினுடைய "சி" சித்திரவதை முகாம் அமைந்திருந்தது.

யாழ் குடாநாட்டிலே கைது செய்யப்படுகின்ற அதிகமான இளைஞர், யுவதிகளை இந்த வெட்டவெளியில் கொண்டுவரப்பட்டு, இந்த "சி" சித்திரவதை முகாமில் வைத்து சித்திரவதைப்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதற்கான சான்றுகள் அந்த இடத்தில் இன்றும் இருக்கின்றன் சாட்சியங்களும் இருக்கின்றன.

இவை எவற்றையும் அந்த மக்கள் இலங்கையினுடைய நீதித்துறைக்கு வழங்கத் தயாராக இல்லை. ஒரு பொதுவான சர்வதேசத்தினுடைய மேற்பார்வை மட்டுமல்ல, சர்வதேச விசாரணை நடக்குமாக இருந்தால் அதனை நாங்கள் கையளிக்கத் தயாராக இருக்கின்றோம்.

மணியந்தோட்டத்தில் மனிதப் புதைகுழி இருக்கின்றது கொழும்புத்துறை துண்டிச் சந்தியில் இருந்த இராணுவ முகாமில் மனிதப் புதைகுழி இருந்தது. அதனை 1999ஆம் ஆண்டுக்கு முன்னர் பல இடங்களில் அதனை அகற்றியிருக்கின்றார்கள்.

அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திலே கண்டறியப்படுகின்ற மனிதப் புதைகுழி உடல்களை முதல் முதல் புதைத்த இடம். ஆனால், ஏற்கனவே இருந்த மனித எச்சங்களை எடுத்து, அதை அகற்றி, அதை இல்லாதொழிக்கின்ற செயல்பாட்டைச் செய்த மனிதப் புதைகுழியும் இந்த அரியாலை மண்ணில் இருப்பதாகப் பலர் கூறுகின்றார்கள்.

காலம் நிச்சயமாக அவற்றை அடையாளப்படுத்தும்.

எனவே, இவற்றுக்கெல்லாம் ஒரு சர்வதேச விசாரணை வருமாக இருந்தால், அனைத்து சாட்சியங்களையும், அனைத்து சம்பவங்களையும் கொடுப்பதற்கு இந்த அரியாலை வாழ் மக்கள் தயாராக இருக்கின்றார்கள் – என்றார்.

கந்தரோடை நாகரீகத்தின் தோற்றமும் படிமுறை வளர்ச்சியும் பகுதி – 3

பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரீகம்

6. பெருங்கடல் வர்த்தகம்

கந்தரோடையினதும் அதன் துணை ஊர்களிலும் வாழ்ந்த மக்களின் வாழ்வாதாரங்களுக்கு விவசாயம், மந்தை வளர்ப்பு, பரவைக்கடல் மீன்பிடிப்பு ஆகிய நடவடிக்கைகள் உதவி செய்த போதிலும், கந்தரோடையின் நகரமயமாக்கத்திற்கும், நாட்டின் நாகரிக வளர்ச்சிக்கும் முக்கிய உந்துதலாக இருந்தது அதன் துறைமுகங்கள் வழியாக மேற்கொண்ட வெளிநாட்டு வணிகச் செயற்பாடுகளே ஆகும். இந்து மாகடலின் வர்த்தகப் பாதையில் யாழ்ப்பாணத்தின் புவியியல் அமைவிடம் அமைந்திருந்த தனால் கிரேக்க-உரோம, பாரசீக, அரேபிய, சீன, இந்திய கடல் வழி வர்த்தகத்தில் யாழ்ப்பாணத் துறைமுகங்கள் முக்கிய பங் காளிகளாக இருந்தன. அக்காலத்தில் நாகநாட்டின் சமூக-பொரு ளாதாரப் பெருவளர்ச்சியும், மேம்பாட்டு நிலையும் வர்த்தக நடவடிக்கைகளிலே தங்கியிருந்தன.

யாழ்ப்பாணம் ஒரு சிறிய தீபகற்பமாக இருந்த போதிலும், இந்து மாகடலில் அமைந்த அதன் கேந்திர மையம் அதன் துறை முகங்களுக்கு அதன் அளவை விடப்பாரிய முக்கியத்துவம் அளித்திருந்தது. இந்து மாகடலின் காற்று வீச்சு மேற்கிலிருந்து வரும் பாய்க்கப்பல்கள் இந்தியாவின் அல்லது இலங்கையின் மேற்குக் கரையில் தங்க வேண்டிய நிர்ப்பந்தத்தைக் கொடுத் திருந்தது. இவை அக்கலன்களின் தங்குதுறைகளாகவோ அல்லது பிரயாணத்தின் இறுதி மையங்களாகவோ இருந் திருக்கும். இந்தியாவின் வடகரைத் துறைகள் கடற் கொள்ளைக் காரர்களின் ஆக்கிரமிப்புகளுக்கு உட்பட்டிருந்தபடியினால், மன்னார்க்குடா வழியாக வரும் கப்பல்களுக்கு இலங்கையின் மேற்குக் கடல் துறைகள் பாதுகாப்பான புகலிடங்களாக இருந் தன. மாந்தைத் துறை, பண்டைய யாழ்ப்பாணப் பண்ணைத் துறை, பூநகரித்துறை, யம்புகோளம், காயாத்துறை ஆகிய துறைகள் இந்த வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தன.

அரேபிய நாணயங்கள் - யாழ்ப்பாண அகழ்வு

Image Source - ப. புஷ்பரட்ணம்

சீன நாணயங்கள் - யாழ்ப்பாண அகழ்வு

உரோம நாணயங்கள் - யாழ்ப்பாண அகழ்வு

Image Source - ப. புஷ்பரட்ணம்

கந்தரோடை அகழ்வுகளில் கி.மு. 500ஆம் ஆண்டிற்குரிய அச்சுக்குத்திய வெள்ளியிலான வட இந்திய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. கி.மு. 500ஆம் ஆண்டிற்குரிய அம்போரா மதுச்சாடிகள் யாழ்ப்பாணத் துறையிலும், கி.மு. 300ஆம் ஆண்டு முதல் கி.பி. 100ஆம் ஆண்டு வரையிலான ‘ரௌலெற்ரெட்’ மட்பாண்டங்களும், கி.மு. 200ஆம் ஆண்டு முதல் கி.பி. 450ஆம் ஆண்டு வரையிலான பெருந்தொகை யான உரோம நாணயங்களும் கந்தரோடை அகழ்வுகளிலும் கிடைத்திருக்கின்றன.



ஆனைக்கோட்டை - நவாலி எல்லைப் பகுதியில் வெளிக்கொணரப்பட்ட பண்டைக்காலக் கட்டிடம்

Image Source - Dr. P. Ragupathy

இக்காலத்தில் யம்புகோளத் துறை கடலில் அமிழ்ந்துவிட்டபடியி னால் கடலடித் தொல்லியல் ஆய்வுகள் ஏதும் மேற்கொள்ள முடியவில்லை. ஆனால் 2011-12, 2017ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வுகள், முன் னர் அவ்விடத்திலிருந்த யாழ்ப்பாணப் பண்ணைத்துறையில் நிலத்தின் கீழ் பொதிந்திருந்த பொக்கிஷங்களை வெளிக் கொணர்ந்திருக்கின்றன. அக்காலத்தைய சில கண்டுபிடிப் புகளைச் சுருக்கமாகக் கூறின் –

1. பெருங்கற் பண்பாட்டுக் கலன்கள்: கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் – கி.மு. 1000 முதல் கி.பி. 100 வரை.
2. வட இந்திய வர்த்தகம்: வட இந்திய மெருகூட்டப்பட்ட கறுப்புநிற மட்கலன்கள் – கி.மு. 500 – கி.பி.200.
3. தமிழக வர்த்தகம்: பல்வகைப் பொருட்கள்
4. உரோம வர்த்தகம்: ரௌலெற்ரெட் மட்பாண்டம் – கி.மு. 300 – கி.பி. 100
உரோம நாணயங்கள்: கி.மு. 100 – கி.பி. 450.
சிவப்பு மெருகிட்ட அறிற்றைன் கலன்: கி.மு.100 – கி.பி.100.
5. தெற்கு ஆசிய வர்த்தகம்: சஸானிய இஸ்லாமிய மட்பாண்டம் – கி.பி. 800 – 900.
6. அரேபிய வர்த்தகம்: தகர மெருகூட்டப்பட்ட மட்பாண்டம் – கி.பி. 800 – 1000.
7. சீன வர்த்தகம்: யூல் பச்சை மட்பாண்டம் – கி.பி. 800 – 900.
டியூசன் கல் பாண்டம் – கி.பி. 700 – 1100
மிங் கால பீங்கான் – கி.பி. 1300 – 1600

இலங்கையின் வடபகுதியில் கிடைத்த நாணயங்களில் உரோம நாணயங்கள் முக்கியமானவை. இவை கி.மு. முதலாம் நூற் றாண்டு தொடக்கம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரையான காலத்திற்குரியவை. இக்காலத்தில் உரோமப் பேரரசு கீழைத் தேய நாடுகளுடன் நெருக்கமான வர்த்தகத் தொடர்பினை மேற் கொண்டிருந்தது. இவை பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங் களிலும், கிரேக்க - உரோமரது நூல்களிலும் காணப்படுவ தோடு, உரோமரின் மட்பாண்டங்களும் மதுச்சாடிகளும் இந்தியா, இலங்கை ஆகிய பகுதிகளில் கிடைத்துமுள்ளன (சிற்றம்பலம், சி.க., 1993: 500).

உரோம நாணயங்கள் பொன், வெள்ளி, செம்பு முதலிய உலோ கங்களால் ஆனவை. இத்தகைய நாணயங்கள் கந்தரோடை, வல்லிபுரம், மண்ணித்தலை, வெட்டுக்காடு, திருக்கேதீஸ்வரம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த நாண யங்களில் பொதுவாக முன்பக்கத்தில் கிரீடம் அணிந்த மன்ன னின் தலையும், தலையைச் சுற்றிவரப் புள்ளிகளும் உள்ளன. நாணயத்தின் பின்பக்கத்தில் ஒன்று, இரண்டு அல்லது மூன்று போர் வீரர்கள் அல்லது சிலுவை முதலிய உருவங்கள் உள் ளன. இந்த நாணயங்களில் பெரும்பாலானவை கி.பி. மூன் றாம், நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுகளுக்கு உரியவை. காரணம், இக்காலப்பகுதியில் உரோம வணிகர்கள் நேரடியாக இலங்கையின் துறைமுகங்களுக்கு வந்து வர்த்தக நடவடிக்

கந்தரோடை தூண்தாங்கு கல் சிற்பம்

Image Source - யாழ்ப்பாண அருங்காட்சியகம்

கைகளில் ஈடுபட்டிருந்தார்கள் (சிற்றம்பலம், 1993: 501).

7. கட்டடக் கலையும் சிற்பங்களும்

கந்தரோடையில் காணப்படும் தனித்துவமான உள்நாட்டு அம்சம் பவளக் கற்களையும் சுண்ணாம்புக் கற்களையும் கொண்டு செதுக்கப்பட்ட கட்டடக்கலையும் சிற்பக்கலையுமாகும். இக்கற்களே அக்கால யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட முக்கிய கட்டடப் பொருட்களாகும். இக்கற்களை உபயோகித்த கட்டட - சிற்பக் கலையானது யாழ்ப்பாணப் பௌத்தக் கட்டடங்களை அமைப்பதில் ஆரம்பித்து, பண்டைய கட்டடங்களையும் சிற் பங்களையும் உருவாக்கி, சமீப காலங்களில் அவற்றை சீமெந் தில் மாற்றியமைக்கும் வரை பயன்பாட்டில் இருந்திருக்கிறது. இக்கற்களை சிறப்பாக வெட்டி, பொழிந்து, உருவாக்கும் தொழில் நுட்பத்தில் யாழ்ப்பாணக் கல் தச்சர்கள் தேர்ச்சி பெற்றி ருந்தார்கள். யாழ்ப்பாணப் பௌத்தத்தில் காணப்படும் இந்தக் கட்டடப் பொருட்களும், அவற்றைப் பயன்படுத்தும் தொழில் நுட்பமும் இலங்கையின் பெருநிலப்பரப்பில் காணப்படும் பௌத்த ஸ்தூபங்களிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றன.

கல்லில் செதுக்கிய லக்ஷ்மி

Image Source - Paul Pieris

கந்தரோடை அகழ்வுகளில் கண்ட கற்களில் செதுக்கிய உருவங்கள்
1. லக்ஷ்மி உருவம். 2. மூன்று தலைகள் கொண்ட நாக உருவம்

Image Source - German Archaeological Institute, Kantarodai Excavations 2023

இப் பவளக்கல் – சுண்ணாம்புக்கல் தொழில்நுட்பப் பயன்பாடு இலங்கையில் யாழ்ப்பாணத்திற்கு வெளியே நடைபெற்றதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணப் பௌத்தச் சிற்பங்களும் பண்டைய கட்டடங்களும் யாழ்ப்பாண மண்ணின் கீழே காணப்படும் 'மையோசீன்' காலத்து சுண்ணாம்புக் கற்களிலிருந்து உருவாக்கப்பட்டிருக் கின்றன. நிலத்தின் மேலிருக்கும் மண் படையை நீக்கினால் சுண்ணாம்புக்கற் படை வெளிவருகிறது. சில இடங்களில் மேல் மண்தரை மழையினால் கழுவப்பட்டு சுண்ணாம்புக்கல் அடுக்கு மேலே தெரிவதும் உண்டு.

கந்தரோடை அகழ்வுகளில் கண்டெடுத்த மணிகளால் ஆக்கப்பட்ட மாலைகள்

Image Source - ப. புஷ்பரட்ணம்

ஆனைக்கோட்டையில் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வு களில், ஆனைக்கோட்டை – நவாலி எல்லைப் பகுதியில் தர வைப் பற்றைகளால் மூடப்பட்டிருந்த ஒரு பண்டைய கட் டடத்தை கலாநிதி இரகுபதி வெளிப்படுத்தினார். இக்கட்டடத்தின் அடித்தளம் சுண்ணாம்புக் கற்களால் ஆனது. இக்கற்கள் நீள் சதுரமாக வெட்டப்பட்டு, பொழியப்பட்டு, ஒன்றுடன் ஒன்று பொருந்தும் வகையில் செதுக்கிப் பொருத்தப்பட்டிருக்கின்றன. பக்கச் சுவர்களும் இவ்வகையான பெரிய சுண்ணாம்புக் கற்களை அடுக்கி அமைக்கப்பட்டிருக்கின்றன. இக்கட்டட நிலத்தின் அடிப்பகுதியில் ஒரு வட்டவடிவான குழி காணப் படுகிறது.

தமிழகத்தில், கொடுமணலில் பேராசிரியர் கா. ராஜன் மேற் கொண்ட அகழ்வுகளில், கடினமான நிலத்தளங்களில் காணப் படும் வட்டவடிவான குழிகளில் இரும்புக் கனிமத்திலிருந்து இரும்பை உருக்கியெடுக்கும் உலைக்களங்கள் இருந்ததைக் காட்டியிருக்கிறார். இக்கிடங்கு இப்படியான ஓர் உலைக்களம் இருந்த இடமாக இருக்கலாம் அல்லது ஒரு சாதாரண சேமிப்புக் கிடங்காகக்கூட இருந்திருக்கலாம். இக்கட்டடத்தின் மேற்பகுதி எவ்வாறு அமைந்திருந்திருக்கும் என்பதை நாம் கற்பனை செய்துதான் பார்க்க முடியும். பெருங்கற்களையே இத்தனை செவ்வனே அறுத்துப் பதிப்பவர்கள், பக்க மரங்களை நட்டு, கூரைகளை நீண்ட மரக்கட்டுமானக் கட்டைகளையும் சிலாகை களையும் கொண்டு அமைத்து, மேலே சூளையில் சுட்ட களிமண் பலகை ஓடுகளைக் கொண்டு வேய்ந்திருப்பார்கள். அக்காலத்தைய சாதாரண மண் குடிசைகளினிடையே காணப் பட்ட இப்படியான வதிவிடங்கள் அக்காலத்தைய அரச அல்லது

ஆனைக்கோட்டை அகழ்வுகளில் கண்டெடுத்த ஆதிகால இரும்பினால் செய்யப்பட்ட ஆணிகள், ஒரு குத்துவாள், ஈட்டிமுனை ஆகியனவும் ஒரு செப்புக் குச்சியும் காணப்படுகிறது

Image Source - பொ. இரகுபதி

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு

தொடர்புகளுக்கு 437.345.4203



கந்தரோடை அகழ்வுகளில் போல் பீரிஸ் கண்டெடுத்த பல நீளங்கள் கொண்ட செப்புக்குச்சிகள்

1.விநாயகரின் செப்பு உருவம்

2.பாலகிருஷ்ணனின் செப்பு உருவம்

Image Source - செ. கிருஷ்ணராசா

வேளிர் வகுப்பு மக்களின் கட்டடங்களாக இருக்கக்கூடும்.

கந்தரோடையின் பௌத்த ஸ்தூபங்களின் அடித்தளங்கள் பவளக் கற்களால் ஆனவை. செவ்வனே அறுக்கப்பட்டு செதுக்கப்பட்ட பவளக்கற்கள் வட்டவடிவாக நான்கு வரிசைகளில் அடுக்கப்பட்டிருப்பதாக கலாநிதி கொடகும்புர தனது அறிக்கையில் குறிப்பிடுகிறார் (Godakumbura, C.E., 1968). பவளக்கற்கள் கடலின் அடியில் உயிருள்ள வெண்ணிறப் பவளக்கொடிகளாக வளருகின்றன. இவை மூன்று-நான்கு அடி உயரமும், ஆறு-எட்டு அடி நீளமும் கொண்டவையாக வளருகின்றன. இவற்றைக் கடலிலிருந்து பெயர்த்தெடுத்து, ஈரமாக இருக்கும் போது அல்லது நீரில் ஊறவைத்து மென்மையாக்கிய பின்னரே தேவையான உருவங்களில் அறுக்கவோ செதுக்கவோ முடியும். இக்கற்கள் காய்ந்துவிட்டால் அவற்றை வெட்டும் போது சிறு துண்டுகளாகப் பிளவுபடும். பவளக்கல் தொழில்நுட்பம் இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் மறக்கப்பட்டுவிட்டது.

கந்தரோடை அகழ்வுகளில் கண்டெடுக்கப்பட்ட கடினமான மண்ணிறக் கல்லில் செதுக்கப்பட்ட ஒரு சிற்பம் யாழ்ப்பாண அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இது போல் பீரிஸினால் கண்டுபிடிக்கப்பட்டதோ அல்லது கலாநிதி கொடகும்புரவினால் கண்டெடுக்கப்பட்டதோ தெரியவில்லை. சிலைக்குப் பக்கத்தில் எந்த விவரமும் குறிக்கப்பட்டிருக்கவில்லை. அது ஒரு தூணின் உச்சியில் கூரையைத் தாங்கும் விட்ட மரத்தின் கீழ்முனையில் பொருத்தப்பட்டிருந்த தூண்தாங்குக் கல்லாக இருக்கலாம். மேலே செதுக்கப்பட்ட கல் மேசையின் கீழே கலை வடிவான ஒரு சிங்க முகம் செதுக்கப்பட்டிருக்கிறது. முகத்தைச் சுற்றியுள்ள அகலமான விளிம்புக்கல் செதுக்கில் இரண்டு இணையான பள்ளக் கோடுகள் போடப்பட்டிருக்கின்றன. அதன் கீழே சதுரமான தூணின் பகுதி காணப்படுகிறது.

1919இல் போல் பீரிஸ் கண்டெடுத்த லக்ஷ்மி நாணயங்கள் உலோகங்களினால் சுட்ட களிமண் அச்சுகளில் உருக்கி வார்த்தெடுக்கப்பட்ட நாணயங்களாகும். ஆனால் ஸ்டியடைட் கல்லில் செதுக்கப்பட்ட ஒரு பெண்ணின் உருவம் ஒரு லக்ஷ்மி பட்டயமாக இனங்காணப்பட்டுள்ளது. உடுப்பு எதுவுமின்றி, இரு கைகளிலும் ஆயுதம் போன்ற இரு தண்டங்களைப் பிடித்தவாறு இந்த உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது.

கந்தரோடை தமிழ் பிராமி எழுத்துக் கலவோடுகள்

2023ஆம் ஆண்டில் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த அரச தொல்லியல் நிறுவனமும் (German Archaeological Institute KAAK – Bonn), சிறீலங்கா தொல்லியல் துறையும் இணைந்து கந்தரோடையில் ஒரு தொல்லியல் அகழ்வாய்வை நிகழ்த்தின. அந்த அகழ்வில் கண்டெடுக்கப்பட்ட சில பொருட்கள் கொழும்பிலுள்ள ஜேர்மன் தூதரகத்தினால் வெளியிடப்பட்டன. அவற்றில் கற்களில் செதுக்கிய இரு சிறு உருவங்கள் கவனிக்கத்தக்கவை.

மண்ணிறக் கல்லில் (ஸ்டியடைட் கல் போலத் தெரிகிறது) மிக நுணுக்கமாகச் செதுக்கப்பட்ட லக்ஷ்மி உருவம் சிறந்த வேலைப்பாடுகளுடன் காணப்படுகிறது. மற்றொரு பச்சைநிறக் கல்லில் மூன்று தலைகள் கொண்ட நாகம் போன்ற ஓர் உருவம்

கந்தரோடை தமிழ் பிராமி எழுத்துக் கலவோடு

Image Source - செ. கிருஷ்ணராசா

'அபிசிதன்' என்ற தமிழ்ப் பிராமிப் பதிவு கொண்ட கலவோடு கி.மு. 300

Image Source - செ. கிருஷ்ணராசா



இலங்கையில் அநுராதபுரத்தில் கண்டெடுத்த கலவோட்டில் காணப்படும் 'தயா குடட' என்ற தமிழ்-பிராமி வாசகம்

Image Source - S.U.Deraniyagala

செதுக்கப்பட்டிருக்கிறது. இது தெளிவாக இல்லை (கீழே காணப்படும் படத்தைப் பார்க்கவும்).

- நன்றி: எழுநா - சிவ தியாகராஜா

பெலாரஸ் போர்க்களமாக மாறுமா? உக்ரைன் போரின் புதிய களமுனை!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

20.06.2026

உக்ரைன்-ரஷ்யா போர் ஐந்தாவது ஆண்டை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் நிலையில், அந்த மோதலின் நிழலில் வாழும் நாடுகளில் மிகவும் கவனிக்கப்பட வேண்டிய நாடாக பெலாரஸ் (Belarus) திகழ்கிறது. ரஷ்யாவின் மிக நெருங்கிய கூட்டாளியாகக் கருதப்படும் பெலாரஸ், போரின் ஆரம்பம் முதல் மாஸ்கோவுக்கு அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ ஆதரவை வழங்கி வந்தாலும், தனது சொந்த இராணுவத்தை நேரடியாக உக்ரைன் போரில் ஈடுபடுத்துவதிலிருந்து இதுவரை விலகியே இருந்து வருகிறது.

போரை பெலாரஸ் விரும்பவில்லை

உக்ரைனுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்க பெலாரஸ் திட்டமிடவில்லை என்பதை அதிபர் லுகாஷென்கோ மீண்டும் வலியுறுத்தி உள்ளார். மேலும் இந்த மோதலில் இழுக்கப்பட்டால் தனது நாடு எதிர்கொள்ளும் அபாயங்களையும் அதிபர் ஒப்புக்கொண்டார். எங்கள் முக்கிய தளங்கள் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடும் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். உக்ரைன் கூறியது போல், பெலாரஸ் பிரதேசத்தில் ஏற்கனவே 500 இலக்குகளை அவர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

மின்ஸ்க் நேரடியாகப் போரில் ஈடுபட்டால், உக்ரைனியத் தாக்குதல்களுக்கு பெலாரஸ் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கும் என்பதையும் லுகாஷென்கோ ஒப்புக்கொண்டார்.

உக்ரைன் ரஷ்யாவைத் தாக்குவது போலவே பெலாரஸையும் தாக்கத் தொடங்கினால், நாங்கள் மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களாகி விடுவோம். இதை நாங்கள் புரிந்துகொள்கிறோம், அதனால்தான் நாங்கள் போருக்குச் செல்ல விரும்பவில்லை.

உக்ரைன் போரின் ஆரம்பத்தில் பெலாரஸ் போர்க்களமாக மாறுமா என்ற கேள்வி எழுந்தது. பெலாரஸ் அதிபர் லுகாஷென்கோ இந்த எச்சரிக்கையை முன்பு விடுத்தார்.

உக்ரைன் போரின் இன்னொரு களமுனையாக மாறும் என்று முன்னர் எதிர்பார்க்கப் பட்டது. இந்தப் பின்னணியில், பெலாரஸ் தலைவர் லுகாஷென்கோ வெளியிட்டுள்ள சமீபத்திய கருத்துக்கள் சர்வதேச அரசியல் வட்டாரங்களில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளன.

இந்தக் கருத்துக்கள் போரின் போக்கில் மேலும் மேலும் தெளிவாகி வரும் ஒரு யதார்த்தத்தைப் பிரதிபலிக்கின்றன. பெலாரஸ் ரஷ்யாவின் மிக நெருங்கிய இராணுவக் கூட்டாளியாகத் தொடர்ந்தாலும், அது இதுவரை உக்ரைனில் போரில் தனது சொந்தப் படைகளை ஈடுபடுத்துவதைத் தவிர்த்து வந்துள்ளது. மேலும், போர்க்களத்திலிருந்து நூற்றுக்கணக்கான, சில சமயங்களில் ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தொலைவில் உள்ள இராணுவ மற்றும் மூலோபாய உள்கட்டமைப்புகளை வெற்றிகரமாகத் தாக்கிய, உக்ரைனின் வளர்ந்து வரும் தொலைதூரத் தாக்குதல் திறன்களின் தொடர்ச்சியான செயல் விளக்கங்களுக்குப் பிறகு பெலாரஸ் அரசு அபாயங்களைப் புரிந்துகொள்கிறது.

பெலாரஸ் எதிர்கொள்ளும் அபாயம்

உக்ரைன் போரின் ஆரம்பத்தில் பெலாரஸ் போர்க்களமாக மாறுமா என்ற கேள்வி எழுந்தது. பெலாரஸ் அதிபர் லுகாஷென்கோ இந்த எச்சரிக்கையை முன்பு விடுத்தார்.

உக்ரைன் போரின் இன்னொரு களமுனையாக மாறும் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. இந்தப் பின்னணியில், பெலாரஸ் தலைவர் லுகாஷென்கோ (Alexander Lukashenko) வெளியிட்டுள்ள சமீபத்திய கருத்துக்கள் சர்வதேச அரசியல் வட்டாரங்களில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளன.

அவர், உக்ரைன் ஜனாதிபதி குறித்து முன்பு கூறிய சில கருத்துகளை மறுத்துள்ளதுடன் பெலாரஸ் உக்ரைனுக்கு எதிரான போரில் நேரடியாக நுழைய விரும்பவில்லை என்பதைத் தெளிவாக அறிவித்துள்ளார். ஆனாலும் அவரின் மறைமுக செய்தியில் என்ன அர்த்தம் என்பது வெளிப்படையாக தெரியவில்லை.

முக்கியமாக லுகாஷென்கோவின் கருத்துகளில் மிகவும் குறிப்பிடத்தக்க பகுதி, ஜெலென்ஸ்கியிடம் அவர் வெளிப்படையாக ஜெலென்ஸ்கி புண்பட்டிருந்தால், எனது வார்த்தைகளை வாபஸ் பெறுகிறேன் என்று தெரிவித்துள்ளார். அவர் ஏற்கனவே ஒரு கடுமையான போரில் இருக்கிறார். எனவே நான் அவ்வாறு பேசியிருக்கக் கூடாது என்று அவர் கூறியிருந்தார்.

இது வெறும் தனிப்பட்ட வருத்த வெளிப்பாடு மட்டுமல்ல. பெலாரஸ் மற்றும் உக்ரைன் இடையேயான உறவை மேலும் மோசமாக்க விரும்பவில்லை என்ற அரசியல் செய்தியும் இதில் மறைந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளாக இரு நாடுகளுக்கிடையே நம்பிக்கையின்மை அதிகரித்திருந்தாலும், நேரடி இராணுவ மோதலைத் தவிர்ப்பதில் இரு தரப்பினருக்கும் இன்னும் ஆர்வம் இருப்பதை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

எவ்வாறாயினும் லுகாஷென்கோவின் உரையின் முக்கிய அம்சம், பெலாரஸ் போரில் நேரடியாக ஈடுபட்டால் எதிர்கொள்ள வேண்டிய அபாயங்களை அவர் வெளிப்படையாக அறிவித்துள்ளது தான். பெலாரஸ் தலைவர் லுகாஷென்கோ அவரின் கூற்றுப்படி, உக்ரைன் ஏற்கனவே பெலாரஸுக்குள் உள்ள பல நூறு முக்கிய இராணுவ மற்றும் மூலோபாய இலக்குகளை அடையாளம் கண்டுள்ளது. போர் விரிவடைந்தால், அவை தாக்குதலுக்குள்ளாகும் அபாயம் இருப்பதாக அவர் கூறினார்.

இது பெலாரஸ் நாட்டின் பாதுகாப்பு அமைப்பின் கணக்கீடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை வெளிப்படுத்துகிறது. போரின் ஆரம்ப கட்டங்களில் உக்ரைன் பெரும்பாலும் தற்காப்பு நடவடிக்கைகளில் மட்டுமே கவனம் செலுத்தியது. ஆனால் தற்போது அது நீண்ட தூரத் தாக்குதல் திறன்களை பெருமளவில் வளர்த்துள்ளது. குறிப்பாக ட்ரோன் போர் தொழில்நுட்பத்தில் உக்ரைன் பாரிய வளர்ச்சியை கண்டுள்ளது. அத்துடன் ஐரோப்பிய நாடுகளின் இராணுவ தளவாட உதவிகளும் ஏராளமாக-தாராளமாக உக்ரைன் அரசுக்கு கிடைக்கிறது.

உக்ரைனின் வளரும் தாக்குதல் திறன்

கடந்த சில ஆண்டுகளில், உக்ரைன் தனது ட்ரோன் தொழில்நுட்பம் மற்றும் துல்லியமான நீண்ட தூரத் தாக்குதல் திறன்களில் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளது. ரஷ்யாவின் உள்பகுதிகளில் அமைந்த விமானத் தளங்கள், எரிபொருள் சேமிப்பு நிலையங்கள், ஆயுதக் கிடங்குகள் மற்றும் முக்கிய இராணுவ உள்கட்டமைப்புகள் மீது பல வெற்றிகரமான தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

முக்கியமாக சில தாக்குதல்கள் போர்க்களத்திலிருந்து நூற்றுக் கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தொலைவில் நடைபெற்றுள்ளன. இதனால், போரிலிருந்து தூரத்தில் இருப்பதால் பாதுகாப்பாக இருக்கலாம் என்ற பழைய கருத்து பல நாடுகளுக்கு இனி பொருந்தாத ஒன்றாக மாறியுள்ளது. இந்த புதிய யதார்த்தத்தையே பெலாரஸ் அதிபர் லுகாஷென்கோ தனது கருத்துகளில் வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளார். உக்ரைன் ட்ரோன் மூலம் ரஷ்யாவைத் தாக்குவது போலவே பெலாரஸையும் தாக்கும் திறன் பெற்றுள்ளது என்பதை அவர் உணர்த்தியுள்ளார்.

பெலாரஸ் ரஷ்யாவின் கூட்டாளி

பெலாரஸ், ரஷ்யாவின் மிக நெருங்கிய அரசியல் மற்றும் இராணுவ கூட்டாளியாகத் தொடர்கிறது. ரஷ்யப் படைகள் 2022 ஆம் ஆண்டில் உக்ரைனின் வடக்கு பகுதிகளை நோக்கி முன்னேறியபோது, பெலாரஸ் தனது நிலப்பரப்பை பயன்படுத்த அனுமதித்தது. இதன் காரணமாக, கியேவ் பெலாரஸை போரில் மறைமுக பங்கேற்பாளராகவே பார்க்கிறது.

ஆனால், அதே நேரத்தில், பெலாரஸ் தனது சொந்த படைகளை உக்ரைன் எல்லைக்குள் அனுப்பவில்லை.

இதற்கான காரணங்களில் ஒன்று, மின்ஸ்க் அரசின் (Minsk) உள்நாட்டு அரசியல் நிலைத்தன்மை பற்றிய கவலையாகும். மேலும், நேரடி போர் ஏற்பட்டால் பெலாரஸ் இராணுவம் மற்றும் பொருளாதாரம் எதிர்கொள்ளும் சுமைகளும் முக்கிய காரணிகளாகக் கருதப்படுகின்றன. பெலாரஸ் ரஷ்யாவின் கூட்டாளி என்றாலும், உக்ரைன் போரில் நேரடியாக ஈடுபடுவில்லை. ரஷ்யாவுடன் உறவைப் பேணுவதால் அடுத்த போர்க்களமாக மாறும் அச்சம் உள்ளது என்பதை அதிபர் நிராகரிக்கவில்லை. அதிபர் லுகாஷென்கோவின் சமீபத்திய அறிக்கையின் மையச் செய்தி மிகவும் தெளிவானது. பெலாரஸ் தற்போதைய போரின் அபாயங்களை முழுமையாகப் புரிந்துகொள்கிறது. ரஷ்யாவுடன் கூட்டணி தொடர்ந்தாலும், நேரடியாகப் போரில் குதிப்பது தனது நாட்டை ஒரு புதிய போர்க்களமாக மாற்றிவிடும் என்பதை அது உணர்ந்துள்ளது.

உக்ரைன் மீது தாக்குதல் நடத்துவதற்குப் பதிலாக, பெலாரஸ் தனது நிலப்பரப்பை பாதுகாத்துக் கொள்ளவும், போரின் நேரடி விளைவுகளிலிருந்து விடுபடவும் விரும்புகிறது. இது வெறும் இராணுவக் கணக்கீடு மட்டுமல்ல. நாட்டின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக நிலைத்தன்மையைக் காக்கும் முயற்சியுமாகும்.

பெலாரஸ் நாட்டின் அதிபர் லுகாஷென்கோவின் அறிக்கை, உக்ரைன் போரின் தற்போதைய நிலையைப் பிரதிபலிக்கும் முக்கியமான அரசியல் விடயமாக பார்க்கப்படுகிறது. ரஷ்யாவின் நெருங்கிய கூட்டாளியாக இருந்தாலும், பெலாரஸ் நேரடி போரில் ஈடுபடுவதால் ஏற்படும் விளைவுகளை நன்கு புரிந்து கொண்டுள்ளது. உக்ரைனின் வளர்ந்து வரும் தாக்குதல் திறன்களும், நவீன போரின் மாறிவரும் தன்மையும், சிறிய நாடுகள் கூட தங்கள் பாதுகாப்பு கணக்கீடுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளன.

அதனால், லுகாஷென்கோவின் செய்தி ஒரு எளிய அரசியல் அறிக்கையாக மட்டும் அல்ல, போரின் நெருப்புக்கு மிக அருகில் நின்றாலும், அதில் முழுமையாக விழாமல் இருக்க வேண்டும் என்ற பெலாரஸின் மூலோபாயக் கணக்கீட்டின் வெளிப்பாடாகவும் பார்க்கப்படுகிறது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம்
வடக்கு கிழக்கு மாகாணங்கள்
Association for Relatives of the Enforced Disappearances
North & East Provinces

கண்டி வீதி, கிளிநொச்சி.
Email. - arednorthandeast@gmail.com KandyRoad, Kilinochchi. Tp - 070 390 8668

பதிவு இல Regd No } :.................... தொ.இல Serial No } NEP திகதி Date } 19.06.2026

To the United Nations High Commissioner for Human Rights
United Nations Human Rights Council
Geneva, Switzerland
19 June 2026

We Appeal for International Justice

We, the family members of the enforced disappeared from the Northern and Eastern Provinces of Sri Lanka, wish to bring the following matters to your urgent attention.

Although seventeen years have passed since the end of the armed conflict in Sri Lanka, we have not received truth or justice through any mechanism. More than four hundred mothers, fathers, and relatives who struggled for justice have passed away without knowing the fate of their loved ones.

Before we too pass away, we call upon the international community to intervene and ensure that independent and credible investigations are undertaken to establish what happened to the victims of enforced disappearance and to determine their whereabouts. This remains our fundamental demand.

We categorically reject the recent statement expressed by the Minister of Justice of Sri Lanka regarding the issue of enforced disappearances. Our position remains clear: truth must be established, justice must be delivered, and guarantees of non-recurrence must be ensured.

Thousands of families have been struggling for truth and justice for the past seventeen years. However, the Government appears to be attempting to administratively close the issue of enforced disappearances through compensation schemes, death certificates, and other administrative measures.

Compensation cannot substitute justice. Any compensation provided without establishing the truth effectively denies the victims' families their right to justice.

We express serious concern that the resources allocated to the Office on Missing Persons (OMP) and the Office for National Unity and Reconciliation (ONUR) are being used to administratively close the issue of enforced disappearances rather than ensuring truth and accountability.

We further wish to highlight that the rule of law is not being upheld equally in Sri Lanka.

The granting of bail to a Buddhist monk accused in the sexual abuse case involving a fourteen-year-old girl in Anuradhapura raises serious concerns.

At the same time, there have been incidents in which Tamil religious leaders who sought to protect their traditional lands were treated in a degrading manner by security forces.

The arrest of a young man from Kilinochchi under the Prevention of Terrorism Act merely for singing a song constitutes a threat to freedom of expression.

Although the Government pledged to repeal the Prevention of Terrorism Act, attempts to introduce new repressive legislation instead are contrary to democratic principles.

These incidents raise serious questions regarding whether equal justice is being afforded to all communities in Sri Lanka.

Furthermore, during the third phase of excavations at the Chemmani mass grave site, more than 380 human skeletal remains have so far been uncovered. These findings constitute important evidence relating to wartime and post-war human rights violations.

Under these circumstances, we have no confidence in domestic investigations. Therefore, independent and credible forensic investigations with international oversight must be undertaken.

Accordingly, we respectfully appeal upon the international community and the United Nations Human Rights Council to:

* Ensure an independent investigation into enforced disappearances with international oversight.
* Ensure that all mass graves, including Chemmani, are examined with the participation of international forensic experts.
* Identify and hold accountable those responsible for human rights violations and alleged war crimes.
* Guarantee truth, justice, and accountability for affected families.
* Undertake legal and political reforms to ensure non-recurrence.
* Repeal laws that undermine fundamental rights, including the Prevention of Terrorism Act, and enact legislation consistent with international human rights standards.

Ms. Y. Kanagaranjini
President
Association for Relatives of the Enforced Disappearance
North & East Provinces
Sri Lanka

Ms. C. Jenitha
Secretary
Association for Relatives of the Enforced Disappearance
North & East Provinces
Sri Lanka

Copies to:
1. Secretary-General of the United Nations
2. Member States of the United Nations Human Rights Council

பதிவு இல Regd No } :.................... தொ.இல Serial No } NEP திகதி Date } 19.06.2026

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைச் சபையின் ஆணையாளர்,
ஐக்கிய நாடுகளின் மனித உரிமைச் சபை,
ஜெனிவா
சுவிஸ்சலாந்து.
19.06.2026.

சர்வதேச நீதியை கோருகின்றோம்

வடக்கு கிழக்கு வலிந்து காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆகிய நாங்கள் பின்வரும் விடயங்களை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவருகின்றோம் யுத்தம் முடிவடைந்து பதினேழு வருடங்கள் ஆகியும் எப் பொறிமுறையிலும் எங்களுக்கு நீதி கிடைக்கப்பெறமலே இன்றுவரை நாம் போராடிவருகின்றோம் .வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி போராடிய நானூறுக்கும் மேற்ப்பட்ட தாய்,தந்தை,உறவுகள் நீதி கிடைக்காமலே இறந்துவிட்டனர், நாங்கள் இறப்பதற்கு முன்பு சர்வதேச நாடுகள் தலையீடு செய்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது ? அவர்கள் எங்கே? என்பது தொடர்பாக சுயாதீன நீதி விசரணை நடந்தபட வேண்டும் என்பதே எமது கோரிக்கை. இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில்

இலங்கையின் நீதி அமைச்சரால் சமீபத்தில் வெளியிடப்பட்ட கருத்துக்களை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்டோரின் விவகாரத்தில் எமது நிலைப்பாடு தெளிவானது: உண்மை கண்டறியப்பட வேண்டும், நீதி நிலைநாட்டப்பட வேண்டும், மீள் நிகழாமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.வலிந்து

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள் பல ஆயிரக்கணக்கானோர் பதினேழு வருடங்களாக உண்மையையும் நீதியும் வேண்டி போராடி வருகின்றனர். எனினும், அரசாங்கம் இழப்பீடு, மரணச் சான்றிதழ் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் மூலம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தை முடிவுக்குக் கொண்டு-வர முயற்சிக்கின்றது. இழப்பீடு வழங்குவது நீதிக்கான மாற்றாக இருக்க முடியாது. உண்மையை கண்டறியாமல் வழங்கப்படும் எந்தவொரு இழப்பீடும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நீதிக்கான உரிமையை மறுக்கும் செயலா-கும் என்பதை வலுயுறுத்துகின்றோம்.

காணாமல் போனோருக்கான அலுவலகம் (OMP) மற்றும் இழப்பீட்டு அலுவலகம் (ONUR) ஆகியவற்றுக்காக ஒதுக்கப்படும் நிதி, உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்குப் பதிலாக,வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் விவகாரத்தை நிர்வாக ரீதியாக முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இலங்கையில் சட்டத்தின் ஆட்சி சமமாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பதையும் நாம் சுட்டிக்காட்டுகின்றோம்.இதற்கு எடுத்துக்காட்டாக

அனுராதபுரத்தில் 14 வயது சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட வழக்கில் தொடர்புடைய பௌத்த மதகுரு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, தங்களது பாரம்பரிய நிலங்களை பாதுகாக்க போராடிய தமிழ் மதகுருமார்கள் மீது பாதுகாப்பு படையினர் அவமரியாதையான முறையில் நடந்துகொண்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன,

கிளிநொச்சியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பாடல் பாடியதற்காக பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை, கருத்துச் சுதந்திரத்தின் மீதான அச்சுறுத்தலாகும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதாக உறுதியளித்து ஆட்ச்சியமைத்த அரசு அதற்கு பதிலாக புதிய ஒடுக்குமுறை சட்டங்களை அறிமுகப்படுத்த முயற்சிப்பது ஜனநாயகக் கொள்கைகளுக்கு முரணானதாகும்.

இவ்வாறான நிகழ்வுகள் இலங்கையில் அனைத்து மக்களுக்கும் சமமான நீதி வழங்கப்படுகின்றதா என்ற கேள்வியை எழுப்புகின்றன.

மேலும், செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வின் இதுவரை 380 க்கும் மேற்பட்ட மனித எலும்புக் கூடுகள் தொடர்ச்சியாக கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இது இலங்கையின் போர்க்கால மற்றும் போருக்குப் பிந்தைய மனித உரிமை மீறல்கள் குறித்த ஆதாரங்களாக பதிவாகின்றது. இந்நிலையில், உள்ளக விசாரணைகள் மீது எமக்கு நம்பிக்கை இல்லை, சர்வதேச கண்காணிப்புடன் கூடிய சுயாதீன மற்றும் நம்ப-கரமான தடயவியல் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

எனவே, சர்வதேச சமூகத்திடமும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடமும் நாம் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்:

காணாமல் ஆக்கப்பட்டோரின் விவகாரத்தில் சர்வதேச கண்காணிப்புடன் கூடிய சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும்.

செம்மணி உள்ளிட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளும் சர்வதேச தடயவியல் நிபுணர்களின் பங்களிப்புடன் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

மனித உரிமை மீறல்கள் மற்றும் போர் குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்பானவர்கள் அடையாளம் காணப்பட்டு சட்ட-த்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உண்மை, நீதி மற்றும் பொறுப்புகூறல் வழங்கப்பட வேண்டும்.

மீள் நிகழாமையை உறுதிப்படுத்தும் வகையில் சட்ட மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை பாதிக்கும் சட்டங்கள் நீக்கப்பட்டு, சர்வதேச மனித உரிமைத் தரத்திலான சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

நீதி இல்லாமல் நல்லிணக்கமும் சமாதானமும் ஏற்பட முடியாது. உண்மையை மறைக்கும் முயற்சிகள் பாதிக்க-ப்பட்ட மக்களின் வேதனையை மேலும் நீட்டிக்கும். எனவே, சர்வதேச சமூகம் இந்த விவகாரத்தில் உறுதியான நடவடிக்கைகளை எடுத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என பணிவ-ன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி.

யோ. கனகரஞ்சினி
தலைவர்
வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் வடக்கு கிழக்கு மாகாணங்கள் .

சி.ஜெனிதா
செயலாளர்
வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் வடக்கு கிழக்கு மாகாணங்கள் .

பிரதிகள்
1) செயலாளர் நாயகம் ஐக்கிய நாடுகள் சபை.
2) மனித உரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகள்.
3) ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

டான்பாஸை கைப்பற்றும் ரஷ்யா: உக்ரைனுக்கு பாரிய நில இழப்பா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

24.06.2026

2022 பெப்ரவரி மாதத்தில் தொடங்கிய ரஷ்யாவின் முழுமையான உக்ரைன் மீதான படையெடுப்பு, ஐரோப்பாவின் இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய மிகப்பெரிய இராணுவ மோதலாக மாறியுள்ளது. நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் இந்தப் போர், ஆயிரக்கணக்கான உயிரிழப்புகளையும், மில்லியன் கணக்கான மக்களின் இடம்பெயர்வையும் ஏற்படுத்தியுள்ளது. தற்போது இந்தப் போரின் முக்கிய கவனம் கிழக்கு உக்ரைனின் டான்பாஸ் (Donbas) பிராந்தியத்தில் குவிந்துள்ளது.

இந்த நிலையில், டொனெட்ஸ்க் (Donetsk) மாகாணத்தில் அமைந்துள்ள கோஸ்ட்யான்டினிவ்கா (Kostiantynivka) நகரத்தைச் சுற்றி கடுமையான போர்கள் நடைபெற்று வருகின்றன. ரஷ்யப் படைகள் நகரின் தெற்கு மற்றும் வடக்கு பகுதிகளிலிருந்து முன்னேறி, நகரத்தைச் சுற்றிவளைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. உக்ரேனிய வீரர்களின் கூற்றுப்படி, நகரின் பல பகுதிகள் தற்போது சாம்பல் மண்டலமாக மாறியுள்ளன. அதாவது, அவை முழுமையாக எந்தத் தரப்பின் கட்டுப்பாட்டிலும் இல்லை என்று கூறப்படுகிறது.

ரஷ்ய – உக்ரைன் போரின் முக்கிய கவனம் கிழக்கு உக்ரைனின் டான்பாஸ் (Donbas) பிராந்தியத்தில் தற்போது குவிந்துள்ளது. டொனெட்ஸ்க் (Donetsk) மாகாணத்தில் அமைந்துள்ள கோஸ்ட்யான்டினிவ்கா (Kostiantynivka) நகரத்தைச் சுற்றி கடுமையான போர்கள் நடைபெற்று வருகின்றன. ரஷ்யப் படைகள் நகரின் தெற்கு மற்றும் வடக்கு பகுதிகளிலிருந்து முன்னேறி, முழுமையாக நகரத்தை கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

கோஸ்ட்யான்டினிவ்கா முக்கியத்துவம்:

கோஸ்ட்யான்டினிவ்கா ஒரு சாதாரண நகரமல்ல. அது டான பாஸ் பிராந்தியத்தின் உள்பகுதிகளுக்கான முக்கிய நுழைவாயிலாகக் கருதப்படுகிறது. இந்த நகரம் வீழ்ந்தால், ரஷ்யப் படைகளுக்கு கிரமடோர்ஸ்க் (Kramatorsk) மற்றும் ஸ்லோவியான்ஸ்க் (Sloviansk) போன்ற உக்ரைனின் முக்கிய பாதுகாப்பு மையங்களை நோக்கி முன்னேறுவதற்கான வாய்ப்பு கிடைக்கும்.

இந்த இரண்டு நகரங்களும் டான்பாஸில் உக்ரைனின் கடைசி பெரிய பாதுகாப்புக் கோட்டைகளாகக் கருதப்படுகின்றன. அவற்றைக் கைப்பற்றுவது, டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் (Lukansk) பகுதிகளை முழுமையாகக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற கிரெம்ளினின் நீண்டகால இலக்கை அடைய உதவும்.

எனவே, கோஸ்ட்யான்டினிவ்கா நகரை இழப்பது உக்ரைனுக்கு ஒரு உள்ளூர் தோல்வி மட்டுமல்ல. டான்பாஸ் போரின் முழு சமநிலையையும் மாற்றக்கூடிய ஒரு முக்கிய பின்னடைவாக இருக்கும்.

உக்ரைனிய ட்ரோன் இயக்குநர்கள் கூறுவதன்படி, ரஷ்ய வீரர்கள் சிறிய குழுக்களாக நகருக்குள் ஊடுருவி வருகின்றனர். அவர்கள் பலமுறை உக்ரேனிய பாதுகாப்புப் படைகளின் கண்காணிப்பைத் தவிர்த்து நகரின் குடியிருப்பு பகுதிகளில் நுழைகின்றனர். நகர்ப்புறப் போரின் தன்மை காரணமாக, ஒருமுறை எதிரி நகருக்குள் நுழைந்துவிட்டால் அவர்களை வெளியேற்றுவது மிகவும் கடினமாகிறது. கட்டிடங்கள், தொழிற்சாலைகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் நிலத்தடி பாதுகாப்பு அமைப்புகள் போன்றவை தாக்குதல் மற்றும் பாதுகாப்பு இரு தரப்பிற்கும் சவால்களை உருவாக்குகின்றன.

இந்தப் போரில் ட்ரோன்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இரு தரப்பினரும் கண்காணிப்பு, இலக்கு கண்டறிதல் மற்றும் வெடிபொருள் வீச்சு போன்ற பணிகளுக்கு ஆயிரக்கணக்கான ட்ரோன்களைப் பயன்படுத்துகின்றனர். இதனால், போரின் தன்மை பாரம்பரிய டாங்கி மற்றும் பீரங்கி மோதல்களிலிருந்து தொழில்நுட்ப மையப்படுத்தப்பட்ட புதிய கட்டத்திற்குள் நுழைந்துள்ளது.

டான்பாஸை கைப்பற்றும் ரஷ்ய இலக்கு:

ரஷ்ய அதிபர் புட்டின் தலைமையிலான மாஸ்கோ அரசு, டான்பாஸ் பிராந்தியத்தை முழுமையாகக் கைப்பற்றுவதை இந்தப் போரின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக அறிவித்துள்ளது. 2014ஆம் ஆண்டிலிருந்து டான்பாஸ் பிராந்தியத்தில் ரஷ்ய ஆதரவு இயக்கங்கள் செயல்பட்டு வந்தன. பின்னர் 2022ஆம் ஆண்டு தொடங்கிய முழுமையான படையெடுப்பின் போது, ரஷ்யா டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பகுதிகளைத் தனது நாட்டுடன் இணைத்ததாக அறிவித்தது.

ஆனால் நடைமுறையில், இந்த பகுதிகளின் முழுமையான கட்டுப்பாடு இன்னும் ரஷ்யாவிடம் இல்லை. அதனால், கோஸ்ட்யான்டினிவ்கா, கிரமடோர்ஸ்க் மற்றும் ஸ்லோவியான்ஸ்க் போன்ற நகரங்களை கைப்பற்றுவது, அந்த அரசியல் இலக்கை நிஜமாக்குவதற்கான அடுத்த கட்டமாகப் பார்க்கப்படுகிறது.

அரசியல் மற்றும் தேசியவாத நோக்கில் பார்த்தால் டான்பாஸ் ரஷ்யாவுக்கு மிக முக்கியமான பொருளாதார வளமிக்க பிராந்தியமாக உள்ளது. ரஷ்ய ஜனாதிபதி புட்டின் டான்பாஸ் பகுதியில் வாழும் ரஷ்ய மொழி பேசும் மக்களைப் பாதுகாப்பதே தமது நடவடிக்கைகளின் முக்கிய காரணம் என பலமுறை கூறியுள்ளார். டொனெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் பகுதிகளை ரஷ்ய உலகின் (Russkiy Mir) ஒரு பகுதியாகக் கருதும் சிந்தனையும் கிரெம்ளின் அரசியலில் முக்கிய இடம் வகிக்கிறது. இதனால், டான்பாஸின் முழுக் கட்டுப்பாட்டை அடைவது ரஷ்ய தேசியவாத அரசியலுக்கு

ஒரு பெரிய வெற்றியாகக் கருதப்படுகிறது.

டான்பாஸ் பகுதியைக் கைப்பற்றுவதன் மூலம் ரஷ்யா பல இராணுவ மூலோபய முக்கியத்துவ வெற்றியையும் பெறுகிறது. முக்கியமாக கிரிமியாவுக்கும் ரஷ்ய எல்லைக்கும் இடையில் நிலப்பாதை இணைப்பை வலுப்படுத்த முடியும். உக்ரைனின் கிழக்குப் பாதுகாப்பு அமைப்புகளை முறியடிக்க முடியும். எதிர்கால இராணுவ நடவடிக்கைகளுக்கான பாதுகாப்பு வலயத்தை உருவாக்க முடியும்.

அத்துடன் டான்பாஸின் முக்கிய நகரங்களான கிரமடோர்ஸ்க் மற்றும் ஸ்லோவியன்ஸ்க் உக்ரைனின் கிழக்குப் பாதுகாப்பின் மையங்களாகக் கருதப்படுகின்றன. மேலும் பொருளாதார காரணங்கள் பலவற்றையும் இந்த நகரங்கள் வெளிப்படுத்துகின்றன. டான்பாஸ் உக்ரைனின் மிகப்பெரிய தொழில்துறைப் பகுதிகளில் ஒன்றாகும். இப்பகுதியில் நிலக்கரி வளங்கள், உலோக உற்பத்தி நிலையங்கள், மின்சார உற்பத்தி வசதிகள், போக்குவரத்து கட்டமைப்புகள் ஆகியவை ரஷ்யாவுக்கு பொருளாதார மற்றும் தொழில்துறை பலன்களை வழங்கக் கூடியவை.

2024 மற்றும் 2025 காலகட்டங்களில் ரஷ்யப் படைகள் மெதுவான ஆனால் தொடர்ச்சியான முன்னேற்றத்தை மேற்கொண்டன. அவ்தீவ்கா உள்ளிட்ட பல முக்கிய நகரங்கள் வீழ்ந்த பிறகு, தற்போது டொனெட்ஸ்க் மாகாணத்தின் மீதமுள்ள உக்ரைனிய கட்டுப்பாட்டு பகுதிகளைச் சுற்றிவளைக்கும் முயற்சி தீவிரமடைந்துள்ளது.

குறிப்பாக கோஸ்ட்யான்டினிவ்கா, போக்ரோவ்ஸ்க், கிரமடோர்ஸ்க், ஸ்லோவியன்ஸ்க் ஆகிய நகரங்கள் தற்போது ரஷ்ய இராணுவத்தின் முக்கிய இலக்குகளாக உள்ளன. இந்த நகரங்கள் வீழ்ந்தால், டொனெட்ஸ்க் மாகாணத்தின் பெரும்பகுதி ரஷ்ய கட்டுப்பாட்டுக்குள் செல்லக்கூடும் என்று உக்ரைன் அரசு எச்சரித்துள்ளது.

உக்ரைனின் எதிர்த்தாக்குதல்:

இந்த பகுதிகளில் ரஷ்யாவின் இராணுவ முன்னேற்றங்கள் பாரியளவில் இருந்தபோதிலும், உக்ரைன் பல்வேறு தளங் களில் எதிர்த்தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. குறிப்பாக, நீண்ட தூர ட்ரோன் தாக்குதல்கள் மூலம் ரஷ்யாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், எரிபொருள் கிடங்குகள் மற்றும் இராணுவத் தளவாட மையங்களை குறிவைத்து தாக்கி வருகிறது. இந்த தாக்குதல்களின் நோக்கம், ரஷ்யாவின் போர் திறனை பாதிப்பதோடு மட்டுமல்லாமல், போர் முன்னணியி லிருந்து தொலைவில் வாழும் சாதாரண ரஷ்யர்களுக்கும் போரின் தாக்கத்தை உணர்த்துவதாகும்.

மேலும், ரஷ்ய எல்லை பகுதிகள் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட கிரிமியாவை இணைக்கும் முக்கிய விநியோகப் பாதைகளுக்கும் உக்ரைன் தொடர்ந்து அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வருகிறது. இதனால், ரஷ்யாவின் தளவாட மேலாண்மைக்கு கூடுதல் சவால்கள் உருவாகியுள்ளன.

இந்த போரில் இரு தரப்பினருமே முழுமையான வெற்றியை நோக்கிச் செயல்படுவதால், அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கான வாய்ப்பு இன்னும் குறைவாகவே உள்ளது. ரஷ்யா தனது ஆக்கிரமிப்பில் உள்ள பகுதிகளை நிரந்தரமாக வைத்திருக்க விரும்புகிறது. மறுபுறம், உக்ரைன் தனது சர்வதேச அங்கீகாரம் பெற்ற எல்லைகளை முழுமையாக மீட்டெடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது.

மேலும், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் நேட்டோ கூட்டணியின் ஆதரவு உக்ரைனுக்குத் தொடர்ந்து கிடைத்து வருவதால், இந்தப் போர் ஒரு பிராந்திய மோதலைத் தாண்டி, உலக அரசியல் சக்தி சமநிலையை நிர்ணயிக்கும் போட்டியாகவும் மாறியுள்ளது.

தற்போது கோஸ்ட்யான்டினிவ்காவைச் சுற்றியுள்ள தற்போதைய மோதல், ரஷ்யா-உக்ரைன் போரின் அடுத்த முக்கிய கட்டத்தை நிர்ணயிக்கக்கூடியதாக உள்ளது. நகரம் ரஷ்யக் கட்டுப்பாட்டுக்குள் சென்றால், டான்பாஸின் மீதமுள்ள முக்கிய நகரங்கள் நேரடி அச்சுறுத்தலுக்கு உள்ளாகும். அதே நேரத்தில், உக்ரைன் இந்த நகரத்தைத் தக்கவைத்துக் கொண்டால், ரஷ்யாவின் டான்பாஸ் முழுமையான கைப்பற்றும் திட்டம் மேலும் தாமதமடையும்.

எனவே, கோஸ்ட்யான்டினிவ்கா நகரின் எதிர்காலம் ஒரு நகரின் நிலைமையை மட்டுமல்ல, முழு டான்பாஸ் போரின் போக்கையும், ரஷ்யா-உக்ரைன் போரின் அடுத்த அரசியல் மற்றும் இராணுவ அத்தியாயத்தையும் தீர்மானிக்கக்கூடிய முக்கியக் காரணியாக மாறியுள்ளது.

கரும்புலிகள் நாள்

யூலை – 05

சுவிஸ் பேச்சுவார்த்தை தோல்வியா? மிரட்டல் அரசியலும் இராஜதந்திர சோதனையும்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

22.06.2026

சுவிட்சர்லாந்தில் நடைபெற்று வரும் அமெரிக்கா-ஈரான் உயர் மட்ட பேச்சுவார்த்தைகள் உலக அரசியல் வட்டாரங்களில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளன. குறிப்பாக, அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்டதாகக் கூறப்படும் கடுமையான எச்சரிக்கைச் செய்தியைத் தொடர்ந்து, ஈரானிய தூதுக்குழுவினர் பேச்சுவார்த்தை அறையை விட்டு வெளியேறிய சம்பவம், இந்தச் சந்திப்புகள் முற்றிலும் தோல்வியடைந்து விட்டதா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

இருப்பினும், ஈரான் தூதுக்குழு பேச்சுவார்த்தை மேசையை விட்டு வெளியேறுவது மட்டுமே ஒரு ஒப்பந்தத்தின் முடிவைக் குறிக்காது. பல சந்தர்ப்பங்களில் இது அரசியல் அழுத்தங்களை சமாளிக்கவும், எதிர் தரப்பிற்கு ஒரு வலுவான செய்தியை அனுப்பவும் பயன்படுத்தப்படும் இராஜதந்திர உத்தியாகவும் இருக்கலாம்.

இந்தச் சம்பவத்தின் மையத்தில் அமெரிக்காவின் பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஆதிக்கம் குறித்த நிலைப்பாடுகளும், ஈரானின் தேசிய இறையாண்மை மற்றும் பிராந்திய செல்வாக்கைப் பாதுகாக்கும் நோக்கமும் உள்ளன. லெபனானில் செயல்படும் ஹிஸ்புல்லா இயக்கத்தின் நடவடிக்கைகள், ஹார்முஸ் நீரிணையின் பாதுகாப்பு, மற்றும் மத்திய கிழக்கில் அமெரிக்காவின் இராணுவப் பங்கு ஆகியவை இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றத்தின் முக்கிய காரணிகளாக உள்ளன.

ட்ரம்ப்பின் இராணுவ அச்சுறுத்தல்:

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் விடுத்த கடுமையான இராணுவ அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து, சுவிட்சர்லாந்தின் பர்கென்ஸ்டாக் நகரில் அமெரிக்கக் குழுவுடன் நடந்து வந்த உயர்மட்டப் பேச்சுவார்த்தை அறையை விட்டு ஈரானிய தூதுக் குழுவினர் கோபத்துடன் வெளியேறும் அதிர்ச்சி வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவலாக தற்போது வெளியாகியுள்ளன. சுவிட்சர்லாந்தில் அமெரிக்கத் துணை அதிபர் ஜே.டி. வேன்ஸ், பாகிஸ்தான் மற்றும் கத்தார் நாட்டு மத்தியஸ்தர்களுடன் ஈரானியக் குழுவினர் முக்கியப் பேச்சுவார்த்தையில் அமர்ந்திருந்த அதே நேரத்தில், அமெரிக்காவில் இருந்தபடி அதிபர் ட்ரம்ப் தனது சமூக வலைத்தள பக்கத்தில் பதிவிட்ட மிரட்டலே இதற்கு நேரடிக் காரணமாகும்.

அதிபர் ட்ரம்ப் வெளியிட்ட தனது பதிவில், லெபனானில் பெரும் தொல்லைகளைக் கொடுத்து வரும் தங்களது “நிழல்” (Proxy) அமைப்பான ஹிஸ்புல்லாவை ஈரான் உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டும். அவர்கள் அமைதியைக் குலைப்பதை நிறுத்தவில்லை என்றால், கடந்த வாரம் நாங்கள் ஈரானைத் தாக்கியதை விடவும் மிகக் கொடூரமாக மீண்டும் தாக்குவோம். அது மட்டுமின்றி, ஹார்முஸ் நீரிணையை நாங்கள் எங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவோம். மீறி நீரிணையை மூட நினைத்தால், ஈரானிய தூதுக்குழுவினர் சொந்த நாட்டிற்கு உயிரோடு திரும்ப மாட்டார்கள் என்று மிக அநாகரீகமான முறையில் ட்ரம்ப் அச்சுறுத்தல் விடுத்திருந்தார்.

அதிபர் ட்ரம்பின் இந்தத் தரம் தாழ்ந்த மிரட்டல் செய்தி பேச்சுவார்த்தை மேசைக்கு வந்ததும், ஈரானிய தூதுக்குழுவின் தலைவரும் நாடாளுமன்ற சபாநாயகருமான முகமது பாகர் காலிபாஃப் கடும் ஆத்திரமடைந்தார். இதையடுத்து அமெரிக்கர்களுடன் கை குலுக்கலையோ அல்லது கூட்டுப் புகைப்படத்தையோ அடியோடு மறுத்த காலிபாஃப், கத்தார் மத்தியஸ்தர்களுடன் அவசரமாக ஆலோசனை நடத்திவிட்டு, தனது குழுவினருடன் அரங்கிலிருந்து உடனடியாக வெளியேறினார்.

பேச்சுவார்த்தையில் இருந்து வெளியேறும் போது செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

அமெரிக்கர்கள் பேசும் போது வார்த்தைகளை மிகவும் எச்சரிக்கையுடன் பயன்படுத்த வேண்டும். தங்களது மிரட்டல்களுக்குப் பணிய ஈரான் ஒன்றும் சாதாரண நாடு அல்ல. எங்கள் நாட்டு இராணுவப் படைகள் அமெரிக்காவின் எந்தவொரு அச்சுறுத்தலையும் முற்றிலும் வேறு வடிவில் எதிர்கொள்ளத் தயாராக உள்ளன. அவர்கள் வெறும் வாயில் பேசுவார்கள், ஆனால் களத்தில் நாங்கள்தான் செயலில் காட்டுவோம், என முகமது பாகர் காலிபாஃப், ஈரானிய நாடாளுமன்ற சபாநாயகர். தெரிவித்தார்.

ஈரானிய தூதுக்குழுவினர் பேச்சுவார்த்தை அறையை விட்டு வெளியேறிய வீடியோ காட்சிகள் உலகளவில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தாலும், இந்த அமைதிப் பேச்சுவார்த்தை முற்றிலும் முறிவடையவில்லை என்று தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன:

இந்த சமாதான ஒப்பந்தத்தின் பின்னணியில் உழைக்கும் பாகிஸ்தான் மற்றும் கத்தார் நாட்டு இராஜதந்திரிகள், இரு தரப்பையும் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வரத் திரைமறைவில் தீவிரமாக உழைத்து வருகின்றனர்.

ஈரானுக்கு அவமானமா அழுத்தமா?

பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் அமெரிக்கத் தலைமைத்துவத்திலிருந்து வந்ததாகக் கூறப்படும் கடுமையான எச்சரிக்கை, ஈரானிய தரப்பில் அவமானமாகவும் அழுத்தமாகவும் பார்க்கப்பட்டிருக்கலாம். குறிப்பாக, எந்த ஒரு நாட்டின் பிரதிநிதிகளும் தங்களது தேசிய மரியாதைக்கு சவாலாகக் கருதப்படும் கருத்துக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே, ஈரானியக் குழுவினர் வெளியேறிய முடிவு, சர்வதேச அரங்கில் தங்களது உறுதியை வெளிப்படுத்தும் அரசியல் நடவடிக்கையாகவும் பார்க்கப்படுகிறது.

> **சுவிசில் நடைபெறும் மத்திய கிழக்கு சமாதான பேச்சுவார்த்தை அறையிலிருந்து ஈரானியத் தரப்பு வெளியேறியது ஒரு கடுமையான அரசியல் எதிர்ப்பின் வெளிப்பாடாக இருந்தாலும், பேச்சு வார்த்தையை தொடர மற்றய மத்தியஸ்த நாடுகள் தொடர்ந்து முயற்சித்து வருவதும், உரையாடலுக்கான வாயில் இன்னும் மூடப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றன.**
>
> **ஈரான் தூதுக்குழு பேச்சுவார்த்தை மேசையை விட்டு வெளியேறுவது மட்டுமே ஒரு ஒப்பந்தத்தின் முடிவைக் குறிக்காது. பல சந்தர்ப்பங்களில் இது அரசியல் அழுத்தங்களை சமாளிக்கவும், எதிர் தரப்பிற்கு ஒரு வலுவான செய்தியை அனுப்பவும் பயன்படுத்தப்படும் இராஜதந்திர உத்தியாகவும் இருக்கலாம் என்றும் சர்வதேச அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது**

ஆனால், இந்த நிகழ்வை பேச்சுவார்த்தை முழுமையான தோல்வி என்று உடனடியாக வரையறுப்பது அவசரமான முடிவாக இருக்கும். ஏனெனில், பேச்சுவார்த்தைகளின் அடிப்படை நோக்கங்கள் இன்னும் தீர்க்கப்படாத முக்கிய பிரச்சினைகளைச் சுற்றியே உள்ளன. லெபனானில் நிலவும் பாதுகாப்பு சூழல், பிராந்திய பதற்றத்தைக் குறைப்பது, ஈரானின் வெளிநாட்டு சொத்துக்களின் முடக்கம், பொருளாதாரத் தடைகள் மற்றும் எண்ணெய் ஏற்றுமதியைச் சார்ந்த விவகாரங்கள் போன்றவை இரு தரப்பினருக்கும் முக்கியமானவை.

இந்த நிலையில், கத்தார் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் மத்தியஸ்தர்களாக செயல்படுவது குறிப்பிடத்தக்கது. சமீப ஆண்டுகளில் கத்தார், பல சர்வதேச மோதல்களில் வெற்றிகரமான இடைத்தரகராக செயல்பட்ட அனுபவம் கொண்டுள்ளது. அதேபோல், பாகிஸ்தானும் இஸ்லாமிய உலகத்துடனும் மேற்கத்திய நாடுகளுடனும் உறவுகளைப் பேணும் நிலையில் இருப்பதால், இரு தரப்பினருக்கும் இடையே பாலமாகச் செயல்படக் கூடிய வாய்ப்பைக் கொண்டுள்ளது.

உண்மையில், இராஜதந்திர வரலாற்றைப் பார்த்தால், முக்கியமான பல ஒப்பந்தங்கள் கடுமையான கருத்து வேறுபாடுகள், தற்காலிக புறக்கணிப்புகள் மற்றும் பதற்றமான தருணங்களுக்குப் பிறகே எட்டப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டின் ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்தை உருவாக்கிய பேச்சுவார்த்தைகளும் பல முறை முட்டுக்கட்டைகளை சந்தித்த பின்னரே வெற்றியடைந்தன. எனவே, ஒரு தற்காலிக வெளியேற்றம் பேச்சுவார்த்தையின் முடிவை குறிக்க வேண்டிய அவசியமில்லை.

அதே நேரத்தில், இந்தச் சம்பவம் ஒரு முக்கியமான உண்மையையும் வெளிப்படுத்துகிறது. அதாவது, மிரட்டல்களும் இராணுவ அழுத்தங்களும் சில நேரங்களில் பேச்சுவார்த்தை செயல் முறையை பலவீனப்படுத்தக்கூடும். எந்த ஒரு அமைதி முயற்சியும் பரஸ்பர மரியாதை மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் மட்டுமே முன்னேற முடியும். ஒருபுறம் அழுத்தம் செலுத்தும் மொழியும் மறுபுறம் தேசிய பெருமிதத்தை முன்னிறுத்தும் அரசியலும் நிலவும்போது, உடன்பாட்டை எட்டுவது மிகவும் கடினமாகிறது.

ஈரானின் அரசியல் நிலைப்பாடு:

ஈரானின் பார்வையில், வெளிப்படையான அச்சுறுத்தலுக்கு உடனடியாகப் பதிலளிக்காமல் இருந்தால் அது உள்நாட்டில் பலவீனமாகக் கருதப்படலாம். அதேபோல், அமெரிக்க நிர்வாகமும் தனது கூட்டாளிகள் மற்றும் உள்நாட்டு அரசியல் ஆதரவாளர்களிடம் உறுதியான நிலைப்பாட்டைக் காட்ட வேண்டிய கட்டாயத்தில் இருக்கலாம். இதனால், இரு தரப்பினரும் தங்களது அரசியல் தேவைகளுக்காக கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தினாலும், மறுபுறம் பேச்சுவார்த்தை வாயில்களை திறந்தே வைத்திருக்க முயற்சிப்பதும் சாதாரணமான ஒன்றாகும்.

சுவிஸ் பேச்சுவார்த்தை தோல்வியடைந்துவிட்டதா என்ற கேள்விக்கு தற்போதைய சூழலில் இலகுவாக பதிலை வழங்க முடியாது. பேச்சுவார்த்தை அறையிலிருந்து ஈரானியத் தரப்பு வெளியேறியது ஒரு கடுமையான அரசியல் எதிர்ப்பின் வெளிப்பாடாக இருந்தாலும், அவர்கள் இன்னும் சுவிட்சர்லாந்திலேயே தங்கி இருப்பதும், மத்தியஸ்த நாடுகள் தொடர்ந்து முயற்சித்து வருவதும், உரையாடலுக்கான வாயில் இன்னும் மூடப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றன.

ஈரான் பேச்சுவார்த்தை குழுவினர் வெளியேறியது இந்த நிகழ்வின் தோல்வியின் அறிகுறியாக அல்ல; மாறாக, இராஜதந்திரத்தின் மிகவும் கடினமான மற்றும் பதற்றமான கட்டமாகக் கருதப்படலாம். அடுத்த சில வாரங்களில் இரு தரப்பினரும் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்புகிறார்களா என்பதுதான், இந்த முயற்சி உண்மையில் தோல்வியடைந்ததா அல்லது புதிய ஒப்பந்தத்திற்கு வழிவகுத்ததா என்பதை தீர்மானிக்கும்.

புயலாக மாறும் பிஞ்சுகள்

– மலரன்னை –

சிறுகதை

யன்னலினூடாகப் புகுந்த மாலை வெயிலின் உறைப்பு. எண்ணங்களை அலைய விட்டபடி தையல் வேலையில் மூழ்கிப் போயிருந்த மைதிலி, தன் நிலைக்குத் திரும்பினாள்.

“நேரத்தோடை போனால்தான் கடைகள் பூட்டமுந்தித் தையலுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு வந்திடலாம். பொங்கலுக்கு இன்னும் மூண்டு நாள்தானே கிடக்கு. அதுக்கிடையிலை கிடக்கிற சட்டையள் எல்லாம் தைச்சு முடிக்க வேணும். எல்லாரும் பொங்கலுக்குப் போகவேணும் எண்டு சொல்லித்தான் தைக்கத் தந்தவை”

தனக்குள் சொல்லிய படி மைதிலி தையல் மெசினை மூடிவிட்டு எழுந்தாள்.

“அம்மா என்னையும் கூட்டிக் கொண்டு போறீங்களே, கடைக்கு என்றாள், தர்சினி.

“இல்லைக் குஞ்சு, நீங்கள் பக்கத்து வீட்டு வாணி அக்காவோடை விளையாடிக் கொண்டிருங்கோ. நான் டக்கெண்டு போயிட்டு வந்திடுறன். பிள்ளைக்குச் சொக்கா வாங்கிக் கொண்டு வாறன்” என்று சொல்லிக்கொண்டு அவசரமாகப் புறப்பட்ட மைதிலி, தர்சினியைப் பக்கத்து வீட்டில் விட்டு விட்டு, ஒழுங்கையில் இறங்கி விறுவிறென்று நடந்தாள். பொழுது சரிவதற்குள் தண்ணீரூற்றுக்குப் போய்த் திரும்பிவிட வேண்டுமென்ற அவசரம் அவளுக்கு.

தர்சினியும் வாணியும் ‘பில்டிங் புளொக்ஸ்’ ஸைப் பரப்பி, பல விதமான உருவ அமைப்புக்களைச் செய்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

இருந்தாற்போல் வாணிக்கு வற்றாப்பளைப் பொங்கல் ஞாபகம் வரவே, “தர்சினி அம்மாட்டைக் எங்க கேட்டிட்டுப் பொங்கலுக்குப் போறதுக்கு நீர் எங்களோடை வாருமன், எங்கட மெசினிலை போகலாம். கனபேர் வருவினம், எங்கட மெசினிலை போற துக்கு. உங்கட அம்மாதான் கோயிலுக்குப் போறதில்லையே”

ஆறு வயது நிரம்பிய தர்சினி சொன்னாள்: “அம்மா சொன்னவா, அப்பாவும், அண்ணாவும் சாமியிட்டைப் போட்டினமாம். அதால அவையைத் தான் கும்பிட வேணுமாம். நாங்கள் ஒவ்வொரு நாளும் அவையின்ரை படத்துக்குத் தான் பூவைச்சு, குத்து விளக்குக் கொளுத்திக் கும்பிடுற நாங்கள்”

இதைக் கேட்டுக் கொண்டிருந்த வாணியின் அம்மம்மா, “எடி விசரி, அவளைக் கோயிலுக்கு ஏன் கூப்பிடுறாய்? போன வருசம் பொங்கலுக்கு எண்டு, போய்த்தானே மைதிலி புருசனையும், புள்ளையையும் பறிகொடுத்தவள். பாவம்! …அவளுக்கு இந்த முறை கோயிலுக்குப் போக மனம் வருமே?”

தர்சினி குறுக்கிட்டாள். அப்பாவும் “அம்மம்மா, அப்பாவும், அண்ணாவும் இந்தப் பொங்கலுக்கு வந்திடுவினமே; சாமி இனி விட்டிடுவரே”

வாணியின் அம்மம்மாவின் நிலை தர்மசங்கட மாகியது.

“பிள்ளை தர்சினி, உன்ரை அப்பாவும், அண்ணாவும் செத்துப் போட்டிடினம். செத்தவை திரும்பி வரமாட்டினம். இது தெரியாதே உனக்கு”

தர்சினி வெடுக்கென்று கேட்டாள்.

“ஏன் அம்மம்மா பொய் சொல்லுறியள். அப்பாவும் அண்ணாவும் சாமியிட்டைத் தானே போனவை. முந்தி, நீங்கள் தானே என்னைத் தூக்கிக் காட்டின நீங்கள் அப்பா, சாமி மாதிரி கண்ணை மூடிக் கொண்டு இருந்தவர். மாலையள் எல்லாம் போட்டு சாமியைத் தூக்கிற மாதிரித்தானே தூக்கிக் கொண்டு போனவை. எல்லாருந்தானே சொன்னவை அப்பா சாமியிட்டைப் போட்டார் எண்டு”

“எடி பிள்ளை; நான் என்னெண்டு உனக்கு விளங்கப்படுத்துறது. போன வருசம் பொங்கலுக்கு, அப்பாவும் நீங்களும் போன நீங்களெல்லோ”

“ஓம் அம்மம்மா, போனநாங்கள்”

“அப்பத்தான் ஆமிக்காரன் காம்பிலை இருந்து ஷெல் அடிச்சவன். சனக் கூட்டத்துக்கை ஷெல் விழுந்து கனசனம் செத்துப் போச்சுதுகள். அதிலை கொப்பரும் கொண்ணையும் செத்துப் போச்சினமடி”

“அம்மம்மா ஷெல் எண்டால் என்ன? நாங்கள் கோயிலுக்கு வெளியாலை நிக்கைக்க இடி முழக்கம் கேட்டுது. நான் பயத்தில கண்ணை இறுக்கி மூடிட்டன்”

“எடி பிள்ளை. உன்னைத் தூக்கி எறிஞ்சுபோட்டுது. நீ மயங்கிப் போனாய் கனபேர் ரெத்த வெள்ளத்துக்க கிடந்தவை. எக்கச்சக்கமான ஆக்கள் காயப்பட்டு அதுக்கை கிடந்தவை. அதிலை தான் கொம்மாவுக்கும், கையிலை காயம் பட்டு மூண்டு விரல் இல்லாமல் போட்டுது. கொம்மாவின்ர கையைப் பாத்தனியல்லோ, எல்லா விரலும் இருக்குதோ?”

“அம்மம்மா, நீங்கள் சொல்லுறது சரிதான். எண்டாலும் நீங்களும் எனக்குப் பொய்தானே சொல்லிப் அப்பா போட்டியள், சாமியிட்டைப் போட்டாரெண்டு”

“நீ சின்னப்பிள்ளை. பயந்திடுவாய் எண்டுதான் அப்பிடிச் சொன்னது”

“அம்மம்மா, அப்ப எங்கட அப்பாவும் அண்ணாவும் வர மாட்டினமோ”

இலேசான சிணுக்கத் துடன் கேட்டாள் தர்சினி.

“என்னெண்டு பிள்ளை வாறது. செத்தால் செத்ததுதான். பிறகு வர ஏலாது”

அம்மம்மாவிற்குப் பெரியதொரு உண்மையை அந்தப் பிஞ்சு நெஞ்சத்திற்கு உணர வைத்துவிட்ட பெருமை.

”தர்சினி! தர்சினி!!”, மைதிலி தண்ணீரூற்றுக்குப் போய்த் திரும்பி விட்ட அறிகுறி.

“வாறன் அம்மா” என்று கூவியபடி ஓடினாள் தர்சினி. அம்மா, அன்போடு வாங்கி வந்து கொடுத்த சொக்லேட் அவளுக்குச் சுவைக்கவில்லை; அம்மம்மா புரிய வைத்த உண்மை சுவையை மழுப்பிவிட்டது. இரவு சாப்பிடும்போது தர்சினி அம்மாவிடம் கேட்டாள்.

“அம்மா காம்பிலையோ ஆமிக்காரர் இருப்பினம்? ஏன் அம்மா ஷெல் அடிக்கிறவை? ஆக்களைக் கொல்லவோ?”

திடுக்கிட்டாள் மைதிலி. “தர்சினி, ஆர் சொன் னது உதெல்லாம்?”

“வாணியின்ரை அம்மம்மா தான் சொன்னவ. எனக்கு எல்லாம் தெரிஞ்சு போச்சு. அப்பாவும், அண்ணாவும் இனி வரமாட்டினம். நீங்கள் பொய் சொல்லிப் போட்டியள்.”

அம்மாவின் முகத்தைப் பார்த்த தர்சினி துணுக் குற்றாள். கண்ணீர் அருவியாய் வழிந்தோட – குரல் தழுதழுக்க – மைதிலி தன் மகளை இறுக அணைத்துக் கொண்டாள்.

அன்று வைகாசிப் பொங்கல் நாள். ஊரே அமளிப்பட்டது. மைதிலிக்கு மனமே சரியில்லை. அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. கடந்த வருட நிகழ்வுகள் நினைவில் நிழலாடின.

வீட்டில் எல்லோருக்கும் கணவன் புது உடுப்புகள் வாங்கி வந்தது; எல்லோரும் தடபுடலாய் வெளிக்கிட்டுக் கோயிலுக்குப் போனது; பிறகு தான் மயக்கம் தெளிந்து விழித்த போது யாழ்.போதனா வைத்தியசாலையில் கையில் கட்டுப் போட்ட நிலையில் கிடந்தது; தனது கணவன் பிள்ளையின் சடலங்களைக் கூடக் காணக்கிடைக்காமற் போனது; தனது ஒரே பற்றுக்கோடாகிய மகள் தர்சினியை வளர்த்து ஆளாக்கி விட வேண்டுமெனத்தான் திடசங்கற்பம் பூண்டது; தன் எண்ணங்களை, கணவனையும், மகனையுமே நினைத்து நினைத்து அலையவிடாமல் ஒரு நிலைப்படுத்தத் தனக்குத்தெரிந்த தையற் கலையைத் தேர்ந்தெடுத்தது என்று எல்லா வற்றையும் அசை போட்ட வண்ணம் அமர்ந்திருந்தாள்.

அப்பொழுது “அம்மா, அண்ணா இனி வரமாட்டானெல்லே. அவன் விளையாடுற “ஆமிசெற்“றை அலு மாரிக்குள்ள வைச்சிருக்கிறீர்கள். அதை எடுத்து தாங்கோம்மா, நான் விளையாடப்போறன்” என்று கெஞ்சினாள் தர்சினி.

பிஞ்சு உள்ளத்தை நோக விடக்கூடாது என்ற நோக்குடன், அலுமாரியைத் திறந்து அதைத் தேடி எடுத்துக் கொடுத்தாள் மகளிடம்.

“கவனமாய் வைச்சிருக்க வேணும் குஞ்சு, அண்ணையின்ரை கைபட்ட பொருளெண்டுதான் பக்குவமாய் வைச்சிருந்தனான்”

அவளது வார்த்தைகளை முந்திவிட்டன, கண்ணீர்த்துளிகள்.

தர்சினி அதைக் கவனிக்கவில்லை. “ஆமி செற்” கையில் கிடைத்த மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தபடி ஓடினாள்.

இடையில் அறுபட்ட நினைவுகள் மீண்டும் தொடர்ந்தன. நீண்ட நேரமாக அப்படியே சமைந்து விட்டாள். ஏதோ எரிந்து கருகும் மணம் மூக்கைத் துளைக்கவே மைதிலிக்குத் தான் அடுப்பில் அரிசிவேக வைத்த நினைவு வந்தது. அவசரமாகக் குசினியை நோக்கி விரைந்தாள்.

குசினிக்குள் யாரோ கதைப்பது போல் குரல் கேட்டது. கிட்டப் போன பின்தான் அது தர்சினியின் குரல் என்று புரிந்தது. ‘தர்சினி யாரோடு கதைக்கிறாள்’ என்று எண்ணிய வாறு குசினிக்குள் நுழைந்தவள், துணுக்குற்று அப்படியே நின்று விட்டாள்.

ஆமி செற்றில் இருந்த ஆமியின் உருவங்களை ஒவ்வொன்றாக எடுத்து ஒரு தடியினால் அடித்து, அடித்து எரியும் அடுப்புக்குள் போட்டுக் கொண்டிருந்தாள் தர்சினி.

“டேய்! ஆமிக்காரா நீ தானே அடிச்சு ஆக்களைக் கொல்லுறது? இனி மேல் அடிப்பியா! சொல்லுடா! சொல்லுடா! உன்னை அடுப்புக்கை போட்டு எரிச்சாத்தான் சரி; அப்பதான் இனி அடிக்க மாட்டாய்”

உரத்து ஏசியபடி, கருகி எரியும் அந்த உருவங்களை உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் தர்சினி.

- வெளிச்சம் 07.1993

தென்னாபிரிக்க சுவெட்டோ கிளர்ச்சி: இனவெறி ஆட்சிக்கு எதிரான மாணவர் எழுச்சி!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

18.06.2026

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாக 1976 ஆம் ஆண்டு யூன் 16 அன்று, தென்னாப்பிரிக்காவின் ஜொகன்னஸ்பர்க் நகரத்திற்கு அருகிலுள்ள சுவெட்டோ (Soweto - South WesternTownships) நகரப்பகுதியில் ஆயிரக்கணக்கான பள்ளி மாணவர்கள் அமைதியான பேரணியில் ஈடுபட்டனர். ஆனால், அந்த அமைதியான போராட்டம் காவல்துறையின் கொடூரமான துப்பாக்கிச் சூட்டால் இரத்தக் களரியாக மாறியது. இந்த சம்பவம் உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தி, அன்றைய தென்னாபிரிக்க இனவெறி அரசின் கொடுமைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தது.

தென்னாப்பிரிக்காவின் வரலாற்றில் மட்டுமல்ல, உலக மனித உரிமைப் போராட்ட வரலாற்றிலும் அழியாத இடத்தைப் பெற்ற ஒரு முக்கியமான நிகழ்வாக சுவெட்டோ கிளர்ச்சி (Soweto Uprising) விளங்குகிறது. இனவெறி மற்றும் நிறவெறியை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி செய்த வெள்ளை சிறுபான்மை அரசுக்கு எதிராக, கறுப்பின பள்ளி மாணவர்கள் முன்னெடுத்த இந்தப் போராட்டம், ஒரு கல்வி உரிமைப் போராட்டமாகத் தொடங்கி, பின்னர் தென்னாப்பிரிக்க விடுதலை இயக்கத்திற்கு மிகப்பெரிய உந்து சக்தியாக மாறியது.

1976 ஆம் ஆண்டு யூன் 16 அன்று, தென்னாப்பிரிக்காவின் ஜொகன்னஸ்பர்க் நகரத்திற்கு அருகிலுள்ள சுவெட்டோ (Soweto - South Western Townships) நகரப்பகுதியில் ஆயிரக்கணக்கான பள்ளி மாணவர்கள் அமைதியான பேரணியில் ஈடுபட்டனர். ஆனால், அந்த அமைதியான போராட்டம் காவல்துறையின் கொடூரமான துப்பாக்கிச் சூட்டால் இரத்தக் களரியாக மாறியது. இந்த சம்பவம் உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தி, தென்னாப்பிரிக்க இனவெறி அரசின் கொடுமைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தது.

தென்னாபிரிக்க நிறவெறி ஆட்சி

தென்னாப்பிரிக்காவின் வரலாற்றில் மிகக் கருமையான அத்தியாயங்களில் ஒன்றாக நிறவெறி ஆட்சி கருதப்படுகிறது. 1948 முதல் 1994 வரை நடைமுறையில் இருந்த இந்த அரசியல் மற்றும் சமூக அமைப்பு, மக்களை அவர்களின் இன அடிப்படையில் பிரித்து, வெள்ளையர்களுக்கு மட்டுமே அரசியல், பொருளாதார மற்றும் சமூக அதிகாரங்களை வழங்கியது. இதன் விளைவாக, கருப்பின மக்களும் மற்ற இனக் குழுக்களும் பல்வேறு உரிமைகளை இழந்து கடுமையான ஒடுக்குமுறைக்கு உள்ளாகினர்.

1652 ஆம் ஆண்டு டச்சு குடியேற்றவாசிகள் தென்னாப்பிரிக்காவில் குடியேறத் தொடங்கியதிலிருந்து இன அடிப்படையிலான வேறுபாடுகள் உருவாகின. பின்னர் பிரித்தானிய ஆட்சியும் அந்தப் பிரிவினையை மேலும் வலுப்படுத்தியது. 1948 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த தேசியவாதக் கட்சி (National Party), நிறவெறி என்ற கொள்கையை அதிகாரப் பூர்வமாக அறிமுகப்படுத்தியது. "Apartheid" என்பது ஆஃப்ரிகான்ஸ் மொழியில் "பிரித்து வைத்தல்" என்று பொருள்படும்.

நிறவெறி ஆட்சியின் கீழ் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. மக்கள் வெள்ளையர், கருப்பினர், கலப்பினத்தவர் மற்றும் இந்திய வம்சாவளியினர் என இன அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டனர்.

வெவ்வேறு இனத்தவர்கள் ஒன்றாக வாழ்வதற்கும் திருமணம் செய்வதற்கும் தடைகள் விதிக்கப்பட்டன. அத்துடன் கருப்பின மக்களுக்கு தனித்த குடியிருப்பு பகுதிகள் ஒதுக்கப்பட்டன. மேலும் நகரங்களுக்குள் நுழைய கருப்பின மக்கள் "பாஸ் புத்தகம்" (Pass Book) வைத்திருக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. அத்துடன் கல்வி, மருத்துவம், போக்குவரத்து மற்றும் பொது சேவைகள் அனைத்தும் இன அடிப்படையில் பிரிக்கப்பட்டன.

இனவெறி ஆட்சி கல்விக் கொள்கை

இத்தகைய நிறவெறி சூழலிலேயே சுவெட்டோ கிளர்ச்சி உருவாகியது. இதன் பின்னணியைப் புரிந்துகொள்ள, அன்றைய தென்னாப்பிரிக்காவின் அப்பார்தெய்ட் (Apartheid) எனப்படும் இனப் பிரிவினைக் கொள்கையை அறிந்துகொள்ள வேண்டும். 1948 முதல் நடைமுறையில் இருந்த இந்த அமைப்பு, வெள்ளையின மக்களுக்கு அரசியல், பொருளாதார மற்றும் சமூக ஆதிக்கத்தை வழங்கியது. கறுப்பின மக்கள் அடிப்படை உரிமைகளில் இருந்து திட்டமிட்டு விலக்கப்பட்டனர்.

கல்வித் துறையிலும் இந்தப் பாகுபாடு தீவிரமாக இருந்தது. கறுப்பின மாணவர்களுக்கான பள்ளிகள் குறைந்த நிதியுடன் இயங்கின. ஆசிரியர் பற்றாக்குறை, தரமற்ற கட்டமைப்பு மற்றும் குறைந்த கல்வி வாய்ப்புகள் காரணமாக அவர்கள் சமமான கல்வியைப் பெற முடியாத நிலை இருந்தது.

இந்நிலையில், 1974 ஆம் ஆண்டு இனவெறி அரசு புதிய கல்வி ஆணையை வெளியிட்டது. அதன்படி, கறுப்பினப் பள்ளிகளில் கணிதம், அறிவியல், வரலாறு போன்ற முக்கிய பாடங்களை ஆபிரிக்கான்ஸ் (Afrikaans) மொழியில் கற்பிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டது.

ஆபிரிக்கான்ஸ் என்பது தென்னாப்பிரிக்காவில் ஆட்சி செய்த வெள்ளை இன மக்களின் முக்கிய மொழியாக இருந்தது. பெரும்பாலான கறுப்பின மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அந்த மொழியில் போதிய அறிவு இல்லை. மேலும், பல கறுப்பின மக்கள் அந்த மொழியை ஒடுக்குமுறை ஆட்சியின் அடையாளமாகக் கருதினர். இதனால், மொழித்திணிப்பு என்பது வெறும் கல்விக் கொள்கை பிரச்சினையாக இல்லாமல், தங்களின் அடையாளம், கண்ணியம் மற்றும் உரிமைகளுக்கு எதிரான தாக்குதலாக மாணவர்களால் பார்க்கப்பட்டது.

மாணவர்களின் அமைதிப் பேரணி

1976 யூன் 16 அன்று, சுவெட்டோ மாணவர்கள் பிரதிநிதிகள் குழு (Soweto Students Representative Council - SSRC) மற்றும் கறுப்பின விழிப்புணர்வு இயக்கம் (Black Consciousness Movement) ஆகியவை இணைந்து ஒரு அமைதியான பேரணியை ஏற்பாடு செய்தன. சுமார் 10,000 முதல் 20,000 வரையிலான பள்ளி மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர். அவர்கள் கைகளில் பதாகைகளை ஏந்தி, ஆபிரிக்கான்ஸ் மொழித் திணிப்புக்கு எதிராகவும், சமமான கல்வி உரிமைக்காகவும் முழக்கங்களை எழுப்பினர்.

மாணவர்கள் ஆயுதமற்றவர்களாகவும் அமைதியான முறையிலும் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆனால், அரசு அவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, காவல்துறையை அனுப்பி போராட்டத்தை அடக்க முயன்றது.

ஆபிரிக்கான்ஸ் மொழித் திணிப்புக்கு எதிராகவும், சமமான கல்வி உரிமைக்காகவும் முழக்கங்களை எழுப்பி பேரணியில் கலந்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்த போது, ஆயுதம் ஏந்திய காவல்துறையினர் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். மாணவர்கள் கலைந்து செல்ல மறுத்த நிலையில், காவல்துறை முதலில் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியது. பின்னர் நிலைமை மேலும் மோசமடைந்து, துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

தற்காப்பற்ற பள்ளி மாணவர்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அந்த நாளில் பல மாணவர்கள் உயிரிழந்தனர் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். இந்த சம்பவத்தின் மிகச் சக்திவாய்ந்த அடையாளமாக மாறியது 12 வயது சிறுவன் ஹெக்டர் பீட்டர்சன் (Hector Pieterson) என்பவரின் மரணம். துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த ஹெக்டரை மற்றொரு மாணவர் தூக்கிக்கொண்டு ஓடும் காட்சி, அவரது சகோதரி அருகில் அழுதுகொண்டு ஓடும் காட்சி ஆகியவை புகைப்படக் கலைஞர் சாம் நசிமா (Sam Nzima) அவர்களால் பதிவு செய்யப்பட்டன. அந்தப் புகைப்படம் உலகம் முழுவதும் வெளியாகி, தென்னாப்பிரிக்க இனவெறி ஆட்சியின் மனிதாபிமானமற்ற முகத்தை வெளிப்படுத்தியது.

மாணவர் போராட்ட தாக்கம்

சுவெட்டோவில் ஏற்பட்ட கிளர்ச்சி அடுத்தடுத்த நாட்களில் தென்னாப்பிரிக்காவின் பல பகுதிகளுக்கும் பரவியது. மாணவர்கள் மட்டுமல்லாமல், தொழிலாளர்கள், சமூக அமைப்புகள் மற்றும் மனித உரிமை ஆதரவாளர்களும் இனவெறி அரசுக்கு எதிராக குரல் எழுப்பத் தொடங்கினர்.

ஆனாலும் நிறவெறி அரசாங்கம் உயிரிழப்புகளின் எண்ணிக்கையை குறைத்து காட்ட முயன்றாலும், உண்மையான உயிரிழப்புகள் அதைவிட அதிகமாக இருந்ததாக பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நூற்றுக்கணக்கான மாணவர்கள் கொல்லப்பட்டதாகவும், ஆயிரக்கணக்கானோர் காயமடைந்ததாகவும் மதிப்பிடப்பட்டது.

இந்தச் சம்பவம் சர்வதேச அளவில் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியது. ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் பல நாடுகள் தென்னாப்பிரிக்க அரசை கண்டித்தன. பொருளாதாரத் தடைகள் மற்றும் அரசியல் அழுத்தங்கள் அதிகரித்தன. மேலும், சுவெட்டோ கிளர்ச்சி தென்னாப்பிரிக்க விடுதலை இயக்கத்திற்கு புதிய சக்தியை அளித்தது. பல இளைஞர்கள் இனவெறி ஆட்சிக்கு எதிரான இயக்கங்களில் இணைந்தனர். குறிப்பாக ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) இயக்கத்தின் ஆதரவு அதிகரித்தது.

சுவெட்டோ கிளர்ச்சி, இனவெறி ஆட்சிக்கு எதிரான போராட்டத்தின் முக்கியமான திருப்புமுனையாக அமைந்தது. இளைஞர்கள் சமூக மாற்றத்தை உருவாக்கும் சக்தி கொண்டவர்கள் என்பதை இந்த நிகழ்வு உலகிற்கு உணர்த்தியது. பின்னர் நெல்சன் மண்டேலா உள்ளிட்ட தலைவர்களின் போராட்டங்களுக்கு இது புதிய ஊக்கத்தை அளித்தது. இறுதியில் 1994 ஆம் ஆண்டு நிறவெறி ஆட்சி முடிவுக்கு வந்து, தென்னாப்பிரிக்காவில் ஜனநாயக ஆட்சி நிறுவப்பட்டது.

வரலாற்று நினைவாக சுவெட்டோ

சுவெட்டோ கிளர்ச்சி வெறும் ஒரு மாணவர் போராட்டம் அல்ல. அது கல்வி உரிமை, சமத்துவம், மனித கண்ணியம் மற்றும் சுதந்திரத்திற்கான போராட்டத்தின் அடையாளமாக மாறியது. இந்த நிகழ்வை நினைவுகூரும் வகையில், தென்னாப்பிரிக்காவில் ஒவ்வொரு ஆண்டும் யூன் 16 ஆம் தேதி "இளைஞர் தினம்" (Youth Day) என்ற பெயரில் தேசிய விடுமுறையாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. அன்றைய தினம், கல்வி உரிமைக்காகவும் மனித உரிமைக்காகவும் உயிர் தியாகம் செய்த மாணவர்களின் துணிச்சலும் தியாகமும் நினைவுகூரப்படுகிறது.

சுவெட்டோ கிளர்ச்சி உலகிற்கு ஒரு முக்கியமான பாடத்தை வழங்கியது: அதிகாரம் எவ்வளவு வலிமையானதாக இருந்தாலும், நீதி, சமத்துவம் மற்றும் மனித கண்ணியத்திற்காக எழும் மக்களின் குரலை நிரந்தரமாக அடக்க முடியாது. அந்த இளம் மாணவர்களின் போராட்டம், தென்னாப்பிரிக்காவின் ஜனநாயக மாற்றத்திற்கான முக்கியமான திருப்புமுனையாக வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கிறது.

வட்டுக்கோட்டை 50 எழுச்சி மாநாடு ஏற்பாட்டுக்குழு

VADDUKODDAI 50 UPRISING CONFERENCE ORGANIZING COMMITTEE

+94 76 925 2956

692, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

20.06.2026

வட்டுக்கோட்டை தீர்மானத்தை துணிச்சலுடன் முன்னெடுத்த தந்தை செல்வா உட்பட்ட தமிழ் தலைவர்களை நினைவில் நிறுத்தி, அந்த தீர்மான கொள்கையை, தமது உயிரை அர்ப்பணித்து 2009ஆம் ஆண்டு வரை முன்னெடுத்த மாவீரர்களுக்கு வீரவணக்கத்தை செலுத்திக்கொள்கின்றோம்.

தமிழின அழிப்பால் இனப்படுகொலையால் படுகொலை செய்யப்பட்ட எமது தமிழ் உறவுகளை நினைவுகூருகின்றோம்.

பாசத்திற்கும், மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே !

அன்பிற்கினிய மதத் தலைவர்களே,
மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களே,
அரசியல் கட்சித் தலைவர்களே,
கல்வியாளர்களே,
சமூகப் பிரதிநிதிகளே,
இளைஞர்களே, புலம்பெயர் உறவுகளே, தாய்த்தமிழக உறவுகளே,

எல்லோருக்கும் எமது அன்பான வணக்கம்.

எமது தேசத்தை மீள கோருகின்றோம்

இன்று நாம் ஒன்றுகூடியிருப்பது ஒரு சாதாரண நினைவு கூரும் நிகழ்விற்காக அல்ல. மாறாக, ஈழத்தமிழர் வரலாற்றின் ஒரு முக்கியமான திருப்புமுனையை நினைவுகூரவும், அதன் அர்த்தத்தை மீளாய்வு செய்யவும், எதிர்காலப் பாதையை வகுக்கவும் நாம் ஒன்று கூடியுள்ளோம்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, 1976 ஆம் ஆண்டு மே 14 ஆம் நாள், வட்டுக்கோட்டையில் கூடிய தமிழர் அரசியல் தலைமைகள், தந்தை செல்வா அவர்களின் தலைமையில், வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மூலம் தாம் இழந்த இறைமையையும், தேசத்தையும் மீளப்பெறுவதற்கான உறுதிப்பாட்டினை வெளிப்படுத்திய வரலாற்று நிகழ்வாகும். இந்த தீர்மானம் ஒரு அரசியல் ஆவணம் மட்டுமல்ல, இது ஒரு தேசிய இனத்தின் அரசியல் உணர்வின் வெளிப்பாடு. தலைமுறைகளின் தியாகங்களால் வடிவமைக்கப்பட்ட ஒரு தேசியப் பிரகடனம்.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் தோன்றிய சூழலை நாம் மறக்க முடியாது. பல தசாப்தங்களாக தமிழர்கள் சமத்துவம், மொழி உரிமை, கல்வி உரிமை, நில உரிமை மற்றும் அரசியல் பங்குபற்றலுக்காக ஜனநாயக வழிகளில் போராடினர். ஆனால் ஒவ்வொரு முறையும் அவர்கள் எதிர்கொண்டது மறுப்பையும் ஒடுக்குமுறையையும், சிங்கள ஏகாதிபத்தியத்தின் வன்முறையையும்தான்.

1956 ஆம் ஆண்டின் “சிங்களம் மட்டும்” சட்டம், 1958, 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளின் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இனவன்முறைகள், கல்வியில் தரப்படுத்தல், அரச ஆதரவு குடியேற்றங்கள் - இவை அனைத்தும் தமிழர்களின் அரசியல் எதிர்காலம் குறித்த ஆழமான கேள்விகளை எழுப்பின.

அந்தப் பின்னணியில்தான் வட்டுக்கோட்டைத் தீர்மானம் உருவானது.

இது ஒரு கோபத்தின் தீர்மானம் அல்ல.
இது ஒரு விடுதலையின் அறிவிப்பு.

இது வெறுப்பின் வெளிப்பாடு அல்ல.
இது சுயநிர்ணயத்தின் மொழி.

இது பிரிவினைக்கான அழைப்பு அல்ல; இழந்த தேசத்தை மீள பெறுவதற்கான உறுதிப்பாடு.

இது ஒரு தேசிய இனத்தின் அரசியல் உரிமையையும், அரசு உரிமையையும் உலகிற்கு எடுத்துரைத்த வரலாற்றுப் பிரகடனம்.

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு ஏகோபித்த ஜனநாயக ஆணை வழங்கினர். இதுவே ஈழத்தமிழினம் இறுதியாக தமது அரசியல் விருப்பை வெளிப்படுத்த அமைத்த ஓர் சந்தர்ப்பமாக அமைந்தது. அதன் பின் ஈழத்தமிழினத்தின் குரல்வளையை இன்னும் அதிகமாக நசுக்குவதிலேயே சிங்கள பேரினவாதம் குறியாக இருந்தது.

இன்று, ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு, நம்மை நாமே கேட்க வேண்டிய கேள்வி என்ன?

வட்டுக்கோட்டைத் தீர்மானம் இன்னும் பொருத்தமுடையதா?

எமது பதில் தெளிவானது.

ஆம்.

ஏனெனில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் ஒரு காலகட்டத்திற்கான ஆவணம் அல்ல. அது ஈழத்தமிழ் தேசிய இனத்தின் அரசியல் உரிமைகள் பற்றிய அடிப்படைக் கொள்கைகளின் பிரகடனம். ஈழத்தமிழினம் எவ்வித ஒடுக்குமுறைகளுமின்றி, சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ்வதை உறுதி செய்யும் இறுதி இலக்கின் வரைபடம்.

சுயநிர்ணய உரிமை காலாவதியாகாது.
ஒரு மக்களின் தாயக உரிமை அழியாது.
தேசிய அடையாளம் மறைந்துவிடாது.

இன்று உலகம் மாறியுள்ளது. தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. அரசியல் சூழ்நிலைகள் மாறியுள்ளன. ஆனால் தமிழர் தேசியக் கேள்வியின் அடிப்படை அம்சங்கள் இன்னும் தீர்க்கப்படாமலேயே உள்ளன.

எனவே, வட்டுக்கோட்டை-50 என்பது கடந்த காலத்தை நினைவுகூர்வது மட்டுமல்ல. எதிர்காலத்தை வடிவமைப்பதற்கான ஒரு வாய்ப்பாகவும் இருக்க வேண்டும்.

அன்பான ஈழத்தமிழ் மக்களே!

இன்றும் எம்முன்னே ஒரு வரலாற்று கடமை உள்ளது. எமது முதல் தலைமுறையினர் வழங்கிய ஜனநாயக ஆணை இன்றும் உயிரோடு உள்ளது. மக்கள் ஆணையை சிரமேற்ற எமது இளைய சமூகம் உயிரைக்கொடுத்து இந்த ஆணையை முன்னெடுத்தது. இரத்தத்தினாலும், உயிர்கொடையினாலும், அர்ப்பணிப்புகளினாலும் வளர்க்கப்பட்ட எமது விடுதலை வேள்வி இன்று சர்வதேசமயப்படுத்தப்பட்டுள்ளது. எமது விடுதலை போராட்டத்தினை பயங்கரவாதமாக சித்தரித்த சிங்கள பேரினவாதம் இன்று உலக நாடுகள் முன்னே அம்பலப்பட்டு நிற்கிறது. சிறீலங்காவின் ஆட்சிக்கட்டில் அரசுகள் மாறினாலும் அவர்களின் பேரினவாத சிந்தனையில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. மயிலத்தனை - மாதவனை மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்பு முதல் தையிட்டி சட்டவிரோத விகாரை வரை தமிழர்கள் தொடர்ச்சியாக ஏமாற்றுப்பட்ட வண்ணமே உள்ளனர்.

மேதகு அவர்களின் கூற்றுக்கு இணங்க “வரலாறு எமது வழிகாட்டி”. வரலாற்றில் தமிழர் அரசும், சிங்கள அரசும் தனித்தனியாக இருந்த போதே தான் இந்த தீவு அமைதியாகவும், செழிப்பாகவும், வளமாகவும் இருந்தது. இரு இனங்களும் தமது மொழி, சமய, கலாசார, பண்பாடு மற்றும் இன அடையாளங்களை பேணி பாதுகாக்க கூடியதாக இருந்தது. எண்ணிக்கையில் கூடியவர்கள் எம்மீது ஆதிக்கம் செலுத்தாமலும், எமது வளங்களை சுரண்டாமலும், எமது மொழி, மதம் பண்பாட்டை சிதைக்காமலும் நிம்மதியாக வாழக்கூடியதாக இருந்தது.

நாம் மீண்டும் தலைநிமிர்ந்து வாழவேண்டுமெனின் தமிழ்த்தேசியத்தின் பல்வேறு தளங்களில் இயங்கும் அரசியல் சக்திகள், சமூக அமைப்புகள், மதத்தலைவர்கள், இளைஞர்கள், பெண்கள், அறிவுஜீவிகள், புலம்பெயர் சமூகங்கள் மற்றும் தமிழக தொப்புள்கொடி உறவுகள் - அனைவரும் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பால் ஒன்றுபடவேண்டும்.

நாம் கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருக்கலாம்.
ஆனால் அனைவரும் தமிழரே.
எமது வரலாறு ஒன்றே.
எமது எதிர்காலமும் ஒன்றாக இருக்க வேண்டும்.

ஈழத்தமிழ் மக்களில் அரசியலை முன்னெடுக்கும் அரசியல் தலைமைகள், ஒரேயொரு மக்கள் ஆணையை பெற்ற வட்டுக்கோட்டை தீர்மானத்தை மையமாக வைத்தே தமது அரசியல் நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும். வட்டுக்கோட்டை தீர்மானத்தையே மக்களை இணைக்கும் மையவிசையாகவும் கொள்ளவேண்டும். அதைவிடுத்து மீண்டும் ஒருமுறை நீங்களும் எமது மக்களையும் சிங்கள பேரினவாதத்தின் சூழ்ச்சி வலையில் வீழ்த்தி, மீண்டும் ஒருமுறை ஏமாற்றவோ, ஏமாறவோ வேண்டாம்.

எமது விடுதலை பயணத்தில் புலம்பெயர் தமிழர்களின் பங்கும் இன்றியமையாதது. உலகின் பல நாடுகளில் வாழும் தமிழர்கள், தாயக மக்களின் குரலை உலக அரங்கில் எடுத்துச் சென்றுள்ளனர். கல்வி, பொருளாதாரம், மனித உரிமைகள் மற்றும் அரசியல் ஆதரவு ஆகிய துறைகளில் அவர்கள் ஆற்றிய, ஆற்றிவருகின்ற பங்களிப்பு அளப்பரியது.

எதிர்காலம் புலம்பெயர் தலைமுறையினரின் கைகளிலும் உள்ளது. அவர்கள் தமது அடையாளத்தையும் மொழியையும் வரலாற்றையும் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

இன்றைய இளைஞர்களிடம் நாம் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை ஒரு வரலாற்று ஆவணமாக மட்டும் பார்க்காதீர்கள்.
அதை ஒரு அரசியல் சிந்தனையாகப் புரிந்துகொள்ளுங்கள்.
அதை ஒரு தலைமுறையின் கனவாக வாசியுங்கள்.
அதை எதிர்காலத்திற்கான பொறுப்பாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

சிங்கள சகோதர, சகோதரிகளே!

உங்களுக்கு தொடர்ச்சியாக உங்களின் அரசியல்வாதிகளினாலும், பேரினவாத சிந்தனையாளர்களினாலும் பரப்பப்பட்ட பொய்யான வியாக்கியானங்கள் போல் நாம் பயங்கரவாதத்தினால் இந்த தீவை கூறு போட விளையவில்லை. நாம் காலனித்துவ ஆட்சியினால் பறிக்கப்பட்ட எமது நாட்டினை, எமது இறைமையினையே மீளவும் கேட்கின்றோம். உங்கள் நிலத்தில் ஓர் அங்குலம் தன்னும் நாம் கேட்கவில்லை. உங்கள் மீது

ஆதிக்கம் செலுத்தவோ, உங்கள் இறைமையை பறிக்கவோ விளையவில்லை. 1833 கோல்புரூக்-கேமரூன் (Colebrooke-Cameron) சீர்திருத்தத்திற்கு முன்பு இந்த தீவு எக்காலத்திலும் ஒற்றை ஆட்சியின் கீழ் இருந்ததில்லை. ஆங்கிலேயர் தமது ஆட்சி இலகுவிற்காக ஒன்றாக்கியதை பற்றிப்பிடித்துள்ள சிங்கள ஆட்சியாளர்கள், தமது அதிகாரத்தினை தக்க வைத்துக்கொள்ள இனவாதத்தை தூண்டி அழிவினையே உருவாக்கி வருகின்றனர். எம்மை மீறி எமது ஒப்புதல் இன்றி உருவாக்கப்பட்ட இணைப்பு முறையில் இணைந்து வாழ நாம் எடுத்த முயற்சிகளான 1957 செய்துகொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம், 1965 இல் டட்லி - செல்வா ஒப்பந்தம் என்பன ஒருதலைபட்சமாக கிழித்தெறியப்பட்டன. அதன் பின் இராணுவ சமநிலையில் மேலாக இருந்த தருணத்தில் கூட சமாதானத்தை விரும்பி ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை அறிவித்து, சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்திய போதும் மீண்டும் ஏமாற்றப்பட்டு, தமிழினமே இனவழிப்பு செய்யப்பட்டது.

எமது நாட்டினை நாம் மீண்டும் பெறவேண்டும் என்ற கோரிக்கை இன்று நேற்று உருவானது அல்ல. 1968ஆம் ஆண்டு கிராமிய சபைகள் தொடர்பான வெள்ளை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது அதனை கடுமையாக எதிர்த்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் வி. நவரத்தினம் அவர்கள் தமிழ் மக்கள் மீண்டும் தமது பழமையான தமிழ் இராசதானியை தமது மரபுவழி தாயகத்தில் உருவாக்க அழைப்பு விடுத்தார். இதன் மூலம் மட்டுமே தமிழினம் சுதந்திரமாகவும், தனித்துவத்துடனும் இந்த தீவில் வாழ முடியும் என தீர்க்கதரிசனமாக அறிவித்தார். இவ்வாறாக தமிழ்மக்களிடையே கனன்ற விடுதலை தீயை வட்டுக்கோட்டை தீர்மானம் ஓர் அரசியல் வடிவமாக்கி, தமிழினத்தின் ஏகோபித்த ஜனநாயக ஆணையை 197ஆ7ம் ஆண்டு தேர்தலினூடாக வரிந்தும் கொண்டது. வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்ட காலத்துடன் ஒப்பிடும் போது, 1956ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டம் கல்லோயா (இங்கினியாக்கலை) முதல் 2009 முள்ளிவாய்க்கால் வரை இனவழிப்புக்கு உள்ளான, தொடர்ந்தும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு உள்ளாக்கப்படும் இனமாக உள்ள எமக்கு வட்டுக்கோட்டை தீர்மானம் வகுத்த வழியே நிரந்தரத் தீர்வையும், தமிழ் இனத்தின் வாழ்வையும் உறுதி செய்யும். இந்த யதார்த்தத்தை நீங்களும் விளங்கிக் கொள்வீர்கள் என நம்புகிறோம்.

அன்பான தாய்த் தமிழக தொப்புள் கொடி உறவுகளே!

உங்களுக்கும் ஈழத்தமிழருக்குமான உறவு வரலாறுகளை கடந்தது. தாய்-சேய் உறவு போன்றது. என்றுமே பிரிக்க முடியாதது. ஆனாலும் இன்று இந்த உறவை பிரிப்பதற்கு எதிரிகள் பல்வேறு தந்திரங்களை கையாண்டு வருகின்றனர். இதனை நீங்கள் விளங்கிக்கொண்டு, அனைத்து சதிகளையும் முறியடித்து எம்மோடு என்றும் தோள் நிற்பீர்கள் என்று நம்புகிறோம். எமது அரசியல் போராட்டங்களிலும், ஆயுத போராட்டத்திலும் உங்களின் பங்களிப்பு அளப்பரியது. தொடர்ந்தும் நாம் வட்டுக்கோட்டை தீர்மானத்தை முன்கொண்டு செல்ல உங்களுடனும் கைகோர்த்து நிற்கின்றோம். இன்று புதிதாக அரசேறியுள்ள தமிழக முதல்வரிடமும் ஈழத்தமிழரின் தேசிய கேள்வியை வட்டுக்கோட்டை தீர்மானத்தினூடாக அணுகுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

அன்பான இந்திய தேசத்து மக்களே!

ஈழத்தமிழராகிய நாம் தெற்கு ஆசிய பிராந்தியத்தின் வல்லரசான இந்திய தேசத்தை அன்புடன் தந்தை தேசமாகவே அணுகுகிறோம். பல்வேறு மொழி, கலாசாரம், பண்புகளை கொண்ட பலதேசிய இனங்கள் ஒன்றாக சமத்துவத்துடன் அதிகாரங்களை பகிர்ந்து கூடி வாழ்வதை வியந்து பார்க்கிறோம். உங்களின் தேச ஒருமைப்பாட்டினை நாம் பெரிதும் மதிக்கிறோம். வருந்தத்தக்கவிதமாக அவ்வாறான சூழமைவு இங்கு இல்லை. சிங்கள வல்லாதிக்க சக்திகள் எம்மை தொடர்ந்து அடிமைப்படுத்துவது இந்த பிராந்தியத்தின் சமநிலையை குலைப்பதற்கே வழிவகுக்கும். நாம் தனி தேசமாக மலர்வதே இந்திய தேசத்தின் தென்மண்டல பாதுகாப்பினை உறுதிசெய்வதுடன், உங்களுக்கு அருகே உங்களுக்கான உற்ற ஒரு நட்பு தேசம் உங்களுக்கு உருவாகும்.

பல்தேசிய உலக நாடுகளே!

இன்று உருவாகியுள்ள பல்துருவ உலக ஒழுங்கில் நாம் அனைத்து தரப்பினரையும் வரவேற்கவும் ஒத்துழைக்கவும் நாம் தயாராக உள்ளோம். எமது தேசவிடுதலைக்கு எமக்கு தோள்கொடுக்கும் அனைத்து சக்திகளின் ஆதரவினை பெற்றுக் கொள்ளவும், இணைத்து பயணிக்கவும் நாம் தயாராக உள்ளோம். எமது விடுதலை பயணமும் உங்களின் தேச நலன்களும் சந்திக்கும் புள்ளியில் நாம் இணைந்து பயணிக்க தயாராக உள்ளோம்.

இன்று நாம் நினைவுகூருவது ஒரு தீர்மானத்தை அல்ல.

ஒரு மக்கள் தமது அரசியல் எதிர்காலத்தை தாமே தீர்மானிக்க வேண்டும் என்ற உயரிய கொள்கையை.

நாம் நினைவுகூருவது தந்தை செல்வா போன்ற தலைவர்களின் தியாகங்களையும், எமது விடுதலைக்காக தமது இன்னுயிர்களை ஈந்த மாவீரச்செல்வங்களையும், தமது உடல் அங்கங்களையும், தமது இளமை காலங்களையும் இழந்த விடுதலை வீரர்களின் ஈகங்களையும்,

நாம் நினைவுகூருவது எமது மக்களின் உயிர் தியாகங்களையும், துன்பங்களையும் நம்பிக்கைகளையும்.

அன்புடைய உறவுகளே,

வட்டுக்கோட்டை-50 ஒரு முடிவல்ல.

வரலாற்றை நினைவுகூரும் ஒரு நிகழ்வாக மட்டுமன்றி, தமிழர் அரசியல் சிந்தனையை புதுப்பிக்கும் ஒரு சந்திப்பாகவும் இது அமைய வேண்டும்.

இது ஒரு புதிய ஆரம்பம். பூமி பந்தெங்கும் பரந்து வாழும் தமிழினம், தமிழ் தேசியம் என்ற ஒற்றை குடையின் கீழ் ஒன்றுபட வேண்டும். தமிழன் இல்லாத நாடும் இல்லை தமிழனுக்கு என்று ஒரு நாடுமில்லை என்ற குறையை போக்க வட்டுக்கோட்டை தீர்மானம் முன்மொழிந்த எமது தேசத்தினை கட்டியெழுப்ப ஒன்றுபட வேண்டும். இதனூடாக தமிழருக்கான தேசம் இந்த மண்ணில் பிறக்க அனைவரும் பாடுபட வேண்டும்.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் ஆன்மா இன்று எம்மிடம் ஒரு கேள்வியை எழுப்புகிறது:

“நீங்கள் பெற்ற வரலாற்றுப் பொறுப்பை அடுத்த தலைமுறைக்கு எவ்வாறு கொண்டு செல்லப் போகிறீர்கள்?”

அந்தக் கேள்விக்கான பதிலை எமது செயல்களால் வழங்குவோம். தற்போது எம்முன்னே உள்ள ஜனநாயக தெரிவான, சர்வதேசத்தினால் நடாத்தி கண்காணிக்கப்படும் சர்வசன வாக்கெடுப்பினூடாக எமது தேசத்திற்கான சர்வதேச அங்கீகாரத்தினை பெற வேண்டும். எமக்கான ஜனநாயக தெரிவுகள் மூடப்படுமிடத்து காலம் உரிய வழிகளை திறக்கும். இதற்கு வரலாற்று பாடங்களே சாட்சி.

தமிழர் தேசியத்தின் உரிமைகளுக்காக,
தமிழின விடுதலைக்காக
தமிழர் எதிர்காலத்திற்காக,

நாம் ஒன்றிணைவோம்.

நன்றி.

தவத்திரு வேலன் சுவாமிகள்
தலைமை ஒருங்கிணைப்பாளர்
வட்டுக்கோட்டை - 50 எழுச்சி மாநாடு ஏற்பாட்டுக்குழு

20.06.2026

We pay tribute to the Tamil leaders, including Thanthai Chelvanayakam, who courageously advanced the Vaddukoddai Resolution, and we offer our deepest respects to the Maaveerar (Tamil martyrs) who dedicated their lives to carrying forward the principles of that Resolution until 2009.

We also remember our Tamil brothers and sisters who lost their lives through genocide and the destruction inflicted upon our people.

Beloved People of Tamil Eelam,

Respected Religious Leaders,
Honourable Members of Parliament,
Political Party Leaders,
Academics,
Community Representatives,
Youth, Members of the Tamil Diaspora, and Our Tamil Nadu Brethren,

Warm greetings to you all.

We Reclaim Our Nation

Today, we have gathered not merely to commemorate a historical event. Rather, we have come together to reflect upon a defining turning point in the history of the Eelam Tamil nation, to reassess its significance, and to chart the path forward.

Fifty years ago, on 14 May 1976, Tamil political leaders assembled in Vaddukoddai under the leadership of Thanthai Chelvanayakam and proclaimed, through the Vaddukoddai Resolution, their determination to reclaim the sovereignty and nationhood that had been lost. This was not merely a political document; it was the expression of a nation's political consciousness-a national declaration shaped by generations of sacrifice.

We cannot forget the circumstances that gave rise to the Vaddukoddai Resolution. For decades, Tamils pursued equality, language rights, educational rights, land rights, and political participation through democratic means. Yet, time and again, they encountered rejection, oppression, and the violence of Sinhala majoritarianism.

The "Sinhala Only Act" of 1956, the anti-Tamil pogroms of 1958, 1977, 1981, and 1983, discriminatory standardization policies in education, and state-sponsored colonization schemes all raised profound questions about the political future of the Tamil people.

It was against this backdrop that the Vaddukoddai Resolution emerged.

It was not a resolution born of anger.
It was a declaration of liberation.
It was not an expression of hatred.
It was the language of self-determination.

It was not a call for division; it was a commitment to reclaim a lost homeland.

It was a historic proclamation to the world of a nation's political rights and right to statehood.

In the 1977 General Election, the Tamil people overwhelmingly endorsed the Vaddukoddai Resolution through a democratic mandate. This was the final opportunity afforded to the Tamil nation to express its political will democratically. Thereafter, Sinhala majoritarianism increasingly sought to suppress the voice of the Tamil people.

Today, fifty years later, we must ask ourselves:

Is the Vaddukoddai Resolution still relevant?

Our answer is clear:

Yes.

Because the Vaddukoddai Resolution is not a document confined to a particular period in history. It is a declaration of the fundamental political rights of the Eelam Tamil nation. It provides a roadmap towards ensuring that Tamils can live freely, securely, and with dignity, free from oppression.

The right to self-determination does not expire.

A people's right to their homeland cannot be erased.

National identity cannot be extinguished.

The world has changed. Technology has advanced.

Political realities have evolved. Yet the fundamental issues at the heart of the Tamil national question remain unresolved.

Therefore, Vaddukoddai-50 is not merely about remembering the past. It must also serve as an opportunity to shape the future.

Our Historical Responsibility

Dear Eelam Tamil People,

Even today, a historic responsibility lies before us. The democratic mandate entrusted by our forefathers remains alive. Our younger generations carried that mandate forward through immense sacrifice, paying with their lives to uphold it.

Our liberation struggle, nurtured through sacrifice, dedication, and bloodshed, has now been internationalised. Sinhala majoritarianism, which sought to portray our liberation struggle as terrorism, stands increasingly exposed before the international community.

Although governments have changed in Sri Lanka, there has been no fundamental change in the majoritarian mindset that continues to dominate the state.

From the land appropriations in Mayilathanai and Madhavanai to the illegal Buddhist shrine at Thaiyiddy, Tamil people continue to experience systematic marginalisation.

As our national leader stated, "History is our guide."

History teaches us that this island was peaceful, prosperous, and stable when the Tamil and Sinhala kingdoms existed independently. Both peoples were able to preserve and protect their languages, religions, cultures, and national identities. Neither dominated the other, exploited resources, nor sought to erase the other's heritage.

If we are to once again live with dignity, political movements, social organisations, religious leaders, youth, women, intellectuals, diaspora communities, and our kin in Tamil Nadu must unite around the principles of the Vaddukoddai Resolution.

We may hold differing views.

But we are all Tamil.

Our history is one.

Our future must also be one.

The role of the Tamil diaspora remains indispensable. Across the world, Tamils have carried the voice of the homeland to the international stage. Their contributions in education, economic development, human rights advocacy, and political engagement have been immeasurable.

The future also rests in the hands of diaspora generations. They must preserve their identity, language, and history and pass them on to future generations.

We make a special appeal to today's youth:

Do not view the Vaddukoddai Resolution merely as a historical document.

Understand it as a political philosophy.

Read it as the dream of a generation.

Accept it as a responsibility for the future.

To Our Sinhala Brothers and Sisters

Contrary to the narratives propagated by politicians and nationalist ideologues, we have never sought to divide this island through violence. We seek only the restoration of our homeland and sovereignty that were taken from us through colonial arrangements.

We do not seek even an inch of your land.

We do not seek to dominate you or deprive you of your sovereignty.

Prior to the Colebrooke-Cameron Reforms of 1833, this island was never governed as a single political unit. The British unified it for administrative convenience. Sinhala political leaders have clung to that arrangement while using nationalism to maintain power, producing only conflict and destruction.

The agreements we entered into in good faith—the Bandaranaike-Chelvanayakam Pact of 1957 and the Dudley-Chelvanayakam Pact of 1965-were unilaterally abandoned. Even when military realities favoured the Tamil side, ceasefires and peace agreements were pursued, only to end in betrayal and genocide.

To the People of Tamil Nadu

The bond between Tamil Nadu and Eelam Tamils transcends history. It is akin to the bond between mother and child-an inseparable relationship.

Many forces seek to divide this bond today. We trust that you will understand these efforts, overcome them, and continue to stand in solidarity with us.

Your contributions to our political and liberation struggles have been invaluable. We look forward to continuing our shared journey in advancing the principles of the Vaddukoddai Resolution. We respectfully urge the newly elected Chief Minister of Tamil Nadu to engage with the national question of the Eelam Tamil people through the political vision and principles embodied in the Vaddukoddai Resolution.

To the People of India

As Eelam Tamils, we regard India-the great power of South Asia-with respect and affection as a parent nation. We admire how multiple peoples, languages, and cultures coexist within India through the sharing of power and democratic institutions.

Unfortunately, such a framework does not exist in Sri Lanka.

The continued subjugation of Tamils by Sinhala majoritarian forces undermines regional stability. A free Tamil nation would not only secure our future but would also contribute to the security of India's southern region and create a close and friendly neighbour.

To the International Community

In today's multipolar world order, we are prepared to engage constructively with all nations and partners. We welcome support from all those willing to assist our national liberation aspirations.

Where our struggle for freedom intersects with the interests of democratic nations, we are ready to work together.

Today, we do not merely commemorate a resolution.

We commemorate the principle that a people must have the right to determine their own political future.

We remember the sacrifices of leaders such as Thanthai Chelvanayakam, the martyrs who gave their lives for our freedom, the fighters who sacrificed their youth and limbs, and the countless people whose lives, suffering, and hopes shaped our national journey.

Dear friends,

Vaddukoddai-50 is not an ending.

It must become more than a commemorative event; it must serve as a forum to renew Tamil political thought and purpose.

This is a new beginning.

Tamils living across the globe must unite under the single umbrella of Tamil nationhood. Together, we must work to realize the vision proposed by the Vaddukoddai Resolution and ensure that a homeland for the Tamil people emerges on this earth.

The spirit of the Vaddukoddai Resolution asks us a question today:

"How will you carry the historic responsibility entrusted to you to the next generation?"

Let our actions provide the answer. We must strive to obtain international recognition for our nation through the democratic path available to us today-a referendum conducted and supervised by the international community. If the democratic choices available to our people are denied or obstructed, history has shown that circumstances will inevitably create alternative avenues. The lessons of history bear witness to this truth.

For the rights of the Tamil nation,
For the liberation of our people,
For the future of Tamils everywhere,

Let us unite.

Thank you.

Thavathiru Velan Swamigal
Chief Coordinator
Vaddukoddai-50 Ezhuchi Maanadu Organising Committee

+94 76 925 2956 | vaddukoddai50@gmail.com | 692, Point Pedro Road, Nallur, Jaffna | வட்டுக்கோட்டை 50 | @vaddukoddai50

பாகிஸ்தானில் மஹ்ரங் பலூச்சிற்கு ஆயுள் தண்டனை: மனித உரிமை மீறலா? தேசிய பாதுகாப்பா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

27.06.2026

பாகிஸ்தானில் உள்ள பலூசிஸ்தான் மாகாணம் கடந்த பல தசாப்தங்களாக அரசியல், இன அடையாளம், வளங்கள் மீதான உரிமை மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றை மையமாகக் கொண்ட மோதல்களின் களமாக இருந்து வருகிறது. அந்தப் பின்னணியில், பலூச் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வந்த முக்கிய மனித உரிமை ஆர்வலரான மஹ்ரங் பலூச் (Mahrang Baloch) மற்றும் அவரது கூட்டாளி சிப்கத்துல்லாவிற்கு குவெட்டா பயங்கரவாத எதிர்ப்பு நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்திருப்பது, பாகிஸ்தானுக்குள் மட்டுமல்லாது சர்வதேச மனித உரிமை அமைப்புகளிடையிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தீர்ப்பு, பலூசிஸ்தானில் நிலவும் அரசியல் பதற்றத்தையும், மனித உரிமைகள் தொடர்பான சர்ச்சைகளையும் மீண்டும் உலகின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

பலூச் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வந்த முக்கிய மனித உரிமை ஆர்வலரான மஹ்ரங் பலூச் மற்றும் அவரது கூட்டாளி சிப்கத்துல்லாவிற்கு குவெட்டா பயங்கரவாத எதிர்ப்பு நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்திருப்பது, பாகிஸ்தானுக்குள் மட்டுமல்லாது சர்வதேச மனித உரிமை அமைப்புக–ளிடையிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தீர்ப்பு, பலூசிஸ்தானில் நிலவும் அரசியல் பதற்றத்தையும், மனித உரிமைகள் தொடர்பான சர்ச்சைகளையும் மீண்டும் உலகின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

யார் இந்த மஹ்ரங் பலூச்?

மஹ்ரங் பலூச், பலூச் சமூகத்தின் மிகவும் அறியப்பட்ட மனித உரிமை ஆர்வலர்களில் ஒருவர். பல ஆண்டுகளாக பலூசிஸ்தானில் நடைபெறும் கட்டாயக் காணாமல் ஆக்கப்படுதல், சட்ட விரோதக் கைது, நீதிக்குப் புறம்பான கொலைகள் மற்றும் பொது மக்கள் மீது நிகழும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக அமைதியான போராட்டங்களை முன்னெடுத்து வந்தவர்.

குறிப்பாக, காணாமல் போன பலூச் இளைஞர்களின் குடும்பங்களின் உரிமைக்காக அவர் தொடர்ந்து குரல் கொடுத்து வந்ததால், தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் கவனத்தை ஈர்த்திருந்தார். 2024 யூலை மாதம் நடைபெற்ற ஒரு போராட்டத்தின் போது, கடமையில் இருந்த துணை இராணுவ வீரர் ஷபீர் பலூச் உயிரிழந்தார். அந்தச் சம்பவத்திற்குப் பின்னர், போராட்டக்காரர்களை பாதுகாப்புப் படையினரைத் தாக்குமாறு மஹ்ரங் பலூச் தூண்டிவிட்டதாக அரசு தரப்பு குற்றம் சாட்டியது.

இந்த வழக்கை விசாரித்த குவெட்டா பயங்கரவாத எதிர்ப்பு நீதிமன்றம், மருத்துவ ஆதாரங்கள், சாட்சியங்கள் மற்றும் விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்ட பிற ஆதாரங்களின் அடிப்படையில் மஹ்ரங் பலூச் மற்றும் பலூச் யக்தி கமிட்டி (BYC) தலைவர் சிப்கத்துல்லா ஆகியோர் கொலை மற்றும் பயங்கரவாத குற்றங்களில் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளித்து ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

கராச்சி அரசின் நிலைப்பாடு

அதேவேளை பலூசிஸ்தான் மாகாண முதல்வர் சர்பராஸ் புக்டி இந்தத் தீர்ப்பை வரவேற்றுள்ளார். அமைதியான போராட்டம் என்ற பெயரில் அரசு அதிகாரிகளைத் தாக்குவது அல்லது வன்முறையைத் தூண்டுவது எந்தச் சூழலிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார். சட்டத்தை கையில் எடுப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதே சட்டத்தின் ஆட்சி என்பதை அரசு வலியுறுத்துகிறது. மேலும், உயிரிழந்த துணை இராணுவ வீரர் ஷபீர் பலூச்சின் குடும்பத்திற்கு இந்தத் தீர்ப்பு நீதி வழங்கியுள்ளதாகவும் அதிகாரிகள் கூறுகின்றனர். இந்தத் தீர்ப்பிற்கு மனித உரிமை அமைப்புகள் கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

விசாரணை முழுமையான வெளிப்படைத்தன்மையுடன் நடத்தப்படவில்லை என்றும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் வீடியோ இணைப்பு வழியாக மட்டுமே ஆஜராகுமாறு கூறப்பட்டதால் அவர்கள் அதனைப் புறக்கணித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால், வழக்கின் நியாயத்தன்மை குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

பலூச் யக்தி கமிட்டியின் அமைப்பாளரான லாலா அப்துல் பலூச், இது ஒரு “முகமற்ற விசாரணை” (Faceless Trial) என்று குற்றம் சாட்டியுள்ளார். நீதிக்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டால், மக்களின் ஜனநாயக நம்பிக்கை சிதைந்து, அரசுக்கு எதிரான அதிருப்தி மேலும் அதிகரிக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். இந்தத் தீர்ப்பைக் கண்டித்து மாகாணம் முழுவதும் வேலை நிறுத்தம் நடத்தவும் அந்த அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

மார்ச் 2025 முதல் காவலில் வைக்கப்பட்டுள்ள மஹ்ரங் பலூச்சின் சார்பில் அவரது வழக்கறிஞர் இஸ்ரார் ஜட்டக், இந்தத் தீர்ப்பை பலூசிஸ்தான் உயர் நீதிமன்றத்தில் எதிர்த்து மேல்முறையீடு செய்ய உள்ளதாக அறிவித்துள்ளார். நீதிமன்றத்தின் தீர்ப்பில் பல சட்டப்பூர்வ குறைபாடுகள் இருப்பதாகவும், மேல்முறையீட்டில் அவை எடுத்துரைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதனால் இந்த வழக்கு இன்னும் நீண்ட கால சட்டப் போராட்டமாக மாறக்கூடும்.

பலூசிஸ்தானில் மனித உரிமை மீறல்

பாகிஸ்தானின் மிகப்பெரிய மாகாணமான பலூசிஸ்தான், இயற்கை வளங்கள் நிறைந்த பிரதேசமாக இருந்தாலும், பல தசாப்தங்களாக மனித உரிமை மீறல்கள், அரசியல் மோதல்கள் மற்றும் பாதுகாப்பு நெருக்கடிகளின் மையமாக இருந்து வருகிறது. இந்தப் பகுதியில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து உள்ளூர் சமூக அமைப்புகள், சர்வதேச மனித உரிமை அமைப்புகள் மற்றும் பாகிஸ்தான் அரசு ஆகியவை வெவ்வேறு நிலைப்பாடுகளை முன்வைத்து வருகின்றன.

பலூசிஸ்தானில் அதிகம் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் முக்கியமானது, அரசியல் செயற்பாட்டாளர்கள், மாணவர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் தேசியவாத இயக்கங்களுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் நபர்கள் கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்படுவதாகும். மனித உரிமை அமைப்புகளின் கூற்றுப்படி, கைது செய்யப்பட்ட பலர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படாமல் நீண்டகாலம் தடுத்து வைக்கப்படுவதாகவும், சிலர் பின்னர் உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. இதற்கு “Kill and Dump” (கொன்று உடலை வீசுதல்) என்ற பெயரிலும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

பாதுகாப்புப் படையினர் மற்றும் ஆயுதக் குழுக்களுக்கிடையேயான மோதல்களில் பொதுமக்கள் உயிரிழப்பது தொடர்ச்சியாக பதிவாகி வருகிறது. மனித உரிமை அமைப்புகள், சில சந்தர்ப்பங்களில் பாதுகாப்புப் படையினர் நீதிமன்ற விசாரணையின்றி சந்தேக நபர்களை சுட்டுக் கொன்றதாக குற்றஞ்சாட்டுகின்றன. ஆனால், பாகிஸ்தான் அரசு இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்து, பாதுகாப்புப் படையினர் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளையே மேற்கொள்வதாகக் கூறுகிறது.

பலூசிஸ்தானில் மனித உரிமை மீறல்கள் குறித்து பேசும் சமூக ஆர்வலர்கள், மாணவர் தலைவர்கள், பத்திரிகையாளர்கள் மற் றும் வழக்கறிஞர்கள் மீது அச்சுறுத்தல்கள், கைது நடவடிக் கைகள் மற்றும் வழக்குகள் பதிவு செய்யப்படுவதாக பல அமைப் புகள் கூறுகின்றன. மனித உரிமைகள் குறித்து குரல் கொடுக் கும் பலர் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக சித்தரிக்கப்படுவதாகவும் விமர்சனங்கள் உள்ளன.

பலூசிஸ்தான் அரசியல் பின்னணி

பலூசிஸ்தான், பாகிஸ்தானின் மிகப்பெரிய மாகாணமாக இருந் தாலும், பொருளாதார வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய பகுதி களில் ஒன்றாக உள்ளது. இயற்கை எரிவாயு, தங்கம், செம்பு உள்ளிட்ட ஏராளமான இயற்கை வளங்கள் இருந்தபோதிலும், அவற்றின் பயன் உள்ளூர் மக்களுக்கு கிடைப்பதில்லை என்ற குற்றச்சாட்டு நீண்ட காலமாக நிலவுகிறது.

இதன் காரணமாக பலூச் தேசியவாத இயக்கங்களும் ஆயுதக் குழுக்களும் உருவாகின. சில அமைப்புகள் ஆயுதப் போராட் டத்தை முன்னெடுத்துள்ள நிலையில், பல சமூக ஆர்வலர்கள் அமைதியான ஜனநாயக வழிகளில் உரிமை கோரி போராடி வருகின்றனர்.

ஆனால், இந்த இரு பிரிவுகளும் சில நேரங்களில் ஒரே பார்வையில் அணுகப்படுவதாக மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன.

மஹ்ரங் பலூச்சின் வழக்கு தற்போது சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் கவனத்தை ஈர்த்துள்ளது. ஒரு புறம், சட்டம் மற்றும் தேசிய பாதுகாப்பை நிலைநாட்ட வேண்டியது அரசின் கடமை என்று அரசு வாதிடுகிறது. மறுபுறம், அமைதியான மனித உரிமை செயற்பாட்டாளர்களை பயங்கரவாதச் சட்டங்களின் கீழ் தண்டிப்பது ஜனநாயக உரிமைகளை ஒடுக்குவதாக மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்துகின்றன. இந்த இரு நிலைப்பாடுகளும் சர்வதேச அளவில் தீவிரமான விவாதத்தை உருவாக்கியுள்ளன.

இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து பலூசிஸ்தானில் அரசியல் பதற்றம் மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஒருபுறம் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படலாம் மறுபுறம் மனித உரிமை இயக்கங்களும் தங்களது எதிர்ப்பை வலுப்படுத்தக்கூடும். மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு, இந்த வழக்கின் அடுத்த முக்கிய திருப்பமாக இருக்கும்.

அதே நேரத்தில், பலூசிஸ்தானில் நீடித்து வரும் அரசியல், சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகளுக்கு வெறும் சட்ட நடவடிக்கைகள் மட்டும் போதுமான தீர்வாக அமையாது என்பதையும் பல ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மஹ்ரங் பலூச்சிற்கு விதிக்கப்பட்டுள்ள ஆயுள் தண்டனை, ஒரு தனிப்பட்ட குற்றவியல் வழக்காக மட்டும் பார்க்க முடியாத ஒன்றாகும். இது பலூசிஸ்தானின் நீண்டகால அரசியல் முரண்பாடுகள், மனித உரிமை விவாதங்கள், தேசிய பாதுகாப்பு கவலைகள் மற்றும் நீதித்துறை மீதான நம்பிக்கை ஆகிய அனைத்தையும் ஒன்றாக இணைக்கும் முக்கிய சம்பவமாக மாறியுள்ளது.

அரசு இது சட்டத்தின் வெற்றி எனக் கூறும் நிலையில், மனித உரிமை அமைப்புகள் இதை ஜனநாயக உரிமைகளுக்கான பின்னடைவு எனக் கருதுகின்றன. இறுதியில், மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பும், இந்த வழக்கின் மீதான சர்வதேச கவனமும், பலூசிஸ்தானின் எதிர்கால அரசியல் மற்றும் மனித உரிமை நிலவரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.



முள்வேலி முகாம்களின் கண்ணீர்ச் சரித்திரமும் ஈழத் தமிழரின் தீரா வடுவும்

– சு.லோஜிதன் –

27.06.2026

அறிமுகம்

ஈழத்து மண்ணின் வரலாறு என்பது வெறும் நிலப்பரப்பின் வரலாறு மட்டுமல்ல; அது இரத்தமும் கண்ணீரும் கலந்த தியாகங்களின், இழப்புகளின் காவியம். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்த ஈழ விடுதலைப் போராட்டம், 2009 மே மாதத்தில் முள்ளிவாய்க்கால் என்னும் குறுகிய நிலப்பரப்பில் பேரழிவோடு தற்காலிகமாக மௌனிக்கப்பட்டது. யுத்தத்தின் கொடூரங்களை விடவும், யுத்தத்திற்குப் பிந்தைய ஈழத் தமிழர்களின் வாழ்வு அதனினும் கொடிய நரகத்தைக் கண்டது. அதற்குச் சான்றாக அமைந்தவைதான் வவுனியா “மணிக்பாம்” (Menik Farm) உள்ளிட்ட பகுதிகளில் அமைக்கப்பட்ட முள்வேலி முகாம்கள். அடைத்து வைக்கப்பட்ட இலட்சக் கணக்கான மனிதர்களின் கதறல்களையும், இழப்புகளையும், சித்திரவதைகளையும் சுமந்து நிற்கும் அந்த முகாம்கள், ஈழத்து வரலாற்றின் மிகக் கொடூரமான ‘கண்ணீர்ச் சரித்திரம்’ ஆகும்.

முகாம்களின் தோற்றமும் பின்னணியும்

2009ஆம் ஆண்டின் தொடக்கத்தில், புதுமாத்தளன், வளைஞர்மடம், முள்ளிவாய்க்கால் எனப் பாதுகாப்பு வலையங்கள் என்று அறிவிக்கப்பட்ட இடங்கள் மீது நடத்தப்பட்ட கடுமையான குண்டு வீச்சுகளிலிருந்து தப்பிப் பிழைத்த மக்கள், சிறீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரத் தொடங்கினர். அவ்வாறு வந்த சுமார் மூன்று இலட்சம் (3,00,000) மக்கள், வவுனியா செட்டிக்குளம் பகுதியில் அவசர அவசரமாக அமைக்கப்பட்ட தற்காலிக முகாம்களில் அடைக்கப்பட்டனர்.

இவை “நலன்புரி கிராமங்கள்” (Welfare Villages) என்ற போர்வையில் சர்வதேச சமூகத்திற்குக் காட்டப்பட்டாலும், நடைமுறையில் அவை முள்வேலிகளால் சூழப்பட்ட, இராணுவத்தின் கடுமையான கண்காணிப்புக்கு உட்பட்ட இடப்பெயர்வு முகாம்கள் அல்லது சிறைக்கூடங்களாகவே செயல்பட்டன. ஒரு நாட்டின் குடிமக்கள், அதே நாட்டின் அரசாங்கத்தால் தங்களின் சொந்த மண்ணிலேயே அகதிகளாக, கைதிகளாக முள்வேலிக்குள் முடக்கப்பட்ட அவலம் அது.

முள்வேலிக்குள் முடங்கிய மனிதநேயம்: வாழ்வாதாரக் கொடுமைகள்

1. இடநெருக்கடியும் தற்காலிகக் கூடாரங்களும்

முகாம்களில் நிலவிய ஆகப்பெரும் சிக்கல் இடநெருக்கடி ஆகும். ஒரு சிறிய தார்பாய் (Tarpaulin) கூடாரத்திற்குள் ஐந்து முதல் எட்டுப் பேரைக் கொண்ட முழு குடும்பங்களும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். சுட்டெரிக்கும் வெயிலிலும், கொட்டும் மழையிலும் அந்த ஒழுகும் கூடாரங்களே அவர்களின் புகலிடமாக இருந்தன.

2. உணவு மற்றும் குடிநீர் பற்றாக்குறை

பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழும் ஒரு பகுதிக்குத் தேவையான அடிப்படை உள்கட்டமைப்புகள் அங்கு இல்லை. ஒரு குவளை குடிநீருக்காகவும், ஒரு வேளை உணவுப் பொதிக்காகவும் முதியவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள் என அனைவரும் சுட்டெரிக்கும் வெயிலில் பல மணிநேரம் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியிருந்தது. பல நேரங்களில் உணவுப் பொருட்கள் அழுகிய நிலையிலேயே வழங்கப்பட்டன.

3. சுகாதாரச் சீர்கேடும் நோய்ப் பரவலும்

ஆயிரக்கணக்கான மக்களுக்கு மிகக் குறைவான எண்ணிக்கையிலேயே தற்காலிகக் கழிப்பறைகள் அமைக்கப்பட்டிருந்தன. மழைக் காலங்களில் மலக்கழிவுகளும் மழ தண்ணீரும் கலந்து முகாம் முழுதும் தேங்கி நின்றன.
இதனால்:

- வயிற்றுப்போக்கு, சீதபேதி (Dysentery)
- மலேரியா, டெங்கு காய்ச்சல்
- தோல் நோய்கள்
- ஊட்டச்சத்து குறைபாடு

போன்ற நோய்கள் மிக வேகமாகப் பரவின. போதிய மருத்துவ வசதிகளோ, மருந்துகளோ இன்றி, முறையான சிகிச்சையின்றி முகாம் படுக்கைகளில் மடிந்தவர்களின் எண்ணிக்கை ஏராளம்.

சித்திரவதைகளும் கட்டாயக் காணாமலாக்கல்களும்

முள்வேலி முகாம்கள் வெறும் பசி, பட்டினியால் மட்டும் மக்களை வாட்டவில்லை; அது மரண பயத்தின் உறைவிடமாக இருந்தது. முகாம்களை முழுமையாகக் கட்டுப்படுத்திய சிறீலங்கா இராணுவத்தினர், தங்களின் விருப்பப்படி மக்களை நடத்தினர்.

“வெள்ளை வேன்” கலாச்சாரம் மற்றும் கடத்தல்கள்:

இரவோடு இரவாக, விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இளைஞர்களும் இளம் பெண்களும் முகாம்களிலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டு, அடையாளம் தெரியாத வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டனர். அவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர்களில் பலர் இன்றுவரை என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை. இதுவே ஈழத்தின் வரலாற்றில் “கட்டாயக் காணாமலாக்கப்பட்டோர்” (Enforced Disappearances) என்ற பெரும் மனித உரிமை மீறல் போராட்டத்தின் தொடக்கப் புள்ளியாக அமைந்தது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளும், பாலியல் அத்து மீறல்களும் முள்வேலியின் இருண்ட பக்கங்களில் மறைக்கப்பட்ட உண்மைகளாகவே இன்றும் நீடிக்கின்றன. தங்களின் பிள்ளைகளைப் பாதுகாக்கத் துடித்த பெற்றோரின் கதறல் சத்தம் அந்த முள்வேலிக் கம்பிகளில் மோதி மௌனித்துப் போனது.

உளவியல் ரீதியான சிதைவுகள்

யுத்தக் களத்தில் தங்களின் உற்றார், உறவினர்களை, உடமைகளை, சொந்த நிலங்களை இழந்துவிட்டு வந்த மக்களுக்கு, இந்த முகாம்கள் மேலும் ஒரு பெரும் உளவியல் அதிர்ச்சியை (Psychological Trauma) அளித்தன.

- **சுதந்திரமின்மை:** தங்களின் சொந்த நாட்டிற்குள், சொந்த மண்ணில் எங்குமே நகர முடியாதபடி முள்வேலிகள் தடுத்த போது ஏற்பட்ட ஏமாற்றம்.

- **அடையாள இழப்பு:** முகவரியற்றவர்களாக, வெறும் பதிவு எண்களாக (Registration Numbers) மனிதர்கள் சுருக்கப்பட்ட கொடுமை.

- **அனிச்சையான பயம்:** துப்பாக்கி ஏந்திய சிறீலங்கா இராணுவப் படைகளின் நடமாட்டம், குழந்தைகளிடம் நிரந்தரப் பயத்தை விதைத்தது.

நாளை என்ன நடக்கும் என்ற எதிர்காலம் குறித்த எந்தவிதமான நம்பிக்கையும் இன்றி, ஒருவித அநாதரவான மனநிலையில் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் தள்ளப்பட்டனர்.

சர்வதேச சமூகத்தின் பார்வையும் ஊடகத் தடையும்

முள்வேலி முகாம்களுக்குள் என்ன நடக்கிறது என்பதை உலகம் அறிந்துகொள்ள முடியாதபடி சிறீலங்கா அரசு கடுமையான ஊடகத் தடையை (Media Blackout) விதித்திருந்தது. சர்வதேச மனித உரிமை அமைப்புகளோ, சுதந்திரமான பத்திரிகையாளர்களோ முகாம்களுக்குள் அனுமதிக்கப்படவில்லை.

இருப்பினும், ஐக்கிய நாடுகள் சபை (UN) மற்றும் சில சர்வதேச தொண்டு நிறுவனங்களின் கடுமையான அழுத்தங்களுக்குப் பிறகே, முகாம்களின் அவல நிலை ஓரளவுக்கு வெளி உலகிற்குத் தெரியவந்தது. “உலகின் மிகப்பெரிய திறந்தவெளிச் சிறைச்சாலை” என்று மனித உரிமை ஆர்வலர்களால் இந்த முகாம்கள் வர்ணிக்கப்பட்டன.

முள்வேலிகள் அகன்ற பின்னும் தொடரும் வடுக்கள்

பல வருடப் போராட்டங்களுக்குப் பிறகும், சர்வதேச அழுத்தங்களின் விளைவாகவும், முகாம்களில் இருந்த மக்கள் சிறுகச் சிறுக “மறுவாழ்வு” என்ற பெயரில் தங்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். ஆனால், அவர்கள் திரும்பியபோது அவர்களின் வீடுகள் இடிக்கப்பட்டிருந்தன, விவசாய நிலங்கள் சிறீலங்கா இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களாக (High Security Zones) மாற்றப்பட்டிருந்தன.

முள்வேலி முகாம்கள் இன்று அழிக்கப்பட்டிருக்கலாம் அந்த நிலங்கள் காடுகளாக மாறியிருக்கலாம். ஆனால், அந்த முள்வேலிகள் தமிழ் மக்களின் மனதில் ஏற்படுத்திய கீறல்களும் வடுக்களும் இன்னும் மாறவில்லை.

1. **பொருளாதார அழிவு:** பூச்சியத்திலிருந்து தங்களின் வாழ்வைத் தொடங்க வேண்டிய நிலை.

2. **குடும்பச் சிதைவு:** கணவனை இழந்த பெண்கள் (தலைமைத்துவக் குடும்பங்கள்), பெற்றோரை இழந்த அநாதைக் குழந்தைகள் எனச் சமூகக் கட்டமைப்பு சீர்குலைந்தது.

3. நீதிக்கான போராட்டம்: காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் பிள்ளைகளைத் தேடி, இன்றும் ஈழத்துத் தாய்மார்கள் வீதிகளில் நடத்தும் போராட்டம் அந்த முள்வேலி முகாம்களின் தொடர்ச்சியே ஆகும்.

முடிவுரை

ஈழத் தமிழர்களின் வரலாற்றில் முள்வேலி முகாம்கள் என்பது வெறும் இடப்பெயர்வு சார்ந்த நிகழ்வல்ல. அது ஒரு இனத்தின் மீது நிகழ்த்தப்பட்ட திட்டமிட்ட கூட்டுச் சித்திரவதை (Collective Punishment). பசியும், நோயும், மரண பயமும், அவமானமும் நிறைந்த அந்த நாட்கள், ஈழத்து இலக்கியங்களிலும், கவிதைகளிலும், மக்களின் கூட்டு நினைவுகளிலும் அழியாத வடுக்களாகப் பதிந்துள்ளன.

உலக வரலாற்றில் மனித உரிமை மீறல்களின் கறைபடிந்த பக்கமாக விளங்கும் இச்சரித்திரம், நமக்குப் போதிப்பது ஒன்றே ஒன்றுதான்: அடக்குமுறைகள் உடல்களை முள்வேலிக்குள் பூட்டலாம், ஆனால் சுதந்திரத்திற்கும் நீதிக்கான ஒரு இனத்தின் ஆன்மாவையும் அதன் தாகத்தையும் எந்தவொரு முள்வேலியாலும் ஒருபோதும் சிறைபிடிக்க முடியாது.



பனைமரத்து நிழல்கள்

சுட்டெரிக்கும் சூரியனின் ஈட்டிகளுக்கு நடுவே,
நிமிர்ந்து நிற்கிற எம் தமிழ் நிலத்து பனை.
அதன் நீண்ட நிழல்கள்...
வெறும் தரைமீதான கருமை நிறக் கோடுகளல்ல;
எம் ஈழத்து வரலாற்றின் ஆவணங்கள்!
அன்று,
அந்த நிழல்களின் கீழேதான்
அம்மாவின் மடியில் கதைகள் கேட்டோம்;
ஊஞ்சலாடி மகிழ்ந்த உறவுகளின் சிரிப்பொலி
அந்த ஓலைகளின் சலசலப்பில் இன்னும் கேட்கிறது.
தாகம் தணித்த நொங்கும், பனங்கிழங்கும்
எம் மண்ணின் செழுமையைச் சொல்லிய காலம் அது.
பின்னர்,
அதே பனைநிழல்கள்...
எம் கண்ணீரையும் குருதியையும் மூடி மறைத்தன.
இராணுவக் குண்டுகள் துளைத்தபோதும்
தலைநிமிர்ந்து நின்ற பனைபோல,
எம் மக்களும் துயரங்களைச் சுமந்து நிமிர்ந்தார்கள்.
அகதி முகாம்களின் வெயிலைத் தடுத்ததும்
எம் ஈழத்துப் பனை தந்த நிழல்தான்.
இன்று,
கடல் கடந்து நாம் வாழ நேர்ந்தாலும்,
மனதின் ஆழத்தில் இன்னும் அசைகிறது
அந்தப் பனைமரத்து நிழல்.
வேர்கள் மண்ணுக்குள் ஆழப் புதைந்திருப்பது போல,
ஈழத்தின் நினைவுகள் எம் குருதிக்குள் வாழ்கின்றன.
மீண்டும் ஒருநாள்...
அந்தப் பனைநிழலில் கூடி,
அமைதியின் காற்றைச் சுவாசிப்போம்
என்ற நம்பிக்கையோடு...
காத்திருக்கிறது எம் தாயகம்!

– சு.லோஜிதன்

இஸ்ரேல் ஒரு பயங்கரவாத நாடு: அயர்லாந்து ஜனாதிபதி குற்றச்சாட்டு!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

16.06.2026

அயர்லாந்தின் அரசியல் வரலாற்றில் முக்கியமான திருப்பு முனையாகக் கருதப்படும் வகையில், மூத்த சுயேச்சை அரசியல் வாதியான கேத்தரின் கொன்னலி ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக் கப்பட்டிருப்பது உலக அரசியல் வட்டாரங்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. குறிப்பாக, இஸ்ரேலின் கொள்கைகள் மற்றும் பாலஸ்தீனப் பிரச்சினை தொடர்பாக அவர் கடந்த காலங்களில் வெளிப்படையாக முன்வைத்த கருத்துக்கள் காரணமாக, அவரது தேர்தல் அயர்லாந்தின் வெளிநாட்டு அரசியல் நிலைப் பாட்டைப் பற்றிய புதிய விவாதங்களை உருவாக்கியது.

அயர்லாந்து ஜனாதிபதி பதவி பெரும்பாலும் ஒரு சம்பிரதாய மற் றும் குறியீட்டு அதிகாரம் கொண்ட பதவியாகக் கருதப்படுகிறது. இருப்பினும், அந்தப் பதவியில் இருப்பவர் நாட்டின் ஒழுக்கநெறி மற்றும் மனித உரிமை மதிப்புகளின் பிரதிநிதியாகப் பார்க்கப் படுகிறார். இதனால், ஜனாதிபதியின் தனிப்பட்ட கருத்துக்களும் உலக அரங்கில் முக்கியத்துவம் வாய்ந்ததாக கவனிக்கப்படு கின்றன.

அயர்லாந்தின் பத்தாவது ஜனாதிபதி

கேத்தரின் கொனோலி (Catherine Connolly) அயர்லாந்தின் பத் தாவது ஜனாதிபதியாக 11 நவம்பர் 2025 அன்று பதவியேற்றார். 2025 அக்டோபர் 24 அன்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்த லில் பெரும்பான்மை வாக்குகள் பெற்று வெற்றி பெற்ற அவர், அயர்லாந்தின் அரசியல் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத் தைத் தொடங்கியவராகக் கருதப்படுகிறார். கால்வே (Galway) நகரைச் சேர்ந்த கேத்தரின் கொனோலி, உளவியல் மற்றும் சட்டத் துறைகளில் கல்வி கற்றவர். அவர் முதலில் மருத்துவ உளவியலாளராகப் பணியாற்றியதுடன், பின்னர் வழக்கறிஞ ராகவும் செயல்பட்டார். சமூக நீதி, சமத்துவம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளில் நீண்டகாலமாக குரல் கொடுத்து வந்தவர் என்ற பெயரையும் பெற்றுள்ளார்.

அவரது அரசியல் வாழ்க்கை உள்ளூராட்சி மட்டத்திலிருந்து தொடங்கியது. 1999 ஆம் ஆண்டு கால்வே நகர சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், பின்னர் கால்வே நகர மேயராகவும் பணியாற்றினார். 2016 முதல் சுயேட்சை நாடாளுமன்ற உறுப் பினராக (TD) பணியாற்றிய அவர், அரசாங்கத்தின் கொள்கை-களை விமர்சன ரீதியாக ஆய்வு செய்ததற்காகவும், சமூக நலன் சார்ந்த விடயங்களில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண் டிருந்ததற்காகவும் அறியப்பட்டார்.

அவரது ஜனாதிபதி தேர்தல் வெற்றிக்கு முக்கிய காரணங்களில் ஒன்று, பாலஸ்தீன மக்களின் உரிமைகள் தொடர்பாக அவர் எடுத்திருந்த வெளிப்படையான நிலைப்பாடாகும். காசா மற்றும் மேற்குக் கரையில் இஸ்ரேல் மேற்கொண்ட நடவடிக்கைகளை அவர் கடுமையாக விமர்சித்ததுடன், சில சந்தர்ப்பங்களில் இஸ் ரேலை "பயங்கரவாத நாடு", "இனப்படுகொலை நடத்தும் அரசு" எனக் குறிப்பிட்டிருந்தார். இந்தக் கருத்துக்கள் உலகளவில் பெரும் விவாதங்களை ஏற்படுத்தின. பாலஸ்தீன ஆதர வாளர்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அவரை தைரியமான அரசியல் குரலாகக் கண்டனர் அதேவேளை விமர்சகர்கள், இத்தகைய சொற்கள் இராஜதந்திர உறவுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் எனக் கூறினர்.

2025 ஜனாதிபதித் தேர்தலில் அவர் சுமார் 63 சதவீத வாக் குகளைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்தார். இந்த வெற் றியின் மூலம் அயர்லாந்தின் மூன்றாவது பெண் ஜனாதிபதியா கவும், பத்தாவது ஜனாதிபதியாகவும் உயர்ந்தார். அவரது வெற்றி பாரம்பரிய அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட மாற்றத் திற்கான மக்களின் விருப்பத்தை வெளிப்படுத்துவதாக அரசியல் விமர்சகர்கள் கருதினர்.

2025 நவம்பர் 11 அன்று டப்ளின் கோட்டையில் நடைபெற்ற உத்தியோகபூர்வ விழாவில் அவர் பதவியேற்றார். தனது பதவி யேற்பு உரையில் அமைதி, நடுநிலைமை, சமூக நீதி, கால நிலை மாற்றம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய குடி யரசை உருவாக்குவது ஆகியவற்றை முன்னிறுத்துவதாக உறுதியளித்தார். மேலும் அயர்லாந்து மொழியின் வளர்ச்சிக் கும் அவர் முக்கியத்துவம் அளிப்பதாக தெரிவித்தார்.

அயர்லாந்தின் ஜனாதிபதி பதவி பெரும்பாலும் சடங்கு சார்ந்த தாக இருந்தாலும், நாட்டின் நெறிமுறை மற்றும் தேசிய ஒற்று மையின் அடையாளமாகக் கருதப்படுகிறது. அந்த வகையில் கேத்தரின் கொனோலியின் பதவிக்காலம், சமூகப் பொறுப்பு, மனித உரிமைகள் மற்றும் உலகளாவிய நீதிக்கான குரலாக அமையும் என பலர் எதிர்பார்க்கின்றனர். மொத்தத்தில், கேத் தரின் கொனோலியின் ஜனாதிபதி பதவியேற்பு அயர்லாந்தின் அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். பொது மக்களின் நம்பிக்கையையும் மாற்றத்திற்கான எதிர்பார்ப்பை யும் பிரதிபலிக்கும் அவரது தலைமையால், அயர்லாந்து புதிய அரசியல் மற்றும் சமூக திசையை நோக்கி நகரும் என்ற நம்பிக்கை உருவாகியுள்ளது.

மனித உரிமை சமூக நீதிக்கான குரல்

கேத்தரின் கொன்னலி தனது அரசியல் வாழ்க்கை முழுவதும் மனித உரிமைகள், சமூக நீதி மற்றும் சர்வதேச சட்டம் போன்ற விடயங்களில் உறுதியான நிலைப்பாடுகளை எடுத்தவர் என அறியப்படுகிறார். குறிப்பாக பாலஸ்தீன மக்களின் உரிமைகள் தொடர்பாக அவர் தொடர்ந்து குரல் கொடுத்துள்ளார். இஸ்ரே லின் காசா மற்றும் மேற்குக் கரை தொடர்பான நடவடிக் கைகளை விமர்சித்த அவர், சில சந்தர்ப்பங்களில் இஸ்ரேலை "பயங்கரவாத நாடு" மற்றும் "சட்டவிரோத நாடு" என்று குறிப் பிட்டிருந்தார். இந்தக் கருத்துக்கள் உலகளவில் பெரும் சர்ச் சையை ஏற்படுத்தின.

அவரது ஆதரவாளர்கள், இத்தகைய கருத்துக்கள் மனித உரிமை மீறல்களை எதிர்த்து பேசும் தைரியமான அரசியல் குர லாகும் என்று வாதிடுகின்றனர். அவர்களின் பார்வையில், சர்வ தேச சட்டம் மற்றும் மனிதாபிமானக் கோட்பாடுகளைப் பாதுகாக் கும் நோக்கிலேயே கொன்னலி தனது விமர்சனங்களை முன் வைத்துள்ளார். குறிப்பாக இளம் வாக்காளர்கள், சமூக செயற்

பாலஸ்தீன மக்களின் உரிமைகள் தொடர்பாக அயர்லாந்து ஜனாதிபதி தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார். இஸ்ரேலின் காசா மற்றும் மேற்குக் கரை தொடர்பான நடவடிக்கைகளை விமர்சித்த அவர், சில சந்தர்ப்பங்களில் இஸ்ரேலை பயங்கரவாத சட்டவிரோத நாடு என்று குறிப்பிட்டிருந்தார். இந்தக் கருத்துக்கள் உலகளவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தின.

பாட்டாளர்கள் மற்றும் பாலஸ்தீன ஆதரவாளர்கள் மத்தியில் அவர் பெரும் ஆதரவைப் பெற்றுள்ளார்.

மறுபுறம், அவரது விமர்சகர்கள், இஸ்ரேல் போன்ற ஒரு அங்கீ கரிக்கப்பட்ட நாட்டை "பயங்கரவாத நாடு" என்று அழைப்பது இராஜதந்திர ரீதியாகப் பொருத்தமற்றது என்றும், அது மத்திய கிழக்கில் அமைதி முயற்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்றும் கூறுகின்றனர். மேலும், ஒரு ஜனாதிபதி அனைவரை யும் பிரதிநிதித்துவப்படுத்தும் நிலையில் இருக்க வேண்டியவர் என்பதால், இத்தகைய கடுமையான அரசியல் கருத்துக்கள் அந்தப் பதவியின் நடுநிலைத்தன்மையை பாதிக்கலாம் எனவும் அவர்கள் வாதிடுகின்றனர்.

அயர்லாந்து அரசியல் பண்பாட்டில் மாற்றம்

கடந்த ஆண்டு தேர்தல் அயர்லாந்தின் அரசியல் பண்பாட்டில் நிகழ்ந்து வரும் மாற்றங்களையும் பிரதிபலித்தது. கடந்த சில ஆண்டுகளாக அயர்லாந்து, மனித உரிமைகள், அகதிகள் பாது காப்பு மற்றும் சர்வதேச நீதிக்கான ஆதரவு போன்ற விடயங் களில் வலுவான நிலைப்பாடுகளை எடுத்துவருகிறது. பாலஸ் தீன மக்களுக்கான ஆதரவு அயர்லாந்து அரசியல் மற்றும் சமூக வட்டாரங்களில் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுகிறது. இந் தப் பின்னணியில், கொன்னலியின் வெற்றி பலரால் அந்தப் பொது மனநிலையின் வெளிப்பாடாகக் கருதப்படுகிறது.

கேத்தரின் கொனோலியின் தேர்தல் வெற்றி, அயர்லாந்தில் வளர்ந்து வரும் முன்னேற்றவாத அரசியல் மனநிலையின் பிரதிபலிப்பாகவும் பார்க்கப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக அந்நாடு அகதிகள் பாதுகாப்பு, காலநிலை மாற்றம், மனித உரிமைகள் மற்றும் சர்வதேச நீதிக்கான ஆதரவு போன்ற விடயங்களில் வலுவான குரலை வெளிப்படுத்தி வருகிறது. குறிப்பாக பாலஸ்தீன மக்களுக்கான ஆதரவு அயர்லாந்து சமூகத்தில் கணிசமாக உயர்ந்துள்ளது. இந்தச் சூழலில் கொனோலியின் வெற்றி, அந்தப் பொது மனநிலையின் அர சியல் வெளிப்பாடாகக் கருதப்படுகிறது.

தனது பதவியேற்பு உரையில் அவர் அமைதி, நடுநிலைமை, காலநிலை மாற்றத்துக்கு எதிரான நடவடிக்கைகள், சமூக நீதி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய குடியரசு ஆகியவற்றை முன்னிறுத்துவதாக உறுதியளித்தார். மேலும் அயர்லாந்து மொழியை அரசின் உயர்ந்த மட்டங்களிலும் அதிகம் பயன் படுத்துவதாகவும் தெரிவித்தார். அவரது உரை, தேசிய ஒற்று மையையும் சமூகப் பொறுப்பையும் வலியுறுத்தும் வகையில் அமைந்திருந்தது.

எதிர்கால அரசியல் இராஜதந்திர நிலைப்பாடு?

சர்வதேச அளவில், அவரது தேர்தல் பல்வேறு எதிர்வினை-களை உருவாக்கியுள்ளது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள், அயர்லாந்தின் அரசியல் மற் றும் ஒழுக்கநெறி நிலைப்பாடுகளை மேலும் உன்னிப்பாகக் கவ னிக்கத் தொடங்கியுள்ளன. இருப்பினும், ஜனாதிபதியின் அதி காரங்கள் வரையறுக்கப்பட்டவை என்பதால், அயர்லாந்தின் வெளிநாட்டு கொள்கையில் உடனடி மாற்றங்கள் ஏற்படும் என்று கூற முடியாது. ஆனால் உலக அரசியலில் மனித உரி மைகள் மற்றும் சர்வதேச நீதிக்கான விவாதங்களில் அயர்லாந் தின் குரல் மேலும் வலுப்பெறலாம் என்பதே பல ஆய்வாளர் களின் கருத்தாகும்.

சர்வதேச அளவில் இந்தத் தேர்தல் பல்வேறு எதிர்வினைகளை உருவாக்கக்கூடும். ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் அயர்லாந்தின் எதிர்கால அர சியல் மற்றும் இராஜதந்திர நிலைப்பாடுகளை உன்னிப்பாகக் கவனிக்கும் வாய்ப்பு உள்ளது. எனினும், ஜனாதிபதியின் அதி காரங்கள் வரையறுக்கப்பட்டவை என்பதால், அயர்லாந்தின் வெளிநாட்டு கொள்கையில் உடனடி மற்றும் பெரிய மாற்றங்கள் ஏற்படும் எனக் கூற முடியாது.

கேத்தரின் கொன்னலியின் தேர்தல் ஒரு தனிநபரின் அரசியல் வெற்றியைத் தாண்டி, மனித உரிமைகள், சர்வதேச நீதி மற் றும் உலக அரசியலில் சிறிய நாடுகளின் குரல் ஆகியவற்றை மையப்படுத்திய ஒரு முக்கிய அரசியல் நிகழ்வாகக் காணப் படுகிறது. அதேவேளை, அவரது கடந்தகால கருத்துக்கள் தொடர்ந்து விவாதங்களையும் சர்ச்சைகளையும் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. இந்தத் தேர்தல், உலக அரசியலில் மதிப்புகளுக்கும் இராஜதந்திரத்திற்கும் இடையிலான நுட்ப மான சமநிலையை மீண்டும் ஒருமுறை நினைவூட்டுகிறது.

கரும்புலி
மாவீரரெல்லாம் சரித்திரவான்கள்

அகோர வெய்யில் பொழிகிறது. பட்டிக்குள் நுழைந்தன சிங்கங்கள். கூச்சல், கதறல், அழுகை எதுவுமே அங்கே பலிக்க வில்லை. தாய்க் கோழிகள் குஞ்சுகளை பாது காக்க அலறியடித் தன. கூட்டித் திரிந்த குஞ்சுகளைப் பருந்துகள் தூக்கிச் செல்ல அந்தரித்தன தாய்ப் பறவைகள். கால்களைக் கட்டி கண்களைக் கட்டி இறைச்சிக்காக ஏற்றும் ஆடு மாடுகளைப் போல இளை ஞர்கள் ஏற்றப்பட்டார்கள். இது அன்று 1987-ல் வடமராட்சியின் நிலையாக இருந்தது. பிடிக்கப்பட்ட அனைவருமே புலிகள் என்று முத்திரையும் குத்தப்பட்டார்கள். இவர்கள் அனை வருமே சிங்கள தேசத்தின் பூசா, மகசீன், வெலிக்கடை போன்ற சித்திரவதைக் கூடங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். அனுப்பி விட்டு பாட்டும் கூத்துமாய் பொழுதுகள் கழிந்தன.

முதற்கரும்புலி கப்டன் மில்லர்

"புலிகள் எல்லாத்தையும் பிடிச்சுப்போட்டோம்" என்று சிரித்துச் சிரித்து தம் உருக்களுக்கு போதை ஏற்றினர்.

அவன் தயாராகிக் கொண்டிருந்தான். யூலை 5-ம் திகதி இரவு பாட்டும் கூத்துமாய் கழித்த அந்த பருந்துகளின் கூட்டுக்குள் பாய்வதற்கு அவன் தயாராகிக் கொண்டிருந்தான். அவனுக்குள் அக்கினிப் பந்தொன்று ஆவேசமாய் உருண்டு கொண்டி ருந்தது. சத்திய வேள்வி ஒன்றிற்காக அவன் சாகத் துணிந்து நின்றான். அவனைச் சுற்றிலும் தோழர்கள் துரிதமாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

அவன் தாய் மீது பற்றுக்கொண்டவன், அவன் தாய் நாட்டின் மீது பற்றுக்கொண்டவன், அவன் தலைவன் மீது பற்றுக் கொண் டவன். இந்தத் தேசத்தின் மக்களுக்காக பெரும் தியாகம் செய்திட துணிந்தான். தன்னை அழிப்பதன் மூலம், தன் இனத் தவர்களை அழிப்பவர்களை அழித்தொழிக்கும் வல்லமை கொண்டான். தலைவன் கொடுத்த ஆசி அவனுக்கு மேலும் ஓர் புதியதோர் உற்சாகத்தையும் வழங்கியிருந்தது. எங்கும் இருள் அப்பிக்கிடந்தது. பாய்ச்சலுக்கான நேரமும் நெருங்கியது. ஒன் றாய்ப் பழகிய தோழர்கள், சிரித்து சிரித்து சந்தோஷமாய்ப் பழ கியவர்கள் எல்லோரையும் அவன் பார்த்தான். தன் இனத்திற்கு தன்னால் செய்யக்கூடிய அதியுயர் தியாகத்தை செய்யப்போகி றேன் என் கின்ற பெருமிதத்தை அவன் முகம் வெளிப்படுத் தியது. எல்லோரையும் பார்த்தான். "மச்சான் போய்ற்று வாறன்". அவனைச் சுமந்த வாகனம் புறப்பட்டது. புறப்படும் வாகனத்தில் அமர்ந்திருக்கும் அவனைப் பார்த்து இருளிலும் மற்றவர்கள் கையசைத்தார்கள். சிறிது நேரத்தில் சுற்றுப்புற மெல்லாம் கிடு கிடுத்தது. வானத்தை நோக்கி கரும்புகை எழுந்தது. கூடி மகிழ்ந்த குஞ்சுகளையெல்லாம் கூட்டி அள்ளி கொடுஞ் சிறைக் குள் அடைத்தவர்களின் கொட்டம் அடங்கியது. அவனின் உயிர்ப்பறவை உயர எழுந்து பறந்தது. அந்த உயிர்ப் பறவை யின் இனிய சுதந்திர தாகம் மெல்ல மெல்ல தென்றலுடன் கலந்தது.

மில்லர் மிகப் பெரிய தியாகம் செய்த நாள் யூலை 5 தமிழீழத் தின் புதியதோர் நாளாய், தமிழீழத்தின் புதிய சகாப்தம் படைத்த திருநாளாய் திகழ்கின்றது.

இரண்டாம் உலகப் போர் உக்கிரம் அடைந்திருந்த காலம் பிரித்தானிய கடற்படைக் கப்பல் புரிந்த அனர்த்தங்கள் ஏராளம். இந்த வேளையில்தான் ஜப்பானிய தற்கொலை வீரன் ஒருவன் விமானத்தில் பறந்து வந்து அந்தக் கப்பலினுள் வீழ்ந்து வெடித்து தன் தாய்நாட்டின் மீதான பற்றை வெளிக்காட்டினான். அவனது அந்தத் தியாகம் உலகில் வியந்து பேசப்பட்ட வரலாறாயிற்று. அந்தத் தாக்குதல் யுக்தியை 1987 யூலை 5-ல் தமிழீழம் மீண்டும் பேசிக் கொண்டது.

"பலவீனமான எமது இனத்தின் மிகப் பலம் வாய்ந்த ஆயுத மாகவே நான் கரும்புலிகளை உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள். போராட்டப் எமது பாதையின் தடை நீக்கிகள்." என்று எமது கரும்புலிகள் தியாகத்தையும் உருவாக்கத்தையும் முன்மொழிந்தார் எமது தேசியத் தலைவர் அவர்கள்.

கரும்புலிகள் மென்மையானவர்கள். எமது இனத்திற்கு பெருமை சேர்த்தவர்கள். எமது தேசத்திற்கும் பெருமை சேர்த் தவர்கள். பெற்றவர்களுக்கும், கூடப்பிறந்தவர்களுக்கும் பெருமை சேர்த்தவர்கள்.

எனவேதான், "என்ர மகன் செத் தது என்பது எனக்கு கவலை தான். ஆனா, அவன் நாட்டுக்காகத் தானே செத்தவன். அதை நினைக்க பெருமையாத்தான் கிடக்கு" கண்கள் கலங்க கரும்புலி ஒருவனின் தாய் கூறினாள்.

கரும்புலிகளின் உன்னதமான தியாகங்களினால் எமது போராட்டம் எத்தனையோ திருப்பு முனைகளை யும் எவ் வளவோ வளர்ச்சியினையும் கண்டுள்ளது. எதிரி இருந்த இடம் எல்லாம் அவர்கள் ஏறி நடந்தார்கள். குறைந்த பலத்தோடு நின்று எதிரிக்கு கூடிய அழிவை ஏற்படுத்துகின்றார்கள். தன்னை அழித்து பகைவர்களை அழிப்பதில் அவர்கள் பெருமை கொள்கின்றார்கள். தமக்கு கிடைக்கும் அந்த சந்தர்ப் பத்தை பெறும் பேறாகக்கருதுகிறார்கள். அதனால்தான் "இப்படி யான நிறைவான சாவு எல்லோருக்கும் வராது" என்று கரும்புலி மேஜர் டாம்போ தன் தோழன் ஒரு வனிடம் சொல்லிப் பெருமிதம் கொண்டான்.

கரும்புலிகளின் ஈடுஇணையற்ற தியாகத்தினால் தமிழீழம் தலை நிமிர்ந்து நிற்கின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத் தின் ஒவ்வொரு அங்குல வளர்ச்சியிலும் கரும்புலிகளின் ஈகம் கலந்திருக்கின்றது. இரும்பு மனிதர்களாக கரும்புலிகள் இருந்த போதும் அவர்கள் மனங்களில் மென்மை குடிகொண்டுள்ளது. அவர்களின் மென்மையான மனங்களில் உறுதி இருந்தது. தாயகத்து மண்ணிற்காக, தாயகத்து மக்களுக்காக செய்யும் உன்னதமான தியாகங்களில் அவர்கள் உறுதியோடு இருந் தார்கள். அந்த உறுதியின் வெளிப்பாடாகத் தான் மாங்குளம் முகாமைத் தகர்த்து வெற்றிக்கு வழி சமைத்த கரும்புலி லெப். கேணல் போர்க்தன் தோழனிடம் "நான் புறப்படப்போ றன். இதோட மாங்குளம் முகாம் முடிஞ்சுது" என்று திடமாகச் சொன் னான்.

மனிதர்கள் மரணத்தைக் கண்டு நடுநடுங்கும்போது கரும் புலிகள் மரணத்தை மடியில் கொண்டு திரிகிறார்கள். அவர் களின் மரணம் ஆயிரம் ஆயிரம் காவியங்களானது. கண் ணீருக்கு அப்பாற்பட்ட சோகங்களை விரும்பாத வீரமாயிற்று. உறுதி, எதற்குமே அஞ்சாத உறுதி, எவருக்கும் அஞ்சாத உறுதி அதுதான் கரும்புலிகளின் பலம். நெல்லியடியில் இடியாய்

முழங்கி மில்லர் தொடக்கி வைத்த தியாகம் இன்னும் ஓய வில்லை.

கரிய இருளைப் பூசிக்கொண்டு நீண்டு படுத்திருக்கும் அலை கடலிலும் கடற் கரும்புலிகள் உலா வந்தார்கள். எங்கள் வாழ்

வின் இனிமைகளைக் குலைத்த எல்லா இடங்களிலும் கரும் புலிகள் பாய்ந்தார்கள். எல்லைகள் தாண்டியும் எங்கள் கரும் புலிகள் தமது பலத்தின் இருப்பை உணர்த்தினார்கள். வல் வைக் கடலில், பருத்தித்துறைக் கடலில், வெற்றிலைக் கேணி யில், சிலாவத்துறையில், முல்லைக்கடலில், காங்கேசன்துறை யில், காரைநகரில், திருகோணமலையில் என தமிழீழத்தின் எல்லாக் கடற் பரப்பிலும் ஏன் கொழும்பிலும் கூட எதிரியின் கடற் கலங்கள் சிதறின. வான்முட்ட எழுந்த புகை மண்டலத்துடன் கரும்புலிகளின் உடலும் உயிரும் கலந்தன. போராளிகளின தும் தமிழ் மக்களினதும் உயிர்களைக் கொள்ளையடித்து உடமைகளை நாசமாக்கிய கடற்பேய்களை அவர்கள் அழித் தார்கள். தம் இனத்தை அழித்தவர்களை அழித்தார்கள். தம்மை அழிப்பதன்மூலம் தமிழீழ சந்ததியினருக்கு பெரும் தியாகம் செய்தார்கள். தங்களது இனிமையான வாழ்வை மட்டுமன்றி தம் இனிய உயிர்களையும் தியாகம் செய்தார்கள். “சாகும் பொழுதினில் இரு சாவிக் குண்டலம் தந்தவரெவர் கொடைக்கை” என்று கர்ணனின் கொடைச் சிறப்பை வியந்து போற்றினான் பாரதி. ஆனால் அக் கொடைக்கும் மேலாய் தம் மையே தற்கொடை தந்தவர்கள் எங்கள் கரும்புலிகள். தமிழீழத் தேசியத் தலைவரின் எண்ணத்தில் உருவாகி எண்ணற்ற வரலாற்றைப் படைத்தவர்கள் இவர்கள்.

இவர்களது வல்லமை ஆண், பெண் வேறுபாட்டிற்கு அப்பாற் பட்டது. பகைதனை ஒழிக்கும் பெரும் புயல்களாய் தமிழீழப் பெண் போராளிகள் கரும்புலியானார்கள். தம்மை வெடியாக்கி பகையை அழிக்க தீர முடன் நிமிர்ந்தனர்.

அன்று காங்கேசன்துறை கடற் பரப்பில் வரிசையாக வந்தன பகைவனின் கடற்கலங்கள். அவள் உறங்கிக்கிடக்கும் எரி மலை என்பதனை அங்கயற்கண்ணி உலகிற்கு உணர்த்தி னாள். கரும்புலிகள் பலர் எழுத முடியாத காவியங்களாக தமிழீழ நெஞ்சங்களில் உறங்கிக் கிடக்கின்றார்கள். உயிர்த் தியாகம் என்பது உன்னதமானது என்ற போதும் முகம் காட்டாத முகவரி சொல்லாத இவர்களின் உயிர்த்தியாகம் உன்னதத்தி லும் உன்னதமானது. தன்னை இனங் காட்டாது தன் செயல் மட்டும் உலகறியச் செய்து தமிழீழத்தின் தன் மானத்தை உயரச் செய்தவர்கள் இவர்கள். இவர்களின் உறுதி, பற்று, பாசம் எல்லாமே உயர்ந்தவை. இவர்கள் ஓயாத எரிமலைகள். புகைச்சல் இல்லாத புயல்கள்.

தாக்குதல் தளத்திற்கு தம்மை இசைவாக்கிக் கொண்டபோதும் தம் உள்ளங்களில் தாய் மண்ணின் விடுதலைத் தாகத்தையே சுமந்து நின்றார்கள். இவர்கள் அற்புத மனிதர்கள். எதிரிகளின் இலக்குகளைத் தேடி அவற்றை அழித்தொழிப்பதற்காக இவர்கள் ஓடிய ஓட்டமும் எடுத்த முயற்சிகளும் இவர் நெஞ்சிலே சுமந்து திரிந்த தாயக தாகத்தை வெளிப்படுத்தின. இவர்களின் தியாக உணர்வும் அர்ப்பணிப்புத் திறனும் அள விட முடியாத விசித்திரங்கள்.

அரிய பல செயல்கள் செய்த கரும்புலிகளை எங்களது நெஞ்சுக ளில் ஒட்டி நிற்கும் நிழல்களே, நெருப் புத் துகள்களே, தொடு வானம் போல ஜாலங்கள் நிறைந்த வாழ்வு சுமந்தவரே, சுதந்திர வேட்கையுடன் சுற்றித் திரிந்த சுதந்திரப் பறவைகளே, வெடியதிரும் வேளையிலும் செடியில் மலராய் நின்றவரே, பகையழிக்க மனம் விரும்பி உமையழித்த வீரரே எப்படி உங்கள் தியாகத்தைக் கூறுவோம், போற்றுவோம் எனத் தெரியவில்லை.

நன்றி புலிகளின் குரல்

புது வரலாற்றின் பிறந்தநாள்...
அது, கரும்புலிகள் நாள்



ஓரேயொரு வெடி தான்,
அட்டதிக்கும் அதிர்ந்து குலுங்கும்.
சரித்திரத்தைத் தலைகீழாக்கி விட்டு,
சந்தனமேன காற்றில் கரையும்.
உலகம் ஒரு தரம் புரவம் உயர்த்தும்.
வார்த்தை வலைக்குள்ளே– சிக்காத தற்கொடை,
எவருக்கும் தெரியாமல் உறங்கும்.
வழியனுப்பி வைத்த விழிகள் கலங்கும்.
என்றாலும்,
கண்ணீர்க்கோடு கன்னத்தில் இருக்காது.
சாவுக்குத் தேதி குறித்து;
நேரம் கணித்து;
இலங்கு நோக்கி நகர எவரால் முடியும்?
வாழ்வு வருடங்களால் மட்டும்,
கணிக்கப்படுவதில்லை.
சங்கை பெறுகின்ற சாவும்,
வாழ்வாகிப் போகும்.
யூலை ஐந்தாம் தேதி
வருடத்தில் வரும் ஒரு நாளல்ல...
நெல்லியடியில்... மில்லர் தொடக்கிய
புது வரலாற்றின் பிறந்தநாள்,
தமிழிருக்குள் நம்பிக்கை மொட்டவிழ்ந்து
விடுதலை வாசம் வீசத் தொடங்கிய நாள்,
ஊழிக்கூத்தின் அரங்கேற்ற நாள்,
ஆம்...
அது, கரும்புலிகள் நாள்.

– மாலிகா –

கரும்புலி மில்லர்... நீ...
காலனும் கலங்கிய காவியம்
காலத்தால் அழியாத ஓவியம்

LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படிக்கற்கள்.

விளம்பரத் தொடர்புகளுக்கு

437 345 4203

www.vanikam.ca
thamilarvanikam@gmail.com

ஆசியாவின் இரண்டாவது பெரிய மனிதப் புதைகுழி?

28.06.2026

செம்மணி மனிதப் புதைகுழியானது தென்னாசியாவின் முதலாவது பெரிய மனிதப் புதை குழியா? ஆசியாவின் இரண்டாவது பெரிய மனிதப் புதை குழியா?ஆசியாவில் அதிக தொகை மனிதப் புதை குழிகளைக் கொண்ட இடம் கம்பூச்சியா. அங்கே கிட்டத்தட்ட இருபதாயிரம் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை ஒரே இனத்துக்குள் நடந்த கொலைகள்தான். கமரூச் இயக்கத்தின் தலைவராகிய போல்பொட் தன்னுடைய சொந்த மக்களையே இலட்சக்கணத்தில் கொன்று குவித்தார்.

கம்பூச்சிய மனிதப் புதை குழிகள்தான் ஆசியாவின் மிகப்பெரிய மனிதப் புதைக்குழிகளாகக் கணிக்கப்படுகின்றன. இந்த ஆண்டு, இந்த மாதத்தோடு செம்மணி மனிதப் புதைகுழி ஆசியாவின் இரண்டாவது பெரிய மனிதப் புதை குழியாகக் கணிக்கப்படுமா? இதில் துயரமான ஒற்றுமை என்னவென்றால் இரண்டுமே பௌத்தம் பயிலப்படும் நாடுகள்.

கடந்த வாரம் நீதி அமைச்சர் செம்மணிக்கு வருகை தந்திருந்தார். அதன் பின் அவர் பாதிக்கப்பட்ட மக்களை அதாவது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக போராடிக் கொண்டிருக்கும் அமைப்புகளை சேர்ந்தவர்களை சந்தித்தார். இந்த சந்திப்பின்போது அவர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதை நோக்கமாகக் கொண்டு பின்வரும் விடயங்களைக் கதைத்தார்.

முதலாவதாக, அவர்களுக்கு உரிய உதவிகள் கிடைக்கும் என்று கூறினார். உதவி கேட்டவர்களுக்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் சொன்னார். இரண்டாவதாக செம்மணிப் புதைகுழி தொடர்பில் படைத்தரப்பின் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அவர்களை அரசாங்கம் நீதியின் முன் நிறுத்தும் என்றும் உறுதியளித்தார். மூன்றாவதாக இதற்கு முன்னிருந்த அரசாங்கங்களை போலன்றி இந்த அரசாங்கம் செம்மணிப் புதை குழியை அகழ்வதற்கு வேண்டிய எல்லாச் சட்ட ஏற்பாடுகளையும் நிதி ஏற்பாடுகளையும் செய்து வருகிறது என்றும் தெரிவித்தார். நாலாவதாக, மரபணுப் பரிசோதனை எனப்படுவது மனிதப் புதை குழிக்கான நீதி விசாரணைப் பொறிமுறையில் இறுதிக்கட்டத்தில் செய்யப்படுவது என்றும் தெரிவித்தார்.

அரசாங்கம் செம்மணி விவகாரத்தைத் தனக்குச் சாதகமாக கட்டமைக்கும் விதத்தில் கையாண்டு வருகிறது என்பதை அது காட்டுகிறது. உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை தொடர்பான நம்பிக்கையை உலக அளவில் பலப்படுத்துவதற்கு இந்த விடயத்தை அரசாங்கம் கையாண்டு வருகிறது என்பது தெரிகிறது. தமிழ் மக்கள் அனைத்துலகைப் பொறிமுறை ஒன்றைக் கேட்கின்றார்கள். நீதி அமைச்சர் செம்மணிக்கு வந்தபோது அங்கே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட, பாதிக்கப்பட்ட மக்களும் அதைத்தான் கேட்டார்கள். பல மாதங்களுக்கு முன்பு ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் அங்கு வந்த போதும் அதைத்தான் கேட்டார்கள். ஆனால் அரசாங்கம் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையின் நம்பகத்தன்மையை பலப்படுத்தும் விதத்தில் விடயங்களைக் கையாண்டு வருகிறது என்பது தெரிகிறது. ஐநாவும் "தேசியத் தன்மை" மிக்க உள்நாட்டுப் பொறிமுறையை அனைத்துலக உதவிகளின் மூலம் பலப்படுத்துவது என்றுதான் சிந்திப்பதாகத் தெரிகிறது.

இப்படிப்பட்டதோர் உள்நாட்டு மற்றும் அனைத்துலகச் சூழலில், அரசாங்கத்தை நம்பாதபடியால் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையையும் ஏற்றுக்கொள்ளாத தமிழ்மக்கள் அரசாங்கமே தானாக முன்வந்து செம்மணிக்கு நீதியைப் பெற்றுத் தரும் என்று எப்படி எதிர்பார்க்கலாம்? அரசாங்கம் தானாக முன்வந்து சம்பந்தப்பட்ட உறவினர்களைத் தேடித்திரட்டி அவர்களுடைய மரபணு மாதிரிகளை சேகரிக்கும் என்றும், அந்த மரபணு மாதிரிகளை எலும்புக்கூடுகளின் மரபணு மாதிரிகளோடு ஒப்புநோக்கும் என்றும் எப்படி எதிர்பார்க்கலாம்? இந்தவிடயத்தில் தமிழ்க் கட்சிகளும் சிவில் சமூகங்களும் இணைந்து தாங்களாகச் செய்யவேண்டிய பணிகள் எவையெவை?

செம்மணியில் அகழ்ந்தெடுக்கப்படும் எலும்புக்கூடுகளை ஊடகவியலாளர்கள் ஒவ்வொரு நாளும் வெளி உலகத்துக்கு காட்டிகொண்டிருக்கிறார்கள். அது ஓர் உணர்ச்சிகரமான அரசியல் விவகாரமாக தமிழ் பரப்புக்குள் நொதித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்த எலும்புக் கூடுகளில் தங்களுடைய உறவினர்கள் இருக்கலாம் என்று அதை அடையாளம் காண்பதற்கு பொது மக்கள் ஏன் அதிக தொகையில் போகவில்லை? அல்லது அவ்வாறு போக வேண்டியவர்களை ஒருங்கிணைப்பது யார்?

செம்மணியில் குழந்தைகளின் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் விளையாடும் பொம்மைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கொத்து கொத்தாக புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கத்தக்க விதத்தில் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. தாயும் பிள்ளையும் என்று சந்தேகிக்கப்படத்தக்க விதத்தில் எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அப்படியென்றால் அங்கே தங்களுடைய உறவினர்கள் புதைக்கப்பட்டிருந்திருக்கலாம் என்று சந்தேகப்படும் தமிழ் மக்களை ஒருநாள் அங்கு வருமாறு அழைத்தபோது, ஏன் தமிழ் மக்கள் அதிக தொகையில் வரவில்லை? கொக்குத்தொடுவாய்ப் புதை குழிகளில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளை அடையாளம் காண வருமாறு அழைத்த போதும் தமிழ் மக்கள் அங்கே போகவில்லை என்று கூறப்படுகிறது.

யாருக்கெல்லாம் கொல்லப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் உடல்கள் கிடைக்கவில்லையோ, யாருடைய உறவினர்கள் குழந்தைகளோடு காணாமல் ஆக்கப்பட்டார்களோ, அல்லது யாருடைய உறவினர்கள் குடும்பமாக காணாமல் ஆக்கப்பட்டார்களோ, அல்லது யாருடைய உறவினர்களின் உடல்கள் கிடைக்கவில்லையோ, அவர்கள் அனைவரும் அங்கே வந்திருக்க வேண்டும்? அவர்களை அழைத்துக் கொண்டு வர வேண்டியது யார்? எந்த அரசாங்கத்தின் உள்நாடு விசாரணைப் பொறிமுறை வேண்டாம் என்று தமிழ் மக்கள் நிராகரிக்கிறார்களோ அதே அரசாங்கம் அதைச் செய்ய வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்களா?

எலும்புக்கூடுகள் பேசாது. அவற்றின் மரபணுக்கள்தான் பேசும். எலும்புக்கூடுகளை அடையாளம் காணமுடியாது. ஆனால் மரபணுக்களை ஒப்பு நோக்கலாம். எலும்புக்கூடுகளோடு கிடைக்கும் இதுவரை உக்காத பொருட்களை வைத்தும் ஓரளவுக்கு அங்கு புதைக்கப்பட்டவர்களை அடையாளம் காண முயற்சிக்கலாம். எனவே இந்த விடயத்தில் உலகளாவிய அனுபவங்களை கற்றுக்கொண்டு அதற்கு வேண்டிய விஞ்ஞான பூர்வமான அணுகுமுறைகளை தமிழ்த் தரப்பு முன்னெடுக்க வேண்டும். யார் அதைச் செய்வது?

செம்மணியில் புதை குழிகள் முதலில் திறக்கப்பட்டதற்கு காரணம், சோமவன்ச ராஜபக்ஷ என்ற ஒரு படை ஆள்தான். இரண்டாவது தடவை அது திறக்கப்பட காரணம் இயற்கையானது. சித்துப்பாத்தி மயானத்தில் மின்தகன மேடை அமைப்பதற்காக அத்திவாரம் கட்டுவதற்கு நிலத்தை அகழ்ந்தபோது எலும்புக்கூடுகள் மேலெழுந்தன.அதாவது இயற்கை தமிழ் மக்களுக்கு ஒரு வாய்ப்பைத் திறந்து விட்டிருக்கிறது. ஆனால் அதைத் தமிழ் மக்கள் பயன்படுத்துகிறார்களா?

சோமவன்ச ராஜபக்ச ஒரு முக்கிய துருப்புச் சீட்டு. படைத்தரப்பிலிருந்து ஒருவர் அவ்வாறு சாட்சியம் கூறுகிறார். பல ஆண்டுகளாக அவர் சிறையில் இருக்கிறார். அவருடைய மனைவி தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு கடிதங்கள் எழுதியிருக்கிறார். 38 ஆண்டுகால போரில் படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் அவ்வாறு தமிழ் மக்களுக்குச் சாதகமாகச் சாட்சி கூறுவது மிக அரிதான ஒரு புறநடை. ஆனால் தமிழ் மக்கள் எந்த அளவுக்கு அதனைச் சட்டரீதியாகக் கையாண்டிருக்கிறார்கள்?

எனவே, செம்மணிப் புதைக்குழி தமிழ் கட்சிகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் மட்டுமல்ல, தமிழ் சட்டத்தரணிகளுக்கும் சட்டச் செயற்பாட்டாளர்களுக்கும் புதிய வாய்ப்புகளை திறந்து வைத்திருக்கிறது. நினைவு கூர்தல்போல புதைகுழிகளும் உணர்ச்சிகரமான விடையப் பரப்புகள்தான். ஆனால் அந்த உணர்ச்சிகரமான உளவியல் சூழலை நீதிக்கான போராட்டத்தின் உந்துவிசையாக யார் மாற்றுவது?

சிங்கள மனித உரிமைச் செயற்பாட்டாளரான, மறைந்த, சுனிலா அபயசேகர பல ஆண்டுகளுக்கு முன் "சண்டே டைம்ஸ்" பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலை இங்கே நினைவூட்ட வேண்டும். அது மாத்தளை வைத்தியசாலைக்கு அருகே மனிதப் புதை குழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருந்த காலம். சுனிலா தனது நேர்காணலில் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டியிருந்தார். "மாத்தளைப் புதைகுழி கிண்டப்படுகையில், அதை நோக்கிச் சிங்கள மக்கள் திரண்டு வரவில்லை. இதுவே லத்தீன் அமெரிக்காவாக இருந்திருந்தால், மனிதப் புதைக்குழி கிண்டப்படுகையில் பொதுமக்கள் குறிப்பாக, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அந்த இடத்தைச் சூழ்ந்து காணப்படுவார்கள். அந்த இடத்தை நோக்கித் திரண்டு வருவார்கள்..." என்ற பொருள்பட சுனிலா கருத்துத் தெரிவித்திருந்தார்.

அதைத்தான் வேறு வார்த்தைகளில் வவுனியாவில் நடந்த ஒரு கருத்தரங்கில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக இருந்தவரும், மனித உரிமைச் செயற்பாட்டாளருமான கலாநிதி விஜயதிலக கூறினார். "தென்னிலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கதை மறக்கப்பட்ட ஒரு கதை" என்று அவர் கூறினார்.

மாத்தளைப் புதைகுழியை நோக்கிச் சிங்கள மக்கள் வரவில்லை. செம்மணியில் எலும்புக் கூடுகளை அடையாளம் காண்பதற்கு பொதுமக்கள் அழைக்கப்பட்டபோது மிகச்சிறிய எண்ணிக்கையானவர்களே அங்கே வந்திருந்தார்கள். கொக்குத் தொடுவாய்க்கும் மக்கள் போகவில்லை என்று கூறப்படுகிறது. நீதி அமைச்சர் கூறுகிறார், மரபணுப் பரிசோதனைக்குத் தேவையான வளங்கள் இலங்கையிடம் போதிய அளவு இல்லை என்று. செம்மணி ஆசியாவின் இரண்டாவது பெரிய புதை குழியா என்ற கேள்வி வலிமையாக மேலேழும் ஒரு காலகட்டத்தில், நீதிக்காகப் போராடும் தமிழ்மக்கள் தாங்களாகச் செய்யவேண்டியது என்ன?

நன்றி: நிலாந்தன்

சுவிஸ் 10 மில்லியன் சனத்தொகை கட்டுப்பாடு: பொது வாக்கெடுப்புத் தோல்வியின் விளைவு!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

15.06.2026

சுவிட்சர்லாந்தில் மக்கள்தொகையை பத்து மில்லியனாகக் கட்டுப்படுத்தும் பொது வாக்கெடுப்பு தோல்வி அடைந்ததன் மூலம், நாடு பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிசெய்துள்ளதுடன், ஐரோப்பிய ஒன்றியத்துடனான (EU) தடையற்ற தொழிலாளர் இயக்க ஒப்பந்தத்தையும் பாதுகாத்துள்ளது.

சுவிட்சர்லாந்தில் மக்கள்தொகை வளர்ச்சி, குடியேற்றக் கொள்கை மற்றும் நாட்டின் எதிர்கால வள மேலாண்மை தொடர்பான விவாதங்கள் கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்து வருகின்றன. இந்தப் பின்னணியில், நாட்டின் மக்கள் தொகையை 10 மில்லியன் பேருக்கு மேல் செல்லாமல் கட்டுப்படுத்த வேண்டும் (No to Switzerland with 10 million) என்ற கோரிக்கையுடன் ஒரு பொது வாக்கெடுப்பு முன்மொழிவு முன்வைக்கப்பட்டது. இந்த முன்மொழிவு சுவிஸ் அரசியலில் மட்டுமல்லாது, ஐரோப்பா முழுவதும் குடியேற்றம் மற்றும் தேசிய அடையாளம் குறித்த விவாதங்களுக்கு புதிய பரிமாணத்தை உருவாக்கியது.

சுவிட்சர்லாந்து நேரடி ஜனநாயகம்:

சுவிட்சர்லாந்து உலகில் நேரடி ஜனநாயகத்தின் சிறந்த எடுத்துக்காட்டாகக் கருதப்படும் நாடாகும். சுமார் 10 மில்லியன் மக்களைக் கொண்ட இந்த நாடு, அரசியல் முடிவுகளை நாடாளுமன்றம் மட்டுமன்றி மக்களும் நேரடியாக எடுக்கும் தனித்துவமான முறையைப் பின்பற்றுகிறது. இதன் மையக் கருவியாக பொதுவாக்கெடுப்பு (Referendum) விளங்குகிறது.

பொதுவாக்கெடுப்பு என்பது ஒரு முக்கியமான சட்டம், அரசியலமைப்புத் திருத்தம் அல்லது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை தொடர்பாக மக்களிடம் நேரடியாக வாக்கெடுப்பு நடத்தி அவர்களின் முடிவைப் பெறும் ஜனநாயக நடைமுறையாகும். சுவிட்சர்லாந்தில் மக்கள் வெறும் தேர்தல்களில் மட்டும் வாக்களிப்பதில்லை; அரசின் முக்கிய முடிவுகளிலும் நேரடியாக பங்கேற்கின்றனர்.

சுவிட்சர்லாந்தில் பொதுவாக்கெடுப்பின் முக்கிய நோக்கம் அதிகாரம் மக்களிடமே இருக்க வேண்டும் என்பதாகும். நாடாளுமன்றம் நிறைவேற்றிய சட்டம் மக்களின் விருப்பத்திற்கு எதிரானதாக இருப்பதாக சிலர் கருதினால், அதனை பொதுவாக்கெடுப்பிற்கு கொண்டு வர முடியும். மேலும், அரசியலமைப்பில் மாற்றம் செய்ய வேண்டுமானால் அது கட்டாயமாக மக்களின் ஒப்புதலைப் பெற வேண்டும். இதனால் அரசியல் அதிகாரம் ஒரு சிலரின் கைகளில் மட்டுமே குவியாமல், மக்களின் கண்காணிப்பின் கீழ் செயல்படுகிறது.

குடியேற்றத்தை கட்டுப்படுத்தல்:

சுவிட்சர்லாந்தின் தற்போதைய மக்கள் தொகை சுமார் 9 மில்லியனை எட்டியுள்ள நிலையில், வரவிருக்கும் தசாப்தங்களில் அது 10 மில்லியனைத் தாண்டும் என அரசின் கணிப்புகள் தெரிவித்தன. இதனால் வீட்டு வசதி, போக்குவரத்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பொது சேவைகள் மீது அதிக அழுத்தம் ஏற்படும் என்ற அச்சம் சில அரசியல் கட்சிகளாலும் சமூக அமைப்புகளாலும் முன்வைக்கப்பட்டது.

இந்தக் கவலைகளை அடிப்படையாகக் கொண்டு, வலதுசாரி தேசியவாத அரசியல் சக்திகள் மக்கள் தொகை 10 மில்லியனை எட்டியவுடன் குடியேற்றத்தை கடுமையாகக் கட்டுப்படுத்தும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என வலியுறுத்தின. அவர்களது வாதப்படி, நாட்டின் இயற்கை வளங்கள் வரையறுக்கப்பட்டவை; அதிக குடியேற்றம் சுவிஸ் வாழ்க்கைத் தரத்தையும் கலாசார அடையாளத்தையும் பாதிக்கக்கூடும்.

ஆனால் இந்த முன்மொழிவுக்கு எதிராக அரசாங்கம், பெரும்பாலான பிரதான அரசியல் கட்சிகள், தொழிலாளர் அமைப்புகள் மற்றும் வணிகத் துறைகள் ஒன்றிணைந்து பிரசாரம் செய்தன. சுவிஸ் பொருளாதாரம் பெருமளவில் வெளிநாட்டு தொழிலாளர்களை நம்பியுள்ளது என்றும், குடியேற்றத்தை கடுமையாகக் கட்டுப்படுத்துவது தொழிலாளர் பற்றாக்குறையை உருவாக்கும் என்றும் அவர்கள் எச்சரித்தனர். குறிப்பாக சுகாதாரம், கட்டுமானம், தொழில்நுட்பம் மற்றும் சேவைத் துறைகளில் வெளிநாட்டு பணியாளர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலும், சுவிட்சர்லாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கிடையிலான சுதந்திரமான மக்கள் நகர்வு ஒப்பந்தங்களும் இந்த விவாதத்தில் முக்கிய இடம் பெற்றன. 10 மில்லியன் உச்சவரம்பு நடைமுறைக்கு வந்தால், ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவுகள் பாதிக்கப்படலாம் என்ற அச்சமும் வெளியிடப்பட்டது. இது நாட்டின் வர்த்தகம், முதலீடு மற்றும் சர்வதேச ஒத்துழைப்பில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்ப்பாளர்கள் வாதிட்டனர்.

சுவிஸ் பொது வாக்கெடுப்பு முடிவுகள்:

சுவிட்சர்லாந்தின் தற்போதைய மக்கள் தொகை சுமார் 9 மில்லியனை எட்டியுள்ள நிலையில், வரவிருக்கும் தசாப்தங்களில் அது 10 மில்லியனைத் தாண்டும் என அரசின் கணிப்புகள் தெரிவித்தன. இதனால் வீட்டு வசதி, போக்குவரத்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பொது சேவைகள் மீது அதிக அழுத்தம் ஏற்படும் என்ற அச்சம் சில அரசியல் கட்சிகளாலும் சமூக அமைப்புகளாலும் முன்வைக்கப்பட்டது.

14.06.26 சுவிஸ் பொது வாக்கெடுப்பு முடிவுகளின் படி, 2050 க்குள் மக்கள் தொகை 10 மில்லியனை தாண்டக்கூடாது. அப்படி தாண்டும் பட்சத்தில் சுவிஸ் அரசு ஐரோப்பிய ஒன்றியத்துடன் பல விடயங்களில் சுதந்திரமாக செற்படும் செயலாக்கத்தை இரத்து செய்யும் திட்ட வரைபு கருதுகோளாக இருந்தது. அதாவது இருதரப்பு இணைச் செயற்பாடுகளில் சில மாற்றங்களை சுவிஸ் மேற்கொள்ளவேண்டிய நிலை தோன்றியிருக்கும்.

முக்கியமாக பலராலும் பேசப்பட்ட (வெளிநாட்டவர் உட்பட) சுவிஸில் 10 மில்லியன் உச்சவரம்பு மக்கள் தொகைக்கான திட்ட வாக்கெடுப்பில்-ஆதரவாக 45%, எதிராக 55% வாக்கும் கிடைத்து மக்கள் இக்கோரிக்கையை நிராகரித்துள்ளார்கள். இதனால் வெளிநாட்டவர் வருகை இனி தடைப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது சமூக குடிமை சேவைச் சட்ட (Civilian Service Act) திருத்தத்தை அதாவது இராணுவ சேவையிலிருந்து சமூக சேவைக்கு மாறுவதை தடை செய்யும் கோரிக்கைக்கு மக்கள் 53% ஆமோதித்து வாக்களித்துள்ளனர். மேலும் (Swiss Bern Musee des beaux- Arts) கலை அருங்காட்சியகம் 147 மில்லியன் செலவில் சீரமைப்புகுரிய கோரிக்கை மக்களால் நிராகரிப்பு செய்யப்பட்டு உள்ளது.

அத்துடன் ஜெனிவா கலை மற்றும் சரித்திர அருங்காட்சியகம் 131 மில்லியன் செலவில் விரிவாக்கம் செய்யும் கோரிக்கையையும் 54% மக்கள் எதிராக வாக்கு செலுத்தி நிராகரித்துள்ளனர். அதாவது முதலாம் கோரிக்கை வெற்றி பெற்றிருப்பின் சுவிஸ் அரசு பல்துறை தொழிலாளர் நெருக்கடியை சந்திக்க வேண்டிய நிலையியல் தோற்றம் பெற்றிருக்கும் என ஊகிக்கப்படுகிறது.

மூன்று முக்கிய பொதுவாக்கெடுப்பு

சுவிட்சர்லாந்தில் பொதுவாக்கெடுப்பு மூன்று முக்கிய சூழ்நிலைகளில் நடத்தப்படுகிறது. முதலாவது கட்டாய பொதுவாக்கெடுப்பு (Mandatory Referendum) அரசியலமைப்புத் திருத்தங்கள், சர்வதேச உடன்படிக்கைகளில் முக்கிய மாற்றங்கள் போன்ற விடயங்களில் மக்களின் ஒப்புதல் கட்டாயமாக பெறப்பட வேண்டும்.

இரண்டாவது விருப்பப் பொதுவாக்கெடுப்பு (Optional Referendum) நாடாளுமன்றம் ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்றிய பின்னர், 100 நாட்களுக்குள் 50,000 வாக்காளர்களின் கையெழுத்துகள் சேகரிக்கப்பட்டால் அந்தச் சட்டம் மக்களின் வாக்கெடுப்பிற்கு கொண்டு வரப்படும்.

மூன்றாவது மக்கள் முன்முயற்சி (Popular Initiative) 100,000 வாக்காளர்கள் கையெழுத்திட்டு ஒரு அரசியலமைப்புத் திருத்தத்தை முன்வைத்தால், அது தேசிய அளவிலான வாக்கெடுப்பிற்கு செல்லும். இதன் மூலம் சாதாரண குடிமக்களுக்குக் கூட அரசியல் மாற்றங்களை முன்வைக்கும் அதிகாரம் கிடைக்கிறது.

சுவிட்சர்லாந்தில் ஆண்டுக்கு பல முறை பொதுவாக்கெடுப்புகள் நடைபெறுகின்றன. குடியேற்றக் கொள்கை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஓய்வூதியம், வரிவிதிப்பு, ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவுகள் போன்ற பல்வேறு விடயங்களில் மக்கள் நேரடியாக முடிவெடுத்துள்ளனர்.

இந்த நடைமுறை அரசின் மீதான மக்களின் நம்பிக்கையை அதிகரிப்பதோடு, அரசியல் பொறுப்புணர்வையும் வலுப்படுத்துகிறது. அதே நேரத்தில், மக்கள் அரசியல் விவகாரங்களில் தொடர்ந்து விழிப்புணர்வுடன் இருக்க வேண்டிய அவசியத்தையும் உருவாக்குகிறது.

குடியேற்றம், தேசிய அடையாளம், பொருளாதார வளர்ச்சி:

முக்கியமாக தற்போது நடைபெற்ற பொது வாக்கெடுப்பில், பெரும்பான்மையான சுவிஸ் வாக்காளர்கள் சனத்தொகை எண்ணிக்கை கட்டுப்பாட்டு முன்மொழிவை நிராகரித்தனர். இதன் மூலம் மக்கள் தொகையை ஒரு நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கைக்குள் கட்டுப்படுத்தும் முயற்சிக்கு மக்கள் ஆதரவு இல்லை என்பது தெளிவானது. அதேவேளை, மக்கள் தொகை வளர்ச்சி மற்றும் குடியேற்றம் குறித்த கவலைகள் முற்றிலும் மறுக்கப்படவில்லை; மாறாக, அவற்றை சமநிலையான கொள்கைகள் மூலம் கையாள வேண்டும் என்ற அணுகுமுறையே வெற்றி பெற்றதாகக் கருதப்படுகிறது.

இந்தத் தீர்ப்பு சுவிட்சர்லாந்தின் நேரடி ஜனநாயக அமைப்பின் வலிமையையும் வெளிப்படுத்துகிறது. மக்கள் தங்களது எதிர்காலம் தொடர்பான முக்கிய முடிவுகளில் நேரடியாக பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும் வாய்ப்பைப் பெற்றனர். அதே நேரத்தில், பொருளாதாரத் தேவைகள், மனித வளப் பற்றாக்குறை மற்றும் சர்வதேச உறவுகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு நடைமுறை சார்ந்த முடிவை எடுத்துள்ளனர்.

சுமார் பத்து மில்லியன் மக்களைக் கொண்ட சுவிட்சர்லாந்து, நேரடி ஜனநாயகத்தின் மூலம் உலகிற்கு ஒரு தனித்துவமான முன்மாதிரியை வழங்குகிறது. பொதுவாக்கெடுப்பு என்பது வெறும் வாக்குப்பதிவு முறை அல்ல; அது மக்களின் இறையாண்மையை நடைமுறையில் உறுதிப்படுத்தும் சக்திவாய்ந்த ஜனநாயக கருவியாகும். மக்கள் நேரடியாக முடிவெடுக்கும் இந்த அமைப்பு, அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான நம்பிக்கையை வலுப்படுத்துவதோடு, ஜனநாயகத்தின் உண்மையான அர்த்தத்தை வெளிப்படுத்துகிறது.

பத்து மில்லியன் மக்கள் தொகை உச்சவரம்பு குறித்த சுவிஸ் பொது வாக்கெடுப்பு வெறும் எண்ணிக்கையைப் பற்றிய விவாதமல்ல. அது குடியேற்றம், தேசிய அடையாளம், பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலையான வள மேலாண்மை ஆகியவற்றுக்கு இடையிலான சமநிலையைப் பற்றிய ஒரு முக்கிய அரசியல் சோதனையாக அமைந்தது. வாக்கெடுப்பின் முடிவு, சுவிட்சர்லாந்து திறந்த பொருளாதாரத்தையும் கட்டுப்படுத்தப்பட்ட ஆனால் தொடர்ச்சியான குடியேற்றக் கொள்கையையும் ஆதரிக்கும் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது.

யூலை 05 2026

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

பிரிட்டனில் கெய்ர் ஸ்டார்மர் பதவி விலகல்! பொது வாக்கெடுப்புத் தோல்வியின் விளைவு!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

23.06.2026

பிரிட்டிஷ் அரசியலில் மீண்டும் ஒரு முறை பெரும் அரசியல் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. பிரிட்டனின் பிரதமரும் ஆளும் தொழிட் கட்சி (Labour Party) தலைவருமான கெய்ர் ஸ்டார்மர் (Keir Starmer) 2026 யூன் 22 அன்று தனது பதவி விலகல் செய்வதாக அறிவித்துள்ளார். லண்டனில் உள்ள 10 டவுணிங் வீதி முன்பாக நாட்டு மக்களிடம் உணர்ச்சிப்பூர்வமாக உரை யாற்றிய அவர், நாட்டின் நலனையும் கட்சியின் எதிர்காலத் தையும் கருத்தில் கொண்டு இந்த முடிவை எடுத்ததாக தெரி வித்தார். அவர் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை இடைக்கால பிரதமராகத் தொடர்வார்.

2024 பொதுத் தேர்தலில் தொழிற்கட்சியை வரலாற்றுச் சிறப் புமிக்க வெற்றிக்கு அழைத்துச் சென்ற ஸ்டார்மர், இரண்டு ஆண்டுகளுக்குள் பதவியை விட்டு விலக நேரிட்டது பலரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது. அந்த தேர்தலில் தொழிற்கட்சி பெரும் பான்மை வெற்றியைப் பெற்று நீண்டகால கன்சர்வேட்டிவ் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது. அப்போது அரசியல் நிலைத் தன்மை மற்றும் பொருளாதார மீட்சியை வாக்குறுதியாக வழங் கிய ஸ்டார்மர், பின்னர் அந்த எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை என்ற விமர்சனங்களை எதிர் கொண்டார்.

கட்சிக்குள் முரண்பாடு:

கடந்த சில மாதங்களாக ஸ்டார்மரின் தலைமைத்துவம் கட்சிக் குள்ளும் வெளியிலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வந்தது. குறிப்பாக 2026 மே மாத உள்ளாட்சித் தேர்தல்களில் தொழிற் கட்சி கடுமையான பின்னடைவைச் சந்தித்தது. இங்கிலாந்தில் ஆயிரக்கணக்கான உள்ளூராட்சி ஆசனங்களை இழந்ததுடன், ஸ்காட்லாந்து மற்றும் வேல்ஸிலும் கட்சியின் ஆதரவு சரிந்தது. இந்தத் தோல்விகள் கட்சிக்குள் அதிருப்தியை உருவாக்கின. பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிப்படையாகவே புதிய தலைமை தேவையெனக் கோரத் தொடங்கினர்.

இதனுடன், கட்சியின் கொள்கைத் திசை குறித்த குழப்பங்களும் ஸ்டார்மரின் நிலையை பலவீனப்படுத்தின. அவர் எடுத்த சில கொள்கை மாற்றங்கள் மற்றும் பலமுறை நிகழ்ந்த நிலைப் பாட்டு மாற்றங்கள், வாக்காளர்களிடையே அவரின் நம்பகத்தன் மையை பாதித்ததாக விமர்சகர்கள் கூறினர். குடியேற்றம், பொருளாதார வளர்ச்சி, வாழ்க்கைச் செலவு உயர்வு மற்றும் தேசிய சுகாதார சேவையின் (NHS) பிரச்சினைகள் போன்ற முக்கிய துறைகளில் அரசு எதிர்பார்த்த முன்னேற்றத்தை வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் எழுந்தன.

ஸ்டார்மரின் அரசாங்கத்திற்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தியது சில சர்ச்சைக்குரிய நியமனங்கள். குறிப்பாக அரசியல் ஆலொச கர்கள் மற்றும் மூத்த பதவிகளுக்கான நியமனங்கள் தொடர் பாக கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு அதிகரித்தது. இதனால் அரசாங் கத்தின் மீது பொதுமக்கள் கொண்டிருந்த நம்பிக்கை குறைந் ததாக பல அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

இந்த நெருக்கடியின் மத்தியில், சமீபத்தில் நடைபெற்ற மேக்கர் ஃபீல்ட் இடைத்தேர்தலில் அன்டி பேர்ன்ஹாம் (Andy Burnham) பெற்ற வெற்றி அரசியல் சமன்பாட்டை மாற்றியது. கிரேட்டர் மான்செஸ்டரின் முன்னாள் மேயரான பர்ன்ஹாம் மீண்டும் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்ததுடன், தொழிற்கட்சியின் அடுத்த தலைவராகவும் பிரதமராகவும் வரக்கூடிய முக்கிய வேட்பாளராக உருவெடுத்தார். பல முக்கிய அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவருக்கு ஆதரவு தெரி வித்துள்ளனர்.

புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்புமனுத் தாக்கல் யூலை 9 அன்று தொடங்கும் என்று தொழிற்கட்சி அறிவித் துள்ளது. போட்டி நடைபெறுமானால் செப்டம்பர் மாதத்தில் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார். ஆனால் பர்ன்ஹாமிற்கு எதிராக வலுவான போட்டியாளர் இல்லாத சூழலில், அவர் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு யூலை மாதத்திலேயே பிரதம ராகப் பொறுப்பேற்கும் வாய்ப்பும் உள்ளது.

ஸ்டார்மரின் பதவி விலகல் பிரிட்டனின் அரசியல் அமைப்பில் கடந்த ஒரு தசாப்தமாக நீடித்து வரும் நிலையற்ற தன்மையை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது. 2016 பிரெக்சிட் வாக்கெடுப் புக்குப் பிறகு டேவிட் கேமரூன், தெரசா மே, போரிஸ் ஜான்சன், லிஸ் ட்ரஸ், ரிஷி சுனக் மற்றும் தற்போது ஸ்டார்மர் என ஆறு பிரதமர்கள் பதவியை விட்டு விலகியுள்ளனர். அடுத்த பிரதமர் கடந்த பத்து ஆண்டுகளில் பிரிட்டனின் ஏழாவது பிரதமராக இருப்பார்.

இது வெறும் தலைமை மாற்றம் மட்டுமல்ல; பிரிட்டனின் அர சியல் எதிர்காலம் எந்த திசையில் செல்லும் என்பதற்கான முக் கிய திருப்புமுனையாகவும் பார்க்கப்படுகிறது. தற்போது வலது சாரி தேசியவாத அரசியலை முன்னிறுத்தும் Reform UK கட் சியின் வளர்ச்சி, தொழிற்கட்சிக்கும் கன்சர்வேட்டிவ் கட்சிக்கும் புதிய சவாலாக உருவாகியுள்ளது. இந்த சூழலில் புதிய தலைவர் கட்சியின் ஒற்றுமையை மீட்டெடுத்து, பொருளாதார வளர்ச்சி, குடியேற்றக் கொள்கை மற்றும் வாழ்க்கைச் செலவு பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டிய கடினமான பொறுப்பை ஏற்க வேண்டியிருக்கும்.

ஆண்டி பேர்ன்ஹாம் அடுத்த பிரதமர்:

சமீபத்தில் பிரிட்டனில் நடைபெற்ற மேக்கர்ஃபீல்ட் (Makerfield) நாடாளுமன்ற இடைத்தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் தேசிய அரசியலுக்குள் நுழைந்துள்ள ஆண்டி பேர்ன்ஹாம் (Andy Burnham), தற்போது பிரிட்டிஷ் அரசியலில் மிகவும் கவ னிக்கப்படும் அரசியல்வாதிகளில் ஒருவராக உருவெடுத்துள் ளார். கெய்ர் ஸ்டார்மரின் பதவி விலகலைத் தொடர்ந்து, தொழிற் கட்சியின் அடுத்த தலைவராகவும் பிரிட்டனின் அடுத்த பிரதம ராகவும் வரக்கூடிய முக்கிய வேட்பாளராக அவர் பார்க்கப் படுகிறார்.

1970 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் மெர்சிசைடு பகுதியில் பிறந்த ஆண்டி பேர்ன்ஹாம், தொழிற்கட்சியின் நீண்டகால அரசியல் செயற்பாட்டாளர் ஆவார். 2001 ஆம் ஆண்டு முதல் நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய அவர், டோனி பிளேயர் மற்றும் கோர்டன் பிரவுன் அரசாங்கங்களில் பல்வேறு அமைச்சுப் பொறுப்புகளை வகித்துள்ளார்.

சமீபத்தில் நடைபெற்ற மேக்கர்.·.பீல்ட் இடைத்தேர்தலில் அன்டி பேர்ன்ஹாம் (Andy Burnham) பெற்ற வெற்றி அரசியல் சமன்பாட்டை மாற்றியது. கிரேட்டர் மான்செஸ்டரின் முன்னாள் மேயரான பர்ன்ஹாம் மீண்டும் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்ததுடன், தொழிற்கட்சியின் அடுத்த தலைவராகவும் பிரதமராகவும் வரக்கூடிய முக்கிய வேட்-பாளராக உருவெடுத்தார். பல முக்கிய அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவருக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக தேசிய சுகாதார சேவை (NHS) தொடர்பான அவரது பணிகள் அவருக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுத் தந்தன. பொதுச் சேவைகளை தனியார்மயமாக்கு வதை எதிர்த்து, அரசு நலத்திட்டங்களை வலுப்படுத்த வேண் டும் என்ற நிலைப்பாட்டை தொடர்ந்து வலியுறுத்தியவர் அவர்.

2010 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் தொழிற்கட்சித் தலை மைக்காக போட்டியிட்டாலும் வெற்றி பெற முடியவில்லை. எனி னும் அந்தத் தோல்விகள் அவரது அரசியல் வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவரவில்லை. மாறாக, 2017 ஆம் ஆண்டு கிரேட்டர் மான்செஸ்டரின் முதல் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட மேயராக வெற்றி பெற்று புதிய அரசியல் அடையாளத்தை உருவாக்கினார்.

மேயராக இருந்த காலத்தில் வீடமைப்பு, பொதுப் போக்குவரத்து, சமூக நலன் மற்றும் சுகாதார சேவைகள் தொடர்பாக அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் பெரும் பாராட்டைப் பெற்றன. குறிப்பாக COVID-19 காலத்தில் லண்டன் அரசாங்கத்தின் சில முடிவுகளை வெளிப்படையாக விமர்சித்து, வடக்கு இங்கிலாந்து மக்களின் உரிமைகளுக்காக போராடிய தலைவராக அவர் அறியப்பட்டார்.

இதன் காரணமாக, அவர் ஒரு சாதாரண கட்சி அரசியல் வாதி யாக மட்டுமல்லாமல், மக்களின் பிரச்சினைகளை நேரடியாக எடுத்துரைக்கும் பிராந்தியத் தலைவராகவும் புகழ்பெற்றார். தொழிலாளர் வர்க்கம், தொழிற்சங்கங்கள் மற்றும் பாரம்பரிய Labour ஆதரவாளர்கள் மத்தியில் அவருக்கு குறிப்பிடத்தக்க செல்வாக்கு உள்ளது. கெய்ர் ஸ்டார்மரின் தலைமையில் தொழிற்கட்சி மத்திய நிலைப்பாட்டை நோக்கி நகர்ந்ததாக சிலர் கருதும் நிலையில், ஆண்டி பேர்ன்ஹாம் மீண்டும் கட்சியை அதன் பாரம்பரிய சமூக ஜனநாயக அடிப்படைகளுக்குத் திருப்பக் கூடிய தலைவராக பார்க்கப்படுகிறார்.

சமீபத்திய இடைத்தேர்தல் வெற்றி அவரை மீண்டும் வெஸ்ட் மின்ஸ்டர் அரசியலின் மையத்திற்குக் கொண்டு வந்துள்ளது. தற்போது தொழிற்கட்சிக்குள் அவருக்கு கணிசமான ஆதரவு இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆண்டி பேர்ன்ஹாம் பிரதமராகும் வாய்ப்பு இன்னும் உறுதியாக வில்லை. ஆனால் தற்போதைய அரசியல் சூழ்நிலையில், அவர் தொழிற்கட்சியின் எதிர்காலத்தை வடிவமைக்கக்கூடிய முக்கிய மான தலைவர்களில் ஒருவராக இருப்பது மறுக்க முடியாத உண்மையாகும். அடுத்த சில மாதங்களில் நடைபெறவுள்ள தலைமைத் தேர்தல், ஆண்டி பேர்ன்ஹாம் ஒரு பிராந்தியத் தலைவரிலிருந்து பிரிட்டனின் பிரதமராக உயர்வாரா என் பதைத் தீர்மானிக்கக்கூடிய முக்கிய அரசியல் தருணமாக அமை யலாம்.

பிரித்தானிய அரசியல் வீழ்ச்சியா ?

கடந்த இருபது ஆண்டுகளாக பிரிட்டன் அரசியல் குறிப்பிடத்தக்க மாற்றங்களையும் அதிர்வுகளையும் சந்தித்துள்ளது. ஒரு காலத் தில் உலகின் மிகவும் நிலையான ஜனநாயக அமைப்புகளில் ஒன்றாகக் கருதப்பட்ட பிரிட்டன், அண்மைய ஆண்டுகளில் அடிக்கடி பிரதமர் மாற்றங்கள், கட்சித் தலைமைப் போட்டிகள் மற்றும் அரசியல் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது.

தற்போது கெய்ர் ஸ்டார்மரின் பதவி விலகல் ஒரு தனிநபரின் அர சியல் வீழ்ச்சி மட்டுமல்ல. அது பிரிட்டிஷ் அரசியலில் உருவாகிக் கொண்டிருக்கும் புதிய சக்தி மையங்களின் அறிகுறியாகும். அடுத்த சில வாரங்களில் தொழிற்கட்சி எடுக்கும் முடிவுகள், பிரிட் டனின் உள்நாட்டு அரசியலையும் ஐரோப்பிய அரசியல் சம நிலையையும் குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கக்கூடும். பிரிட் டனின் அடுத்த பிரதமர் யார் என்பது மட்டுமல்ல, அவர் நாட்டை எந்த திசைக்கு அழைத்துச் செல்வார் என்பதுதான் தற்போது உலக அரசியல் வட்டாரங்களின் முக்கிய கவனமாக உள்ளது.

தமிழீழ விடுதலை வரலாற்றில் யூலை

பண்டா – செல்வா ஒப்பந்தம்:

26.07.1957 அன்று பண்டா - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.



இலங்கைத் தீவில் பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுல்படுத்தல்:

20.07.1979 அன்று ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் தமிழருக்கெதிராக, மிகக் கொடூரமான பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

மூத்த தளபதி லெப். சீலன் மற்றும் வீரவேங்கை ஆனந்த் வீரச்சாவு

ஆரம்பகாலத் தொட்டு இயக்க வளர்ச்சிக்காக தலைவருக்கு உறுதுணையாக இருந்த மூத்த தளபதி சீலன் (லூகாஸ் சார்ள்ஸ் அன்ரனி - திருமலை, பிறப்பு: 11.12.1960). புலிகளின் தாக்குதற் படையணியின் முதலாவது தளபதியாவார். மீசாலையில் சிங்களப்படையினரின் முற்றுகையில் காயப்பட்டு தப்பமுடியாத நிலையில் தன்னைச் சுட்டு விட்டு ஆயுதத்தோடு தப்பும்படி சக தோழனுக்கு கட்டளையிட்டு, புலிகளின் வீரமரபு ஒன்றிற்கு வித்திட்டு 15.07.1983 அன்று வீரச்சாவடைந்தார். இவருடன் மூத்த உறுப்பினர் ஆனந்த் (இராமநாதன் அருள்நாதன் - மயிலிட்டி - யாழ், பிறப்பு: 25.01.1964) அவர்கள் காயப்பட்டு தப்பமுடியாத நிலையில் மூத்த தளபதி சீலனின் வழியில் தன்னையும் சுட்டு விட்டு ஆயுதத்தோடு தப்பும்படி சகதோழனுக்கு கட்டளையிட்டு, புலிகளின் வீரமரபினை பின்பற்றி வீரச்சாவடைந்தார்.

திருநெல்வேலிக் கண்ணிவெடித் தாக்குதல்:

23.07.1983 அன்று யாழ். திருநெல்வேலியில் வைத்து சிங்களப் படையினரின் இராணுவ வண்டி மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் 13 படையினர் கொல்லப்பட்டனர். இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க தாக்குதலில் விடுதலைப் புலிகளின் தரப்பில் மூத்த தளபதி செல்லக்கிளி (சதாசிவம் செல்வநாயகம் - கல்வியங்காடு, யாழ்., பிறப்பு: 15.06.1953) அவர்கள்

வீரச்சாவடைந்தார்.

கறுப்பு யூலை – தமிழின அழிப்பு:

ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்களது ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களது வீடுகள், கடைகள், உடமைகள் என்பன பட்டியலிடப்பட்டு சிங்களக் காடையர்களால் எரியூட்டி அழிக்கப்பட்டன. 1983 யூலை 24ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைகளால் 3000 மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர். 5000 வரையான தமிழர்களது கடைகளும், 1800 வரையான வீடுகளும் அழிக்கப்பட்டன. சிறைகளில் இருந்த 53 தமிழ் அரசியல் கைதிகள் வெட்டிக் கொல்லப்பட்டனர். 600 வரையான தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டனர். இவை தொடர்பான சரியான புள்ளிவிபரங்களை சிங்கள அரசு மூடிமறைத்து விட்டது.



மூத்த போராளி கப்டன் லாலா ரஞ்சன் வீரச்சாவு– 13.07.1984:

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரான லாலா ரஞ்சன் (கனகநாயகம் ஞானேந்திரமோகன் - பருத்தித்துறை, பிறப்பு: 02.09.1960) ஒரு முன்னணி புரட்சி வீரன். தொண்டமனாற்றில் சிங்கள அதிரடிப் படையினர் முற்றுகையிட்டுத் தாக்கியபோது தன்னைத் தானே அழித்து வீரச்சாவை அணைத்துக் கொண்டார்.

கரும்புலி கப்டன் மில்லர் வீரச்சாவு:

1987 ஆம் ஆண்டு யாழ் குடாவில் வடமராட்சி பிரதேசத்தின் மீது சிங்கள அரசால் மேற்கொள்ளப்பட்ட "ஒப்பரேசன் லிபரேசன்" ஆக்கிரமிப்புக்கெதிராகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டத்தின் புதிய பரிமாணமாக முதன் முதலாக நெல்லியடியில் அமைந்திருந்த சிறீலங்கா படைமுகாம் மீது கரும்புலித்தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. 05.07.1987 இல் கரும்புலி கப்டன் மில்லர் இவ் வீரசாதனையைப் படைத்து வீர காவியமானார்.

சிறீலங்கா – இந்திய ஒப்பந்தம்:

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வேரோடு பிடுங்கி எறியும் நோக்கோடு 29.07.1987 அன்று ராஜீவ் காந்தியும் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டனர். இவ் உடன்படிக்கையின் விளைவாக 8000 தமிழர்கள் வரை கொல்லப்பட்டனர்.

முதன் முதலாக தமிழீழக் கடற்பரப்பில் கடற் கரும்புலித் தாக்குதல்:

முதன் முதலாக தமிழீழக் கடற்பரப்பில் 10.07.1990 அன்று விடுதலைப் புலிகளால் ஓர் கடற் கரும்புலித்தாக்குதல் நடாத்தப்பட்டது. சிறீலங்காக் கடற்படையின் "எடித்தாரா" கட்டளைக் கப்பலை தகர்க்கவென மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் கடற்கரும்புலிகளான மேஜர் காந்தரூபன் (யோகராசா கோணேஸ்வரன் - வல்வெட்டித்துறை - யாழ்,, பிறப்பு: 09.10.1971), கப்டன் கொலின்ஸ் (பெர்னாண்டோ

www.sangathamil.ca

சிலவெஸ்டர் - நறுவலிக்குளம் - மன்னார், பிறப்பு: 05.12.1969), கப்டன் வினோத் (வேலுப்பிள்ளை தியாகராஜா - வல்வெட்டித்துறை - யாழ்.,பிறப்பு: 19.08.1970) ஆகிய போராளிகள் வீரச்சாவு.

ஆகயா கடல் வெளிச்சமர் ஆரம்பம் – 10.07.1990:

சிறீலங்காவில் இரு தேசங்களுக்கிடையேயான யுத்தம் என் உலகநாடுகளால் வர்ணிக்கப்பட்ட ஆகாய கடல் வெளிச்சமர் (ஆ.க.வெ.) 10.07.1990 இல் ஆரம்பமானது.

லெப். கேணல் சரா வீரச்சாவு:

ஆகயா கடல் வெளி இராணுவ நடவடிக்கையின் ஓர்அங்கமான ஆனையிறவு படைமுகாம் மீது நடத்த இரண்டாவது தாக்குதலில் கவச வாகனத்தை ஓட்டிச்சென்று எதிரியை வெற்றிகொள்ள முயன்றபோது 27.07.1991 அன்று லெப். கேணல் சரா (சின்னத்துரை ஜிவராசா - யாழ்., பிறப்பு: 19.04.1962) வீரச்சாவடைந்தார்.

16.07.1990 அன்று லெப். கேணல் நீகன் வீரச்சாவு:

விடுதலைப்புலிகளின் முதுநிலை உறுப்பினர்களுள் ஒருவரான லெப். கேணல் நீகன் (இராசையா சிற்றம்பலம் - வெல்லாவெளி - மட்டு, பிறப்பு: 06.11.1963) ஒருதலை சிறந்த போர்த் தளபதியாவார். மட்டு - அம்பாறை மாவட்டத்தின் துணைத்தளபதியாகப் பணியாற்றியவர் அவர் பல வெற்றிகரமான இராணுவ சாதனைகளை நிலைநாட்டினார். நீகனின் இராணுவ வல்லமைக்குப் பழிவாங்க வெறிகொண்ட சிங்ள படை அவரது பெற்றோர் உட்பட 17 இரத்த உறவுகளைப் படுகொலை செய்தது.

கின்னியடிப் படுகொலை:

தமது வீடுகளில் தங்கியிருந்த இளைஞர்களை சிறீலங்காவின் விசேட அதிரடிப்படையினர் கடத்திச் சென்று படுகொலை செய்தனர். ஆர். பிரேமதாசா அவர்களது ஆட்சிக்காலத்தில் 12.07.1991 அன்று மேற்கொள்ளப்பட்ட இக் கொடூரச் செயலில் 12 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

லெப். கேணல் சூட்டி வீரச்சாவு:

ஆனையிறவுச் சமரின் போது வெற்றிலைக்கேணிக் கரையோரமாக மேற்கொள்ளப்பட்ட சிறீலங்கா இராணுவத்தின் கடல்வழி தரையிறக்கத்தினை எதிர்த்து 14.07.1991 அன்று நடைபெற்ற சமரின் போது லெப். கேணல் சூட்டி (சின்னத்தம்பி இராசு செல்வேந்திரன் - சாவகச்சேரி - யாழ்., பிறப்பு: 26.05.1967) வீரச்சாவடைந்தார்.

சிறீலங்கா விமானப்படையின் வை–08 ரக விமானம் சுட்டு விழ்த்தப்பட்டது:

வெற்றிலைக்கேணியில் இருந்து ஆனையிறவுவரை ஓர் இராணுவ வேலியை அமைக்கும் நோக்கோடு "பலவேகய - 2" என்றும் படை நடவடிக்கையில் சிறீலங்காப் படையினர் ஈடுபட்ட போது 05.07.1992 அன்று சிறீலங்கா விமானப்படையின் வை-08 ரக விமானம் ஒன்று விடுதலைப் புலிகளால் சுட்டு விழ்த்தப்பட்டது.

மண்கிண்டி மலை சிங்கள இராணுவ முகாம் அழிப்பு:

25.07.1993 அன்று இதய பூமி இராணுவ நடிக்கை என்று தலைவரால் பெயர் சூட்டப்பட்டு, மணகிண்டிமலை இராணு முகாம் மீது தாக்குதல் நடாத்தப்பட்டது. இது மிகப் பெரிய வெற்றியை புலிகள் இயக்கத்திற்கு ஈட்டிக் கொடுத்தது. இம் முகாமின் வீழ்ச்சி மணலாறு மாவட்டத்தில் சிங்ளக் குடியேற்றத்திற்கு ஒரு பலத்த அடியாக விழுந்தது.

இராசவீதிக் குண்டு வீச்சு:

டி.பி. விஜயதுங்கா அவர்களது ஆட்சிக்காலத்தில் 27.07.1993 அன்று வீதிவழியாகப் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த மாணவர்கள் மீது சிறீலங்காவின் விமானப்படையினர் மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் 04 பள்ளிச் சிறுவர்கள் உட்பட 06 உடல் சிதறி அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர்.

09.07.1995 அன்று நவாலி பேதுருவானவர் தேவாலயம் மீதான சிறீலங்கா விமானப்படையின் தாக்குதல், 141 அப்பாவித் தமிழர் படுகொலை:

சிறீலங்கா அரசால் 1995ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது சிறீலங்கா விமானப் படையினரால் 09.07.1995 அன்று மேற்கொள்ளப்பட்ட அரக்கத்தனமான குண்டுத்தாக்குதலால் இங்கு தஞ்சமடைந்திருந்த பொதுமக்களில் தாய்மார், குழந்தையர் உட்பட 141 அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் நடத்திய "புலிப்பாய்ச்சல்" இராணுவ நடவடிக்கை:

யாழ். குடாநாட்டின் மீது முன்னேறிப்பாய்ந்த சிறீலங்கா இராணுவம் மீது விடுதலைப்புலிகள் 14.07.1995 அன்று நடத்திய புலிப்பாய்ச்சல் நடவடிக்கை. இதில் 150 சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர், 50 பேர் காயம் மற்றும் வெடிமருந்துடன் வந்த வாகனங்களும் தகர்ப்பு.



லெப். கேணல். நரேஸ் வீரச்சாவு – 16.07.1995:

கடற்புலிகளின் முக்கிய போர் தளபதிகளுள் ஒருவரான லெப். கேணல் நரேஸ் (சிவராஜசிங்கம் நவராதன் - திருகோணமலை, பிறப்பு: 10.02.1969); கடற்புலிகளின் தாக்குதற் படையணியின் தளபதியாக பணியாற்றியவர். கடலில் புலிகள் நிகழ்த்திய ஒவ்வொரு தாக்குதலிலும் பெரும் பங்காளராகத் திகழ்ந்தவர் இவர். யாழ். மாவட்டம் காங்கேசன்துறை துறைமுகக் கடற்பரப்பில் வைத்து சிறீலங்கா கடற்படையின் "எடித்தாரா" கட்டளைக் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சமரில் வீரச்சாவு.

லெப். கேணல். மாதவி வீரச்சாவு – 16.07.1995:

கடற்புலிகளின் உயர் தளபதிகளினது நெறிப்படுத்தலில் கீழ், லெப். கேணல் மாதவி (திருநாவுக்கரசு கலைச்செல்வி - அல்வாய் வடக்கு, யாழ்., பிறப்பு: 09.07.1969) தாக்குதலில் பங்கேற்ற பெண்கள் படைப்பிரிவுகளை வழி நடாத்தினார். யாழ். மாவட்டம் காங்கேசன்துறை துறைமுகக் கடற்பரப்பில் வைத்து சிறீலங்கா கடற்படையின் "எடித்தாரா" கட்டளைக் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சமரில் வீரச்சாவு.

"எடித்தாரா" என்னும் சிறிலங்கா கடற்படையின் கட்டளைக் கப்பல் தாக்கி அழிப்பு

17.07.1995 அன்று விடுதலைப் புலிகளின் நீரடி நீச்சல் பிரிவுக் கரும்புலிகளால் காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் வைத்துச் சிறீலங்காக் கடற்படையின் "எடித்தாரா" என்னும் கட்டளைக் கப்பல் சிதறடிக்கப்பட்டது. இவ் தாக்குதலில் மேஜர் தங்கம் (வீரய்யா மயில்வாகனம் - பதுளை, பிறப்பு: 01.01.1975), மேஜர் நியூட்டன் (பிரான்சிஸ் டக்லஸ் - பாசையூர்- யாழ்., பிறப்பு: 17.11.1974), கப்டன் தமிழினி (சிவப்பிரகாசம் கனிமொழி - வல்வெட்டித்துறை - யாழ்., பிறப்பு: 30.12.1974) ஆகிய கடற்கரும்புலிகள் வீரச்சாவடைந்தார்.

ஓயாத அலைகள் – 01, முல்லை மண் மீட்பு:

விடுதலைப் புலிகளின் "ஓயாத அலைகள் - 1" தாக்குதல் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்த சிறீலங்கா படைமுகாம் முழுமையாகக் கைப்பற்றப்பட்டு அங்கிருந்த 1000 இற்கும் மேற்பட்ட சிங்கள இராணுவத்தினரைக் கொன்று பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களையும் கைப்பற்றி முல்லை மாவட்டத்தையும் சிங்கள ஆக்கிரமிப்பில்லாத பிரதேசமாக மாற்றிய பெரும் தாக்குதல் தொடங்கப்பட்ட நாள் (18.07.1996). இத்தாக்குதலின் போது 314 விடுதலைப் புலி வீரர்கள் வீரச்சாவடைந்தனர்.

சிறீலங்கா கடற்படையின் "ரணவிரு" பிரங்கிப் படகு மூழ்கடிப்பு, 05 கடற்கரும்புலிகள் வீரச்சாவு:

ஓயாத அலைகள் -1 விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கையின் போது முல்லைப் படைத்தள இராணுவத்திற்கு உதவியாக சிங்களப் படைத் தலைமையால் வான்படையினதும், கடற்படையினதும் முழுப்பலத்துடன் நடத்தப்பட்ட திரவிட பகர இராணுவ நடவடிக்கையின் போது "ரணவிரு" பீரங்கிப் படகினை 19.07.1996 அன்று மூழ்கடித்து வீரகாவியமாகிய 05 கடற்கரும்புலிகளான மேஜர் பார்த்தீபன் (உலகநாதன், ரமேஸ் - யாழ்ப்பாணம், பிறப்பு: 22.02.19), மேஜர் செல்லப்பிள்ளை (இராமலிங்கம் செல்வராஜா - மன்னார், பிறப்பு: 08.08.1973), மேஜர் பதுமன் (ஆனந்தமயில் பாலமுரளி - யாழ்., பிறப்பு: 18.06.1976), மேஜர் கண்ணபிரான் (சாமித்தம்பி புலேந்திரன் - அம்பாறை, பிறப்பு: 01.01.1974), மேஜர் சுடரொளி (செபமாலை இரத்தினமலர் - யாழ்., பிறப்பு: 20.11.1972)ஆக்கியோரும் அடங்குவர்.

¹சிறீலங்கா கடற்படையின் "தரையிறக்கும் கலம்" மீதான கரும்புலித் தாக்குதல் 21.07.1996

18.07.1996 அன்று முல்லைத்தீவு படைத்தளம் மீதான ஓயாத அலைகள் நடவடிக்கை தொடங்கப்பட்டு படைத்தளத்தின் பெரும்பகுதி மீட்கப்பட்ட நிலையில் இந்நடவடிக்கையை முறியடிக்கவும், இழந்த தளத்தை மீளக் கைப்பற்றவும் சிறீலங்கா கடற்படையினரால் அலம்பில் பகுதியில் தரையிறக்கப்பட்ட படையினரால் முல்லைத்தீவு தளம் நோக்கி பாரிய முன்னகர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்நடவடிக்கைக்கு எதிரான முறியடிப்புத் தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்க மேலதிக தரையிறக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிறீலங்கா கடற்படைக் கலங்கள் மீது கடற்புலிகளால் கடுமையான தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

21.07.1996 அன்று 600 படையினருடன் அலம்பில் கரையை நோக்கிச் சென்று கொண்டிருந்த சிறிலங்கா கடற்படைத் தரையிறங்கு கலத்தினை இலக்கு வைத்து கடற்கரும்புலிகள் மேஜர் மிதுபாலன் (வேதாரணியம் ஜெயகாந்தன் - யாழ்., பிறப்பு: 28.05.1975) மற்றும் கப்டன் சயந்தன் (தம்பிப்பிள்ளை துரைரத்தினம் - அம்பாறை, பிறப்பு: 23.04.1972) ஆகியோரால் தாக்குதல் நடாத்தப்பட்டது.

கரும்புலிப் படகு தரையிறங்கு கலத்தினை நெருங்கி வருவதை கண்டுகொண்ட சிறீலங்கா கடற்படையினர் ஒரு சேர கடற்கரும்புலிகளின் படகின் மீது தாக்குதல்களை நடாத்திக் கொண டிருந்தனர். கடற்படையின் தாக்குதலில் சிக்காதவாறு கடற்கரும்புலிகள் தமது படகினை செலுத்தி தரையிறங்கு கலத்தினை நெருங்கியவேளை எதிர்பாராதவிதமாக படகு வெடித்துச் சிதறியது.

கட்டுநாயக்கா தாக்குதலில் 28 விமானங்கள் அழிப்பு:

கட்டுநாயக்கா விமானத்தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் என்பவற்றின் மீது 24.07.2001 அன்று மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதல் சிறீலங்கா அரசை இராணுவ மற்றும் பொருளாதர ரீதியில் ஆட்டம் காணச்செய்தது. பலமான பாதுகாப்பு வேலிகளையும், அரண்களையும் ஊடறுத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் சிறீலங்கா விமானப் படையின் 22 விமானங்களும், அரசின் ஏயர்லைன்ஸ் நிறுவனத்தின் 06 விமானங்களுமாக மொத்தம் 28 விமானங்கள் அழிவையும், சேதத்தையும் சந்தித்தது. இத்துணிகரத்தாக்குதல் காரணமாக சிறீலங்கா அரசுக்கு 4000 கோடி ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்பட்டது.

முற்றிலுமாக அழிக்கப்பட்டவை...!

இரண்டு எ (A) - 340 - 300 பயணிகள் விமானங்கள்
ஒரு எ (A) - 330 - 200 பயணிகள் விமானம்
நான்கு கிபிர் போர் விமானங்கள்
மூன்று கெ (K) -8 பயிற்சி விமானங்கள்
இரண்டு எம்.ஜ.ஜி (MIG) - 27 ஜெட் போர் விமானங்கள்
இரண்டு பெல் (Bell) 412 உலங்கு வானூர்தி
இரண்டு வி.வி.ஜ.பி (VVIP) 412 உலங்கு வானூர்தி
இரண்டு எம்.ஜ (MI) -17 உலங்கு வானூர்தி
மூன்று K-8

சேதப்படுத்தப்பட்டவை...!
இரண்டு - A-320 பயணிகள் விமானங்கள்
ஒரு -A-340 பயணிகள் விமானம்
ஒரு அண்டொனோவ் (Antonov) போக்குவரத்து விமானம்
ஒரு எம்.ஜ (Mi) -24 உலங்கு வானூர்தி
ஒரு பெல் (Bell) 412 உலங்கு வானூர்தி
நான்கு கிபிர் போர் விமானங்கள்

இத்தாக்குதலில் 14 பெயர் குறிப்பிடமுடியாத மறைமுகக் கரும்புலிகள் வெற்றிக்கு வித்திட்டு காற்றில் கலந்தனர் .தமிழீழ விடுதலை புலிகளின் போராட்ட வாழ்வில் மாபெரும் வெற்றி மகுடம் சூட்டிய நாள்

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை தொடர்கிறது...
STRUCTURAL GENOCIDE AGAINST THAMILS CONTINUES IN SRILANKA

BLACK JULY 1983

ஈழத்தமிழர் இன அழிப்பு EELA THAMILS GENOCIDE

கறுப்பு யூலை



Activists and Independent monitors, estimate that between 3000 to 5,638 Thamil People were killed within 10 days. Much of Thamils history was lost, over 150,000 Thamils were forced out of their homes and mobs burneddown more than 18,000 homes and 5,000 Thamil-owned businesses, all of this was caused by Sinhala Mobs who were backed by the Sri Lankan Government.

செயல்பாட்டாளர்கள் மற்றும் சுயாதீனமான கண்காணிப்பாளர்கள், 10 நாட்களில் 3000 முதல் 5,638 தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிட்டுள்ளனர். தமிழர்களின் வரலாற்றின் பல பகுதிகள் அழிக்கப்பட்டன. 150,000 – க்கும் மேற்பட்ட தமிழர்கள் தங்களின் வீடுகளை விட்டு வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். மேலும், சிங்களக் கும்பல்கள் 18,000 க்கும் மேற்பட்ட வீடுகளையும், தமிழர்களுக்குச் சொந்தமான 5,000 வணிகங்களையும் எரித்து சாம்பலாக்கின. இவை அனைத்தும் இலங்கை அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்ற சிங்களக் கும்பல்களால் நிகழ்த்தப்பட்டன.

"What is happening in Sri Lanka, nothing other than Genocide"
Indra Gandhi

Prime Minister of India
August 16, 1983

43 Years Remembering
the 1983 Holocaust of Thamils in Sri Lanka
1983 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த தமிழ் இனப்படுகொலையின் 43 ஆம் ஆண்டு நினைவு

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"